# INDEX TO

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

[illegible]-SECOND SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

12TH TO 14TH JULY 1977.

Volume CXXXVIII (Nos. 1 to 3)

©
GOVERNMENT OF TAMIL NADU
1977

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600009*

[PRICE 1 *Rupee*.]

D
V211, 32 N77
N78-13831
12.1977

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-SECOND SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CXXXVIII (Nos. 1 to 3).
*12th to 14th July* 1977.

TABLE OF CONTENTS.

*Tuesday, 12th July* 1977.

| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. .. | vi-x |
| Discussion on the Governor's Address—*cont.* .. | 1-68 |

*Wednesday, 13th July* 1977.

| | |
|---|---|
| Adjournment motion *re*— | |
| Agitation by the persons discharged from Youth Service Corps .. .. .. .. .. | 69-73 |
| Government Resolution— | |
| Appreciation of the services of Thiru G. M. Alagarswamy, former Secretary to the Council .. | 73-80 |
| Discussion on the Governor's Address—*cont.* .. | 81-137 |

PAGES

*Thursday, 14th July* 1977.

1. Privilege Issue *re*—

Misreporting of the proceedings of the Council by 'Makkal Kural' in its issue, dated the 13th July 1977 .. .. .. .. .. 139-140

2. Call attention Notices—

(1) Harassment by officers in collection of Government loans owing to drought conditions in Ramanathapuram district .. .. .. .. 140-143

(2) Non-payment of salaries to the Teachers of Chellammal Women's College, Madras and Kancheepuram .. .. .. .. .. 143-144

3. Discussion on the Governor's Address—*cont.* .. 144-215

**Index** .. .. .. .. .. .. 217

# Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTY-SECOND SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*12th to 14th July* 1977.

*VOLUME CXXXVIII (Nos.* 1 *to* 3)

PAGES

A

ABDUL WAHAB, THIRU K. S.—

Governor's Address, discussion on .. .. 105-110, 193

ADJOURNMENT MOTION *re*—

Youth Service Corps, hardship caused to graduates serving in—consequent on its abolition .. 69-73

ALAGARSWAMY, THIRU G. M.—

Appreciation of services of—, former Secretary to the Legislative Council .. .. .. .. 73-80

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Governor's Address, discussion on .. .. 55

Teachers of Chellammal Women's College, Madras and Kancheepuram, statement *re* non-payment of salaries for four months .. .. .. 143-144

ARIVAZHAGAN, THIRU K.—

Governor's Address, discussion on .. .. 136, 146, 155-156, 169

Teachers of Chellammal Women's College, Madras and Kancheepuram, calling Minister's attention to non-payment of salaries for four months .. 143, 144

8. The Hon. Thiru K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARA PANDIAN, Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. The Hon. Thiru C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. SELVI P.T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas and Refugees and Evacuees and Correctional Administration.

13. The Hon. Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED, Minister in-charge of Accommodation Control, News Print Control, Agro-iSevice Co-operative Societies at Block, District and Apex Levels including Federation, Wakfs, Textiles, Yarn and Handloom and Khadi.



### தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ் நாடு ஆளுநர்

பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத்துறை, பொது நிர்வாகம் இந்திய சிவில் பணியாளர் தொகுதி(ஐ.சி.எஸ்). இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், மாவட்டத்துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், பயண அனுமதிச் சீட்டுகள், மதுவிலக்கு, சுகாதாரம், மருத்துவம், அறக்கட்டளைகள், லஞ்ச ஒழிப்பு, தொழில்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

2. மாண்புமிகு திரு. இ. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் தீர்வு, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறுபாசன இறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், எடைகள் அளவைகள் குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், கம்பெனிகளைப் பதிவு. செய்தல்.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீனவளம், பத்திரப் பதிவு. காடுகள், சின்கோனா, இளைஞர் அணி.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : செய்தி விளம்பரம், படச்சுருள், தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம் திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும்,

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து உள்ளாட்சித் (துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நகராட்சி, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர்கள் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர் நலன்; வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், குடி நீர் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலன், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடி மக்கள்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மகளிர்-சிறுவர் நலம் உட்பட்ட சமூக நலம், கால் நடை வளர்ப்பு, இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு (வேளாண்மைத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி உதவி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், பால், பால்வள நிறுவனம், வெள்ளத் தடுப்பு.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, காதி.



## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

— — —

### மேலவைத் தலைவர்.

[அரசியலமைப்புச் சட்டத்தின் 184 (1)-வது பிரிவின்கீழ் தலைவரின் அலுவல்களைத் துணைத் தலைவர் மேற்கொண்டிருக்கிறார்.]

### மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அறிவழகன்.
2. திரு. வே. தங்கப்பாண்டியன்.
3. திரு. டி. சந்தோஷம்.
4. திரு. டி. வி. டி'மாண்டி,

### மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### சார்புச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.ஜி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

### தலைமை நிருபர்.

திரு. எஸ். நடராஜன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே.எம். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அறிவழகன், க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 இளம்பரிதி | மாநிலச் சட்டப் பேரவை. |
| 4 இராசகோபால், சி.வி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 5 இராமகிருஷ்ணத் தேவர், எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 6 இராம சுப்பையா, காரைக்குடி | நியமனம். |
| 7 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 8 எலிமந்தா, பி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 கணபதி, கே.எஸ். | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள் தொகுதி |
| 10 சக்திமோகன், ஆர். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், எம். | திருநெல்வேலி—கன்னியா குமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 13 சாம்பசிவம், இரா. | தென்ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 சிவஞானம், ம.பொ. (துணைத்தலைவர்). | நியமனம். |
| 15 சுந்தரேசத் தேவர், என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 16 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி |
| 17 தங்கப்பாண்டியன், வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத்தொகுதி |
| 18 தங்கவேல், ஏ. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 19 தமிழரசி, சி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 தாமஸ், பி. ஆர். .. .. | மதுரை–இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 21 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்.ஸி., (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 22 தாமோதரன், ஜி. ஆர். .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 23 திராவிடமணி, ஆ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 24 டிமாண்டி, டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 25 தேவராஜ், வி.எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 நடராசன், எம்.கே.டி. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 27 பக்கர், எம்.எம். .. .. | நியமனம். |
| 28 பலராமன், எல். — — | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 பாலசுப்பிரமணியம், அ. .. | சேலம் தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 30 பாலசுப்பிரமணியம், கு. மா. .. | நியமனம். |
| 31 பெரியண்ணன், [illegible]. — | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 மணி, கோ. சி. — — | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 33 மாசிலாமணி, மு. — — | மாநிலச் சட்டப் பேரவை. |
| 34 முத்து, எஸ். — — | மாநிலச் சட்டப் பேரவை. |



| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 35 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 36 முருகேசன், எம்.எம். .. | நியமனம். |
| 37 வில்வம், ஏ.கே. — — | நியமனம். |
| 38 வில்சன் ஆசிர்வாதம், எல். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 39 வெங்கடேசலு [illegible], ஜி. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 ஜார்ஜ் சேர்மகனி .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 41 சத்தியவாணிமுத்து — — | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 வெற்றிடம் .. .. — | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 43 வெற்றிடம் — — — | மாநிலச் சட்டப் பேரவை. |
| 44 வெற்றிடம் .. .. — | மாநிலச் சட்டப் பேரவை. |
| 45 வெற்றிடம் — .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 46 வெற்றிடம் — .. — | மாநிலச் சட்டப் பேரவை. |
| 47 வெற்றிடம் — — .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 48 வெற்றிடம் — — .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 49 வெற்றிடம் — — — | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 வெற்றிடம் — — — | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 51 வெற்றிடம் — — — | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 52 வெற்றிடம் — — — | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 53 வெற்றிடம் — — — | சேலம்-தர்மபுரி- கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 54 வெற்றிடம் — — — | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத்தொகுதி |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 55 வெற்றிடம் .. .. .. | கோயம்புத்தூர் [illegible] உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. .. .. | நியமனம். |
| 62 வெற்றிடம் .. .. .. | நியமனம். |
| 63 வெற்றிடம் .. .. .. | நியமனம். |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

## செவ்வாய்க்கிழமை, 1977 ஜூலை 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியதற்குப் பிறகு, நாங்களும் சில திருத்தங்களைக் கொடுத்து, அந்தத் திருத்தங்களின் அடிப்படையில் சிலபலவற்றைச் சொல்லி உரையாற்றலாமென்று துவங்குகிறேன். ஆளுநர் அவர்கள் உரையாற்றுகிற நேரத்தில், 1974 ஆம் ஆண்டிலே பின்தங்கியிருக்கும் மக்களின் சராசரியைக் குறிப்பிட்டு, இப்படிப்பட்ட நிலைமையைப்போக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பரிவோடு சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியது. 1974-ம் வருடத்திலே இருப்பதை நினைவு படுத்திய ஆளுநர் அவர்கள் 1976 ஆம் ஆண்டில், இந்தத் தமிழ் நாட்டில் அவசரநிலை இருந்தபோது நடந்த சிலபல அக்கிரமங்களை, எதிர்க் கட்சியில் உள்ள பலர் எடுத்துச் சொல்லியும், பத்திரிகையில் அந்தச் செய்திகள் பிற்பட்டு வந்தாலும், அவைகளைப் பரிசீலித்து, அதற்கான பரிகாரம் தேடப்படுமென்ற சாதாரண வார்த்தையைக்கூட தெரிவிக்காதது குறித்து எதிர்க் கட்சியில் உள்ள எங்களுடைய வருத்தத்தைக் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. எவ்வளவோ கொடுமைகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சென்னை மத்திய சிறைச்சாலையில் பல கொடுமைகள் நடந்திருக்கின்றன. அதற்காக கமிஷன் போடப்பட்டு, விசாரணையில் இருக்கும் இந்த நேரத்தில் அதன் மீது கருத்துக்களைக் கூறக்கூடாது. உண்மையில் அப்படி நடந்திருந்தால், அது வருந்தத்தக்கதுதான். இனிமேல் அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமலிருக்க, தக்க உறுதி மொழிகள் அறிக்கை

## B

PAGES

BALASUBRAMANIAM, THIRU A.—
Governor's Address, discussion on .. .. 123-128

BALASUBRAMANIAM, THIRU KU. MA.—
Governor's Address, discussion on .. .. 10-18, 214

## D

DAMODARAN, THIRU A. R.—
Governor's Address, discussion on .. .. 96-105, 112, 160, 161, 166

DEPUTY CHAIRMAN, MR.—
Adjournment motion *re* Youth Service Corps, hardship caused to graduates serving in—consequent on its abolition ... ... ... 79,
Governor's Address, discussion on .. .. 10, 11, 12, 35, 40, 86, 87, 95, 96, 112, 114, 115, 137, 158, 167, 168, 169, 170, 213, 214, 215
Privilege motion *re* proceedings of Legislative Council, misreporting by "Makkal Kural" in issue dated 13th July 1977 .. .. .. .. .. 141
Resolution *re* appreciation of services of Thiru G. M. Alagarswamy, former Secretary to the Legislative Council .. .. .. .. 78, 79-80



## G

PAGES

GOVERNOR'S ADDRESS—
Discussion on .. .. .. .. .. 1-68, 81-137, 144-215

GEORGE KOMAGAN, THIRU—
Governor's Address, discussion on .... .. 27, 134-137

## I

ILAMPARITHI, THIRU—
Governor's Address, discussion on ... ... 48, 51-55, 57-68, 167

## L

LEGISLATIVE COUNCIL—
Privilege Issue *re* misreporting of Proceedings of—by "Makkal Kural" in issue dated 13th July 1977 .. 139-140

LOANS—
Government loans, Co-operative loans and Land Revenue, Minister's attention called to harassment by officers in collection of—postponed earlier owing to drought conditions in Ramanathapuram district .. .. .. .. .. 140-143

## M

MANI, THIRU K. S.—
Governor's Address, discussion on .. .. 1-9, 10, 38, 208, 213, 214

M—*cont.*


PAGES

MANOHARAN, THE HON. THIRU K.—

Government loans, Co-operative loans and Land Revenue, statement *re* harassment by officers in collection of—postponed earlier owing to drought conditions in Ramanathapuram district .. 140-142, 143

Governor's Address, discussion on .. .. 146, 170

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Government loans, Co-operative loans and Land Revenue, calling attention to harassment by officers in collection of—postponed earlier owing to drought conditions in Ramanathapuram district .. 140-143

Teachers of Chellammal Women's College, Madras and Kancheepuram, calling attention to non-payment of salaries for four months .. .. 143-144

MUTHU, THIRU S.—

Governor's Address, discussion on .. .. 27-41

N

NARAYANASWAMY MUDALIYAR, THE HON. THIRU, K.—

Governor's Address, discussion on .. .. 110

P

PRIVILEGE ISSUE *re*—

Proceedings of Legislative Council, misreporting by "Makkal Kural" in issue dated 13th July 1977 139-140

R

RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Governor's Address, discussion on ... ... 60

RAJAGOPAL, THIRU C. V.—

Governor's Address, discussion on .. .. .. 9, 10, 41-51




R—*cont.*


PAGES

RAJA MOHAMMED, THE HON. THIRU K.—

Adjournment motion *re* Youth Service Corps, hardship caused to graduates serving in—consequent on its abolition .. .. .. .. .. 70-73

Governor's Address, discussion on .. .. 34

Resolution *re* appreciation of services of Thiru G. M. Alagarswamy, former Secretary to the Legislative Council .. .. .. .. 73-74

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Governor's Address, discussion on .. .. 195-213

RAMACHANDRAN, THE HON. THIRU S.—

Governor's Address, discussion on .. .. 6, 7, 113, 150, 153, 188, 189

RAMAKRISHNA THEVAR, THIRU S.—

Governor's Address, discussion on .. .. 86-91

RAMASWAMY PADAYATCHI, THIRU S. S.—

Governor's Address, discussion on .. .. 81-86

RESOLUTION *re*—

Appreciation of services of Thiru G. M. Alagarswamy, former Secretary to the Legislative Council .. 73-80

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

ADJOURNMENT MOTION *re*—

Agitation by the persons discharged from Youth Service Corps—Consent to raising of the matter withheld after the explanation of the Hon. the Leader of the House ... ... ... 73

R—*cnot.*

PAGES

DEBATE—

Governor's conduct should not be criticised .. 10

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

PRIVILEGE ISSUE *re*—

Misreporting of the proceedings of the Council by "Makkal Kural" in its issue, dated the 13th July 1977—Hon. Chairman informed the House that he would write to the newspaper and that after receipt of its reply, he would give his ruling .. 140

S

SAKTHI MOHAN, THIRU A.—

Governor's Address, discussion on .. .. .. 128-134

SAMBASIVAM, THIRU Era.—

Governor's Address, discussion on .. .. 91-94, 95, 96

SANKARALINGAM, THIRU M.—

Adjournment motion *re* Youth Service Corps, hardship caused to graduates serving in—consequent on its abolition .. .. .. .. .. 69-70

Governor's Address, discussion on .. .. 56, 57, 95, 96, 171-194

Resolution *re* appreciation of services of Thiru G. M. Alagarswamy, former Secretary to the Legislative Council .. .. .. .. .. 74-75

SOUNDARAPANDIAN, THE HON. THIRU P.—

Governor's Address, discussion on .. ..

SUNDARESA THEVAR, THIRU N.—

Governor's Address, discussion on .. .. 18-26



S—*cont.*

PAGES

SWAMINATHAN, THIRU G.—

Governor's Address, discussion on .. .. 56,57, 58, 108, 110, 112, 113, 144-171

Resolution *re* appreciation of services of Thiru G. M. Alagarswamy, former Secretary to the Legislative Council .. .. .. .. .. 75-79

T

TEACHERS—

Non-payment of salaries to—of Chellammal Women's College, Madras and Kancheepuram for four months, Minister's attention called to .. .. 143-144

THANGAPANDIAN, THIRU V.—

Government loans, Co-operative loans and Land Revenue, calling Minister's attention to harassment by officers in collection of—postponed earlier owing to drought conditions in Ramanathapuram district. 140, 142

Governor's Address, discussion on .. .. 39, 131, 213

Privilege motion *re* proceedings of Legislative Council, misreporting by "Makkal Kural" in issue, dated 13th July 1977 .. .. .. .. 139-140

THOMAS, THIRU P. R.—

Governor's Address, discussion on .. .. 118-123

V

VEERAPPAN, THE HON. THIRU R. M.—

Governor's Address, discussion on .. .. 55, 63, 64

Y—*cont.*


| | PAGES |
|---|---|
| VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.— | |
| Governor's Address, discussion on .. .. | 26, 27, 110-118, 158, 159, 167 |
| VICE-CHAIRMAN (THIRU V. THANGAPANDIAN)— | |
| Governor's Address, discussion on .. .. | 44, 48, 52, 64, 68, 108 |

Y

| | |
|---|---|
| YOUTH SERVICE CORPS— | |
| Adjournment motion *re* hardship caused to graduates serving in—consequent on its abolition .. | 69-73 |


# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## PRABHU DAS PATWARI

Members of the Council of Ministers.

1. THE Hon. THIRU M.G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption and Industries, Bhoodan and Gramdan, Ex-Servicemen, Mines and Minerals, Village Industries and Rural Industries Projects.

2. THE Hon. THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE Hon. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE Hon. THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona and Youth Service Corps.

6. THE Hon. THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE Hon. THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education, including Technical Education, Official Language, Employment and Training.

யில் வைக்கவில்லை. குறிப்பாக, இதற்கு முன்னாலே மத்திய அரசின்கீழ், குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ், ஆளுநரின் ஆட்சியின்கீழ் தமிழ் நாடு உட்பட்டிருந்த காலத்தில் காழ்ப்பு உணர்ச்சிகளின் காரணமாக எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளைப் பற்றி அவைகளிலே குறிப்பிடப்படுகிறது. அப்போது அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்போம்; கடுமையாகத் தண்டிப்போம் என்றெல்லாம் சபைகளிலே உறுதி கூறுகிறார்கள். அதை எப்படி முக்கியமென்று கருதுகிறார்களோ அதைப்போல் அவசரநிலை காலத்தில், ஒரு வருஷ காலத்தில் நடைபெற்ற கொடுமைகள் பற்றியும் பரிசீலித்திருக்கிறோம், அதில் ஒன்றுமில்லை என்றோ, பரிசீலிக்கப்படுமென்றோ, இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்திருப்பதாக எதிர்கட்சியினர் சொல்கிறார்கள், அதுபற்றிப் பரிசீலிக்கப்படுமென்றோ ஆளுநர் அவர்கள் உரையில் கூறப்படவில்லை. ஒரு தலைப்பட்சமாக, ஒரு சாராருக்காக, நடுநிலையாக விளங்கவேண்டிய ஆளுநர் அவர்கள் உரை இருக்கிறது. கவர்னர் அவர்கள் உரை பொது நோக்கத்தோடு இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

மேலும், நியாய விலைக் கடைகளை 16,000 கிராமங்களில் அதிகப்படியாக அமைக்கப்போவதாக, ஒரு வாக்குறுதி அளிப்பதுபோல் கூறியிருக்கிறார்கள். 16,000 கிராமங்களில் புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க இருக்கிறோமென்ற உத்திரவாதம் அளித்திருக்கிறார்கள். கூடுமானவரையில் நியாய விலைக் கடை என்பதை நிர்ணய விலைக் கடை என்று மாற்றலாமென்று 1965 ஆம் ஆண்டிலேயே பேசப்பட்டது. காரணம், இதை நியாய விலைக் கடையென்று சொன்னால், மற்றக் கடைகள் அநியாய விலைக் கடைகளென்று ஐயுறும் நிலை ஏற்படும். ஆகையால் அப்படிப்பட்ட அநியாய விலைக் கடைகள் இருப்பதை அரசாங்கம் அனுமதித்திருக்கிறதென்ற சந்தேகம் வரும். நிர்ணயவிலைக்கடை என்று சொன்னால், விலையை நிர்ணயித்து விற்கிறார்களென்று கொள்ளலாம். இவர்கள் நிர்ணயித்து விற்கிறார்கள்; அவர்கள் நிர்ணயிக்காமல் விற்கிறார்கள். எனவே நியாய விலைக் கடை என்பதற்குப் பதிலாக நிர்ணயவிலைக் கடை என்று இருக்கலாம். அப்படிப்பட்ட நியாய விலைக் கடைகளைத் திறப்போமென்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அடிப்படையில், எந்த இலாக்கா மூலம்— கூட்டுறவுத் துறை மூலமா அல்லது தனியார் துறை மூலமா— என்பதற்கு எந்தவிதமான விளக்கமும் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி



ஒவ்வொரு முறையும் சொல்லுவதால் எந்த அரசாக இருந்தாலும் கூட, நெருங்கி வரும் நேரத்தில் செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் இந்த முறை ஆட்சி செய்கின்ற அரசு, அடித்தளத்து மக்களுடைய குறைகளைப் போக்குவோமென்று எடுத்தெடுத்தாலும் சொல்கிறார்கள். கடன் வாங்கியவர்கள், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 'டைம' கொடுத்திருக்கிறார்கள். புதிதாகக் கடன் கொடுக்க வழி வகையில்லை. இந்த நாட்டில் யாரும் கடன் வாங்காத அளவுக்கு, கை கட்டி நிற்காத அளவுக்கு, கஷ்டப்படாமல் இருக்கும் அளவுக்கு ஆட்சி நடத்துவோமென்று சொல்கிறார்கள். எதிர்காலத்தில் இப்படிப்பட்டதொரு ஆட்சி அமையுமேயானால், அதற்காக என்னை விட மகிழ்ச்சியடைபவர்கள் யாரும் இருக்க முடியாது. இந்தப் பதினாறாயிரம் கடைகள் எப்படித் திறக்கப்படவிருக்கின்றன என்று கவர்னர் உரையிலே இல்லை. அமைச்சர்கள் தேவைப்படுகிற நேரத்தில் சிலவற்றைக் கூட்டிக் குறைத்துச் சொல்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒன்றைக் கூறலாம். சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைத்ததற்குக் காரணம், "மஸ்டர்ரோல்" வழக்கு முடிய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த அவையில் முன்னவர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒன்றைச் சொன்னார்கள். அதற்காகவும், இன்னும் சென்னையை 150 வார்டுகளாகப் பிரிக்கும் பணி இருப்பதாலும், இதை ஒத்தி வைத்திருக்கிறோமென்று சொன்னார்கள். சென்னை மாநகரத்தில் லட்சக் கணக்கான வாக்காளர்கள் குடியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் கவுன்சிலர்களாக, அலுவலர்களாக இருந்து பிழை செய்திருக்கிறார்களென்று கண்டு பிடிக்கப்பட்டு, அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருப்பதால்தான், இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்று கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். முன்னவர் அவர்கள், வார்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது; அது 150 என்ற அளவுக்கு உயர்த்தப்படுகிறது; ஆகையால் ஒத்தி வைத்திருக்கிறோமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியிலுள்ள 120 வார்டுகளை 150 வார்டுகளாக ஆக்க வேண்டுமென்பது இன்றைக்கு ஏற்பட்ட முடிவல்ல. கிட்டத்தட்ட 1973-ஆம் ஆண்டிலிருந்து, முந்தைய அரசு ஆணையிட்டு, அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதற்காகத் தனி அதிகாரி போட்டு, அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு

சந்தர்ப்பத்திலும் அந்த வேலைகள் சரியாக முடிக்கப்படாத காரணத்தால், அன்றைக்குத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிந்தோம். அதற்குப் பிறகு ஊழல் வழக்கு மிகப் பெரிய அளவில் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், மாநகராட்சி சம்பந்தப்பட்ட ஊழல் வழக்கைப் பிரதான காரணமாகக்கொண்டு தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. அடிப்படையில் இன்னொரு காரணமும் உண்டு. வார்டுகள் பிரிப்பது இன்னும் முடிவு பெறவில்லையென்பதையும் சொன்னேன். புதிதாக 120 வார்டுகளிலிருந்து 150 வார்டுகளாக்கும் பணி தீவிரமாக நடைபெற இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : நன்றி. நானும் அதைத்தான் குறிப்பிடுகிறேன். இன்றையதினம் அமைச்சரவர்கள் குறிப்பிட்டதை, அன்றைய தினம் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடவில்லை. வார்டுகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டியுள்ளதால், அந்தப் பணி முடிவடையாத காரணத்தால், மாநகராட்சித் தேர்தல்களை ஒத்திவைத்திருக்கிறோமென்று சொல்லியிருக்கலாம். அதைப் பாராட்டியிருக்க முடியும். வேலை நடந்து வருகிறது, அந்த வேலை முடியவில்லை என்பதை ஒரு வரியில் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் உள்நோக்கம் அதுவல்ல. அங்கு விசாரணை நடக்கிறதென்று குறிப்பிட்டால், ஏற்கெனவே ஆட்சி நடத்தியவர்கள் இந்தக் காரணத்தாலேயும் ஊழல் மலிந்தவர்கள்; இந்த நேரத்திலும் அவர்களை விட்டுவிடக் கூடாதென்ற உள்நோக்கத்தால் சொல்லப்பட்டிருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது முந்தியே நடைபெற்ற காரியம். ஆளுநர் உரைக்குப் பிறகு வந்ததல்ல. அதற்கு முன்னாலேயே அப்படி நடந்திருக்கிறது. வார்டுகள் பிரிப்பதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. பிரித்தும், பிரிக்காமலும் இருக்கிறது. அதைக் கவர்னர் உரையில் அறிவிக்காதது ஏன்? எதற்காக இதை அறிவிக்க வேண்டும்? இரண்டு மன்றங்களிலும் கேட்ட பிறகு, நேற்று ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அன்றையதினம் அது இருந்தும்கூட அதைச் சொல்லாமல், ஒரு களங்கத்தை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் கவர்னர் உரை இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன். தேர்தலை ஒத்தி வைத்தாகிவிட்டது. அதற்கு ஒரு காரணம். இதை ஏற்கெனவே சொல்லியிருக்கலாம். இப்படி 150 வார்டுகளாகப் பிரிக்கிற காரணத்தால், ஒத்திவைத்துள்ளோமென்று கூறியிருந்தால், ஏற்றுக் கொண்டிருக்கலாம்.





100 பேர் அல்லது 200 பேர்களுக்காக லட்சக் கணக்கானவர்கள், சென்னை மாநகராட்சியில் உள்ள மக்கள் ஜனநாயகத்தால் ஏற்படும் பயன்களை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். தேர்தல் ஏன் தள்ளிப் போடப்படுகிறது? வழக்குத் தனியாக நடைபெறுகிறது. மக்கள் வாக்குச் சாவடிகளில் ஓட்டு போடப்போகிறார்கள். வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் தேர்தலில் நிற்கலாம், தோற்கலாம். அது வேறு விஷயம். எதற்காக இதைக் குறிப்பிட வேண்டும்? என்ன காரணம்?

(பிற்பகல் 4-10)

இதைக் குறிப்பிடக் காரணம் என்ன? இதற்கு அரசுதான் காரணம். கவர்னர் பெருமானைக் குறிப்பிட விரும்பவில்லை. அரசு தயாரிக்கும் உரையைத்தான் அவர் வாசிக்கின்றது மரபாக இருக்கிறது. எந்த வழியிலாவது அவர்களுடைய காழ்ப்புணர்ச்சியைத் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறார்கள். இன்றைக்கு எதிர்க் கட்சி வரிசையிலே வீற்றிருக்கின்ற நான் சொல்வது, எது நியாயமானதோ, எது உண்மையோ, எது தேவையோ அதை எதிர்க் கட்சியிலே இருக்கின்ற நாங்கள் நிச்சயமாக மறக்க மாட்டோம். ஒரு காலத்திலே நாங்களும் அண்ணா அவர்களின் பாசறையில் பயின்று இருக்கிறோம். எது தேவையோ அதை நாங்களும் ஒத்துக் கொள்வோம். எதிர்க் கட்சியினுடைய நாகரீகத்தை நாங்கள் ஏற்று நடப்போம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எந்த நேரத்திலும் எதையும் அரசாங்கம் சொல்லிவிட்டு அதற்குப் பிறகு வேறு ஒரு காரணத்தைச் சொல்வது சரியல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு விவசாயம் செய்வதற்கு நீர் பெற்று வந்திருக்கிறார்கள். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைன்று சென்ற ஆண்டுகூட தண்ணீர் வராமல் இருந்தது. இதுபற்றி பத்திரிகைகளில் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் போட்டார்கள். நான் சிறையில் படித்தேன். வானொலியில் செய்தி கேட்டேன். இங்கிருந்து சென்றவர்களுக்கு செல்கிறபோது ஒரு பாராட்டுக் கொடுத்தார்கள்; பிறகு திரும்பி வந்தபிறகு அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கொடுத்தார்கள். தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். தண்ணீர் வந்ததா? எந்த ஆண்டுக்கு, எந்த அளவுக்கு என்று யாருக்கும் தெரியாது. பாசனத்திற்குத் தேவைப்பட்டது கிடைத்ததா என்றால், அதுவும் கிடையாது. ஆனால் இந்த முறை அப்படி இருக்காது என்று

கருதுகிறேன். ஏனென்றால் இந்த அரசாங்கமே பேரவையில் இன்றையதினம் அறிவித்திருக்கிறது. பத்திரிகையிலே இந்த மாதிரி செய்தி வந்திருக்கிறது. ஒரு நாளுக்கு ஒரு கோடி கன அடி தண்ணீர் 10 நாட்களுக்கு வரும் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஒரு கோடி கன அடி அல்ல, 100 கோடி கன அடி.

**திரு. கோ. சி. மணி:** நன்றி. 100 கோடி கன அடி தண்ணீர் 10 நாட்களுக்கு வருவதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை ஒத்துக்கொள்ள வேண்டும். அந்தத் தண்ணீரை அளவோடு தேக்கி வைக்க வேண்டும். இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான நேரத்தில் நடப்பதைச் சொல்கிறேன், அது நடக்காமல் இருப்பதற்காக நினைவுபடுத்துகிறேன். இந்த நேரத்தில் அது மிக முக்கியமானதும் தேவையானதும் ஆகும். அரசோ அல்லது அதிகாரிகளோ "முறைத் திட்டத்தை" அமுல் படுத்துகிறார்கள். "முறைத் திட்டம்" என்பது குறுவை விளைந்து, கதிர் ஆனபிறகு பரிசீலித்து வைத்தால், பரவாயில்லை. ஆனால் அது கதிர் ஆவதற்குள்ளாகவே, நம்மிடம் தண்ணீர் இல்லை என்பதற்காக, முறைத்திட்டத்தை மேற்கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இப்போது முறைத் திட்டம் வைப்பார்கள் என்ற அளவில் சொல்லவில்லை. முன்பு வைத்திருந்தார்கள். எனக்கு அந்த பயம் இருக்கிறது. ஏற்கெனவே நடந்திருக்கிறது. இந்த ஆண்டு அது நடக்கக்கூடாது. தண்ணீர் இப்போது தேவையான அளவுக்கு இருக்கிறது என்று உறுதியும் அளித்திருக்கிறார்கள். தேவையான அளவுக்கு, கொள்ளளவுக்கு பல இடங்களில் உள்ள ஆறுகளுக்கெல்லாம் தண்ணீர் விடவேண்டும் என்பதுதான் என் பணிவன்பான வேண்டுகோளாகும். ஜி. ஏ. கனுலுக்கு 4 நாள், காவிரி டிவிஷனுக்கு 3 நாள் அந்த காவிரியிலிருந்து பிரிகிற 6 ஆறுகள், வீர சோழன், வெண்ணாறு, வெட்டாறு இப்படி இந்த 6 ஆறுகளுக்கும், 3 நாள், 3 நாள், 3½ நாள் என்று திட்டம் வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தினால் என்ன ஆகிறது என்றால். தண்ணீர் அடைப்பதற்கு மூன்று நாள் என்றால், ஒரு நாள் திறந்துவிட்டால், அந்தத் தண்ணீர் தலைப்புக்குத் திறந்துவிட்டு அந்த தண்ணீர் கடைசி வரை வந்து சேர்வதற்கு 1½ நாள் ஆகும். அதற்குப் பிறகு அடைத்து விடுகிற முறை வந்துவிடும். முதலில் எவ்வளவு திறந்துவிட்டார்களோ அந்த அளவுக்குத் தான் அந்த ஆற்றில் தண்ணீர் ஓடியிருக்கும். இதுதான்



இயற்கை. இதுதான் நடக்கிறது. காரணம், தண்ணீரை சிக்கனப்படுத்துகிறோம். அவர்கள் சிக்கனப்படுத்தியிருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. கொஞ்ச காலமாக பொதுப் பணித் துறையினர் அவ்வளவு சிக்கனப்படுத்திக் கொடுத்ததனால் தான், அந்த அளவுக்கு கஷ்டம் தருகிறது. எடுத்த உடனேயே இந்த முறைத்திட்டம் வந்தால், அதை நிவர்த்திக்க முடியும் என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. தயவு செய்து அந்த நிலை ஏற்படக்கூடாது. சென்ற வருடம் புதிய ஆற்றுக்கு, ஜீ. ஏ. கனலுக்கு தண்ணீர் விடாமல், காவிரிக்கு மட்டும் தண்ணீர் விட அரசாங்கம் உத்தரவிட்டது. காவிரிப் பகுதியிலே மட்டும் சாகுபடி செய்யலாம் என்று அரசாங்க உத்தரவு இருந்தது. அப்படி இருக்குமா? எனக்கு ஒரு சந்தேகம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எல்லா இடங்களுக்கும் விடப்பட்டது.

**திரு. கோ. சி. மணி:** தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற எல்லா ஆறுகளுக்கும் தண்ணீர் விடப்பட்டது. இப்போது தண்ணீர் விடவேண்டும். போன வருடம் தண்ணீர் வாங்கி வருவதாகச் சொன்ன நிலையிலே, தண்ணீர் விடுவோம் என்று பத்திரிகையிலே வந்தது. காவிரியிலே தண்ணீர் வரும், இந்த ஆண்டு கல்லணைக் கால்வாய்க்குத் தண்ணீர் வராது என்ற உத்தரவும் பத்திரிகையிலே வந்தது. இந்த வருடம் அதுமாதிரி இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், தஞ்சையிலே எள் விளைவிக்க மாட்டார்கள் என்று. அதற்குக் காரணம் நிலத்திலே சத்து போய்விடும் என்றும் சொன்னார்கள். ஆனால் எங்கள் ஜில்லாவிலே விவசாயம் உண்டு என்று சொன்னார்கள். நான்கூட இதற்குப் பதில் சொல்வதுபோல் சொன்னேன். எங்கள் ஜில்லாவில் ஒரு பழக்கம் இருந்தது, அது மலையேறிவிட்டது. இப்போது குறுவை நடமுடியாத இடத்திலே, தாளடி நடமுடியாத இடத்திலே, சம்பா நடமுடியாத இடத்திலே, எள் போடப்பட்டது. இரண்டு மழை பெய்தது. இந்த வருடம் எள் நன்றாக விளைந்தது. இப்படி விளைந்த பிறகும், எள் இந்த விலை விற்கிறது. இன்றைய தினம் பத்திரிகைச் செய்தி வருகிறது. கடலெண்ணெய் விலை கிலோவுக்கு ரூபாய் 10-30 என்றும், நல்லெண்ணெய் கிலோவுக்கு ரூபாய் 9-50 என்றும் விற்கிறது. அதாவது நல்லெண்ணெய் விலை குறைவாகவும், கடலெண்ணெய்

விலை அதிகமாகவும் விற்கப்படுகிறது. அதற்கு முன்னாலே நல்லெண்ணெயில் கடலெண்ணெயைக் கலப்படம் செய்வார்கள். கடலெண்ணெயை நல்லெண்ணெயில் ஊற்றித்தான் விற்பார்கள். ஆனால் இப்போது இருக்கிற விலையில் நல்லெண்ணெயை கடலெண்ணெயில் கலந்து விற்கவேண்டிய நிலை இருக்கிறது. விலைவாசிகள் உயராமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அறிக்கைகள் பத்திரிகையிலே வந்த பிறகு, கவர்னர் அவர்கள் உரையாற்றிய பிறகு, இன்றைக்குக் கொஞ்சம் விலை ஏறியிருக்கிறது. அன்றைக்கு இருந்த விலையே அதிக விலை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எண்ணெய் விலை அதிகரித்திருக்கிறது என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னர் உரையைப் படித்த பிறகு இன்னும் கொஞ்சம் விலை ஏறியிருக்கிறது. இது முக்கியமான விஷயம். இதை எப்படியாவது கவனிக்க வேண்டும். கடலை எண்ணெய் வருகிறது என்று சொன்னார்கள். கடலிலே வருகிறது என்று சொன்னார்கள். கப்பலில் என்றுகூட நாமாகத் தெரிந்து கொண்டோம். சென்ற ஆண்டு கடலை எண்ணெய் வட நாட்டிலேயிருந்து பெறப்பட்டு கடலிலே வருகிறது என்றெல்லாம் சொன்னார்கள். வந்ததா என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. வந்திருந்தால் விலை இறங்கியிருக்கும். வேண்டியவர்களுக்கு வேண்டிய அளவு கொடுத்திருக்க வேண்டும். விலையும் இறங்கவில்லை. வேண்டியவர்களுக்குக் கிடைக்கவும் இல்லை. கவர்னர் அவர்கள் பேசியபோது இருந்த விலையை விட ஏறியிருக்கிறது. இதற்கு என்ன காரணம் காண்பிக்கிறார்கள் என்பது தெரியாது. இன்னொன்று மிக முக்கியமான பிரச்சினை. 1976-க்கு முன்பு 1975ஆம் வருடத்தில் குறுவைக்கும் சரி, தாளடிக்கும் சரி, சம்பாவுக்கும் சரி, விளைகிற நெல்லுக்கு விவசாயிக்கு ஒரு ஊக்க போனஸ் கொடுக்கப்பட்டது. ஒரு குவிண்டாலுக்கு இவ்வளவு என்று கொடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு குறுவைக்கே நிறுத்தப்பட்டுவிட்டது. தாளடிக்கும் இல்லை. சம்பாவுக்கும் இல்லை. எல்லாக் கட்சிக்காரர்களும், நிலச்சுவான்தார்களும் ஒரு சங்கம் வைத்து அதில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதை அரசாங்கத்திடம் கொடுத்தார்கள். எடுத்துக்கொண்டு போய் அதை வாங்க வேண்டியவர்களிடம் வாங்கவேண்டியதுதான் என்று பத்திரிகையிலே அறிவித்தார்கள். நியாயமானதுதான் என்ற அறிவிப்பும் பத்திரிகையிலே செய்தியாக வந்தது. அது கிடைத்ததா? கிடைக்கவில்லை. ஒரு ஆண்டு கடந்துவிட்டது. விளைவிக்கப்பட்ட பொருளுக்குத் தக்க விலை கிடைக்கவில்லை. இந்தக் குறை தீர்க்கப்படும் என்று கவர்னர் உரையிலே சொன்னால் என்ன? நான்கைந்து வருடங்களாகக் கொடுக்கப்பட்டு வந்த போனஸ்





கடந்த வருடம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்த வருடம் கிடைக்கச் செய்வோம் என்று குறிப்பிடக்கூடாதா? மாநகராட்சித் தேர்தல்பற்றி, மஸ்டர் ரோல் வழக்கு பற்றி நினைவு இருந்ததே. பல லட்சக்கணக்கான மக்கள் உழுது பயிரிட்டு அதில் கிடைத்த கொஞ்சம் விளைபொருளை விற்பதற்கு அவர்களுக்குத் தக்க விலை கிடைக்கவில்லையே. மாநகராட்சித் தேர்தல் பற்றி நினைவு வைத்திருக்கிற இந்த அரசு இதையும் சொல்லி, இந்த ஆண்டு போனஸ் கொடுப்போம், ஏற்கெனவே கொடுத்த அளவாவது கொடுப்போம் என்று சொல்லவேண்டும். நிலச்சுவான்தார்கள் சங்கத்திலே தீர்மானம் போட்டார்கள். மூட்டைக்கு 10 ரூபாய் போதாது, மூட்டைக்கு 22 ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். இரண்டு மூன்று வருடங்கள் கேட்டார்கள். அது முடிந்தபிறகு, அதுவும் கிடைக்காத சூழ்நிலைக்கு வந்த பிறகு, யார் கேட்டார்களோ அவர்களே திரும்பத் தீர்மானம் போட்டு சென்ற அரசு கொடுத்ததையாவது கொடுங்கள் என்று கேட்டார்கள். அதைச் சட்ட மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் கேட்டார்கள். அது முடிந்ததா? அதையாவது கொடுக்கிறோம் என்று ஒரு வரி சொல்லியிருந்தால், எனக்கு ஒரு ஆறுதலாக இருந்திருக்கும். இப்படிப்பட்ட குறைகளைத்தான் இங்கு இந்த நேரத்திலே என்னால் சுட்டிக்காட்ட முடிந்தது. இந்தக் குறையை, கவர்னர் அவர்கள் உரையிலே சொல்லாவிட்டாலும்கூட, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கையின்போதோ, அதற்குள்ளாகவோ சொல்ல வேண்டும். இப்படி கடலெண்ணெய் விலை ஏற்றத்தைத் தடுக்கலாம். விவசாயிகளுக்குக் கொடுத்தால், அவர்கள் இன்னும் கொஞ்சம் உற்சாகமாகச் செயல்படுவார்கள். கொஞ்சம் கூடவே பயிரிடுவார்கள். இன்னும் கொஞ்சம் கவலையில்லாமல் கஷ்டப்பட்டு கடன் வாங்கியாவது விவசாயம் செய்வார்கள். குறுவை நடுகிற நேரத்திலேதான் அரசாங்கம் விலையை அறிவிக்கும், போனஸ்பற்றி அறிவிக்கும். காரணம் கொஞ்சம் உற்சாகத்துடன் இருபோக சாகுபடி செய்வார்கள் என்ற எண்ணத்தில் அறிவிப்பார்கள். அதே மாதிரி இந்த அரசும் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவுபடுத்தி அமைகிறேன்.

(பிற்பகல் 4-20)

**திரு. சி. வி. ராஜகோபால்:** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய அருமை நண்பர் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசும்போது ரூபாய் 75 நெல் விலைக்கு போனஸ்..........

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் கேட்பதில் என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது?

**திரு. சி. வி. ராஜகோபால்:** அந்த போனசை நிறுத்திவிட்டார்கள் என்று அவர்கள் கூறினார்கள். எனக்குத் தெரிந்தவரையில், அப்படி நிறுத்தப்பட்ட காலம் 1975 என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதைப்பற்றியெல்லாம் உறுப்பினர் பின்னால் பேசுகிற வாய்ப்பு வரும்போது சொல்லலாம். இப்போது நேரத்தை வீணாக்க வேண்டாம்.

**திரு. கோ. சி. மணி:** 1975-76 என்று சொல்கிறபோது, போன பசலியிலேயே நிறுத்தப்பட்டது என்பதைத்தான் குறிப்பிட்டேன்.

* **திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் உள்ள சில பல கருத்துக்களை ஒரு பகுதியினர் பாராட்டினார்கள். மற்றொரு பகுதியினர் அதில் சில கருத்துக்கள் இல்லாத குறையைச் சுட்டிக் காட்டினார்கள். நான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும்கூட, நல்ல கருத்துக்களைப் பாராட்டவும் இதில் இல்லாத—பிறர் சொல்லாத—கருத்துக்களை நினைவுபடுத்தவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். நான் முதன்முதலாக ஆளுநர் உரையில் பாராட்ட வேண்டிய ஒரு அம்சம்—பாராட்ட விரும்புகிற அம்சம்—இந்த ஆண்டு ஆளுநர் உரை தமிழிலும் படிக்கப்பட்டது ஒன்று. இது மிகவும் போற்றத்தக்க, பாராட்டத்தக்க, தமிழுக்குக் கிடைத்த சிறப்பு. இதில்கூட அதை முழுமையாகப் பாராட்ட முடியாத நிலை. ஆளுநர் உரையை அவரே தமிழில் படித்திருந்தால், என் போன்றவர்களுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்திருக்கும். தமிழ் நாட்டில் தமிழறிந்த ஆளுநர் வரவேண்டும். தமிழில் படிக்கக்கூடிய ஆளுநர் வர வேண்டுமென்பது நம்முடைய நீண்ட கால விருப்பம். அது ஏற்படவில்லை. நாளாவட்டத்தில் அப்படி ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பு நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. தமிழறிந்தவர்கள் தமிழ் நாட்டு ஆளுநராக வர வேண்டுமென்பது நம்முடைய விருப்பமாக மட்டுமல்ல, இங்கே தமிழறியாத நிலையில் ஆளுநராக வருபவருங்கூட இங்கு வந்த பிறகு தமிழைக் கற்றுக் கொள்ளவே விரும்புகிறார்கள். முன்பு ஆளுநராக இருந்த திரு. ஷா அவர்கள் தமிழ் கற்றுக் கொண்டார்கள். பின்னர் வந்த திரு. சுகாடியா அவர்களுக்குக் கூட . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கவர்னர் நடத்தையைப் பற்றிக் குறை சொல்லக்கூடாது. சுட்டிக் காட்டியது போதும். மேற்கொண்டு பேசலாம்.



**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** நான் குறை சொல்லவில்லை. அதைப் பாராட்டித்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அந்த உரை அப்படித்தான் இருக்க வேண்டுமென்று சொல்லக் கூடாது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** இப்போதிருக்கிற ஆளுநர் அவர்களை நான் ஒரு கவிஞன் என்று அறிமுகம் செய்துகொண்ட பொழுது, அவர்கள் மிகுந்த ஆர்வத்தில் தமக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நான் அதற்கு மன நிறைவுடன் ஒப்புக்கொண்டேன். ஆனால் அவர்களுக்கு அப்போதிருந்த வேலைப் பளுவினால், நேரமில்லாத காரணத்தால், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று பதிலனுப்பினார்கள். இப்போது அமைச்சரவை பொறுப்பேற்று ஆளுநருக்கு வேலைப் பளு மிகுந்த அளவில் குறைந்திருப்பதால் நேரம் கிடைக்கும். நான் மறுபடியும் சான்ஸ் கேட்கலாம் என்று நினைக்கிறேன். மலையிடம் முகமது போகவில்லை என்றால் முகமதுவிடம் மலையாவது போகவேண்டும் என்பதைப்போல, தமிழறியா ஆளுநர் வந்தாலும், இங்கே தமிழறிந்தவர்களாக்க வேண்டும். ஆகையால், துவக்கமாகத் தமிழில் அவர்கள் உரை படிக்கப்பட்டதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, அண்ணாவின் கொள்கை வழியில் இரு மொழித் திட்டத்தை வலியுறுத்திய இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆட்சி மொழி தமிழ் என்ற அறிவிப்பை அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சி அமைத்த நேரத்திலேயே கொண்டு வந்தார்கள். ஐந்தாண்டுக் காலத்தில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை ஏற்பட்டுவிடுமென்று சொன்னார்கள். ஆட்சி மொழி முற்றிலும் தமிழாக்கப்படும் என்று சொன்னார்கள். 1974-ல் இதுபற்றி நான் ஒரு கேள்வியைக்கூட எழுப்பினேன். அதற்குப் பதிலளித்த முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள், அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது வந்திருக்கிற அரசின் கல்வி அமைச்சர் அவர்களும் அந்த வேலையைத் தொடர்ந்து நிறைவு செய்வார்கள் என்று நம்புகிறேன். இதற்கு முடிவில்லாமல் காலம் போய்க் கொண்டிருந்தால், அண்ணாவின் கொள்கை வழியில் நிற்பதாக எப்படிச் சொல்ல முடியும்? இதற்கு ஒரு இறுதி காலக் கட்டம் நிர்ணயிக்க வேண்டும். அத்துடன் இரு மொழிகளுக்கிடையில் வந்து புகுந்த இந்தி மொழியை எதிர்க்கும் போராட்டத்தில் ஏராளமான இளைஞர்கள் ஈடுபட்டு பல இன்னல்களுக்கு ஆளானார்கள், அவதிப்பட்டார்கள். அதைக் கருத்தில் கொண்டு

முன்னைய அரசு அவர்களுக்கு மானியம் அளித்தது. இடையில் வந்த ஆளுநர் அரசு அதைத் தடுத்துவிட்டது. அதுவும் அண்ணா வழியில் நின்று பாடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட உதவி மானியம்தான். அண்ணா வழியைக் கடைப்பிடிப்பதாகக் கூறும் இந்த அரசாங்கம் முன்பு நிறுத்தப்பட்ட அந்த மானியத்தைக் கொடுக்க வழி செய்ய வேண்டும். வட எல்லை, தெற்கு எல்லைப் போராட்டங்களில் ஏராளமான இளைஞர்கள் ஈடுபட்டுச் சிறை சென்றார்கள். அதைக்கூட அண்ணா வழியில் நடைபெற்ற முன்னைய அரசு மதித்து அவர்களுக்கும் மானியம் வழங்கியது. அதையும் மீண்டும் கிடைக்கச் செய்ய வேண்டும். மொழிப் போராட்டத்திலும் ஈடுபட்ட இளைஞர்களுக்கும் போராட்ட வீரர்களுக்கும் மானியம் வழங்குவதைப்பற்றி இந்த உரையிலே குறிப்பிடவில்லை, எழுத்திலே இல்லாவிட்டாலும், எண்ணத்திலே அதைக் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று, இந்த உரையில் பாராட்ட வேண்டிய அம்சம் வறுமையில் வாடுகிற தமிழ் அறிஞர்களுக்கு அரசு நிதி உதவுவது . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தமிழ் அறிஞர்களுக்குத்தானா? கவிஞர்களுக்கு இல்லையா ?

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** தமிழ்க் கவிஞர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்கத்தான் போகிறேன். கவிஞர்களும் அறிஞர்களாகத்தான் இருப்பார்கள். பிற மாநிலங்களில் தமிழ் கற்க விரும்புகிறவர்களுக்கு உதவித் தொகை தருவதாகக் கூறியிருப்பதும் பாராட்டக்கூடிய ஒரு அம்சமாகும். தமிழாசிரியர்களுக்கும், தமிழ்ப் பட்டம் பெற்றவர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தில் சம அந்தஸ்தை, சமமான வேலை வாய்ப்பு, சம்பள விகிதத்தை அளிக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ் வகுப்புகளில் மாணவர்கள் சேரவில்லை என்று சொல்வதற்குக் காரணம், தமிழ் மீடியத்தில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பும் சம அந்தஸ்தும் ஊதியமும் கிடையாது என்பதுதான். அதை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் தமிழ் அறிஞர்களுக்கு உதவி செய்ததாக அமையும். ஆங்கிலத்தில் படித்துப் பட்டதாரிகளாகிவிட்டவர்களுக்குக்கூட வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலை தொடர்ந்திருக்கிறது. வேலை வாய்ப்பைத் தேடித் தருவதற்கு ஒரு அலுவலகம் இயங்குகிறது என்றாலும், அது அங்கே வேலை செய்கிறவர்களுக்குத்தான் வாய்ப்பாக அமைந்திருக்கிறதே தவிர, அதில்





பதிவு செய்துகொண்டவர்களுக்கு வேலை தேடித் தருவதாக இல்லை. அது என்ன செய்கிறது என்று தெரியவில்லை. வட சென்னையில் பதிவு செய்கிறவர்களுக்கு தென் சென்னையில் ஒரு வேலையிருந்தால், அனுப்ப முடியவில்லை. வட சென்னையில் வேலையிருந்தால், அதற்கு தென் சென்னையில் பதிவு செய்தவர்களை அனுப்ப முடியாதபடி வைத்திருக்கிறார்கள். இங்கும் அங்கும் அந்த நிறுவனம் அலைகிற வேலையைத் தவிர வேறு வேலை தேடித் தருவதாகத் தெரியவில்லை. இன்னும் பல தவறுகள் அங்கே நடப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதைக் குறிப்பிட்டால், அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். அதைத் தருவதற்கு நான் தயாராக இல்லாத காரணத்தால், அதை விவரிக்காமல் விட்டுவிடுகிறேன். பிள்ளைகளைப் பெற்றுப் படிக்க வைத்துப் பட்டதாரிகளாக்குவது மிகப் பெரிய தொல்லையான காரியம் என்பதை நான் சொந்த அனுபவத்தில் உணர்ந்தவன். வீட்டை விற்று, நிலத்தை விற்றுப் படிக்க வைத்துப் பட்டதாரியாக்கியபின் அவர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பு கிடைக்கும், அவர்கள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றிக் கொண்டு, முடிந்தால் பெற்றவர்களையும் காப்பாற்றுவார்கள் என்று நம்பித்தான் பெற்றவர்கள் பாடுபட்டுப் படிக்க வைக்கிறார்கள். ஆனால் 'கூழை விழுதைப் பெற்ற ஆல்' என்று சொல்வார்கள். ஆலமரம், விழுது விடுவது, அதன் கிளைகளைத் தாங்குவதோடு மண்ணில் வேரூன்றி சாரத்தை உறிஞ்சித் தந்து அந்த மரத்தையும் காக்கும் என்ற நம்பிக்கையில்தான். சில விழுதுகள் அந்தக் காரியத்தைச் செய்ய முடியாமல் மரமே அதைத் தாங்கும் நிலையில் கிளைக்கே பாரமாக இருக்கும். அதைத்தான் 'கூழை விழுதைப் பெற்ற ஆல்' என்பார்கள். அதைப்போல, பிள்ளைகளைப் படிக்க வைப்பதோடு, அவர்கள் தன் குடும்பத்தைத் தாங்குவதற்குப் பதிலாக, அவர்களையும் சேர்த்து பெற்றவர்கள் சுமக்க வேண்டியிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு அதிகமான அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலைக் கதவுகள் மூடப்பட்டிருப்பதைப்பற்றியெல்லாம் பலர் சொன்னார்கள். திருப்பித் திருப்பி அதையே நானும் சொல்ல விரும்பவில்லை. அந்தக் காலத்தில் ஆலயக் கதவு திறக்க அப்பர் பாடினாராம். இப்போது ஆலைக் கதவு திறக்க ஆளுநர் பாடியிருக்க வேண்டும். அதுபற்றி இந்த உரையில் குறிப்பிடப்படவில்லை. ஆலை அடைப்பினால் உற்பத்திப் பெருக்கம் தடைப்பட்டிருக்கிறது. உழைப்பாளிகளின் நலன்கள் கெட்டிருக்கின்றன.

ஆளுநர் உரையில் இல்லாவிட்டாலும், அரசாங்கம் அதைப்பற்றி ஆராய்ந்து செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

இன்னொன்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். முன்னால் வந்த ஆளுநர்கள் இந்த நாட்டில் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டால்தான், இந்நாள் உரையிலும் அவர்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று நம்புவதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கும். முன்னாள் ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் இருந்தபோது, 1975 ஆம் ஆண்டில் தமிழக கவிஞர் மன்ற மாநாடு நடத்தினோம். தலைவர் அவர்களுக்குத் தெரியும். அந்த மாநாட்டினைத் திறந்து வைக்க வந்த ஆளுநர் ஆண்டுதோறும் கவிதைப் போட்டி நடத்துங்கள்; அந்தக் கவிதைப் போட்டியில் முதல் பரிசு ஆளுநர் பரிசு என்ற வகையில் நான் பணம் வழங்குகிறேன் என்று அவர்களாகவே அறிவித்தார்கள். ஆளுநர் உரையை நம்பி அடுத்த ஆண்டு போட்டியை அறிவித்தோம், போட்டிக்கு கவிதைகள் எல்லாம் வந்திருக்கின்றன. அதற்குள் அந்த ஆளுநர் அவர்கள் மாறிச் சென்றுவிட்டபடியால், அவர் அடுத்த ஆளுநருக்கு அறிவித்து, இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று மேதகு சுகாதியா அவர்களுக்குக் கடிதம் எழுதி, அக்கடிதத்தின் நகலை எங்களுக்கும் அனுப்பினார்கள். அதை அடுத்து இப்பொழுது மற்றொரு ஆளுநர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இவர்களிடம் நாங்கள் இன்னமும் அதற்காக முயற்சிக்கவில்லை. எதற்குச் சொல்கிறேன் என்றால் முன்னாள் ஆளுநர்கள் கொடுத்த பழைய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அடுத்து, மேதகு ஆளுநர் திரு. சுகாதியா அவர்கள் பாரதியாரின் வீடு அரசுடைமையாக்கப்படும், தமிழறிஞர்களுக்குச் சிறப்பு செய்யப்படும் என்று வாக்களித்தார்கள். திருவல்லிக்கேணியில் பாரதியார் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்படும் என்று அவர் அறிவித்து, அது பத்திரிகைகளில் பெரிய தலைப்பிட்டு வெளி வந்தது. அதற்குப் பிறகு ஆளுநர் மாறிவிட்டாலும், அரசாங்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கான முயற்சிகள், முன்னேற்றங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அதைக்கூட இப்போதிருக்கும் கல்வி அமைச்சர்





அவர்கள் செய்ய வேண்டும். அது தமிழுக்குச் செய்கின்ற சிறப்பாகும். இப்போதிருக்கும் தமிழறிஞர்களுக்கு மட்டுமல்லாமல், இறந்தவர்களுக்கும் செய்யும் சிறப்பாக இருக்கும்.

முன்னால் பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். மூன்றாவது சம்பளக் கமிஷன்பற்றி ஆளுநர் அவர்களே வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதே ஆளுநர் தான் இப்போதும் இருக்கிறார். சில வாரங்களுக்கு முன்னர்தான் அந்த வாக்குறுதியை நம்பி அரசு ஊழியர்கள் தங்கள் போராட்டத்தை முடித்தார்கள். தற்காலிகமாக பத்து ரூபாய் பஞ்சப்படியை உயர்த்திக் கொடுத்து, ஊதியக் கமிஷன் அமைக்கப்படும் என்றும் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், சில வாரங்களுக்குப் பிறகு இந்த அவையில் ஆற்றிய அவருடைய உரையில், அதைப்பற்றி ஒரு வார்த்தையும் இல்லை. ஆகவே ஆளுநர் உரையில் அதுபற்றிச் சொல்லாவிட்டாலும், அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது. மூன்றாவது சம்பளக் கமிஷனை நியமிக்க வேண்டியது, மிகமிக முக்கியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விலைவாசிக் கட்டுப்பாடுபற்றி இதில் ஒரு குறிப்பும் இல்லை. நியாய விலைக் கடைகளைப்பற்றி முன்னால் பேசிய உறுப்பினர் திரு. ஜோ. சி. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். நியாய விலைக் கடைகளைத் திறந்தாலும், அங்கே எல்லோருக்குமே வியாபாரம் செய்ய முடியாது. குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலில் இருந்தபோது ஓர் அறிவிப்பு வந்தது. எல்லாக் கடைகளிலும் எல்லாப் பொருள்களின் மேலும் விலைகள் குறிக்கப்பட வேண்டும், அந்த விலைப்படிதான் விற்க வேண்டும் என்று கொண்டு வந்தார்கள். ரொட்டல் பண்டங்களின் விலைகள் எல்லாம் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், வரி என்று புதிதாக ரூபாய்க்கு நான்கு பைசா வீதம் சேர்த்துக்கொண்டார்கள். இப்போது அந்தச் சட்டம் அமுலில் இருக்கிறதா என்பதே தெரியவில்லை. பண்டங்களின் மேல் விலை குறிக்கப்பட்டிருக்கிறது. 'மேரி பிஸ்கட்' வாங்குவதற்காகச் சென்றால், அதன்மேல் ரூபாய் 1-17 என்றிருக்கிறது. ஆனால், சில கடைகளில் ரூபாய் 1-25 என்றும், அடுத்த கடையில் ரூபாய் 1-50 என்றும், 'ஏர்-கண்டிஷன்' பொருத்தப்பட்ட கடையாக இருந்தால் ரூபாய் 1-75 என்றும் சொல்கிறார்கள். கேட்டால் உள்ளூர் வரி தனியாகப் போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே அந்த வரி எவ்வளவு என்பதற்கு வாய்ப்பு சட்டமன்ற உறுப்பினராகிய எனக்கே தெரியவில்லை.

ஏழை எளிய மக்களுக்கு எப்படித் தெரியும்? ஆகவே பண்டங்களின் விலை எவ்வளவு, வரி எவ்வளவு என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். விலைவாசியினைக் கட்டுப்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் வியாபாரிகளின் கொள்ளையைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். ஓட்டல் பண்டங்களைப்பற்றிச் சொன்னேன். ஓட்டல்களில் பண்டங்கள் எவ்வளவு கனம் இருக்க வேண்டும், தரம் எப்படி இருக்க வேண்டும், விலை எவ்வளவு என்றெல்லாம் முன்பு அறிவிக்கப்பட்டது. அதெல்லாம் இப்போது போய்விட்டது. ஆனால் வரி மட்டும் அப்படியே இருக்கிறது. இட்டிலி இன்ன விலைதான் விற்க வேண்டும், இவ்வளவு கனம் இருக்க வேண்டும் என்றெல்லாம் முன்பு குறிப்பிட்டார்கள். அதிலே கனமும் போய்விட்டது, தரமும் போய்விட்டது, ஆனால் வரி மட்டும் வசூலிக்கிறார்கள். இதை எல்லாம் இன்றைய அரசாங்கம் கவனிக்க வேண்டும். இதற்காகவே பல மாதங்களாக--ஆண்டுகளாக 'பறக்கும் படை' ஒன்று வைத்துக்கொண்டு, பெரிய போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் நல்ல ஆதரவு தந்தால் கூட, நல்ல பயனுள்ள பணியாக அது அமையும்.

அடுத்து, நெருக்கடி காலக் கொடுமைகளைப்பற்றி இன்றைய ஆளுநர் உரையில் எதுவும் இல்லை என்பதை பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதை இங்கே குறிப்பிடாதது மட்டுமல்ல, அதைப்பற்றி சிந்தனையே இல்லாமல் இருப்பதாகத்தான் நான் அறிகிறேன். ஆனால் இப்போது மத்திய அரசே மாநில அரசுகளை விவரங்கள் கேட்டு வாங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடி காலக் கொடுமைகள், குற்றங்கள், பொய்ப்புகார்கள், பொய் வழக்குகள், சித்திரவதைகள், படுகொலைகள் ஆகியவற்றைத் திரட்டிப் பட்டியல் தருமாறு மத்திய அரசே மாநிலங்களைக் கேட்டிருக்கிறது. இப்போதாவது இந்த அரசாங்கம் அதற்குக் கட்டுப்பட்டு கொடுமைப் பட்டியலைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அதைக் கொடுக்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கும், குற்றங்களுக்கும், அக்கிரமங்களுக்கும், தூண்டுதலாகவும் துணையாகவும், கூட்டாளியாகவும், இருந்தவர்கள் பெயர்களையும் அதிலே சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஆளுநர் அவர்களின் உரையினை நான் படித்துக் கொண்டிருந்தபோது என்னுடைய இளைய மகள், பள்ளிச்சிறுமி— இது பல குடும்ப நலத் திட்டம் என்பதால், என் குடும்ப விவரங்



களையும் கலந்தே சொல்ல விரும்புகிறேன்—இந்த உரையைப் பார்த்துவிட்டு, இதிலே 'ஊழல், ஊழல்' என்று ஏராளமாக இருக்கிறதே, என்று கேட்டாள். அப்போதுதான் நானும் கவனித்தேன். நான்காவது பாராவில் நான்கு இடங்களில் 'ஊழல்', 'ஊழல்', 'ஊழல்' என்ற வரிகளைப் படித்தேன். பிறகு என் மகளைப் பார்த்து, "இல்லையம்மா, ஊழலை ஒழிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்" என்று விளக்கினேன். அப்படிப் பச்சிளம் குழந்தைகள் கூட கவனிக்குமளவுக்கு, ஊழலை ஒழிப்பதாகச் சொல்கிறதைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் ஊழல்காரர்களால் நாடு எந்த அளவிற்குக் கெடுகிறதோ, அதைவிட பெரும் பணம் சம்பாதிப்பவர்கள், வருமானக் கணக்கை மறைத்து, அரசாங்க வரியை ஏய்த்து, வேறுபல மோசடிகளைச் செய்து, கறுப்புப் பணத்தைக் குவிப்பதால் இந்த நாட்டிலே ஏற்படுகிற கொடுமைகள் ஏராளம், ஏராளம். அதையும் இந்த ஆட்சியாளர்கள் கவனிக்க வேண்டும். கறுப்புப் பணக்காரர்கள் அரசாங்க வரியை மட்டும் ஏமாற்றவில்லை. அரசாங்கத்திற்கு நியாயமாக வரவேண்டிய வரியைச் செலுத்தாதவர்களால், புதிய வரி போடவேண்டியிருக்கிறது; பழைய வரிகளை உயர்த்த வேண்டியிருக்கிறது; அதனால் பண்டங்களின் விலை மேலும் ஏறுகிறது. ஏழையெளிய மக்கள் அதனால் வறுமையில் சாக வேண்டியிருக்கிறது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "சித்திரச் சோலைகளே, உம்மைத் திருத்த இப்பாரினிலே எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ, உங்கள் வேரினிலே" என்று பாடினார். சித்திரச் சோலைகளைப் பார்க்கிறபோது, அந்தச் சோலைகளை உருவாக்க ரத்தம் சிந்திய தோழர்களைப் பற்றித்தான் அவருக்கு எண்ணம் ஏற்பட்டது. ஆனால் எனக்கோ இன்று கறுப்புப் பணக்காரர்களைப் பார்க்கிறபோது, "வரி ஏய்ப்புக்காரர்களே, உங்கள் வாழ்க்கை வளர்ச்சியிலே எத்தனை ஏழைகள் நித்தம் பசியாலே செத்தனரோ இந்த நாட்டினிலே" என்று பாடவேண்டிய எண்ணம்தான் ஏற்படுகிறது. ஆகவே, ஊழல் குற்றங்களை ஒழிப்பதைப் போல, கறுப்புப் பணக்காரர்கள், வரி ஏய்ப்புக் குற்றங்கள், மோசடிக் குற்றங்கள் ஆகியவற்றைச் செய்பவர்களையும் கண்டுபிடித்து, மத்திய அரசுக்கும், மக்களுக்கும் அவர்களைக் காட்டிக் கொடுத்து, அந்தக் குற்றங்களைத் தடுக்கவும் இந்த அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், ஆளுநர் உரையில் இல்லாத இந்தக் கருத்துக்களையும், அவைகள் நாட்டிற்குத் தேவையான நல்ல கருத்துக்கள் என்பதால், அவைகளைச் சொல்வதற்கும் வாய்ப்பளித்தமைக்காக மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கவர்னர் உரை மீதான என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கான வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதற்கட்டமாக புதிதாகப் பதவியேற்று வந்துள்ள இந்த அரசாங்கத்தை காவிரிப் பகுதியிலிருந்து வரக்கூடியவனாக இருக்கிற காரணத்தால், நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரித் தண்ணீர் கிடைக்குமா என்று ஏங்கியிருந்த சோழ மண்டல விவசாயிகளுக்கு—அது கிடைக்குமா என்று ஏங்கியிருந்த எண்ணங்களுக்கெல்லாம்—அது கிடைக்கக்கூடிய ஒரு வகை செய்த இந்த அரசாங்கத்திற்கு, குறிப்பாக முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

அதே நேரத்தில் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து உண்டான தீர்வுக்காக மகிழ்கிறேன். ஆனால் நல்லதொரு முடிவு, நிரந்தரமான முடிவு ஏற்பட்டிருக்கிறதாவென்ற ஐயப்பாட்டைக் கிளப்பியிருக்கிறார்கள். அந்த ஐயப்பாடு ஏற்படுவதற்கு நியாயம் இருக்கிறது. அந்த ஐயப்பாட்டைப் போக்குவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறதென்பதை ஒத்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும் கூட, காவிரி நீர்ப் பிரச்சினையில், இந்த அரசாங்கத்திற்கு ஏதேனும் பொறுப்பு இருக்கிறதா என்றால், இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்கு இந்த அரசாங்கம் காரணமாக இல்லை என்பது தெரிய வரும். அந்தக் காரணத்தாலே, காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து இந்த அரசாங்கம் தகுந்த முடிவை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின்மீது திணிக்க நான் விரும்பவில்லை. ஏற்கெனவே ஏற்பட்டுள்ள சிக்கல்களை, பெரிய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலையில் இந்த அரசு உள்ளது. எடுத்த எடுப்பிலேயே நமது முதலமைச்சரவர்களை, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும், சோழ மண்டலத்திலுள்ள விவசாயிகளுக்கும் திருப்தியளிக்கும் விதத்திலே ஒரு நாளைக்கு 100 கோடி கன அடித் தண்ணீர் திறந்து விடுவதற்கான நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக, நான் எதிர்க் கட்சியில் இருந்தாலும், நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஒரு விவசாயி என்ற முறையிலே, என்னுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் இந்த வருடம் தண்ணீர் கிடைக்குமா என்று எண்ணிக்





கொண்டிருந்த நேரத்தில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். நம்முடைய டெல்டா பகுதியிலுள்ள நிலங்களில் குறுவை சாகுபடிக்கு நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 2¾ டி.எம்.சி., அதாவது 275 கோடி கன அடி தண்ணீர் தேவைப்படுகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். மழை பெய்தால்கூட, குறைந்தபட்சம் 200 கோடி கன அடிக்குக் குறைவாகத் தண்ணீர் விட்டால், குறுவை சாகுபடியை அவர்கள் நல்லபடியாகச் செய்ய முடியாதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது கொடுக்கக்கூடிய தண்ணீர் 100 கோடி கன அடியாக இருப்பது ஓரளவுக்குப் பற்றாத தண்ணீர் என்று கருதினாலும், நம்முடைய முதலமைச்சரவர்கள் மீண்டும் முயற்சி செய்து, 10 தினங்களுக்குப் பிறகு நடக்கும் பேச்சு வார்த்தையில் கொஞ்சம் அதிகப்படுத்தும் நிலையை ஏற்படுத்துவார்களென்று நம்புகிறேன். அதற்காக தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, காவிரித் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு முடிவை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு ஊக்கத்தோடு செயல்படவேண்டும். நம்முடைய தமிழ் நாட்டிலே மிக அதிகபட்சமாகச் சாகுபடி செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்கும் பகுதியான காவிரி டெல்டா பகுதிக்கு மட்டும்தான் இந்தப் பிரச்சினையென்று கருதாமல், தமிழக உணவு உற்பத்தியிலே பெரும் பங்கு வகிப்பவர்கள், நம்முடைய மக்களுக்கு உணவு அளிப்பவர்களான தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு மட்டும்தான் இந்தக் காவிரிப் பிரச்சினையென்று கருதாமல், இதைத் தமிழகப் பிரச்சினையென்று கருத வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, இந்த அரசுக்கு இப்போதுள்ள நல்ல செல்வாக்கை வைத்து, இந்தப் பிரச்சினையில் நல்லதொரு முடிவு காண சந்தர்ப்பம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் நல்லதொரு தீர்வு காணப்பட்டால், தமிழகத்திற்கு நல்லதொரு காரியத்தை நீங்கள் செய்தவர்களாவீர்கள். இந்தப் பிரச்சினை நீண்ட காலப் பிரச்சினை. நீண்டகாலமாக அனுபவித்து வந்த தண்ணீர், இன்று மறுக்கப்படக்கூடிய நிலைமை, அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள், பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியாத நிலைமை பற்றிச் சுட்டிக்காட்டுகிறபோது, எதிர்க் கட்சியில் உள்ள நாங்கள் பக்குவமாகக் கூறக்கூடிய நிலையும், அரசாங்கம் சொல்லும் கருத்துக்களின்மீது குறை கூறக்கூடிய நிலையும் ஏற்படலாம். அரசாங்கமானது அவைகளையெல்லாம் கவனித்து, சொல்லப்பட்ட

கருத்துக்களில் எவையெவை சரியாக இருக்கின்றனவோ அவை களை எடுத்துக்கொண்டு, இப் பிரச்சினையை பொதுவான பிரச்சினை யாக எடுத்துக்கொண்டு, என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். முந்தைய ஒப்பந் தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது எதிர்க் கட்சி களின் எண்ணம் மட்டுமல்லாமல் ஆளும் கட்சியின் எண்ணமாக வும் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இப்போது இதைப்பற்றி இந்தச் சபையிலே அதிகமாகப் பேசினால், ஏதாவது தீங்கு ஏற்படுமோ என்று கருதி விரிவாகப் பேசாமல், இந்த அரசு அதில் சரியான முடிவை, நிரந்தரமான முடிவை ஏற்படுத்தத் தவறினால், அப்போது கடிந்து பேசலாம், சரியான முடிவெடுத்தால் பாராட்டுகிற தன்மையில் எதிர்க் கட்சிகள் இருக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இதில் வெற்றி பெற வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையிலே அண்டை மாநிலங் களுடன் இருக்க வேண்டிய உறவைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நமக்குப் பற்றாக் குறையாக, மிக மிகக் குறைவாகத் தண்ணீர் உள்ளது. பக்கத் திலுள்ள கேரளாவில் தண்ணீர் உபரியாக கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறது; கருநாடக மாநிலத்திலும் தண்ணீர் உபரியாக கடலுக்குச் சென்றுகொண்டிருக்கிறது; ஆந்திராவைப் பார்த்தால் அங்கே கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் நீர் கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக, பல திட்டங்கள் போட்டு, தண்ணீரை ஒற்றுமையாக உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டு மென்று பேசினாலும், அந்த ஒருமைப்பாட்டினை உண்டாக்காத தால், தமிழ்நாடு பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறது. அந்தப் பெரும் நஷ்டத்திற்கு மூலகாரணமாக இருப்பது யாராக இருந்தாலும், அண்டை மாநில உறவுக்குத் தடங்கலாக யார் இருந்தாலும், அவர்கள் தமிழகத்திற்கு நன்மை செய்தவர்கள் ஆகமாட்டார்கள். அண்டை மாநில உறவுபற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருப்பதைச் செயல்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திற்கு நதி நீர் கிடைப்பதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வசதிகளைப் பொறுத்தும், நதிநீர் வசதிகளைப் பொறுத்தும், தமிழ் நாடு,





ஆந்திரா, கேரளா, கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் பொதுவானதொரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். உதாரணத் திற்கு பக்ரா நங்கல் அணை. அங்குள்ள தண்ணீரை பல மாநிலங்கள் பங்கிட்டுக்கொண்டிருக்கின்றன. அதைப்போன்று தென் மாநிலங்களும் நதிநீரை, மின்சாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் திட்டத்தை வகுத்து, அதற்கான விடையைக் காண் பார்களேயானால், அதை தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய வரப்பிரசாத மாக இந்த அரசு கிடைக்கச் செய்திருக்கிறதென்றாகும். இந்தக் காரியம் ஏற்கெனவே செய்யப்பட வேண்டிய காரியம். செய்யப் படாமல் போனதற்குப் பல காரணங்கள் உண்டு. மாநிலங்களுக் கிடையே பிளவுகள்; அண்டை மாநில உறவில் சீர் குலைவு போன்ற நிலைமைகளால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லை. எனவே இப்போது மாநிலங்களுக்கிடையே நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள இந்த அரசு முயலவேண்டும். அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்து, உணவு உற்பத்தியிலே நாம் கவனம் செலுத்த வேண்டும். உணவு உற்பத்திக்காகும் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதிக மான உற்பத்திச் செலவாவதால், உற்பத்தியாளர்களுக்குப் போது மான விலை கிடைக்காத நிலையை இப்போது காண்கிறோம். இந்த நிலைமையைப் போக்க வேண்டும். அதைப் போக்குவதற்கான காரணத்தைக் கண்டு, ஆராய வேண்டும். திரு. கோ. சி. மணி அவர்கள் போனஸ் திட்டம்பற்றிப் பேசினார்கள். அது வருந்தத் தக்க விஷயமாக இருக்கிறது. சென்ற ஆண்டுகளில் நல்ல வித மாகப் போனஸ் கொடுத்தாலும், இடைக்காலத்தில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகளிடத்திலே ஒரு குமுறல் ஏற்பட்டுள்ளது. இந்த அரசு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கருதும்போது, ஓரளவுக்குப் போது மான வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டும். மேலும் உற்பத்திச் செலவுகளைக் குறைக்க வேண்டும். விலையை அதிகமாகச் சொல்லி விற்கும்போது, வாங்குகிற மக்களுக்கு வாங்கக்கூடிய சக்தி இல்லாமல் இருந்தால், தானியங்கள் தேங்கிக் கிடக்கும் சூழ்நிலைதான் ஏற்படும். உணவு தானியங்களுக்கான விலையை உற்பத்தியாளர்களுக்கு ஏற்றிக் கொடுக்க வேண்டுமென் பதைவிட, அதன் உற்பத்திச் செலவைக் குறைப்பது மிகமிக

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1977 ஜூலை 12

முக்கியமான காரியமாக இருக்குமென்று இந்த நோக்கில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உணவு தானியங்களின் உற்பத்திச் செலவைக் குறைக்க, போனஸ் வசதி, மின்சாரக் கட்டணக் குறைப்பு, நில வரியைக் குறைத்து வசூலித்தல், கூட்டுறவு வங்கிகளிலிருந்து கொடுக்கப்படும் கடன்களின் வட்டி விதங்களைக் குறைத்தல் போன்ற காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும். மேலும் பூச்சி மருந்துகள், உரங்கள் ஆகியவை அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தடுத்து, குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்தால் உற்பத்திச் செலவைக் குறைக்கலாம். அதனால் மக்களின் வாங்குகிற சக்தியும் குறையாது. உணவு விஷயத்தில் இரண்டு கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று, உற்பத்தியாளர்களுக்குப் போதுமான விலை கொடுக்க வேண்டும். இரண்டு, வாங்குகிறவர்களுக்கு வாங்கும் சக்தி இருக்க வேண்டும். ஆகையால் உணவுப் பெருக்கத்திற்கு ஊக்கம் கொடுப்பதோடு, விலை கொடுத்து வாங்குகிறவர்களின் சக்திக்கு உட்பட்டதாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

நியாய விலைக் கடைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது இருக்கிற 9,300 நியாயவிலைக் கடைகளை 16,000 கடைகளாக உயர்த்தி அமைப்பதற்கான ஒரு திட்டத்தை கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நியாயவிலைக் கடைகளில் பரிபூர்ணமான முறையில் நியாயமாக விற்கப்படுகிறதா என்பது ஒரு பிரச்சினைக்குரிய, சந்தேகத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. இந்த அரசாங்கத்தில் மட்டும் அல்ல, மற்ற எந்த அரசு இருந்த காலத்திலும், இது ஒரு பிரச்சினைக்குரிய விஷயமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே விலைகள் நியாயமாக இருந்தாலும், ஆயிரம் கிராம் சர்க்கரைக்கு 800 கிராம் சர்க்கரைதான் அந்த பாக்கட்டுகளில் அடைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல பல அநியாயங்கள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கு அதிகாரம் செலுத்தப்படுகிறது. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற நிலையும் இருக்கிறது. இந்த நிலைகளை எல்லாம் போக்குவதற்கு முடியுமா என்று பார்க்க வேண்டும். 9,300 கடைகளிலிருந்து 16,000 கடைகளாக அதிகப்படுத்துவதனால் மட்டும் நியாயமாக மக்களுக்கு எல்லாம் கிடைத்துவிடும் என்று கூறிவிட முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமத் தொழில் வளம் பெறவேண்டும் என்று நம்முடைய கவர்னர் பெருமானுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமத் தொழில் வளர்ச்சிபற்றி ஒவ்வொரு



1977 ஜூலை 12] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

அரசாங்கமும் சொல்லிவருகிறது. கிராம மக்களிடம் ஓட்டுப் பெறுவதற்காக அவ்வாறு பேசுவார்கள். ஆனால் அவர்கள் இங்கு அதிகாரிகளுடன் இருக்கும்போது, அலுவலகத்திற்கு வந்த பிறகு அந்தத் தொழில் வளம்பற்றி கிராம மக்களிடையே பேசியதை மறந்துவிடுவார்கள். அந்த நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. இதுதான் கடந்த கால நிலைமையாகும். இந்த அரசு கிராம சிறுதொழில் வளத்துக்காக என்னென்ன செய்யப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அந்தத் திட்டத்தைப் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடாவிட்டாலும், வருகின்ற பட்ஜெட் கூட்டத்திலே விரிவான முறையிலே வாதத்திற்கு விட வேண்டும். எதிர்க் கட்சிகளினுடைய கருத்துக்களைக் கேட்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில மாவட்டங்களை, அமைச்சர்களுக்கு வேண்டியவையாக இருந்தால், பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கிறார்கள். பின்தங்கிய மாவட்டங்களில் சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்காக, பெரும் தொழில்களை அமைப்பது போல், லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிச் செய்கிறார்கள். இப்படிப் பலவிதமான வசதிகளை அவர்கள் அங்கு செய்துகொடுக்கிறார்கள். பல தன்மைகளைச் செய்துகொடுக்கிறார்கள். இதனால் ஊழல்கள் ஏற்படுகின்றன என்றும் கூறுகிறார்கள். ஊழலற்ற ஆட்சி நடத்த விரும்புகின்ற இந்தப் புதிய அரசு, இந்தத் துறையிலே வளமற்ற மாவட்டங்கள் எங்கே இருக்கின்றனவோ, அந்த மாவட்டங்கள் தொழில் வளம் பெறுவதற்கு ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். தேவையான கச்சாப் பொருள் எங்கு கிடைக்கிறதோ அங்குதான் அதற்கேற்ற தொழில்களை ஏற்படுத்த வேண்டும். சுமார் 300, 400 மைல்கள் தள்ளி தொழில்களை ஏற்படுத்துகிறார்கள். அப்படிப் பட்ட நிலையை ஒழிக்க வேண்டும். எங்கெங்கே கச்சாப் பொருள் கிடைக்கிறதோ அங்கங்கே தொழில்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். இதற்கான சர்வே செய்ய வேண்டும். எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தத் தொழிலைச் செய்யலாம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அங்கெல்லாம் அதைப்பற்றிப் பிரச்சாரம் செய்து நிறைவேற்ற வேண்டும். குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் காயர் இண்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். அங்கே காயர் இண்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்துவது லாபகரமானதா, நஷ்டமானதா என்று பார்க்க வேண்டும். அரசாங்கத்திலேயிருந்து சுலபமாகப் பணம் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இதைக் கொள்கிறார்கள். இரண்டு லட்சம் மூன்று லட்சம் என்று பணம் பெறுகி

கொள்கிறார்கள். லாபமோ, நஷ்டமோ, பணத்தை வாங்கி உபயோகப் படுத்திக்கொள்கிறார்களே தவிர, அந்த இண்டஸ்ட்ரீஸ் லாபகரமானதாக நடக்கவில்லை. ஆனால் கேரளாவில் அந்தக் காயிர் இண்டஸ்ட்ரீஸ் லாபகரமாக நடத்தப்படுகிறது. நல்ல மார்க்கெட் இருக்கிறதாகக் கூறுகிறார்கள். அயல்நாடுகளுக்குக்கூட அனுப்புகிறார்கள். கழிவு பஞ்சிலிருந்து நம்முடைய நாட்டிலே முதல் தரமான. . .

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தேங்காய் நாரிலிருந்து கயிறு திரிக்கிறார்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தேங்காய் நாரிலிருந்து கயிறு செய்யக்கூடிய நிலைமையை நாம் பார்க்கிறோம். அதுபோல இங்கே அந்தத் தொழிலை லாபகரமானதாகச் செய்ய முடியுமா என்று பார்த்துச் செய்ய வேண்டும். தேங்காய் உற்பத்தியாகிற இடத்தில்தான் அதைச் செய்ய முடியும். தேங்காய்ப் பாலிலிருந்து பொருள்கள் செய்கிறார்கள். கொட்டாங்கச்சியிலிருந்து கார்பன் செய்கிறார்கள், பஞ்சிலிருந்து கயிறு திரிக்கிறார்கள். இந்த அரசும் செய்தால் லாபகரமானதாக இருக்கும். சிறுதொழிலைப் பற்றிப்பேசுகிற நாம், எந்தத் தொழிலை எந்த இடத்தில் அமைத்தால் எந்தெந்தப் பொருள்களை உற்பத்தி செய்யலாம், தொழில் லாபகரமானதாக இருக்கும் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். சர்வே செய்து இன்னின்ன மாவட்டத்தில் இன்னின்ன பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று நிர்ணயப்படுத்திக்கொண்டு, தொழிலை ஆரம்பிக்க வேண்டும்.

கிராம முன்னேற்றத் திட்டங்களைப் பற்றியெல்லாம் அதிகமாகவே கூறியிருக்கிறார்கள். நம்முடைய கவர்னர் அவர்கள் உரையிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் தேர்தல் நேரங்களில் கிராம மக்களைச் சந்திக்கும் போது, அங்கே உறுதிமொழிகளைக் கொடுக்கிறோம். ஒவ்வொரு அரசாங்கமும் அதன் அலுவலகத்திற்கு, ஆட்சிக்கு வந்த பிறகு மறந்துவிடுகிறது. கிராமச் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் நன்றாக இருக்க வேண்டும். அதற்கு வலுவாக இருப்பது உள்ளாட்சித் துறையாகும். அது அங்கு வலுவாக இருக்க வேண்டும். கிராமத்திலே சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் செய்துதர வேண்டும். வசதிகள் என்று சொன்னால், ஏதோ சென்னையில் குடிதண்ணீர் வசதி செய்வது போல, ரோடுகள் போடுவது போல ஆகாது என்பதை நாம் உணர வேண்டும். கிராமத்திலே சிறு பாட்டைகள், சிறிய பாசன வசதிகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள் எல்லாம் செய்து





கொடுக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான நிதி உதவி அளிக்கவேண்டும். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கிராமத் திட்டங்களுக்கு அதிகமான நிதி வசதி அளித்தால், கிராமத் திட்டங்களை நாங்களே நிறைவேற்றிக் கொள்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதிகமான நிதி வசதி அளிக்க வேண்டும். ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் அதிகாரிகள், அலுவலர்கள் தலையிட்டால், அந்தத் திட்டங்கள் நிச்சயமாகத் தோல்வியுறும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் சுதந்திரமாகச் செய்து கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முடிவாக நான் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உள்ளாட்சித் துறைபற்றிக் குறிப்பிட்டார்கள். 1960 முதல் நான் பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தினுடைய தலைவனாக இருந்திருக்கிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோதிலும், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபோதிலும், எல்லா உறுப்பினர்களும் அதிலே ஆய்வுரை செய்திருக்கிறார்கள். இந்த உள்ளாட்சி மன்றங்களின் தலைவரே மக்கள் தலைவர் என்கிற நிலையை நான் ஒப்புக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நிலை ஏற்படுமானால், நல்லது. பஞ்சாயத்துத் தலைவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மக்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவாரானால், பஞ்சாயத்துக்கள் நன்கு நடக்கும். இதில் இரண்டு விதமான நிலைகள் ஏற்படுகின்றன. ஒன்று விரோதமான மெம்பர்கள் உருவாகிவிட்டால், எந்த விதமான செயலையும் செய்ய முடிவதில்லை. மற்றொன்று பஞ்சாயத்தின் செல்வாக்கு நிச்சயமாகக் குறைந்துவிடும். பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து யூனியன் சேர்மன் போன்றவர்கள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தேர்தல்களை நேரடித் தேர்தல்களாக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினால், அந்தந்த கிராம மக்கள் யார் யார் நல்ல முறையில் வேலை செய்வார்கள் என்பதை அறிந்து அவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். பஞ்சாயத்து செய்யக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்ற முடியும். அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களைச் சீராகச் செய்வார்கள். தலைவர்கள் மக்களால்

(பிற்பகல் 5-00)

தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், பஞ்சாயத்தினுடைய வேலை நல்ல முறையிலே நடக்கும், தொல்லைகளும் குறையும் என்று கூறிக்கொள்கிறேன். காந்தியடிகளின் திட்டம் கிராமங்கள் வளரவேண்டும், கிராமங்கள் முன்னேறவேண்டும் என்பதுதான். அப்படி இருக்கவேண்டுமானால் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுங்கள். பஞ்சாயத்து மூலம் வேலை செய்யுங்கள். மக்களே நேரடித் தேர்தல் மூலம் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதென்றால், அது சட்டமன்ற எம்.எல்.ஏ. தேர்தல் போன்றதல்ல. சாதாரண பாட்டை போடுதல், சுகாதார வேலைகளைக் கவனித்தல் ஆகிய வேலைகளைச் செய்பவைதான் பஞ்சாயத்துக்கள். அரசியல் நோக்கத்தோடு, யூனியன் சேர்மன்கள் எல்லாம் அரசியல்வாதிகளாக இருக்க வேண்டும். இந்த அரசாங்கம் பஞ்சாயத்துக்களை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென்றுதான் இதைச் செய்வதாகத் தெரிகிறது. அந்த எண்ணம் காந்தியடிகளின் திட்டத்திற்கு முரணாக அமையுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து கூட்டுமன்றத் தலைவர்களை மக்களே தேர்ந்தெடுத்தால், பஞ்சாயத்துக்களின் கவுரவம், மரியாதை எல்லாமே போய்விடுமென்று கூற ஆசைப்படுகிறேன். அப்படியும் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது என்று வந்தால், பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவருக்கு விசேஷமான அதிகாரங்களைக் கொடுங்கள். கவுன்சிலில் அவருக்குக் குறைவாக ஆதரவு இருந்தாலும், அவருடைய திட்டங்களை நிறைவேற்றும் வாய்ப்பு வசதியைச் செய்து கொடுங்கள். அப்படி இல்லாவிட்டால், பல கூட்டு மன்றங்கள் வேலை செய்வதற்கு லாயக்கற்றதாகிவிடும்.

குறிப்பாக பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய படத்தை மன்றத்தில் திறக்க வேண்டுமென்று இன்றைக்குப் பேரவையிலே கேட்கப்பட்டு, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை இங்கேயும் வலியுறுத்தி அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:—





Add the following at the end:—

"But regret to note that there is no specific mention of any progressive measure to eradicate the acute unemployment problem in rural areas of our State and among the educated youths."

"ஆளுநர் அவர்களுடைய உரையில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் நமது மாநிலத்தில் நெருக்கடி கால நிலையைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட சிறைக் கொடுமைகளும், அவைகளுக்குப் பரிகாரம் நிவர்த்தி காணுகின்ற நடவடிக்கைகளும் பற்றி எதுவுமே குறிப்பிடாதது வருத்தத்தை அளிக்கிறது."

**திரு. ஜார்ஜ் கோமகன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. எஸ். முத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே நிர்வாகத்தில் லஞ்ச ஊழல், வீண்விரயம், பாரபட்சம் ஆகியவற்றைக் களையும் முயற்சியில், வந்தபின் பரிகாரம் தேடுவதைவிட வருமுன் காப்பதே ஏற்ற முறையாக இருக்குமென்ற கருத்தை இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பால சுப்பிரமணியம் அவர்கள் "நான் ஆளுநர் உரையைப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய மகள் அதைப் பார்த்துவிட்டு, என்னப்பா இது? ஊழல் ஊழல் என்று வருகிறதே என்று கேட்டாள்" என்பதாகக் குறிப்பிட்டார்கள். கடந்த ஆறு ஆண்டுக்காலமாக தமிழகத்தில் இளம் உள்ளங்கள் கேள்விப்படாத ஒரு சொல்லைப்பற்றி அந்தப் பிஞ்சு உள்ளங்கள் கூட கேள்வி கேட்கிற அளவுக்கு நிலைமை வளர்ந்திருந்தது என்பதை நாம் பார்க்கிறபொழுது, வேதனைப்படுகிறோம். அந்த அளவுக்குத் தமிழகத்தில் சமீப காலத்தில் லஞ்ச ஊழல் அதிகரித்திருக்கிறது என்பதைத்தான் ஆளுநர் உரை எடுத்துக் காட்டுகிறது. அதைப்பற்றி நான் பின்னால் பேசுகிறேன். வீண் விரயம், அதிகாரத்தை துர்வினியோகம் செய்தல் போன்ற காரியங்கள் நடைபெறக் கூடாது என்று ஆளுநர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். கடந்த காலத்தில் நடந்த வீண் விரயங்கள், அதிகார துர்வினியோகங்கள் எல்லாவற்றையும் இந்த நாட்டு மக்கள் அறிவார்கள் என்றாலும் கூட, என்னுடைய அறிவுக்கு எட்டிய

வகையில் ஒருசில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன். பொதுவாக கடந்த காலத்தில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 1969-லிருந்து 1976-ம் ஆண்டு ஜனவரி திங்கள் வரையில் நடைபெற்ற வீண்விரயம், அதிகார துர்வினியோகம் என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எந்த அளவுக்குத் தமிழ்நாட்டு அதிகார வர்க்கம் அவர்களைப் புரிந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஒரு காலத்தில் தமிழ் நாட்டு அதிகாரிகளுக்கு, நிர்வாகத்திற்கு நாட்டிலே நல்ல பெயர் இருந்தது. அதன் காரணமாக இந்தியாவெங்கும் அதனுடைய ஆற்றல் பரவலாகப் புகழப்பட்டது. ஆனால் சமீப காலத்தில் அந்த சக்திவாய்ந்த அதிகாரவர்க்கம் எப்படிச் சீரழிந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒன்று சொல்கிறேன். ஒரு அமைச்சர் சென்னையிலிருந்து மதுரை வரையில் விமானத்தில் செல்கிறார். மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குப் போகிறார். திருநெல்வேலிக்குப் போகிறபோது, அவர் எங்கேயாவது தப்பித் தவறி சற்று ஐந்து நிமிடம் தாமதித்து கீழே இறங்கிச் செல்ல வேண்டுமென்று நினைத்தால் என்ன செய்வது என்று அஞ்சிய அதிகாரவர்க்கம் என்ன செய்தது? மதுரையிலிருந்து திருநெல்வேலி 100 மைல் இருக்கிறது. அந்தப் பிரதான அமைச்சர் போகிற வழியில் சிரம பரிகாரம் செய்ய நினைத்தால், என்ன செய்வது என்று கருதிய அந்த அதிகார வர்க்கம் 29வது மைலில் உள்ள விருதுநகரில் உள்ள டிராவலர் பங்களாவில் அவசர அவசரமாக ஒரு ஏர்க்கண்டிஷன் மிஷினைக் கொண்டுவந்து பொருத்துகிறது. அங்கே அவர் இறங்கிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சி, அவருக்கு அங்கே தாகம் எடுத்தால் என்ன செய்வது என்று டீ, மற்ற குளிர் பானங்கள் எல்லாம் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் அந்த அமைச்சர் அங்கே இறங்கவில்லை. அதற்காகச் செலவு செய்யப்பட்ட பணம் எங்கிருந்து வந்தது? எந்த வகையில் செலவழிக்கப்பட்டது என்ற கணக்கு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. அத்தோடு நிற்கவில்லை. அங்கிருந்து 45வது மைலில் சாத்தூர் இருக்கிறது. அங்கே ஒரு டி. பி. இருக்கிறது. அதில் ஒரு ஏர்க்கண்டிஷன் கொண்டுவந்து பொருத்தப்படுகிறது. மற்ற ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. ஆனால் அவர் அங்கும் இறங்கவில்லை. அதற்கு மேலும் பயந்த அந்த நிர்வாகம் 60வது மைலில் உள்ள கோவில்பட்டி டிராவலர் பங்களாவிலும் ஏர்க்கண்டிஷன் கொண்டு வந்து பொருத்துகிறது. அங்கேயும் அந்தப் பிரதான



அமைச்சர் இறங்கவில்லை. நேராகத் திருநெல்வேலி போய் கொக்கரகுளம் டிராவலர் பங்களாவிற்குச் சென்றுவிடுகிறார். விருதுநகர் டி.பி.-யிலே, சாத்தூர் டி.பி.-யிலே, கோவில்பட்டி டி. பி. யிலே அவசரம் அவசரமாகக் கொண்டுவந்து பொருத்தப்பட்ட அந்த ஏர்க்கண்டிஷன் எங்கிருந்து வந்தது, அதற்கு யார் செலவிட்டார்கள், என்ன முறையில் அந்தக் காரியம் செய்யப்பட்டது என்பதையெல்லாம் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மட்டுமல்ல. எவ்வளவு அதிகார துர்வினியோகம், எவ்வளவு வீண் விரயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்கு நான் ஒரு திருமணத்திற்காகச் சென்றிருந்தேன். திருமண வீட்டில் தங்குவதற்குக் கூச்சப்பட்டு திருமண வீட்டாரிடம் எனக்கு அங்குள்ள பொதுப்பணித்துறை டி. பி.-யில் இடமிருந்தால், ஏற்பாடு செய்யுங்கள் என்று எழுதியிருந்தேன். அவர்களும் செய்தார்கள். கொஞ்ச நேரம் அங்கே தங்கிய பிறகு, அங்குள்ள சுவரில் ஒரு இடத்தில் ஓட்டை போடப்பட்டிருந்ததைப் பார்த்தேன். வாட்ச்மேனைக் கூப்பிட்டு "என்னப்பா ஓட்டை போட்டிருக்கிறது, என்ன காரணம்?" என்று கேட்டேன். வாட்ச்மேன், "அங்கே பிரதான அமைச்சர் அரை மணி நேரம் தங்கினார். அதற்காக தஞ்சையிலிருந்து ஏர்க்கண்டிஷன் கொண்டுவந்து பொருத்தி அவர் சென்றதற்குப் பிறகு அந்த ஏர்க்கண்டிஷனை எடுத்துச் சென்று விட்டார்கள்" என்றார். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், கடந்த 6 ஆண்டுக் காலத்தில் எந்த அளவுக்கு அதிகார துர்வினியோகம், வீண் விரயம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டத்தான். ஆகவேதான் அப்படிப்பட்ட சம்பவங்கள் எதிர் காலத்தில் நடந்து விடக் கூடாது என்று அஞ்சிய ஆளுநர் அவர்கள் இந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். வந்திருக்கின்ற புதிய அரசு இப்படிப்பட்ட காரியங்கள் இனிமேல் நடைபெறுதவாறு கவனித்துக் கொள்ளும் என்று அனுபவத்திலிருந்து தெரிகிறது.

நம் ஆளுநர் அவர்கள் சொல்கிறார்கள்: "வளம்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் அண்ணாவின் கொள்கைவழி நின்று ஆக்க பூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன்."

[திரு. எஸ். முத்து] [1977 ஜூலை 12

(பிற்பகல் 5-10)

ஆளுநர் அவர்களுக்கு இதிலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாவின் கொள்கை வழி நின்று என்று சொல்வதோடு நிறுத்திவிடாமல், அதே நேரத்தில் தமிழ் நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார மொழிப் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம் என்று நாமெல்லாம் மகிழ்ச்சி அடைகிற வகையில் இந்தப் பேருரை அமைந்திருப்பதைப் பார்க்கும்போது, ஆளுநர் அவர்களுக்கு நிச்சயமாக நன்றி செலுத்த வேண்டும். ஏதோ வேறு மாநிலத்திலிருந்து வந்த ஆளுநராக இருந்தாலும், அதற்கு உறுதி அளிக்கிற ஆளுநரைப் பாராட்ட, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நிச்சயமாக அண்ணாவின் கொள்கைகள் எதிர்காலத்தில் வலியுறுத்தப்படும் என்பதைத் தான் இந்த ஆளுநரின் உரை எடுத்துக்காட்டுகிறது. அதற்காகவும் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, "அண்டை மாநிலங்களுடன் நம்முடைய உறவுகள், குறிப்பாக, குடிதண்ணீர், பாசன, மின் வசதிகளைப் பொறுத்த வரை, பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில், நல்லவிதமாகத் தொடர்ந்து பேணப்பட வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே கடந்த ஆறாண்டு காலத்தில் அண்டை மாநிலங்களின் உறவு இங்கே எந்த அளவிற்குக் கெட்டுப் போயிருந்தது என்பதைத் தான் இது குறிப்பிடுகிறது. அண்டை மாநில உறவு சரியாக இருந்திருந்தால் கடந்த காலங்களில் நமக்கும், கருநாடக அரசுக்கும் சுமுகமான பேச்சுவார்த்தை நடத்தி, கேரள அரசுக்கும் நமக்கும் சுமுகமான பேச்சுவார்த்தை நடத்தி, நமக்கு குடிதண்ணீரை, விவசாயத்திற்கு வேண்டிய நீர் வசதியை, மின்சார வசதியை நாம் மக்களுக்குச் செய்து கொடுத்திருக்க முடியும். சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளத் தகுந்த தன்மை இல்லாமல் இருந்ததால் தான், நாம் பல தொல்லைகளை அனுபவிக்க வேண்டி வந்தது. குறிப்பாக, தமிழகத்தை வாழவைக்கும் தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். இன்றைக்கு சென்ற ஆண்டைப் போல தஞ்சை மாவட்ட மக்கள் வேதனைக்கண்ணீர் வடிக்காமல், நிச்சயமாக ஜூன் 1-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்கிற அளவிற்கு இயற்கை ஒத்துழைப்பு தராவிட்டாலும்கூட, ஜூலை மாதம் 15 ஆம் தேதி அன்று தண்ணீர்



1977 ஜூலை 12] [திரு. எஸ். முத்து]

திறக்கப்படுகின்ற அளவிற்கு கருநாடக அரசோடு நமது முதலமைச்சர் பேச்சு வார்த்தைகளை நடத்தி, தமிழக மக்கள் மகிழ்ச்சி அடைகின்ற அளவிற்கு இந்தக் காரியத்தைச் செய்திருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருக்கிற மக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் தெரிவித்துக் கொண்டும் இருக்கிறார்கள். காரணம், இதற்கு முன்னால் இருந்த அரசுகள் எல்லாம் செய்யத் தவறிய காரியத்தை இந்த முதலமைச்சர் செய்திருக்கிறார்; உடனடியாக அண்டை மாநில அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, எதிர்காலத்தில் தமிழ் நாட்டு மக்கள் பட்டினி கிடக்காமல் வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறார் என்பதற்காகத் தான். ஆகவே அவரைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம் என்கிற பல வாழ்த்துச் செய்திகளை நாம் பார்க்கிற போது உண்மையிலேயே நாம் நம்முடைய முதலமைச்சருடைய திறமையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைப் போலவே எதிர்காலத்திலும் பல காரியங்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கு ஏற்படுவதை நாம் இங்கே பார்க்கிறோம். ஆகவே, திறமையாக, சுமுகமாக அங்கே பேச்சு வார்த்தை நடத்தி, தமிழகத்திற்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு, காவிரித் தண்ணீர் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்களை இந்த மன்றத்தின் மூலமாக நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, "அமரர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது உருவாக்கிய, இப்பேரவையால் ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்ட, இருமொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதே எனது அரசாங்கத்தின் உறுதியான கோட்பாடாக இருக்கும்" என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அண்ணாவினால் கொண்டு வரப்பட்டு, இந்த இரண்டு மன்றங்களிலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட, தமிழகத்தின் மொழிக் கொள்கை, இருமொழிக் கொள்கை தான் என்பதை நாம் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இன்றையதினம் மத்திய அரசு மறைமுகமாக பல துறைகளிலும் இந்தியைத் திணிப்பதை நாம் பார்க்கிறோம். அதனால் ஆளுநர் அவர்கள் இது முறைகேடான செயல் என்பதை எடுத்துக்காட்டும் வகையிலே — இதை உறுதிப்படுத்தும் வகையிலே—தமிழக மக்களின் கொள்கை, அண்ணாவின் கொள்கை, இரு மொழிக் கொள்கைதான், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு வலியுறுத்தும் வகையில்

அவருடைய உரை இருப்பதைப் பார்த்து அவருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைய ஆளுநர் அவர்கள் இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில், நிச்சயமாக தமிழக மக்களோடு ஒத்துழைப்பார் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது.

இங்கே மன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். "அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இயங்கும் நியாய விலைக் கடைகளை விரிவுபடுத்தி, அத்தியாவசியப் பொருட்களை வசதியாகவும், குறைந்த விலையிலும் மக்களுக்கு வழங்க எனது அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்" என்று குறிப்பிடுவதோடு, "ஏற்கனவே ஏறக்குறைய 9,300 நியாய விலைக் கடைகள் உள்ளன. இந்த வசதியை மேலும் விரிவாக்கி தமிழ் நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாய விலைக்கடை ஒன்றையேனும் அமைக்க முயற்சிகள் மேற்கொள்வோம்" என்ற உத்தரவாதத்தை ஆளுநர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இங்கே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். "இது நியாய விலைக் கடைகளா, அல்லது அநியாய விலைக் கடைகளா, இந்தப் பெயர்களை விட இவைகளுக்கு நிர்ணய விலைக் கடை என்று வைத்தால் நல்லது" என்று அருமை நண்பர் திரு. மணி இங்கே சொன்னார். நான் சொல்கிறேன்: அவைகளை நியாய விலைக் கடைகள் என்று தான் அரசு ஆரம்பித்தது. ஆனால் தனியார் துறையாக இருந்தாலும், அரசுத் துறையாக இருந்தாலும், அவைகள் அநியாய விலைக் கடைகளாகத் தான் காட்சியளிக்கின்றன. எது நியாய விலைக் கடை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, ஒரு கிலோ சீனி வாங்கினால் 800 கிராம் தான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது மறுக்க முடியாத உண்மை. நான்கு கிலோ வாங்கினால், கிலோவிற்கு 200 கிராம் வீதம் எடுத்துக்கொண்டு, 3 கிலோ 200 கிராம் தான் கொடுக்கிறார்கள். யாரும் அதனைக் கொண்டுபோய் நிறுத்துப் பார்ப்பதில்லை. நிறுத்துப்பார்க்கும் வசதி யாருக்கும் கிடையாது. ஒரு கிலோ வாங்கினால், 200 கிராம் குறைகிறது. இது அங்கே நடக்கின்ற அக்கிரமங்கள். அதைப் பார்த்துத்தான் அவைகளை அநியாய விலைக் கடைகள் என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

இந்த நியாய விலைக் கடைகள் எப்படி உருவாயின என்று இந்த நாட்டிற்குத் தெரியும். கடந்த காலத்தில் இந்த நியாய விலைக் கடைகளை யாருக்குக் கொடுப்பது என்பது சர்ச்சைக்கு வந்தது.





அப்போது அதற்காக மிகப் பெரிய போராட்டம், தடியடி, ரகளை, காவல் துறை தலையீடு, இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் 1969-லிருந்து 1976 ஜனவரி வரை நடந்தன என்பதை என்னால் மறுக்க முடியாது. காரணம் நான் அங்கே இருந்தவன் என்பதால். ஒருமுறை அமைச்சரைக் கூப்பிட்டு, உணவுத் துறை அமைச்சரை வைத்துக்கொண்டு, இநதக் கடைகளை யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினையைத் தீர்க்கச் சொன்னார்கள். அப்போது ஒருசிலர் கேட்டார்கள். "நீங்கள் அமைச்சர்களாக ஆகிவிட்டீர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகிவிட்டீர்கள், வாழ்க்கையின் வசதிகளை அனுபவிக்கிறீர்கள், எங்களுக்கு ஏதாவது வேண்டாமா" என்று கேட்ட நேரத்தில் இது பரிசீலிக்கப்பட்டு, இங்கே சென்னையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் வட்டச் செயலாளருக்கு ஒரு கடை கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த வட்டச் செயலாளருக்கு அதை நடத்துகிற தகுதியில்லாதிருந்த காரணத்தினால், அவைகளை அநியாய விலையில் விற்பவர்களுக்கு விற்றார்கள். மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய், 300 ரூபாய் பெற்றுக்கொண்டு அவைகளை விற்றிருக்கிறார்கள். பழைய கணக்குகளை எல்லாம் எடுத்து, புலன் விசாரணை செய்தால், கடை யார் பெயருக்குக் கொடுக்கப்பட்டது, அதை உண்மையாக நடத்தியவர்கள் யார் என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும். இங்கேதான் லஞ்சம், ஊழல் எல்லாம் ஆரம்பமாகிறது. ஆக, லஞ்சம் கொடுத்து இந்தக் கடைகளைப் பெற்றவர்கள் கொடுத்த பணத்தைச் சம்பாதிக்க முயற்சிக்கிறார்கள். முயற்சிக்கும்போது, அந்தப் பளுவை மக்கள் மீது சுமத்துகிறார்கள். அதனால்தான் ஒரு கிலோ ஜீனி 800 கிராமாக மாறுகிறது. ஆக, இப்படிப்பட்ட அநியாயங்கள் எல்லாம் அங்கே நடந்தன.

கூட்டுறவுத் துறை மூலம் பல இடங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மதுரை நகரில் ஏறத்தாழ 130 கடைகள் சூப்பர் மார்க்கெட் மூலம் நடத்தப்படுகின்றன. சாதாரணமாக, வேலையில்லை, எங்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டு, வேலையை வாங்கிக்கொண்டு, 120 ரூபாய் சம்பளத்தில் அந்தக் கடைகளில் நுழைந்தவர்கள் இன்றைக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எப்படி என்று கேட்கலாம். அதுதான் 200 கிராம் ஜீனி! அதுமட்டுமல்ல, மாதக் கடைசியில் யார் யார் வாங்க

வில்லை என்று கணக்கை எடுத்துப்பார்த்து, பில்லைப் போட்டுக் கிழித்துவிட்டு, அதை எடுத்துக்கொண்டுபோய், வெளியே விற்கிறார்கள். அரிசியை எடுத்துக்கொண்டால், பல ஏழைகளால் வாங்க முடிவதில்லை. அதையும் எடுத்துக்கொண்டுபோய் மூட்டை, மூட்டையாக வெளியே விற்கிறார்கள். நாள் ஒன்றுக்கு வீட்டிற்குத் திரும்பும்போது, 60 ரூபாயிலிருந்து, 100 ரூபாய்வரை கிடைக்கிறது என்று கணக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அக்கிரமங்கள் எல்லாம் நியாய விலைக் கடைகளில் நடக்கின்ற அநியாயங்கள் ஆகும். இதில் அரசு மும்முரமாகக் கவனம் செலுத்த வேண்டும். 16,000 கடைகள் வருகின்றன என்பதில் நமக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் இங்கே விலைவாசி கூடியிருந்தாலும்கூட, கலப்படமாவது இல்லாமல் இருக்குமே என்ற நம்பிக்கை வருகிறது. ஏனென்றால் மன்ற உறுப்பினர்கள் எடுத்துக்காட்டிய மாதிரி, எண்ணெயை எடுத்துக்கொண்டால் அதில் எதையெதையெல்லாமோ கலக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.

(பிற்பகல் 5-20)

கலப்படம்தான் அங்கு மிச்சம். கலப்படத்தினால் மனித உடற்கூறு கெட்டுப் போவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் நியாய விலைக் கடைகள் 16,000 திறப்பதை வரவேற்கிறேன். ஆனால் அவைகள் லஞ்சமற்ற, ஊழலற்ற நிர்வாகமாக நடைபெறுவதற்கு இந்த அரசு கண்காணிப்பாக இருந்து, காரியம் ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "கடந்த 25 ஆண்டுகளாக முன்னேற்றத் திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்ட போதிலும், தமிழ் நாட்டில் வறுமை நிலை வரம்பிற்குக்கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை இக்கால அளவில் வளர்ந்து. 1974 ஆம் ஆண்டில் 59 சதவிகிதமாக உயர்ந்துள்ளது" என்று ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகள் ஆகின்றன. ஓராண்டு, ஈராண்டல்ல. 30 ஆண்டுகள் ஆகின்றன. பாரதி அன்று பாடினான், "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று. உலகத்திலே ஒரு மனிதன் உணவு இல்லாமல் சாகிறான் என்றால் இந்த உலகத்தையே அழிக்க வேண்டுமென்று பாரதி பாடினான். ஆனால் சராசரி நூற்றுக்கு 59 பேர் வறுமை நிலைக்கும் கீழே இங்கே வாழ்கிறார்கள்.





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து வருகிற உலகமும் இப்படித்தான் இருக்குமென்று கருதி அழிக்காமல் விட்டுவிட்டான்.

திரு. எஸ். முத்து : 30 ஆண்டுகள் ஆகியும்கூட 59 விழுக்காடு மக்கள் வறுமையில் வாழ்கிறார்கள். வாழ முடியாமல், பட்டினியால் சாகிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கும்போது, அகில இந்தியாவிலும் இருக்கும் அரசு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்ன முயற்சி எடுத்ததென்று பார்க்கத் தோன்றுகிறது. எந்தத் திட்டங்களைப் போட்டாலும், அதனால் மக்களுடைய வறுமையைத் தீர்க்க முடியவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியவில்லை. எனவே அதற்கான வழிவகைகளை மத்திய அரசுடன் மாநில அரசு கலந்து பேச வேண்டும். நிச்சயமாக நம்முடைய முதல்வரவர்கள் இதில் நல்லதொரு முடிவெடுப்பார்களென்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, "கிராமப்புறங்களில் இன்னும் பல இடங்களில் அடிப்படைத் தேவையான நல்ல குடிநீர் வசதி இன்றும் இல்லாமலிருப்பது வருந்துவதற்குரியதாகும்" என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். குடிநீர், இதைத்தான் கேட்கிறார்கள். பங்களா கேட்கவில்லை ; கார் கேட்கவில்லை ; குளுகுளு அறை கேட்கவில்லை. பிரயாணத்திற்கு குளுகுளு வசதி கேட்கவில்லை; குடிக்கத் தண்ணீர் கேட்கிறார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லையென்று கிராம மக்கள் இன்றையதினம் போராடுகிறார்கள். கிராம மக்கள் மட்டுமா போராடுகிறார்கள்? பட்டினத்து மக்களும்தான் போராடுகிறார்கள். சென்னையிலும் போராடுகிறார்கள். மதுரையிலும் போராடுகிறார்கள். ஆகவே, கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பது இந்த அரசின் தலையாய கடமையென்று ஆளுநர் அவர்கள் தன் உரையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நான் அதையெல்லாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசை நினைக்கும்போது, நிச்சயமாக கிராமப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதியைச் செய்து கொடுக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் ஒன்றை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை நகர மக்கள் குடிநீருக்காகக் கஷ்டப்பட்டார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று அனுதாபம் கொண்ட அமைச்சர் ஒருவர், "என் காலத்தில் இதை விடுவேனா? இந்த மக்கள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகிறார்களே, குடிதண்ணீ

ருடன் சாக்கடைத் தண்ணீரையும் சேர்த்துப் சாப்பிடுகிறார்களே; இதைப் பார்க்க என் உள்ளம் பொறுக்கவில்லையே; இதற்கு விரைவாக முடிவு காண வேண்டும்" என்று தீர்மானித்து ஒரு விழா எடுத்து குடிநீர்த் திட்டம் உருவாகியது, சென்னையிலே. அதை இந்த நாடு அறியும். அதுதான் வீராணம் திட்டம். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் 'ஊழல், ஊழல்' என்ற வார்த்தையை இளம் பிஞ்சுள்ளங்களும் தெரிந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப்போல, இளம் பிஞ்சுள்ளங்களெல்லாம்கூட 'வீராணம், வீராணம்' என்று பேசுமளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. "வீராணத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரப் போகிறோம். சாக்கடைத் தண்ணீரை நீங்கள் சாப்பிட வேண்டாம்; இதோ வருகிறது" என்று மிகப் பெரிய விழா எடுத்தார்கள். வீராணம் திட்டம் வெற்றி பெறாதென்பது நாடறிந்த உண்மை. பழைய காங்கிரஸ் அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்தது. வீராணம் திட்டம் வெற்றி பெறாதென்று கண்டறிந்தது. அதற்குக் காரணம் இருக்கிறது. ஏற்கெனவே கருநாடக அரசாங்கத்திற்கும், தமிழக அரசுக்கும் இதுபற்றிப் பிரச்சினை இருக்கிறது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்துவிட்ட காரணத்தால், நாங்கள் கரவிரியில் அணை கட்டுகிறோமென்று சொல்லி கருநாடக அரசு அணை கட்டியது. அதனால், தஞ்சை, திருச்சிவாழ் விவசாயிகளும், தமிழகத்தில் வாழ்கின்ற 4½ கோடி மக்களும் கவலையோடு இருந்த நேரம் அது. எதிர்காலம் என்னவாகுமோ என்ற கவலை மக்களிடம் இருந்த நேரம் அது. தண்ணீர் வருவது தடைபட்டால் விவசாயிகளுக்குப் போதிய தண்ணீர் கிடைக்காதென்ற அச்சம் ஏற்பட்டது. இந்த நிலைமையில் வீராணம் திட்டம் உருவாகியது. காவிரியில் தண்ணீர் வந்து, அது கொள்ளிடம் வாய்க்காலில் போய், வீராணம் ஏரி நிறைந்து, சிதம்பரம் தாலூகா நிலங்கள் விளைந்து, மீதமிருக்கிற தண்ணீர் சென்னைக்கு வர வேண்டும். அது வெற்றி பெறாதென்று நிபுணர்கள் சொன்னார்கள்; அதிகாரிகள் சொன்னார்கள். சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர வேண்டுமென்றால், அதை கிருஷ்ணா நதியிலிருந்துதான் கொண்டு வர வேண்டுமென்றும், வீராணம் திட்டம் வெற்றி பெறாதென்றும் ஆணித்தரமாக நிபுணர்களும், அதிகாரிகளும் வாதிட்டனர். அதைக் கேட்கவில்லை. முந்தைய அரசு கேட்கவில்லை. நான் சொல்கிறேன், அதிகாரம் பெற்றவன் சொல்கிறேன், வீராணத்திலிருந்து சென்னை நகர மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவேண்டும், அதற்கான நடவடிக்கைகளை உடனே ஆரம்பித்தாக வேண்டுமென்று



சொல்லி, அதற்கான பெரிய விழா சைதாப்பேட்டையிலே நடந்தது. லட்சக்கணக்கான மக்கள் கூடினர். வீராணத்திலிருந்து குடிநீர் வரப்போகிறது, வீட்டிற்கு ஒரு குழாய் வரப்போகிறது; 24 மணி நேரமும் தண்ணீர் வரப்போகிறது என்று பேசிக்கொண்டார்கள். அங்கேயொரு காவிரித் தாய், அவள் கையில் ஒரு குடத்தைக் கொடுத்து, காவிரித் தாயே சென்னை மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறாளென்று காட்டினார்கள். ஆண்டுகள் பலவாயிற்று. 16 கோடி ரூபாயில் இருந்த அந்தத் திட்டம் 6 கோடி ரூபாய் மேலும் உயர்ந்து 22 கோடி ரூபாயாகி அதிலும் முடியாமல் 28 கோடியாக உயர்ந்த நிலையிலும் தண்ணீர் வரக் காணோம். அச்சம் வந்துவிட்டது. வராது என்ற நிலைமை தெரிந்துவிட்டது. ஆனால் இன்னமும் அந்தக் காவிரித்தாய் குடத்தைக் கையில் வைத்துக்கொண்டிருப்பதைப் போகிறவர்கள், வருகிறவர்கள் பார்க்கிறார்கள். காவிரித்தாய் நீர் கொண்டுவரப் போகிறாள். எப்போது வரும், வரும் என்று மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சென்னை நகர மக்களும், அன்றாடம் வந்து போகிற 3, 4 லட்சம் மக்களும் பார்க்கிறார்கள். ஆனால் காவிரித் தாய் நீர் கொண்டுவரவில்லை. கிட்னி டிரபுளோ என்னவோ தெரியாது. நீரைக் காணோம்: ஆனால் குடத்தோடு நிற்கிறாள். பொது மக்களுடைய வரிப் பணம் 28 கோடி ரூபாய் இன்று வீண் விரயமானதைப் பார்க்கிறோம். கடந்த காலத்தில் இப்படி வீண் விரயங்கள் நடந்ததை உதாசினப்படுத்திவிட முடியாது. அந்தப் பணம் பொது மக்களுடைய வரிப் பணம். வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, பட்டினி கிடந்து வரி கொடுக்கிறார்கள். ஒரு ரூபாய்க்கு ஓட்டலில் சாப்பிட்டால், 4 பைசா வரி கொடுக்கிறார்கள். அவர்களெல்லாம் கொடுத்த வரிப் பணம் இன்றைக்கு 28 கோடி ரூபாய் வீண் விரயமானதை நாட்டு மக்கள் பார்க்கிறார்கள். ஆகவேதான், 'ஊழல், ஊழல்' என்ற வார்த்தையும், 'வீராணம், வீராணம்' என்ற வார்த்தையும் தமிழகத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். இவைகளுக்கெல்லாம் நல்லதொரு முடிவை இந்த அரசு செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

அடுத்தபடியாக, இங்கேயும் பேரவையிலேயும் சென்னை மாநகராட்சித் தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள்; மஸ்டர்ரோல் வழக்குக்கும் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? நல்ல கேள்வி. சென்னை மாநகராட்சித் தேர்தல் ஏன் தள்ளிப்போடப்பட

வேண்டும்? இதிலே ஏதோ உள் நோக்கம் இருக்கிறது என்று அருமை நண்பர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னார்கள். நான் சொல்கிறேன் 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே மாநகராட்சியினுடைய காலம் முடிந்து விட்டது. 1974-லேயிருந்து 1976 ஜனவரி 31 ஆம் தேதி வரையில் அந்த அரசு இருந்திருக்கிறது. அந்த அரசு ஒரு முறை அல்ல, இரண்டு முறை மாநகராட்சியின் ஆயுட்காலத்தை நீடித்திருக்கிறது. அதன்பிறகு தேர்தலை நடத்தியிருக்கலாம். ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுகிற மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கடந்த காலத்தைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவரவர்களே, முந்தைய அரசு நடத்தியதைப் போலத்தான் நாங்களும் நடத்துகிறோம் என்று உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். முத்து : கடந்த காலத்தில் 1974 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சியினுடைய ஆயுட்காலம் முடிந்தது. தேர்தல் நடத்தவில்லை. அதற்குச் சொல்லப்பட்ட காரணம் வார்டுகள் பிரிக்கப்பட வேண்டும், வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டும் என்பது. இது சரியான தகவல் அல்ல. எங்கள் மாநகராட்சியைப் பற்றியது என்பதால் சொல்கிறேன். வேண்டுமென்றே ஓராண்டுக் காலம் கடத்தினீர்கள். அந்த நேரத்தில் தேர்தல் வைக்கப்பட்டால், நீங்கள் மக்களைச் சந்திக்க முடியாது என்ற அச்சம் தான் காரணம்.

திரு. கோ. சி. மணி : இப்போதும் அதே காரணத்தினால்தான் தள்ளிப்போடுகிறார்களா?

திரு. எஸ். முத்து : குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், மதுரை மாநகராட்சி ஆயுட்காலம் 1974 ஆம் ஆண்டு முடிந்தது.

திரு. கோ. சி. மணி : நான் சொன்னது சென்னை மாநகராட்சியைப்பற்றி.

திரு. எஸ். முத்து : எல்லா மாநகராட்சிகளைப்பற்றியும் நான் சொல்கிறேன். ஜனநாயகம் என்றால், எல்லா மட்டத்திலும் ஜனநாயகத்தைப் பார்க்க வேண்டும். துணைத் தலைவரவர்களே, மதுரை மாநகராட்சி ஆயுட்காலம் முடிந்தது. எல்லா நகராட்சிகளுக்கும் ஆயுட்காலம் முடிந்தது. ஆனால் மதுரை



மாநகராட்சி மட்டும் கலைக்கப்பட்டது. இதற்கு என்ன காரணம்? லஞ்சமா, ஊழலா, நிர்வாகத் திறமைக் குறைவா, பொதுமக்கள் எதிர்ப்பா? இன்றைக்கும் நான் தயாராக இருக்கிறேன். அன்றைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, இன்றைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, இன்னின்ன குற்றங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லுங்கள். இந்த மன்றம், இந்த அரசு என்ன தீர்ப்பைக் கூறுகிறதோ அதை ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டது. இன்றைக்கு வேதனைக் கண்ணீர் வடிக்கிறார்கள், "வள்ளுவர் கோட்டத்தை அணு அணுவாகச் சமைத்தேன், உருவாக்கினேன். நான் இல்லாமல் அந்தக் கோட்டம் திறக்கப்படுவதா?" என்று. அது தேவையா தேவையில்லையா என்பது வேறு விஷயம். உலக மன்றத்திலே வள்ளுவரை யாராலும் மறைக்க முடியாது. ஆனால் கோட்டம் தேவையா இல்லையா என்பது வேறு. கோடிக் கணக்கான ரூபாய் செலவழித்திருக்கிறோம். சிலப்பதிகாரம் இருக்கிறது, நம்முடைய சிலம்புச் செல்வர், நம் தலைவர் அதைப் பற்றி எழுதினால், நாம் படிக்கிறோம். கோடிக்கணக்கான மக்கள் படிக்கிறார்கள். வள்ளுவர் கூறியதையும் படிக்கிறோம். தலைவர் இராமலிங்க அடிகளார்பற்றித் தெளிவாக எழுதியிருக்கிறார். மக்கள் படிக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். ஆண்டவன் இருக்கிறார் என்பதற்காக நாம் கோயில் கட்டாமல் இருந்து விடுகிறோமா? கோயில் கட்டுவது, நினைவுச் சின்னங்கள் எழுப்புவது நம்முடைய கலாசாரத்தோடு இணைந்தது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிக் கேட்கிறார்கள். அவர்கள் பெரியார், அண்ணா வழியில் வந்தவர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆண்டவனை ஒத்துக் கொண்டவர்கள் நினைவுச் சின்னமாகக் கோயில் எழுப்புகிறார்கள். அந்தக் கலாசாரத்தை ஒத்துக்கொள்பவர்கள், நினைவுச் சின்னங்களை எழுப்புகிறார்கள். ரோம் நாட்டிலும், இங்கிலாந்து நாட்டிலும் கூட எழுப்புகிறார்கள். நம்முடைய அங்கத்தினர் அவர்களுக்குக் கூட தெரியும். நம் நன்றியைக் காட்டுவதற்காகத் தான் சின்னங்கள் அமைக்கிறோமே தவிர, வேறல்ல.

**திரு. எஸ். முத்து** : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுந்தரேசத் தேவர் அவர்களோ திரு. தீட்சிதர் அவர்களோ சொன்னால், நான் அதிலே ஆச்சரியப்பட முடியாது. நாங்கள் எல்லாம் அண்ணா வழியிலே வந்தவர்கள். மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்களிடம் ஒரு சமயம் ஒரு அதிகாரி வந்தார். அவர், "நாங்கள் உலகத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கிற கலைச்சிற்பங்களைப் பார்த்து வந்து இங்கே நம்முடைய நாட்டில் கலைச்சிற்பங்களை உருவாக்க வேண்டும்" என்று கேட்டார்கள். அரசின் செலவில் அவர் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்டார்கள். திரு. காமராஜ் அவர்கள், "நீங்கள் இங்கேயே ஆவுடையார் கோயில், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி போன்ற ஊர்களில் உள்ள கோயில் சிற்பங்களைப் பார்த்துச் செய்யுங்கள். அவைகள் உயர்ந்த சிற்பங்கள்" என்றார். "அது இப்போது தேவையில்லாத வேலை, இப்போது தேவையில்லை" என்று சொல்லிவிட்டார்கள். அது போலத்தான் வள்ளுவர் கோட்டம். நினைவுச் சின்னங்கள் எழுப்புவதை நான் மறுக்கவில்லை. நினைவுச் சின்னங்கள் என்பதற்கு ஓர் அளவு இருக்க வேண்டும். சிலம்புச் செல்வர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள், சிலப்பதிகாரத்தைப்பற்றி. பூம்புகார்பற்றி இலக்கியம் இருக்கிறது. நான் அச்சுத் தொழிலாளி, பஞ்சாலைத் தொழிலாளி, கணக்கன், குமாஸ்தாவாக இருந்தவன். துணைத் தலைவர் அவர்கள் அச்சுத் தொழிலாளியாக இருந்து இலக்கியம் படித்த பெருமையோடு அமர்ந்திருக்கிறார்கள். அந்த இலக்கியத்திலே கண்ணகி தேவையா, மாதவி தேவையா என்ற பிரச்சினை கூட இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அது வேறு இதில் இருக்கிறதா ?

**திரு. எஸ். முத்து** : அந்த வள்ளுவர் கோட்டம் நான் இல்லாமல் திறக்கப்படுகிறதே என்று எழுதியதைப் பார்த்தேன். மதுரை மாநகராட்சிக்கான புதிய கட்டிடத்தை பல ஆண்டுக் காலம் போராடி உருவாக்கினோம். அதிலே நாங்கள் அமர்ந்து விடக்கூடாது என்று, மாநகராட்சியைக் கலைத்து, அதை அதிகாரிகளைக் கொண்டு திறக்க வைத்தார்கள். அதை எல்லாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காக நான் ஞாபகப்படுத்துகிறேன். இங்கே மாநகராட்சித் தேர்தல்பற்றிக் கருத்து சொல்லப்பட்டது. எப்போது வைத்தாலும், நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஊராட்சி மன்றத் தேர்தல் நடப்பது ஒரு





வகையிலே இருக்கிறது. இன்னொரு வகையிலே நான் ரொம்ப மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தல் முடிந்தவுடன் உறுப்பினர்கள் திருப்பதிக்குப் போகிறார்கள், ஸ்ரீரங்கத்திற்குப் போகிறார்கள், குற்றாலத்திற்குப் போகிறார்கள், ஊட்டிக்குப் போகிறார்கள், பெங்களூருக்குப் போகிறார்கள். பரிதாபத்திற்குரிய தலைவராக வருபவர் விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், வாரி வாரிக் கொடுக்கிறார். இந்த அக்கிரமங்களைத் தடுக்க தலைவர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற நியாயமான முறையை, நேர்மையான முறையை இந்த அரசு வைத்திருக்கிறது. அதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(பிற்பகல் 5-40)

ஆக, இந்த மன்றத்தில் என்னுடைய அறிவுக்கு ஏற்ற சில கருத்துக்களை ஊழல், லஞ்சம், வீண் விரயம், அதிகார துர் விநியோகம் இவைகளைப்பற்றி நான் எடுத்து வைத்தேன். இந்த மன்றத்தில் சொல்வதன் மூலம் இந்த அரசு அவைகளைப் பரிசீலனை செய்யும் என்ற முழு நம்பிக்கையோடு எடுத்து வைத்திருக்கிறேன். இந்தக் கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. சி. வி. ராஜகோபால்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை சொல்வதற்கு தாங்கள் அனுமதித்ததற்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய பதினெட்டு திங்களாக இருக்கும் என்று எண்ணுகிறேன். மிகப் பெரிய கார்மேகம் நாட்டை மூடிக்கொண்டிருந்த ககலமாக இருந்தது. தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா பூராவும் ஜனநாயகம் என்று சொல்கிறோமே அந்தத் தத்துவம் அடிப்படையில் எங்கோ மறைந்துபோயிருந்தது. எப்படியோ ஒரு பெரிய தேர்தல் வந்து அந்த மேகம் கலைந்து நல்ல ஒளி, அருமையான ஒளி, தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதையெல்லாம் விட தமிழ் நாட்டில் சந்திர ஒளி தோன்றியிருக்கிறது. அதுவும் ராமச்சந்திர ஒளி தோன்றியிருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அது தமிழ் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பதுதான் மிகவும் முக்கியம். புதிதாக வந்திருக்கின்ற

அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியை வரவேற்கிறேன். தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே மிகச் சிறப்புடைய காலம் இது. பல வரலாறுகளைப் படைத்திருக்கிறது இந்தத் தமிழ்நாடு. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்தியதால், தமிழ் நாட்டு மக்கள் சிறப்பான ஒரு வரலாற்று ஏட்டினை இன்று எழுதியிருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கப் படவேண்டிய காரியமாகும். அண்மையில் நடந்த தேர்தல் சாதாரணமான தேர்தல் அல்ல. ஐந்தாறு கட்சிகள் தீவிரமாகப் போட்டியிட்ட தேர்தல். அது அரசியல் திமிங்கிலங்கள், அரசியல் வல்லுநர்கள், அரசியல் ஜாம்பவான்கள், அரசியல் வல்லூறுகள்கூட கலந்துகொண்ட மிகப் பெரிய போட்டி. அந்தப் போட்டியிலே ஒரு இயக்கம் வெற்றி பெற்று வந்திருக்கிறதென்றால், அது சாதாரண மானதல்ல. எப்படிப்பட்ட அலைகளையெல்லாம் கடந்து நீந்தி நிறைய ஓட்டுக்களைப் பெற்று அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்த அரசை பைங்கிளி என்றும் கூறலாம். அந்தப் பைங்கிளி நிச்சய மாகக் காப்பாற்றப்பட வேண்டிய இயல்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய மகிழ்ச்சியோடு மனப் பூர்வமாக இதைப் பாராட்டுவதற்குப் பற்பல காரணங்கள் உண்டு. நிலையான நியாயமான காரணங்கள் இருக்கின்றன. இதற்கு முன்னால் ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றிக் குறை சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். என்ன என்ன காரணத்தால் மக்கள் அவர்களை ஒதுக்கி வைத்திருக்

(மாற்றுத்தலைவர் திரு. வே. தங்கப்பாண்டியன் தலைமை.)

கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அந்தக் கட்சியில் இருந்தவர்கள் திறமை உள்ளவர்கள்தான், அறிஞர் அண்ணாவின் கொள்கை வழியிலே ஏதோ ஒன்றைக் கையாளத் தவறியதன் விளைவுதான் இது என்று எனக்குத் தெரிகிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்தவுடன், அதனுடைய கட்சித் தலைவர் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களைப் பார்த்து மற்றவர்கள், 'உங்கள் கொள்கை என்ன?' என்று கேட்டார்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாணியில் பதில் சொன்னார்கள் "அண்ணாயிசம்" என்று. மிகப் பெரியவர்கள், "அது என்ன 'அண்ணாயிசம்'? எங்களுக்குப் புரியவில்லையே" என்றார்கள். அவர்கள் எல்லாம் இப்போது புரிந்துகொண்டார்கள். அதுதான் அண்ணாவின் பிரின்சிபிள். அண்ணாவின் பாலிசி. காந்தியடிகள் பாலிசி, காந்தியிசம் என்கிறார்களே, அதைப்போல





இது அண்ணாவின் பாலிசி என்று அவ்வளவு சுருக்கமாகச் சொன்னார்கள். அதை மற்றவர்கள் இப்போது உணர்ந்து கொண்டார்கள். இப்போது அது அண்ணாவின் கட்சிதான். அண்ணாவின் ஆட்சிதான். அண்ணாவின் கொள்கை —லட்சியங்கள் மறையக் கூடாது என்று மீண்டும் அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வந்திருக்கிற காரணத்தால், எங்கள் நிலையில் இருந்து அதைச் சொன்னால்தான் தமிழக மக்கள் உணருவார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். பழைய சில விவரங்களைச் சொல்லு வதற்குத் தாங்கள் அனுமதி தர வேண்டும். ஏனென்றால் அவைகளை யெல்லாம் மக்கள் இன்றைக்கு அறிய வேண்டும். நம்முடைய வரலாறு, பண்பு, எண்ணங்கள், அண்ணாவின் அரசியல் கொள்கைகள் இவ்வளவும் இன்றைக்கு மக்களுக்குத் தெரிந்தாக வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

ஏற்கெனவே வெகு காலத்துக்கு முன்னால் இந்த நாட்டி னுடைய, தமிழ் நாட்டினுடைய, தமிழ் இனத்தினுடைய அமைப்பு இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று மேலோங் கியவர்கள். மற்றொன்று பின்னணியில் இருப்பவர்கள். மேலோர் என்றும் கீழோர் என்றும் இரண்டு பிரிவாக இருந்தார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா பூராவும் உலகமெங்கும் அந்த மேலோருக்கு செல்வாக்கு இருந்தது. அதே சமயம் பின்னணியில் இருக்கிற மக்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாமல் இருந்தது. எல்லாம் அவர்கள் தலைவிதி என்று எண்ணியிருந்த காலம் அது. மேலோர் என்று சொல்லக்கூடிய ஒரு சிலர் தமிழ் நாட்டை ஆண்டார்கள். இந்தியாவை ஆண்டார்கள். எல்லா ஸ்தாபனங்களும் அவர்கள் கையில் இருந்தன. இன்னும் பச்சை யாகச் சொன்னால் எல்லோருடைய குடுமியும் அவர்கள் கையில் இருந்தது. கீழோர் கை தூக்கிவிடப்படாத நிலையில் அழுந்திக் கிடந்தார்கள்.

ஒரு மாண்புமிகு உறுப்பினர்: குடுமி என்றால் இங்கே திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர்தான் இருக்கிறார் (சிரிப்பு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நண்பர் திரு. சி. வி. ராஜ கோபால் அவர்களுக்கு என்மேல் எப்போதும் ரொம்பப் பிரியம். அதனால் குடுமியைப்பற்றிக் குறைவாகச் சொல்லமாட்டார், (சிரிப்பு)

திரு. சி. வி. ராஜகோபால்: அவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. அவர்கள் எல்லாம் காஸ்மாபாலிடன் ஆகிவிட்டார்கள். இப்போது நான் சொல்வது பழைய தமிழ்நாடு. புதிதாக வந்துள்ள மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணங்களை ஸ்தாபிக்க வேண்டித்தான் இதைச் சொல்கிறேன். அப்போது மேலோர் என்பவர்கள் மைலாப்பூரில் இருந்தார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கப்பாண்டியன்): உறுப்பினர் அவர்கள் கவர்னர் உரை மீது கருத்துக்கள் சொன்னால், நாட்டு மக்களுக்கு உபயோகமாக இருக்கும்.

திரு. சி. வி. ராஜகோபால்: நாட்டு மக்களுக்கு நான் சொல்வது மிகத் தேவையானது. நாம் அந்தக் காலத்தில் ஏன் வாழ முடியவில்லை? அந்த வாழ்வு அப்போது எங்கே மறைந்திருந்தது? யாரால் அந்த வாழ்வு அளிக்கப்பட்டது என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டுமென்று சொல்கிறேனே தவிர, வேறு வகையில் நேரத்தை வீணாக்குவதற்காக அல்ல. சில உண்மைகளைச் சொல்லிய பிறகுதான் வெளிச்சம் ஏற்படும். வாழ்வு கிடைக்கும். அந்தக் கருத்துக்களை சுருக்கமாக வேண்டுமானால் சொல்கிறேன். நீட்டவில்லை. அதைப் புரிந்து கொண்டால்தான் இன்றைக்கு வந்திருக்கிற ஆட்சி — அமைச்சர்கள் அதுபோன்ற ஒரு ஆட்சியை எங்களால் நிறுவ முடியும் என்று சபதம் எடுத்துக் கொள்வார்கள். அப்போதுதான் இந்த நாட்டிலுள்ள பிற்பட்ட மக்களுக்கு வாழ்வு கிடைக்கும். அந்த மேலோர் இருந்தபோதுதான் நீதிக் கட்சி தோன்றியது. நீதிக் கட்சி தோன்றுவதற்குக் காரணம் அப்போது நீதியே இல்லாமல் எல்லாம் அநீதியாகவே நடந்து வந்ததுதான். சர் பி. டி. தியாகராய செட்டியார், டி. எம். நாயர் என்பவர்கள் எல்லாம் இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்றைக்கு உள்ளவர்களுக்கெல்லாம் போதித்த அரசியல் ஞானம் அதற்காகப் பயன்பட வேண்டும். மேலோர் என்பவர்கள் அரசியலில் எவ்வளவோ அனுபவித்தார்கள். அதை நீங்கள் கைப்பற்றியிருக்கிறீர்கள். அந்த அண்ணாவின் கொள்கையைக் கைப்பற்றித்தான் ஆட்சியில் அமர்ந்திருக்கிறீர்கள். அதை மற்றவர்கள் மறந்துவிட்டதால்தான் மேலே வர முடியவில்லை. சர் ஏ. ஆர். முதலியார் எல்லாம் அப்போது நீதிக் கட்சியிலே இருந்தார்கள். அப்போதுதான் பிற்பட்ட ஏழை மக்களுக்கு என்று கம்யூனல் ஜி.ஓ. கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகுதான் அண்ணா அவர்கள்





இந்த நாட்டுக்கு அறிமுகமானார்கள். டாக்டர் ராமசாமி முதலியார் காலத்தில் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். அரசியலிலே ஒரு சத்தியமூர்த்தி இருந்தார். மருத்துவத் துறையில் ஒரு ரங்காச்சாரி இருந்தார். ஆனால் இந்தக் கம்யூனல் ஜி. ஓ. வந்த பிறகுதான், நாம் ஒரு குருசாமி முதலியாரைக்

(பிற்பகல் 5.50)

காண முடிந்தது. இப்படி பலபேர் அந்தக் காலத்தில் கஷ்டப்பட்டு இந்த இயக்கத்தினை வளர்த்தார்கள். பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் எம். ஏ. படித்திருந்தாலும் அதை ஒரு பக்கம் தூக்கி எறிந்து விட்டு, எங்களுடைய பரம்பரை திராவிட இனத்திற்காக, தமிழ் இனத்திற்காகப் பாடுபடப் போகிறேன் என்று இதிலே இறங்கி, இந்த நாட்டிற்காக, இந்த மண்ணுக்காக, மண்ணில் பிறந்த உழவர்களுக்காக, தொழிலாளர்களுக்காக, ஏழை எளியவர்களுக்காக, சாதியில் மிகப் பெரிய கீழ்ச் சாதி மக்களுக்காகப் பாடுபட தன்னை இணைத்துக் கொள்வதற்காக அந்த நீதிக் கட்சியில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார். அந்தக் கட்சியிலே பொப்பிலி இருந்தபோது, அவரிடம் பி.ஏ. வாக அண்ணா இருந்தார். இன்றைக்கு இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நம்மவர்கள் தான் அண்ணா அவர்கள் உருவாக்கிய ஆட்சியைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். இது வளர வேண்டும் என்பதற்காகத்தான் அவர் பாடுபட்டார். ஆனால் என்ன காரணத்தாலோ இடையில் அதனை விட்டுவிட்டார்கள். அண்ணாவின் 'பிரின்சிபிள்ஸ்' என்று கூறுகிறார்களே, அது என்ன? அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தன்னடக்கம் வேண்டும், அது தான் முக்கியம். தன்னடக்கத்திற்கு மாறாக, யாராவது தலையாட்டினால், அவர்கள் தீர்ந்தார்கள். சிலருக்கு தலையாடி விட்டது. அவர்கள் தீர்ந்துவிட்டார்கள். அடுத்து எளிமை வேண்டும். அது இருக்கிறதா என்றால், அதைக்கூட சிலர் மறந்து விட்டார்கள். என்னை மன்னிக்க வேண்டும். இன்னும் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் நிர்வாகத்தில் புலி, இலக்கியத்தில் புலி, ஏன் எல்லாவற்றிலும் அப்படித்தான். ஆனால் ஒருசில சம்பவங்கள், திண்டுக்கல் தேர்தல் நடந்த போது, மதுரையிலிருந்து அவருடைய கார் செல்கிறது, அவருடைய காருக்குப் பின்னால் 60, 70 கார்கள் போய்க் கொண்டிருக்கின்றன. வேலைக்குச் செல்பவர்கள், செல்ல

முடியாமல், வீதியிலே திகைத்து வேதனையுடன் நிற்கிறார்கள். அவர்கள் என்ன வைதார்கள் என்பதை நானும் மக்கள் மத்தியில் நின்றுகொண்டிருந்ததால், வேதனையுடன் கேட்டுக்கொண்டிருந்தேன். "எவ்வளவோ அறிவாளியான கலைஞர், இந்த சாதாரண புகழிலே ஆர்வமாக இருக்கிறாரே, எவ்வளவு பெரிய வீரர், இப்படிச் செய்யலாமா" என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டு, "அண்ணாவின் பள்ளியில் படித்தவராயிற்றே" என்று வேதனைப்பட்டேன். என்னுடைய வேதனை அவருடைய அறிவு, ஆற்றல் அத்தனையும் வீணாக மங்கிப் போகிறதே என்பதற்காகத் தான். கெட்ட வழியில் பயன்படுத்துகிறாரே என்ற கோபமே தவிர, எனக்கு வேறு என்ன இருக்கிறது? டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் ஒன்றும் இல்லை. அண்ணாவின் கொள்கையை மறந்துவிட்டார்களே? எதற்காக இவைகளை எல்லாம் சொல்கிறேன் என்றால், நாட்டிற்கு எளிமை தேவை, வறுமை ஒழிய வேண்டும் என்றால், படாடோபம் இருக்கக் கூடாது. அது இனியும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதனைத் திரும்பத் திரும்பக் கூறுகிறேன். மிகப் பெரிய படாடோபமாக இருந்ததால்தான் மக்கள் அதனைக் கண்டித்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் இதையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களிடம் இவைகளை எல்லாம் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் ஒருமுறை கூறியிருக்கிறார். "கழகத் தோழர்களே, உங்களை வெல்ல யாராலும் முடியாது. இந்த இயக்கத்தை அழிக்க யாரும் பிறக்கவில்லை. இனியும் பிறக்க மாட்டார்கள். ஆனால் நம்மிலேயே யாருக்காவது தலையாடினால், தாம் தீர்ந்தோம். நம்முடைய இயக்கத்தில் இருக்கிற சிலர் நம்மை அழிக்க நினைத்தால், அழிந்துவிடுவார்கள்" என்று தெளிவாக அன்றையதினமே கூறியிருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நண்பர்கள் வருத்தப்படக்கூடாது. நண்பர் திரு. கோ. சி. மணி உட்பட எல்லோரையுமே கேட்டுக்கொள்கிறேன். மாற்றுக் கட்சிக்காரர்கள் நம்மைப் பார்த்து, ஏன் அண்ணா அவர்களைப் பார்த்து கேட்கவில்லையா? "நாடகமாடிகள் நாடாள முடியுமா?" என்று கேட்டார்கள், ஏளனம் செய்தார்கள். இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்து, தமிழகத்திற்கு என்று ஒரு அரசை அமைத்து, தமிழ்நாடு என்று பெயர் வாங்கித் தந்து, ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பல எண்ணங்களை வகுத்துத் தந்துவிட்டுப் போனார் அண்ணா அவர்கள். அதை மிக ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும்.





இன்னொன்றும் கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் பழி வாங்கும் குணம் கொண்டவரல்ல. மாற்றாரை எதிரிகளைக் கூட மறவாமல், அந்த எதிரிகளைக் கூட தன்வயப்படுத்துகின்ற நல்ல பண்பாளராக இருந்த காரணத்தினால், மாற்றார் எதிரி என்று நினைக்காமல் அண்ணா அவர்களுடன் பழகினார்கள். அந்த வகையில் அனைவருடனும் அனுசரித்துப் போக வேண்டும். அவர்களும் நம்மோடு இருந்தவர்கள் தானே; அண்ணாவின் தம்பிகள் என்று சொல்கிற உரிமை உங்களுக்கும் உண்டு, அவர்களுக்கும் உண்டு. பழிவாங்குகிற படலத்தில் நீங்கள் எல்லாம் இறங்கமாட்டீர்கள். ஏனென்றால் அண்ணாவின் வழிவந்தவர்கள் அல்லவா? 25 ஆண்டுகளுக்கு முன்னால் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்களாகும். அவர் அண்ணா அவர்களை எவ்வளவோ திட்டினார். இன்னும் ராஜகோபாலாச்சாரி அவர்கள் கொசுக்களைப் போல அழித்துவிடுவேன் என்று ஒருகாலத்தில் சொன்னார். எதற்காக இவைகளையெல்லாம் சொல்கிறேன் என்றால், அவ்வளவு பெரிய எதிரிகளைக் கூட மயக்கி, தன்வயப்படுத்தி, அவர்கள் வாயாலேயே "Anna is a great man" என்று பாராட்டப்படுகிற விதத்தில் அவர் விளங்கியிருக்கிறார் என்றால், இதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். காமராஜர் அவர்கள், "இந்த மூஞ்சிக்கு ஆளத் தெரியுமா" என்று ஒருமுறை அண்ணா அவர்களைக் கேட்டவர்தான். பிறகு கண்ணீர் விட்டு அவரே அழுதார். "இப்படிப்பட்ட பெரிய மனிதர் ஆறு மாதங்கள் என்ன, கடைசி வரை ஆளட்டும்" என்று மனந்திறந்து காமராஜரே சொன்னார். அந்தப் பண்பாடு, எண்ணம், மரபு, நோக்கம் உங்களுக்கெல்லாம் வேண்டும் என்பதற்காகத்தான் இவைகளையெல்லாம் சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்களை, எண்ணங்களை அவருடைய இயல்புகளை, தன்மைகளை, எந்தவிதமான தொய்வும் இல்லாமல், நிறைவேற்றுங்கள். அவைகளை நாங்கள் வரவேற்கிறோம். நியாயம், உறுதி என்ற எண்ணம் வந்தால், அவைகளைக் கட்டாயம் செய்யுங்கள். 'இவன் ஏழை, பரவாயில்லை' என்ற வகையில் தெரிந்தால், செய்யுங்கள். இவைகளையெல்லாம் நான் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் கட்சிக்குப் பண்பு இருக்கிறது, குணம் இருக்கிறது என்று மக்கள் எங்களை வளர்த்தால், மக்களை வாழ்த்துகிறோம். வளர்க்கவில்லை என்றால், நாங்கள் இப்போது இரண்டே முக்கால் பேர் இருக்கிறோம். நாங்கள் எங்கள் உள்ளத்தில் தோன்றுகிற கருத்துக்களை கள்ளங்கபடமில்லாமல், மனதில் கனம்

இல்லாத வகையில் நிச்சயமாகச் சொல்வோம். மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணிகளை எதிர்காலத்தில் செய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கப்பாண்டியன்) :** ஆளுநர் உரையில் பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகம் பேர் பெயர் கொடுத்திருக்கிறபடியால் உறுப்பினர் அவர்கள் பேச்சினைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டால் நல்லது.

**திரு. இளம்பரிதி :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் மன்றத்தில் இல்லாத தலைவரைப்பற்றிப் பேசுவது அவ்வளவாகச் சரியில்லை.

**திரு. சி. வி. ராஜகோபால் :** அவையில் இல்லாதவரைப்பற்றிப் பேசலாமா என்று அருமை நண்பர் எத்தனையோ கட்சிக்குப்போய் வந்தவர் கேட்கிறார். அவர் எல்லோருடைய பொதுச் சொத்தாக இருந்தவர். டாக்டர் கலைஞர் அவருடைய சொத்து மட்டுமல்ல, எங்களுக்கும் சொத்து.

**திரு. இளம்பரிதி :** நான் எங்களுடைய சாதிக் கட்சிக்குப் போய், சொந்தக் கட்சியான தாய்க் கட்சிக்குத் திரும்பியிருக்கிறேன். இவர்தான் இன்று வேறு கட்சியிலே இருக்கிறார்.

(பிற்பகல் 6-00)

**மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கப்பாண்டியன்) :** உறுப்பினர்கள் ஆளுநர் உரையிலிருந்து பிரிந்து வேறு வாதங்களுக்குப் போகாமலிருக்க வேண்டுகிறேன். உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்களைத் தொடர்ந்து பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தயவுசெய்து மன்னிக்க வேண்டும், தலைவரவர்களே, நான் யார் ஜோலிக்கும் போகவில்லை. நான் எந்த வம்பிற்கும் போகவில்லை. ஆனால் வம்புகள் கூறி, என்னை இழுக்கும்போது என்ன செய்வதென்று புரியாமல், சில பதில்களைச் சொல்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரைபற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் அருமையான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்கள் தான். அதைத்தான் ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய உரையிலே நாட்டு மக்களை



(பிற்பகல் 6.00)

வாழவைப்பதற்காக என்னென்ன வழிகள், என்னென்ன திட்டங்கள் என்று புள்ளிவிவரங்கள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஏமாற்றம் அடைய வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. சில விவரங்களை அவர்கள் சொல்லிவிட்டார்கள். மற்ற விவரங்களை நாம் பார்த்துக்கொண்டு போகிறோம். எதை எதையோ பார்த்து ஏமாந்து விட்டோமென்று நான் கூறவில்லை.

கூட்டுறவு பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாகப் பேசினார்கள். 16,000 நியாய விலைக் கடைகள் வரப் போகின்றன. உணவுப் பண்டங்களின் விலை நிச்சயமாக அதிகரித்திருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். சில வியாபாரிகள் தவறான முறையில் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். சிமெண்ட் விலை கூடியிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் மிக அழகாக சாக்கரை விற்பதைப் பற்றியும், அதன் எடை பற்றியும் ஆதாரத்தோடு சொல்லும்போது, அதற்கு யாரும் பதில் சொல்லவில்லை. அது உண்மைதான், நியாயம்தான். 16,000 நியாய விலைக் கடைகளை இந்த அரசு அமைக்கும்போது, எந்தவித தயவு தாட்சண்யமும் காட்டாமல் இருக்க வேண்டும். எதிர்க்கட்சிகளிலுள்ள ஓரிருவரைப் போட்டால், தவறு செய்யும்போது கண்டிப்பது சுலபமாக இருக்கும். நான் சொல்லுவது வேடிக்கையல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது—அவர்களுடைய பெருந்தன்மையைச் சொல்கிறேன்—மத்திய சென்ட்ரல் பாங்கின் பிரசிடெண்ட்டாக மணலி ராமகிருஷ்ண முதலியார் இருந்தார்கள். அவர் இன்னொரு கட்சிக்காரர், ஆனால் நாணயம் உள்ளவர். அவரை வைத்து பாங்கில் வேலை வாங்கினால், பாங்கிலிருந்து ஒரு பைசாகூட வீண் விரயமாகாது; மக்களுக்குப் போய்ச் சேருமென்று அண்ணா அவர்கள் கருதினார்கள். எதிர்க் கட்சிக்காரர்களும் உறுப்பினர்களாக இருக்கும்போது, ஆளுங் கட்சிக்காரர்களும் தவறு செய்யப்பயப்படுவார்கள். எனவே கூட்டுறவு மைய வங்கியில் மணலி ராமகிருஷ்ண முதலியாரையே தலைவராக்கினார் அண்ணா. அவர் டி. ஏ. வாங்கியதில்லை. சொந்தக் காரில்தான் வருவார். விருந்து என்றால், சொந்தப் பணத்தில் விருந்து கொடுப்பார். அப்படிப்பட்டவர்கள் கூட்டுறவுக்குத் தேவையா அல்லது கூட்டுறவுப் பணத்தை எடுத்துக்கொண்டு

டெல்லிக்குப் போகலாமா, காஷ்மீருக்குப் போகலாமா என்பவர்களும், கூட்டுறவைப்பற்றி சைனுவில் என்ன செய்கிருர்கள் என்று பார்க்கப் போகிறவர்களும் தேவையா?

மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உங்களில் பலரும் இங்கே முன்னல் இருந்திருக்கிறீர்கள். என்னைப்பார்க்க வேண்டும். மிகப் பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இங்கேதான் அமர்ந்திருந்தார்கள். கூட்டுறவு விஷயத்தைப்பற்றிப் பேசும்போது, அவர்கள் அதில் நடக்கும் கொள்ளைகளைப்பற்றிப் பேசுவார்கள். கோடிக்கணக்கான ரூபாய்—அவர்கள் வீட்டுப் பணமோ, அவர்கள் பாட்டன் வீட்டுப் பணமோ அல்ல—கொள்ளையடிக்கப்படுவதைப்பற்றி, இனி கூட்டுறவே இந்த நாட்டில் தலைகாட்டாதவண்ணம், பேசினர்கள். முன்னள் முதல்வர் டாக்டர் கருணநிதி அவர்கள்கூட அப்போது இங்கே அமர்ந்துகொண்டிருந்தார்கள். இப்போது இருப்பவர்களில் பலர் இருந்தார்கள். அப்போது அவர்களில் யாரும் ஒன்றும் பேசவில்லை. பேசியிருக்க வேண்டாமா? அங்கே உண்மையில் கொள்ளை போயிற்று. தயவுசெய்து கூட்டுறவு அமைச்சரவர்களிடம் கூறிக்கொள்கிறேன். இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானல், கூட்டுறவுத் துறையில் கொள்ளையடிப்பவர்களைத் தூக்கில் மாட்டுங்கள் என்று கூறவில்லை, தக்க தண்டனை தாருங்களென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறை எப்போதும் ஆபத்தானது. அதில் மிக ஜாக்கிரதையாக நடக்க வேண்டும். கொஞ்சம் ஏமாந்தாலும் ஜேபிக்குள் போய்விடும். ஆங்கிலேயர்கள் அறிந்தோ அறியாமலோ கூட்டுறவுத் துறை இந்த நாட்டுக்குத் தேவையென்றும், கூட்டு முயற்சியால் எல்லாம் நடக்க வேண்டுமென்றும் இதனைக்கொண்டு வந்தார்கள். ஆனல் அது லாபம் சம்பாதிக்கும் இடமாக இருக்கிறது. சென்ட்ரல் பாங்கில் வேலை போட்டுத்தர, முன்னல் இருந்த தலைவர்கள் 2,000, 5,000 ரூபாய் என்று வாங்கினர்கள். அதைப்பற்றி நான் இப்போது விரிவாகப் பேசப் போவதில்லை. ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது திறக்கவிருக்கும் 16,000 கடைகளிலும் நாணயம் உள்ளவர்களைப் பார்த்துப் போட வேண்டும். எதிர்க் கட்சிக்காரர்களைப் போட்டால், தவறு செய்யும்போது தண்டிக்கச் சுலபமாக இருக்கும்.





அடுத்து, கிராமப் பஞ்சாயத்து எலக்ஷன்பற்றிச் சொன்னர்கள். அதை மிக ஜாக்கிரதையாக நடத்த வேண்டும். கிராமங்களுக்கு நீங்கள் செய்ய வேண்டியது ஏராளமாக இருக்கிறது. கிராமங்களிலே வாழ வசதி இல்லாததால், அவர்கள் பக்கத்திலுள்ள டவுன்களுக்கு ஓடி வருகிருர்கள். திண்டிவனம், தொழுப்பேடு, மதுராந்தகம், செங்கற்பட்டு போன்ற இடங்களிலிருந்து எல்லோரும் சென்னைக்கு வந்துவிடுகிருர்கள். அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்புகள் இல்லை. அதற்கு முதலில் ஏற்பாடு செய்ய வேண்டும். தயவுசெய்து மத்திய அரசைக் கேட்டு, வெளிநாட்டுக்காரர்களையும் கேட்டு, ஏதாவது சிறுசிறு தொழிற்சாலைகளை அந்தப் பகுதிகளில் அமைத்து, அந்த இரண்டு மூன்று மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு வாழ வகை செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். பக்கத்தில் உள்ள ஆந்திர, கேரள மாநிலம் வளர்ந்திருக்கின்றன. ஏதோ கொஞ்சம் சிவகாசி வளர்ந்திருக்கிறது. இங்கே இருக்கிற இடங்கள், சென்னையிலிருந்து நூறு மைலுக்குள் உள்ள இடங்கள், நிச்சயமாக வளரவில்லை. இங்கே தொழிற்சாலைகளே இல்லை. எனவே இப்பகுதிகளில் சிறுசிறு தொழில்களை உண்டாக்கினல், அந்த ஏழை மக்கள் வாழ வழி கிடைக்கும். சில குடும்பங்களில் வேலை செய்பவர்கள் 5 பேர்கள் இருக்கிருர்கள். அண்ணன், தம்பி, மனைவி, மச்சினி என்று எல்லோரும் வேலைக்குப் போகும் குடும்பங்கள் இருக்கின்றன. மற்றொரு குடும்பத்திலுள்ள 5 பேர்களும் வீட்டிலேயே இருக்கிருர்கள். இதைக் கவனித்து வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டும். புதிய அமைச்சரவையை மிக்க மன உவகையோடு வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இது ஆபத்தான காலம். இது வளருகின்ற காலம். இப்போது ஜாக்கிரதையாக இருங்களென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்பரிதி: மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் அனைவருக்கும் முதலில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையின்மீது எனது கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பினைக் கொடுத்ததற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உரை சம்பிரதாயத்திற்காக கவர்னர் உரையென்று சொல்லப்படுகிறதே தவிர, உண்மையில் இது இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற சர்க்கார் எப்படி திட்டங்களைத்

தீட்டப் போகிறார்கள், எப்படி ஏற்பாடுகளைச் செய்யப் போகிறார்கள் என்பதை கவர்னர் மூலமாகக் கொடுத்து, படிக்கப் படுகின்ற ஓர் உரையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உண்மையாக கருத்தூன்றிப் பார்த்தால் இது அரசாங்கத்தின் உரை. அந்த அளவுக்கு, இந்த உரையின் மீது எனது விமர்சனங்களைத் தொடர்ந்து நடத்த அவைத் தலைவரவர்கள் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்த மன்றத்திலே ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கக்கூடிய பெரியவர் திரு. முத்து அவர்கள், அவர்களுடைய சுதந்திரத்தின்படி, சௌகரியத்தின்படி மிகவும் பெரிய பிரசங்கத்தை நடத்தியிருக்கிறார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கப்பாண்டியன்)** : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் அவைத் தலைவரின் அனுமதியுடன்தான் பேசினார்கள்

**திரு. இளம்பரிதி** : நன்றி. அப்படியொரு வசதியை, வாய்ப்பை எனக்கும் நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் பொறுப்பேற்றிருக்கிற இந்த ஆட்சியிடமிருந்தும், இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சரவர்களிடமிருந்தும் இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் ரொம்பவும் அதிகமாக எதிர்பார்த்திருக்கின்றார்கள். அப்படி எதிர்பார்த்ததற்கான காரணம், இன்றைய தினம் ஆட்சியிலே பொறுப்பை ஏற்று இருப்பவர்கள், இந்த ஆட்சிக்கு முதல்வராக இருப்பவர்கள், 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை, எளிய கிராம மக்களிடம் அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையை, ஒரு கவர்ச்சிகரமான நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறார்கள். அதனால்தான் இந்த நாட்டு மக்கள் அதிகப்படியான நம்பிக்கை வைத்தார்கள்.

"நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்"

(பிற்பகல் 6-10)

இப்படி மக்கள் ரொம்பவும் அதிகப்படியான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அவர் ஒரு சிறந்த கவர்ச்சித் தலைவராக ஆகிவிட்டார். தோழர்கள் சொல்வது





போல், புரட்சித் தலைவராக விளங்கும் அவரை அந்த சினிமாப் பாட்டின் அடிப்படையிலே, இந்த நாட்டு மக்களும் முதலமைச்சராக வைத்து அழகு பார்த்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர் ஆட்சியின் கவர்னர் உரையிலே அந்தத் தலைவருக்கு இருக்கின்ற அளவுக்குக்கூட, கவர்ச்சி தருகின்றது எதுவும் இல்லை. உரையிலே கவர்ச்சி இருக்கிறதா என்று பார்த்தால், அது பெருத்த ஏமாற்றத்தைத்தான் கொடுத்து விட்டது என்பதை இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவரவர்களே, கவர்னர் உரையிலே அந்த 17 மாத கால குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டோம் என்ற நிலையில் நாம் பெருமூச்சு விட்டு நம்மை நாம் ஆசுவாசப்படுத்திக் கொள்வதைப் பார்க்கிறோம். இந்த 17 மாத கால நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சியிலே நடைபெற்ற அரசில் அரசியல்வாதிகள் தவறு செய்ததாகப் பெரிதுபடுத்தப்பட்டு சிறையிலே துன்பப்பட்டதுபற்றி, கஷ்டப்பட்டதுபற்றி அதில் கண்டனம் தெரிவிப்பதற்குக்கூட அவர்களுக்கு மனம் இல்லை என்றால் என்ன என்று பார்க்க வேண்டும். அந்த ஜனநாயகத்திற்கு பாரம்பரியத்திற்கு மதிப்புக் கொடுப்பதாக இருந்தால், அவர்கள் கவர்னர் அவர்கள் உரையிலே தார்மீக அடிப்படையில் தகுந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கலாம். கடுகளவுகூட அனுதாபம் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சியினர் சிறைக்குச் சென்றால், சித்ரவதைப்பட்டால் அதுதான் கொடுமை என்றும், தங்கள் கட்சியினர் கொடுமைப் பட்டால், அது தியாகம் என்றும் அந்தக் கட்சிக்காரர்கள் மத்தியிலே எண்ணம் வருமானால், அது அவ்வளவு நாகரீகமானது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட குணமானது ஆளும் கட்சிக்கு மிகுந்து, முனைப்பாக இருந்துவிடுமானால், அதுபோன்ற பயங்கரமான அறிகுறி வேறு ஒன்றுமில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். சர்க்காரிலே அந்த 17 மாத கால குடியரசு ஆட்சியில் நடைபெற்ற கொடுமைகளை, சித்ரவதைகளை விசாரிக்க இன்றையதினம் இஸ்மாயில் கமிஷன் அமைத்திருக்கிறார்கள். அந்த இஸ்மாயில் கமிஷனைப்பற்றி இவர்கள் எப்படிக் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஏதோ இஸ்மாயில் கமிஷன் என்றால், கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம்பந்தம்

என்று கருதிக் கொண்டிருக்கிறார்களா என்று தெரியவில்லை. இந்த இஸ்மாயில் கமிஷன் விஷயத்திலாவது விரைவு காட்ட வேண்டும். ஜனநாயக பாரம்பரியத்தில் ஆளும் கட்சி எதிர்க் கட்சி என்கின்ற மனப்பான்மை காட்டாமல், இவர்கள் உண்மையிலேயே இந்தக் கமிஷனுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய அமைச்சர், குறிப்பாக நிதி அமைச்சர் திரு. மனோகரன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் சிறைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட எனது நண்பர் திரு. சிட்டிபாபு அவர்கள் விஷயத்தைப் பற்றி நான் இங்கு நினைவுபடுத்துகிறேன். ஆகவே அவர்கள் செய்வார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன்.

மாற்றுத் தலைவரவர்களே, இந்த 17 மாத கால கொடுமையைப் பற்றி இந்த உலகமே வெகுண்டு எழுந்து ஒரு சரித்திரபூர்வமான கண்டனத்தை இன்றையதினம் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சரித்திரபூர்வமான ஒரு இருண்ட அத்தியாயத்தில் 17 மாத காலமாக இந்த நாடு ஆட்படுத்தப் பட்டிருக்கிறது. அந்தச் சம்பவம் இந்த கவர்னர் உரையிலே சொல்லப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடவாதது போன்ற ஒரு பாவனையைக் காட்டி இந்த உரையைத் தீட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். இப்படிப்பட்ட ஒரு மனநிலை வரக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒன்றுமே நடவாதது போல, ஏதோ நாட்டு மக்கள் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே சௌஜன்யமாக, சித்ரவதை என்ன என்பதே தெரியாதவர்களாக இருந்த பாவனையாகக் காட்டப் பட்டிருப்பது ஜனநாயகத்திற்கே ஒரு நல்ல பாரம்பரியம் ஆகாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இவ்வளவு பெரிய நெருக்கடிக்கும், இவ்வளவு பெரிய குழப்பத்திற்கும், ஜனநாயக அத்துமீறல்களுக்கும் காரணமாக இருந்தது 42-வது அரசியல் சட்டத் திருத்தம் என்று ஆளுநர் அவர்களால் சொல்லப்படுகிறது. இந்த 42-வது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு யார் யார் முன்னோடியாக இருந்தார்களோ, யார் யார் இதற்கு அஸ்திவாரம் போட்டார்களோ, யார் யார் இதை உருவாக்கிக் கொடுத்தார்களோ, யார் யார் இதற்கு பெரிய ஆதரவாளர்களாக இருந்தார்களோ, அந்தக் கட்சியில் தங்களுடைய அபிமேதா





விலாசத்தை நிலைநாட்டிக் கொண்டவர்கள்—அப்படிப்பட்டவர்கள் எல்லாம் மத்திய அரசில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை எல்லாம், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எந்த உச்ச பதவியில் வீற்றிருந்தவர்களானாலும் சரி, அவர்களை எல்லாம் தயவுதாட்சண்யமின்றித் தண்டிக்க வேண்டும், குற்றவாளிக் கூண்டிலே நிறுத்த வேண்டும், அவர்களுடைய முகத் திரையைக் கிழிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த 42-வது சட்டத்திற்கு முன்னோடியாக இருந்தவர்களிலே ஒருவர் என்று கருதப்பட்டவர், யாரைத் தண்டிக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறதோ அப்பேர்ப்பட்டவர்க்குப் பரிசாக இந்தப் புதிய ஆட்சி அட்வகேட்-ஜெனரல் பதவியைக் கொடுத்திருப்பதாக அறிந்து, நான் வெட்கப்படுகிறேன். ஜனநாயகக் காவலராக இருப்பவர்கள், நீதி பரிபாலனத் துறையிலே நியாயமானவர்களாக உள்ளவர்கள் இன்றையதினம் தலை குனிகின்ற நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தின் பெயரால், ஒரு எதிர்க் கட்சியின் பெயரால் இன்றைய தினம் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களை நான் வேண்டிக்கொள்வதெல்லாம் இப்படிப்பட்ட தலை குனிவுக்கெல்லாம் இடம் கொடுக்காமல் அன்னாரைப் பதவியிலிருந்து அவர்களை நீக்க வேண்டுமென்பது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாற்றுத் தலைவரவர்களே, 42-வது அரசியல் சட்டத் திருத்தம் இந்தியாவை ஒரு சோசலிஸ நாடாக பிரகடனப்படுத்துகிறது. அதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சேர்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இளம்பரிதி** : மாற்றுத் தலைவரவர்களே, அந்த 42-வது அரசியல் திருத்தச் சட்டத்தை நாங்கள் எப்போதுமே ஏற்றுக் கொள்ளவில்லை. அதை வரும்போது வரவேற்றவர்கள், இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள்.

*** மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தை ஆதரித்த காரணத்தினாலேயே, இங்கே ஒருவரை சட்டத்துறையிலே நியமித்திருப்பது தவறு என்றும், அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்றும் அரசுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள் மாண்புமிகு அங்கத்தினர்

அவர்கள். அந்த 42-வது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு மூல காரணமாக இருந்து நிறைவேற்றுவதற்கு முழு முதற் காரணமாக ஒத்துழைத்து அன்று மத்திய அமைச்சராக இருந்து, பின்னாலே அந்தக் கட்சியிலேயிருந்து விலகியவருக்கு இங்கு சென்ற நாடாளுமன்றத் தேர்தலிலே வரவேற்புக் கொடுத்த கட்சி மாண்புமிகு அங்கத்தினர் சேர்ந்துள்ள கட்சி. அவரைப்பற்றி அந்தக் கட்சி என்ன கருதுகிறது? நாடாளுமன்றத்திலே இருக்கிற அல்லது மத்திய அரசு நடத்திக் கொண்டிருக்கிற அவர்களுக்கு யோசனை சொன்னால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நமது மாண்புமிக்க செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்தில் இந்த 42-வது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தவர்களை இங்கே வரவேற்றோம் என்ற ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். செய்தது தவறு என்று ஒரு சூழ் நிலையில் திருந்திவிடுகிறபோது வரவேற்கப்படுகிறதே தவிர, அவர் ஜனதா கட்சியை அமைத்து, அந்த 42-வது திருத்தச் சட்டத்தை எதிர்க்கின்ற நிலையில், அவர் ஜனநாயக காங்கிரஸ் அமைத்து, அதையும் பகிரங்கமாக எதிர்த்து, உலகம் ஒப்புக் கொண்ட நிலையில், ஒரு திருந்திய மனிதரை வரவேற்பதைத் தவிர, திருத்தத்தை ஒப்புக்கொள்கிற சூழ்நிலையில் எங்கள் கட்சி ஒப்புக் கொண்டதும் இல்லை, வரவேற்றதும் இல்லை என்பதை நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமைகளைக் குறைக்கும் திருத்தம் 42-வது திருத்தம் மட்டுமல்ல. அதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை இருந்தபொழுது அடிப்படை உரிமைகளைத் திருத்தக் கூடிய ஒரு திருத்தம் மத்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், எல்லா சட்ட மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டபொழுது, அதை இங்குள்ள அரசு நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், முழுமனதோடு ஆதரவு தெரிவித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





(பிற்பகல் 6-20)

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு காங்கிரஸ் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவதால் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பிறர் வாதத்தில் குறுக்கிட விரும்புவதில்லை. அவரவர் பதில் சொல்கிற நேரத்தில் சொல்ல விரும்புவதைச் சொல்லலாம் என்றிருப்பேன். இருந்தாலும்கூட பகிரங்கமாக ஒரு குற்றச் சாட்டைக் கூறியிருப்பதால், பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அடிப்படை உரிமைகளைத் திருத்துகிற சட்டம் 42-வது திருத்தச் சட்டத்திற்கு முன்னாலேயே வந்தது என்று சுட்டிக் காட்டினார்கள். அது இந்த நாட்டின் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர அரசு எடுத்த நடவடிக்கையோடு சேர்ந்து இன்னும் பல நல்ல கருத்துக்களை அமுல்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டது. அதனால் அதை ஒப்புக் கொண்டோமே தவிர, இந்நாட்டில் ஜனநாயகத்தைப்பறிக்கிற, தனி மனித உரிமைகளைப் பறிக்கிற ஒரு சட்டம் வருகிற பொழுது, இங்கிருந்த முந்தைய அரசு மற்ற மாநிலங்களைவிட முதல் நிலையில் நின்று தீவிரமாக, அழுத்தமாக எதிர்த்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அது 25-வது சட்டத்திருத்தம் என்று நினைக்கிறேன். இந்திய நாட்டில் பரிபூரண பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்துவதற்தாக இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட, சொத்துரிமைகளைப் பறிக்கிற, தொழிற் சங்க உரிமைகளை, பேச்சுரிமையை, எல்லா உரிமைகளையும் திருத்துகிற ஒரு முழுச் சட்டமாகக் கொண்டு வரப்பட்டு, அந்தச் சட்டம் அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினரால் ஆதரவு தெரிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை, மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இங்கே சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகள் அடங்கிய புத்தகங்கள் இருக்கின்றன. வேண்டுமானால் அந்தக் குறிப்புகளை எடுத்துவந்து காட்ட முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இளம்பரிதி:** வறுமையை ஒழிப்போம் என்று ஆளுநர் உரையில் காணப்படுகிறது. எப்படி வறுமையை ஒழிப்பார்கள் என்பதற்கான ஆதாரமோ அடிப்படையோ அதில் சொல்லப்பட

[illegible]

[திரு. இளம்பரிதி] [1977 ஜூலை 12

வில்லை. இது எப்படியிருக்கிறதென்றால், காலிப் பெருங்காய டப்பா போல் இருக்கிறது. வாசகத்தில் சொல்லியிருக்கிறதே தவிர, அதற்கு ஆதாரம் காணப்படவில்லை. பெருங்காயம் இல்லாத காலி டப்பாவில் அதன் வாசனை மட்டும்தான் இருக்கும். அதைப்போல் இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த மத்திய ஆட்சி "வறுமையை ஒழிப்போம்" என்று இந்தியில் 'கரீபி ஹடாவோ' என்று எழுதினார்கள். பாரதப் பிரதமர் கூறிய இந்த கரீபி ஹடாவோவை அந்தக் கட்சிக்காரர்கள் எல்லாம் புகழ்ந்தார்கள். 'கரீபி ஹடாவோ' என்று எழுதினார்கள். முடிவிலே பார்த்தால், கரீபி ஹடாவோ ஆகவில்லை. இவர்கள்தான் ஹடோவாகி விட்டார்கள். வறுமை ஒழியவில்லை. இவர்கள் ஒழிந்துவிட்டார்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுடன் தோழமைக் கட்சியாக இருந்தவர்களுக்கும் ஒருவேளை அந்தக் கதி வந்துவிடக் கூடாது என்று எனது அச்சத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வறுமையை ஒழிக்கிறோம் என்று சொல்வதன் மூலமாக இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமென்று உறுப்பினர் கருதுகிறார் என்றால், அவர்களுக்கு இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்பதையும் அவர் சொல்வாரா?

திரு. இளம்பரிதி : அவர்கள் வறுமையை ஒழிப்போம் என்ற கோஷத்தைத்தான் எழுப்பினார்களே தவிர, அதை ஒழிப்பதில் கவனம் செலுத்தவில்லை. அதனால்தான் ஒழிந்தார்கள் என்பதைத்தான் நான் சொல்கிறேன். வறுமையை ஒழிப்போம் என்றால், அதில் கவனம் செலுத்த வேண்டும். அந்த நிலைமை இவர்களுக்கு வரக்கூடாது என்ற அச்சத்தால் சொல்கிறேனே தவிர, வேறில்லை. மாண்புமிகு அமைச்சர் தவறாகக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அப்படியானால், திராவிட முன்னேற்றக் கழகம் பதவி இழந்ததற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இளம்பரிதி : திராவிட முன்னேற்றக் கழகம் பதவி இழந்ததற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்கள். ஜனநாயகத்தின் வரலாற்றில் நாட்டு மக்கள் எல்லோருக்குமே இது



1977 ஜூலை 12] [திரு. இளம்பரிதி]

நன்றாகத் தெரியும். ஜனநாயகத்தில் அத்துமீறல்கள் நடந்த இப்படிப் பழிவாங்கினார்களே தவிர, வேறில்லை. உறுப்பினர் அவர்கள் வேறு கற்பனையில் இருக்கிறாரா என்று தெரியவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : எந்த ஜனநாயகத்தைக் குறிப்பிடுகிறார் உறுப்பினர்?

திரு. இளம்பரிதி : நண்பர் திரு. ராஜகோபாலுக்கும் பலவீனமான ஜனநாயகம். அதை ஆராய முடியாத நிர்ப்பந்தத்தில் இப்போது இருக்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை இல்லாதபடி செய்து விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வழி என்னவென்று காட்டப்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் இன்றைய தினம் பெருகிக்கொண்டிருக்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல, இந்த பூ பாகம் முழுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாக ஆகிக்கொண்டிருக்கிறது. நடுத்தர மக்களையும் இன்னும் உயர்நிலையில் உள்ளவர்களையும் கிராம விவசாய மக்களையும் பாதிக்கும் அளவில் விசுவரூபம் எடுத்திருக்கிறது. பொருளாதார நெருக்கடியைப் போக்குவது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி நீக்குவோம் என்பதற்கான அஸ்திவாரமே சொல்லப்படவில்லை. பெரிய பெரிய தொழிற்சாலைகளை நிறுவப்போகிறார்களா? அதில் ஆயிரம் பத்தாயிரம் பேருக்கு வேலை கொடுக்கப் போகிறார்களா? ஒன்றும் கூறவில்லை.

அடுத்தபடியாக, முந்தைய அரசு வாரியங்கள் பலவற்றை ஏற்படு செய்திருந்தது. அதன் மூலமாக பல நல்ல காரியங்கள் நடந்தன. அது எல்லோருக்கும் தெரியும். குடிசை மாற்று வாரியம் ஏற்பட்டு, பல அடுக்குக் கட்டிடங்கள் கட்டி ஏழை எளிய மக்கள் வீட்டு வசதி பெற்றிருக்கிறார்கள். வெள்ளச் சேதமின்றி தப்பினார்கள். தீய்க்குப் பலியாகாமல் தப்பி வாழ்கிறார்கள். முந்திய அரசு தொடர்ந்து இந்திய பூ பாகத்தில் எந்த மாநிலத்திலும் செய்யாத அளவுக்கு அற்புதமான சாதனைகளைச் செய்து புகழின் உச்சக் கட்டத்தை எட்டியது. ஜனாதிபதி ஆட்சி வந்த பிறகு ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை. சென்னையில் வாழ்கிற மக்களுக்கு வீடுகள் வழங்கிய அந்தத் திட்டம் கலைஞர் கருணாநிதி காலத்தோடு சரியா? கொடை வள்ளல் பாரி என்று சொல்லப்படுகின்ற முதலமைச்சர் காலத்தில் சென்னை நகர மக்களுக்கு வீடு கிடைக்காதா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு இலாகா இருக்கிறது. ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு என்ற பெயரில் உள்ளது. அதை என்னுடைய பொறுப்பில்தான் புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். முன்பு இருந்தவர்கள் செய்ததைப் போல, தவறான வழியில் எதையும் செய்யமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்பரிதி: அவர்களிடம் அந்த இலாகா இருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் ஒரு அறை வைத்துக் கட்டினோம். அவர்கள் நிறைய அறைகள் வைத்துக் கட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியம் என்று ஏற்படுத்தியிருந்தார்கள். அவற்றையெல்லாம் மீண்டும் தொடருவோம் என்பதைப் பற்றி உரையில் காணப்படவில்லை. ரோடு போடுவோம், பள்ளிக்கூடம் கட்டுவோம், சுகாதார வசதி செய்வோம் என்று சொல்லியிருக்கிறதே தவிர, எந்தெந்தக் காரியம் செய்வோம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அரிஜனங்களுக்கு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தி கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை அரிஜனங்களுக்கு கடன் இல்லாமல் மானியமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம். அந்த மானியத்தைத் தொடர்ந்து அளிப்பார்களா என்பதும் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எல்லா இலாகாக்களும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

(பிற்பகல் 6-30)

திரு. இளம்பரிதி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் சொன்னதற்கு நன்றி. அவை தொடரும் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தக் காரியங்களையெல்லாம் செய்தார்கள் என்பதை—குடிசை மாற்று வாரியம்—குடிநீர் வடிகால் வாரியம்—அரிஜன வீட்டு வசதி வாரியம் இதையெல்லாம் இந்த உரையில் காட்டினால் அந்த அரசுக்குப் புகழ் சேர்ந்துவிடுமோ, பெருமை வந்துவிடுமோ என்று அவற்றையெல்லாம் காட்டாமல் மறைத்திருக்கிறார்கள். அவற்றையும் சொல்லியிருக்கலாம். இப்படிப்பட்ட மனப்பான்மை வைத்திருக்கக் கூடாது. முந்தைய அரசு பிந்திய அரசு என்று



இருக்கக் கூடாது. எந்தக் கட்சியாக இருந்தாலும், தலைவராக இருந்தாலும், நல்ல காரியம் நடந்திருக்கிறதா என்று பார்த்து, அதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அவற்றைக் கொண்டு வந்த ஆளைப் பார்த்து காரியத்தை விட்டுவிடக் கூடாது. ஆளும் கட்சிக்காரர்கள் ஒரு பாட்டு போட்டிருக்கிறார்கள். "இதய தெய்வம் நமது அண்ணா தோன்றினார். அவர் கொள்கை வழி நிற்போம்" என்று பாடினார்கள். அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். "மாற்றான் வீட்டு மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று. வாரியங்களைக் கலைஞர் கருணாநிதி கொண்டு வந்தார் என்ற காரணத்திற்காக, அதைக் கூடாது என்று ஒதுக்கிவிடுவது நல்லதல்ல. நாடும் மக்களும் அதனால் பலன் துய்க்கிறார்கள் என்றால், அதை எடுத்து நடத்துவதுதான் ஏற்புடைத்து என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-30)

நான் இன்னும் இரண்டொரு விஷயங்களைச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். "மஸ்டர் ரோல்" வழக்கைப்பற்றி, நம்முடைய பெரியவர் திரு. முத்து அவர்கள் அவருக்கே உரிய பாணியில் அழகாக, தெளிவாக, அவரை எல்லோரும் கூர்ந்து நோக்க வேண்டும் என்பதற்காகப் பலபடப் பேசினார். அப்படிப் பெரிதாக, தெளிவாக அடியேனுக்குப் பேசத் தெரியாது என்றாலும், ஓரளவிற்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த 'மஸ்டர் ரோல்' விவகாரம் முடிந்தால் தான், சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் கொண்டுவருவோம் என்று தெளிவாக ஆளுநர் உரையில் காணப்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த மஸ்டர் ரோல் வழக்கைக் காரணமாகக் காட்டி, பல இலட்சக்கணக்கான மக்கள் வாழும் இந்த சென்னைத் திருநகருக்கு, மாநகராட்சியின் மூலமாக அன்றாடம் நடைபெற்று கூடிய காரியங்களுக்கு, ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தாமல் நடை போடுவது அவ்வளவு உசிதமானதல்ல, உகந்தது அல்ல. உண்மையாக 'மஸ்டர் ரோல்' வழக்கில் அக்கறை இருக்குமானால், எதிர்க் கட்சித் தலைவருடன் பேசிக்கொள்ளலாம். இந்த வழக்கில் யார் யார் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், அவர்களுடைய கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள், வேறு கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள்; சர்வ கட்சி மஸ்டர் ரோல் அது; ஆகவே நாங்கள் தான் செய்துவிட்டோம் என்று எங்கள் தலையில் திணிக்க வீணப் பிரயத்தனம் செய்ய வேண்டாம். ஆகவே எதிர்க் கட்சித் தலைவருடன் பேசி, மஸ்டர் ரோல் வழக்கில் சம்பந்தப்

பட்டவர்கள் இருக்கிறார்களே, இவர்கள் வரவிருக்கிற தேர்தலில் நிற்கக் கூடாது என்று நிபந்தனையை நீங்கள் சொன்னாலும், அல்லது எங்களுக்கு எடுத்துச் சொன்னாலும், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்; அவர்களை நிறுத்தி வைக்க மாட்டோம்; ஆகவே நீங்கள் சீக்கிரமாக சென்னை மாநகராட்சிக்குத் தேர்தலைக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கமிஷனரை வைத்துக்கொண்டு, தனி அதிகாரியை வைத்துக் கொண்டு, வேறு பல எஞ்சினீயர்களை வைத்துக் கொண்டு, இந்தப் பெரிய சென்னை மாநகரின் எல்லா வசதிகளையும் செய்து விட முடியும் என்று நினைப்பது தவறு. இப்போதுகூட இரவில் பல விளக்குகள் எரிவதில்லை. பெண் யார், ஆண் யார் என்று அடையாளம் கண்டுபிடிக்க முடி-யாத வகையில் இருவரையும் பார்த்தால் ஒரே மாதிரியாக இருக்கிற வகையில், பகல் நேரத்திலேயே இந்த நாட்டில் இருக்கிறது. இந்த நிலையில் இரவு நேரத்தில் அவர்கள் வந்துவிடுவார்களானால், யார் ஆண், யார் பெண் என்று தெரியாமல் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு ரசாபாசம் ஏற்படக்கூடிய சூழ்நிலையை அமைச்சர்கள் நீடிக்க விடக் கூடாது.

மேலும் இந்தப் பாதாள சாக்கடையில் வரும் நாற்றம் சகிக்க முடியாமல் இருக்கிறது. ரோடுகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அமைச்சர்கள் பயணம் செய்வதை நான் இன்னும் சரியாகப் பார்க்கவில்லை. எப்படிப்பட்ட கார்களில் போகிறார்கள், எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. எப்படிப்பட்ட வசதியான காராக இருந்தாலும், குண்டுகுழிகளில் போக முடியாது. 120 கவுன்சிலர்கள் செய்ய வேண்டிய காரியங்களை மஸ்டர் ரோலைக் காட்டி அரசு நிறுத்தி வைப்பது சென்னை மக்களுக்குச் செய்யக் கூடிய துரோகம் என்று வெளிப்படையாக நான் அரசைக் குற்றஞ்சாட்டுகிறேன். சென்னை மக்கள் தமிழகத் தலைநகரில் வாழும் மக்களாகும். சென்னை மக்களும், கீழத்தஞ்சை மக்களும் மட்டும், மற்ற மாவட்ட மக்களுக்கு எதிராக என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? வரக்கூடிய ஆட்சி மக்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, மகத்தான ஆட்சியாக இருந்தாலும் சரி, புரட்சிகரமான ஆட்சியாக இருந்தாலும் சரி, இரவானாலும், பகலானாலும் காட்டக்கூடிய கவர்ச்சியானாலும் சரி, அவர்களுக்கு ஒரு நல்ல எதிர்க் கட்சி இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு கலைஞர் கருணாநிதி தலைமையில்





பிரதான எதிர்க் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்திருக்கிறார்கள். இந்த சென்னையில் மொத்தம் பதினான்கு இடங்களில் பதின்மூன்று இடங்களில் தி.மு. கழகம் வெற்றி என்ற பெருமையைத் தேடிக்கொண்டிருக்கிறது. அந்த ஒரு இடமும் கூட ஏதோ திருஷ்டிப்பரிகாரம் போல—இன்னும் சொல்லப் போனால் 1,500 வாக்குகள் வித்தியாசத்தில்—கொஞ்சம் கவனம் செலுத்தாததால் ஏற்பட்ட தவறு என்று கருதுகிறேன். ஆகவே 13 இடங்களை எங்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்ற கோபமும் இவர்களுக்கு நிச்சயம் இருக்காது. என்றாலும் இருக்குமோ என்ற அச்சம் எங்களுக்குக் கூட இல்லை, வெளியே இருக்கிற மக்களுக்கு இருக்கிறது. அதனால் தான் மஸ்டர் ரோலைக் காரணமாகக் காட்டி, மாநகராட்சித் தேர்தலைத் தள்ளிப் போடுவதாக அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். வேண்டுமென்றே சென்னை மக்களைப் பழிவாங்குவதாக அவர்கள் கருதுகிறார்கள். அந்த எண்ணத்திலிருந்து அவர்கள் விடுபட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இதயபூர்வமாக ஏற்படுகின்ற காரணத்தால்தான் நான் இதனை உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாற்றுத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து மிகுந்த அக்கறை கொண்டு ஆராய்ச்சி நடத்தி, பல்வேறு காரணங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த சபைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் பின்னால் போய் என்றைக்கோ நடக்க வேண்டிய இந்த மாநகராட்சித் தேர்தலை அன்றைக்கு இருந்த ஆட்சி ஏன் நடத்தவில்லை என்று சொன்னால், அவர்கள் எந்த பயத்தால் அப்போது தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போட்டு வந்தார்கள் என்ற காரணத்தைச் சொன்னால், இந்த மன்றம் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

திரு. இளம்பரிதி: அந்த அரசாங்கம் செய்ததை வலியுறுத்தி, வலியுறுத்தி அதையே நாமும் செய்வது அழகல்ல. அதைத் தான் இன்றைய மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்போது நடத்தாததை குற்றச்சாட்டாக உறுப்பினர் கருதுகிறார். அன்றைக்கு அவர்கள் நடத்த வேண்டிய பொறுப்பில் இருந்த

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1977 ஜூலை 12

போது ஏன் நடத்தவில்லை என்பதை இந்த மன்றத்திற்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

**திரு. இளம்பரிதி:** ஏன் நடத்தவில்லை என்ற கேள்விக்கு அமைச்சர் நினைக்கும் பதிலை சென்னை மக்கள் அறிந்திருந்தால், நடந்த தேர்தலில் நல்ல தண்டனையை வழங்கியிருப்பார்கள். ஏன் நடத்தவில்லை என்பதை மக்கள் தெரிந்துகொண்ட காரணத்தினால் தான், சென்னையில் 13 இடங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தமிழ் நாட்டில் மொத்தத்திற்கும் தான் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று இந்த நாட்டிற்கு ஒரு ஆட்சி அமைக்கப்பட்டதே தவிர, சென்னை மாநகரத்திற்கு என்று மட்டும் ஒரு ஆட்சி, தமிழகம் பூராவிற்கும் ஒரு ஆட்சி என்று இந்தத் தேர்தல் நடைபெறவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இளம்பரிதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை வளர்த்துக்கொண்டு போகிறார். நான் அவரோடு வாதாட விரும்பவில்லை. ஏனென்றால் எல்லோரும் நமக்கு நெருக்கமானவர்கள், அத்தியந்தமானவர்கள். வாதிட்டால், அது நட்பைக் கெடுத்துவிடும். நல்லவர்களைக் கெட்டவர்களாக ஆக்கக் கூடிய முயற்சிக்கு அமைச்சர் அவர்கள், சக்தி படைத்தவர்கள் ஈடுபடக் கூடாது.

அடுத்து, திரு. மூத்து அவர்கள் அழகாகப் பேசினார்கள். ஊழலைப் பற்றி திரு. கு. மா. பா. அவர்கள் இளம்பிள்ளைகள் இதயத்தில் கூட அது பதிந்துவிடுகிறது என்று சொன்னதை வைத்துக்கொண்டு, ஊழலைப் பற்றி வெகுவாகப் பேசினார்கள். ஊழலுக்கு எந்த இடம், எவ்வளவு இடம் என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தியாவில் நடைபெற்ற ஊழலைப் பற்றிக் கூட "The Gangotri of Corruption " அதாவது கங்கையின் அடிவாரத்திலிருந்து ஊழல் வருகிறதா, ஊழலுக்கு எதுதான் பிறப்பிடம் என்று தெரியாத நிலை இருக்கிறது. நான் கூட ஊழலைப் பற்றிப் பேசக் கூடாது என்று தான் நினைத்தேன். காரணம் எனக்கு ஊழலைப் பற்றித் தெரியாது. * *

இதையெல்லாம் பேசிக் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல.



1977 ஜூலை 12] [திரு. இளம்பரிதி]

**திரு. எஸ். முத்து:** உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அவர் கருத்தைச் சொல்கிற போது, மற்றவர்களைக் குறிப்பிடுகிற போது, நியாயமாகக் குறிப்பிட வேண்டும். ஊழலைப் பற்றி நான் குறிப்பிட்டேன், சொன்னேன்.

*

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அந்தக் குற்றச்சாட்டு சரியானதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இளம்பரிதி:** அவையின் முன்னவர் அவர்கள் கூட என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் அவரை விடச் சிறியவன், அவர் பல பதவிகளை வகித்திருக்கிறார். நான் இப்போது தான் இந்த மேல்சபைப் பதவிக்கே வந்திருக்கிறேன். ஆகவே எங்கே என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. வெளிப்படையாக, பாமரத் தன்மையில் சொன்னேன். வருத்தப்படக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வருத்தப்படக் கூடியதாக இருந்தால், மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். அதை வேண்டுமென்றால், அவைக் குறிப்பிலிருந்தும் எடுத்து விடலாம்.

(பிற்பகல் 6-40)

**திரு. எஸ். முத்து:** * *

**திரு. சி. வி. ராஜகோபால்:** மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று உறுப்பினர் கூறிவிட்டார்.

**மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்):** அவையின் முன்னவர் மன்றத்திற்கு ஒரு 'ரூலிங்' கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் நேரில் குற்றஞ்சாட்டாமல், அனுபவத்தைச் சொல்கிறேன் என்று சொன்ன காரணத்தாலும், அது குற்றமாக இருந்தால் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்ன காரணத்தாலும், சபையின் அவைக் குறிப்பிலிருந்து அந்த ஒரு வார்த்தையை மட்டும் எடுத்துவிட்டு—தொடர்ந்து திரு. இளம்பரிதி அவர்களைப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. இளம்பரிதி: மாற்றுத் தலைவரவர்களே, என்மீது பெருத்த கருணை காட்டிய அவையின் முன்னவர் அவர்களுக்கும், முதுபெரும் பெரியவர் திரு. மூத்து அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு ஏதாவது துன்பம் அல்லது மனச்சங்கடம் ஏற்பட்டிருக்குமானால், அவர்கள் அருள்கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டும். சிறிது நேரத்திற்கு முன்பு அவர்களும் பேசினார்கள். நாங்கள் பொறுத்துக் கொண்டிருந்தோம். பொறுத்துக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். சட்ட மன்றத்திற்கு ஒரு மரபு இருக்கிறது; இங்கே காரசாரமான விவாதத்திற்குப் போகக்கூடாதென்று சொல்கிறார்கள். இந்த அவையில் வயதானவர்கள் இருக்கிறார்கள். கல்வி நிபுணர்கள், தொழில் நிபுணர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். நான் அன்றாடம், 24 மணி நேரமும் அரசியலில் ஈடுபட்டுள்ளவன். என்மாதிரியுள்ளவர்கள் சட்டப் பேரவைக்குத்தான் தகுதியானவர்கள். பெரியவர் திரு. மூத்து அவர்கள் பேசும் போது, நாங்களெல்லாம் பேசாமல் இருந்தோம். கட்சியிலும் அவருக்கு மரியாதையிருக்கிறது. அவர் சொன்னதையெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மையென்று நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

கவர்னர் அவர்கள் உரையிலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்கள் குறித்து எந்தவிதத் திட்டமும் காணோமென்று நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் வார்த்தைகளில் இருக்கிறது. அழுந்திக் கிடக்கிற ஜாதியால் கொடுமைப் படுத்தப்பட்டு பின்தங்கியுள்ள நிலையில் கீழேயுள்ள மக்களுக்கு நாங்கள் நிறையச் செய்வோமென்ற வார்த்தை ஜாலம் இருக்கிறது. இந்த நேரத்திலே ஒரேயொரு விஷயத்தை மட்டும் அரிசன நலத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சமயத்தில் அவர்கள் இருக்கிறார்கள். என் சம்பந்தப்பட்ட விஷயம் இது. நான் நியாயமானவன; எப்போதும் குடிசையில் இருப்பவன். எதற்கும் பயப்படாதவன்; பயப்படக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்தவனல்ல. இது என்னுடைய அவையடக்கம். குடிசையில் இருக்கிறவன் நியாயமான தொழில் செய்ய வேண்டுமென்று விரும்பினேன். அரசியல் என்பது வாழ்க்கையாகாது. அது ஒரு லட்சியமாக இருக்காது. சிலர் இங்கு இருப்பார்கள், அங்கும் இருப்பார்கள், திடீரென்று காணாமலும் போவார்கள். அதைப் பற்றிப் பெரிதாகச் சொன்னால், என்னை நானே ஏமாற்றிக்கொள்





பவனாவேன். நானே தொழில் செய்ய வேண்டுமென்று நினைத்தேன். அரிசனருக்கு வட்டியில்லாத கடன், தொழில் செய்வதற்காக அளிக்கப்பட்டபோது ரூ. 5,000 கடன் கேட்டிருந்தேன். அப்போதைய மாண்புமிகு அமைச்சர், என்னுடைய அன்னையார், திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அந்த நேரத்தில் 5,000 ரூபாய் கிடைக்கக் கூடிய வழியைச் செய்தார்கள். இன்னொரு நண்பரையும் சேர்த்துக்கொண்டு, மவுண்ட்ரோடில் பிரஸ் ஒன்றை வைத்தேன். மேற்கொண்டு, ரூ. 5,000 கடனைக் கேட்டேன். அப்போது அமைச்சராக திரு. ராஜாங்கம் அவர்கள் இருந்தார்கள். 10,000 ரூபாயில் பிரஸ் எப்படி வைக்க முடியுமென்று கேட்டேன். 10,000 ரூபாயில் வைப்பது கஷ்டம்தான்; அதற்கு மேலே கொடுக்க வேண்டுமென்றால், உங்களுக்கு 'வெயிட்' இல்லை; மேலும் லிமிட்டும் அவ்வளவுதான் என்றார்கள். எனவே 5,000 ரூபாய் கிடைக்குமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதற்குள் எங்கள் ஆட்சி கவிழ்ந்துவிட்டது. ஆட்சி கவிழ்வதற்கு முன் ஒரு 'இன்டிமேஷன்' அனுப்பினார்கள். 5,000 ரூபாய் சாங்ஷன் ஆகிவிட்டதென்று தெரிவித்தார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு, 'ரிஜக்டட்' என்று வந்தது. அந்தப் பிரஸ் கடந்த 3½ வருடங்களாக வைத்துக்கொண்டு, ஒருவிதமான லாபமும் இல்லாமல், ரூ. 6,000 மாதக் குடக்கூலியாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். மேல்சபை உறுப்பினர் என்ற பதவியை வைத்துக் கொண்டு, எனக்குப் பின்னால் மூன்று எழுத்தை வைத்துக் கொண்டுள்ள எனக்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உலகம் பூராவும் தெரிந்த பேச்சாளனாகிய எனக்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், அரசாங்கம் என்றால் என்ன, டைரக்டர் அலுவலகம் என்றால் என்ன; கீழே இருக்கும் அதிகாரிகள் யார் என்பதுகூடத் தெரியாத, அறியாத பாமர மக்களின் கதி என்னவாகுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாமர மக்களின் துன்பங்களைப் போக்க முதல்வரவர்கள் நிரந்தரமான ஒரு வழியைச் செய்ய வேண்டும். மக்களை வாழவைக்கக்கூடிய நல்ல திட்டங்களையெல்லாம் நிரந்தரமாகச் செய்தால், அவர்கள் நாணயமாக வாழ ஏதுவாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் நிச்சயமாக ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த கவர்னர் உரையில் திட்டங்கள் எதுவும் தெளிவாகச் சொல்லப்படவில்லை என்பது என் அடிப்படையான வாதமாகும். தெளிவாகத்

திட்டங்களைக் காட்டியிருந்தால், மெத்த நன்றி தெரிவித்திருப்பேன். பட்ஜெட்டில் விரிவாகச் சொல்கிறேன் என்றிருக்கிறார்கள். அந்த பட்ஜெட் விவாதத்தின் போதும் விரிவாகப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதித்ததற்கும், என்னுடைய பேச்சை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சிலருக்குக் கோபமிருந்தாலும், தமாஷாகக் கேட்டதற்கும் மனமாரா நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

***மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கப்பாண்டியன்):*** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(6-45 பிற்பகல்)

உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| 1 ஒத்தி வைப்புத் தீர்மானம்— இளைஞர் அணியிலிருந்து நீக்கப்பட்டவர்களின் போராட்டம் குறித்து .. .. | 69—73 |
| 2 அரசின் தீர்மானம்— முன்னாள் சட்ட மன்ற மேலவைச் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமி அவர்களுடைய பணிக்குப் பாராட்டுரை .. .. | 73—80 |
| 3 ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி | 81-137 |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

## புதன்கிழமை, 1977 ஜூலை 13.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. ஒத்திவைப்புத் தீர்மானம்.

#### இளைஞர் அணியிலிருந்து நீக்கப்பட்டவர்களின் போராட்டம் குறித்து.

* **திரு. எம். சங்கரலிங்கம்** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நமது மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. மக்கள் மத்தியில் அத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது. தமிழ்நாடு மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னணியில், முன்னோடியாக நிற்கும் ஒரு மாநிலம். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்ற நேரத்தில் எப்படி வேலைகளைக் கொடுக்க முடியும் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, ஒரு கால கட்டத்தில், படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு, இளைஞர் அணி என்ற பெயரில், அவர்களுக்குக் குறைந்த அளவில், ரூ. 175 சம்பளம் கொடுத்து அவர்களை வேலையில் சேர்த்துப் பல இலாக்காக்களுக்கு அவர்களைப் பிரித்து ஒதுக்கீடு செய்து அங்கு பணி புரிகின்ற அளவுக்கு வேலைவாய்ப்பு அளித்தது முந்தைய தி.மு.க. அரசு. சுமார் 1,500 பேர்களிலிருந்து 2,000 பேர்கள் வரை இளைஞர்கள், வேலை பெற்றுப் பயனடைந்தார்கள். பெற்றுக்கொண்டிருந்த சம்பளம், வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லாதிருந்தாலுங்கூட, இரண்டு அல்லது நான்கு ஆண்டுகள் கழித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துவிடும் என்ற நிலையிலே அவர்கள் இருந்தார்கள். ஏழை எளிய மக்களுக்காக இதுபோல ஒரு திட்டம் இருந்தது. இதேபோல மத்திய அரசும் ஒரு திட்டம் வகுத்தது. "Half a million jobs" என்ற அந்தத் திட்டத்தின் மூலம் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது. பிறகு நாளாவட்டத்தில் இனிமேல் வருகின்ற வேலைகளிலே அவர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்று இருந்தார்கள். அந்தத் திட்டத்தின்படி நமது மாநிலமும் அந்தப் பெயரில் என்று இல்லாவிட்டாலுங்கூட, இளைஞர் அணி என்ற பெயரில்,

படித்த, தகுந்த அளவு பட்டம் பெற்றிருந்தவர்களை அந்தப் பணிகளிலே ஈடுபடுத்தி, அவர்களும் வேலை பார்த்துவிட்டார்கள். அவர்களைத் திடீரென்று வேலையிலிருந்து இப்போது நீக்கிவிட்டார்கள். அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். 1,500 பேர்களை B.A., B.Sc. வரை படித்த இளைஞர்கள் எல்லோரையும் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு முன்னால் நீக்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத் திரும்ப வேலை கிடைக்கும் என்ற நிலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்னை உட்பட, எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத் தலைநகர்களிலும் போராட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் கலெக்டர் அலுவலகங்களுக்கு முன்பு போராட்டம், உண்ணாவிரதம் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வேலை தர வேண்டும் என்று கோரி அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். மதுரையில் நடந்த போராட்டத்தின்போது, அதில் கலந்துகொண்டவர்களில் ஒருவர் மயக்கம் விழுகிற சூழ்நிலையில், சர்வ கட்சியின் சார்பு ஆதரவாக, மதுரை மூர்த்தி அவர்களும் போய் இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். வேலை வாங்கித் தருகிறோம் என்ற பொறுப்பை ஏற்று, போராட்டத்தை நிறுத்தக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி கலெக்டர் அலுவலகத்திற்கு முன்பும் அந்தப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. 6 ஆம் தேதியன்று கலெக்டர் உட்பட உள்ளே போக அனுமதிக்காமல் மறியல் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் ஆறு அல்லது ஏழு பேர்களாக தினம் மறியல் நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் ஆறு அல்லது ஏழு பேர்களாக மறியல் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி அங்கு தொடர்ந்து போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும் தொடர்ந்து போராட்டம் நடத்தி பட்டதாரி இளைஞர்கள் திட்டம் வகுத்திருப்பதாலும், இது மாநிலம் தழுவிய பிரச்சினையாக அமைந்துவிடும் ஆதலால், இந்தச் சபையினுடைய மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதித்தால், இதன் முடிவு என்ன என்பதைப் பற்றியும், எல்லா உறுப்பினர்களின் கருத்துக்களையும் அறிந்துகொள்ளும் வகையில் இருக்கும். ஆகவே இந்தச் சபையினுடைய மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேசவேண்டும் என்று நான் கொடுத்திருக்கும் தீர்மானத்தை முன்மொழிய இசைவு கோருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரி இளைஞர்களைக் கிராம நல முன்னேற்றத்திற்காகவும், முதியோர் கல்வி பெறவும், அறியாமையை ஒழிக்கின்ற பொறுப்பிலே அவர்களைப் பயன்படுத்தி, கிராமங்கள் இந்தியாவின் ஜீவ பூமியாக இருக்க



வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்த இளைஞர் அணித் திட்டம் உருவாக்கப்பட்டது என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த அடிப்படையில் 1971-72 ஆம் ஆண்டில், 2,000 பட்டதாரி இளைஞர்களையும், 1972-73 ஆம் ஆண்டில் 1,200 பட்டதாரி இளைஞர்களையும், 1973-74 ஆம் ஆண்டில் 1,800 பட்டதாரி இளைஞர்களையும், 1974-75 ஆம் ஆண்டில் 650 பட்டதாரி இளைஞர்களையும், ஆக மொத்தம் 6,050 பேர்களை இந்தத் திட்டத்தின் கீழ் அன்றைய அரசு பணியில் அமர்த்தியுள்ளது. அவர்கள் கிராமங்களிலே சென்று அறியாமைக்கு எதிராக, அங்கே நிலவி வருகின்ற கட்டுப்பாடு அற்ற போக்குக்கு எதிராக, அங்கேயுள்ள மக்களுக்கு கல்வி அறிவு புகட்டவும், சுகாதாரத்தை எப்படிப் பேணுவது என்பதைப் போதிக்கவும் பணிக்கப்பட்டு அமர்த்தப்பட்டனர். அது ஒரு பயிற்சி முகாமாகத்தான் நடைபெற்றதே தவிர, அங்கே செல்கின்ற அனைவருக்கும் நிரந்தரமான வேலை வாய்ப்பு உண்டு என்ற உத்தரவாதத்தில்--பாதுகாப்பில் அனுப்பப்படவில்லை. அன்றைய அரசுத் தரப்பிலிருந்து சொல்லியதையெல்லாம் "It was created on loud thinking" என்ற அளவில் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ வேலை இல்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு அதிலே பயிற்சி கொடுத்து அதைத் தகுதியாக வைத்துக்கொண்டால், அரசு நிறுவனங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ அவர்கள் வேலைக்குச் செல்லும்போது—பேட்டிக்குச் செல்லும்போது, இதையெல்லாம் மனதில் அவர்கள் கொண்டு முன்னுரிமையும், நிரந்தரமும் ஆக்குவார்கள் என்ற அடிப்படையில்தான் அந்தப் பயிற்சி முகாம் இயங்கி வந்தது. இது நிரந்தரமான நிறுவனம் என்றோ, அதில் உள்ளவர்கள் நிரந்தரமானவர்கள் என்றோ எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவாதம் அன்றைய அரசால் கொடுக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். பூர்வாங்க விசாரணைகூட நடத்தினார்கள். இவர்கள் எந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டார்களோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டதா இல்லையா என்று கூட அந்தக் குழு ஆராய்ச்சி செய்து ஒரு அறிக்கையைக் கொடுத்தது. அதைப்பற்றிப் பார்த்தபோதுகூட, அந்த நோக்கம் முழுமையாக நடைபெறவில்லை என்றுதான் தெரிகிறது. அடிப்படையிலேயே 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு யாரையும் புதிதாகச் சேர்க்கக் கூடாது என்ற கொள்கை உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு, 1—4—1976 லிருந்து இன்று வரை இந்தத் திட்டம் கைவிடப்பட்டதால், 1,300 பேர்கள் இந்தத் திட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னர் 3,900 பேர்கள் அவர்களாகவே அல்லது வேறு நிறுவனங்களிலே வேலை கிடைத்ததால், அவர்கள் விலகிச் சென்றுவிட்டார்கள். ஒழுங்கு நடவடிக்கை காரணமாக 540 பேர்கள் வேலை இழந்து விட்டார்கள். இதைப் பார்க்கும்போது, முந்திய அரசு இவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. படித்தவர்கள் வேலையில்லாமல் வெளியே இருக்கிறார்கள். சமுதாய சேவைகள் செய்ய

வேண்டும். அதற்கு அரசு ஒரு தொகையை ஒதுக்கி, ஏதாவது செய்ய வேண்டும் என்ற அளவிலேதான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. பயிற்சி பெற்ற அத்தனை பேருக்கும் இத்தனை ஆண்டு இருந்தால் உறுதியாக வேலை கிடைக்கும் என்று அன்றைய அரசு ஒரு உத்தரவாதமும் அளிக்கவில்லை. இந்தத் திட்டம் இன்றும் சரிவர இயங்கவில்லை என்ற காரணத்தால் ஏற்கனவே கைவிடப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சத்திற்கும் மேலாகச் செலவாகி வந்திருக்கிறது. இரண்டாவதாக, பட்டதாரிகளுக்கு நிரந்தரமான வேலை கிடைக்கும் என்பதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது அல்ல. இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தொடங்கப்பட்டது. வேலைக்கு உத்தரவாதம் எப்போதும் கொடுக்கப்படவில்லை. இருப்பினும் அரசு, சர்வீஸ் கமிஷனுக்கு இவர்கள் வேலைக்கு விண்ணப்பிக்கின்றபோது, அதன் வரம்புக்கு அப்பாற்பட்ட பணிகளிலும் நிரந்தரம் இல்லாது போனாலும், இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்கு, தற்காலிக வேலை தந்திருக்கிறது. சர்வீஸ் கமிஷன் தேர்விலே தேர்வு பெறாமல் உள்ள எல்லா வேலையற்றவர்களுக்கும் வேலை கொடுப்பது என்பது இயலாது. நிபந்தனையின்றி சர்வீஸ் கமிஷன் பிரத்தியேகத் தேர்வில் கலந்து கொள்ள விரைவில் வாய்ப்பு அளிக்கும் என்று கூட ஓரளவுக்கு இந்த அரசு ஏற்று இருக்கிறது. இன்னும்கூட நான்கு, ஐந்து ஆண்டுகள் இங்கு பணியாற்றினால் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வேலை தேடிக்கொள்ளாமல் இருந்தவர்களுக்காக, சர்வீஸ் கமிஷனிலே வயது அதிகமாகிவிட்டது என்ற காரணத்தை வைத்து வேலை கிடைக்காத நிலையில் இருக்கின்றவர்களுக்காக வயது வரம்பை உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. அவர்கள் நான்கு ஆண்டுகள் பணியாற்றியிருந்தால், அவர்களுக்கு வயது வரம்பு நான்கு ஆண்டுகள் உயர்த்தப்படும். அவர்களாகவே சென்றுவிட்டவர்கள்பற்றிப் பிரச்சினை இல்லை. எஞ்சி இருப்பவர்கள் பணியை இந்த அரசு எந்த வகையிலாவது பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றுதான் அரசு இந்த முடிவுக்கு வந்தது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, நாடு தழுவிய போராட்டமாக உருவாகவில்லை. இங்கே சென்னையைப் பார்த்தால் கூட அப்படித் தெரியவில்லை. இதுமாதிரியான விஷயங்களில் மென்மையான முறையில், நல்ல அணுகு முறையில் அணுகி முடிவு செய்துகொள்ள வேண்டும். இந்த அரசு முழுக்க முழுக்க ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறது. தர்ணு, போராட்டம் என்ற முறையில் நடத்தினால், இந்த அரசு அதையெல்லாம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. மத்திய அரசுகூட ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறது. அவர்கள் கூட இந்தப் போராட்ட முறையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றே நம்புகிறேன். இதில் அரசு நல்ல வகையில் திட்டமிட்டிருப்பதால், இந்த அவையில் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி



வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(பிற்பகல் 4-10)

## 2. அரசின் தீர்மானம்.

### முன்னாள் சட்ட மன்ற மேலவைச் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமி அவர்களுடைய பணிக்குப் பாராட்டுரை.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் செயலாளராக 1964 முதல் 1976 ஆம் ஆண்டு வரை சிறப்புறப் பணியாற்றியபின் திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் சட்ட மன்றப் பேரவைக்குச் செயலாளராய் பொறுப்பேற்றுள்ளார்கள். சட்ட மன்ற மரபுகளையும் வழிமுறைகளையும் இவ்வவைக்கும், அதன் உறுப்பினர்களுக்கும் எடுத்துக்காட்டி, அவர் மிகச் சிறப்போடு பணி புரிந்தமைக்கு மேலவை தனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிப்பதோடு, அவர் ஏற்றுள்ள புதுப் பணியிலும் வெற்றி பெற இவ்வவையின் வாழ்த்துக்களையும் தெரிவிக்குமாறு மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது"

என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மேலவையின் முன்னாள் செயலாளராகப் பணியாற்றியவரும், இன்றைக்குப் பேரவையில் செயலாளராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறவருமான திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் பற்றி நான் கேள்விப்பட்ட நிலையில்தான் பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன். இந்த மேலவைக்கும் சட்ட மன்றப் பேரவைக்கும் நான் புதியவன் என்ற முறையில் எனது கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சட்ட மன்றச் செயலாளர் என்று சொல்கிறபொழுது, நான் ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் இதைப் போன்ற ஒரு பணியில் இருந்தவன். மாநகராட்சிக் கவுன்சில் செகரட்டரியாகப் பணியாற்றி வந்தவன். அந்த வகையில் நாங்கள் இருவரும் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. திரு. அழகர்சாமி அவர்கள் மதுரை மாவட்டத்தில் பிறந்தவர் என்று கேள்விப்படுகிறபோது அந்த மகிழ்ச்சி இரட்டிப்பாகிவிட்டது. அவர்களுடைய பணி சிறப்பாக, பாராட்டத் தக்கதாக இங்கே இருந்திருக்குமென்பதை அவருடைய இன்றைய சுறுசுறுப்பை அந்த அவையிலே பார்க்கும்போது எனக்குத் தெரிந்து

கொள்ள முடிகிறது. அந்த வகையில்தான் இங்கேயும் சிறப்பாகப் பணி யாற்றியிருப்பார்கள் என்று நமக்குத் தெரிகிறது. குறிப்பாக இதுபோன்ற பொறுப்பில் உள்ளவர்கள் யாருமே நிச்சயமாக சுறுசுறுப்பாகவும் நடுநிலைமை தவறாத நிலையிலும்தான் பணியாற்ற வேண்டியிருக்கும் என்பதை என்னுடைய அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். அவரும் நிச்சயமாக அதே முறையில் பணியாற்றி எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவருடைய பணி மேலும் சிறக்கவும், அவர்கள் புகழ் மேலும் மேலும் வளரவும், இன்னும் பல்லாண்டு பணியாற்றி மேலும் பல சிறப்புகளைப் பெறவும், என் வாழ்த்துக்களையும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அரசின் வாழ்த்துக்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில் அவர்களுடைய வாழ்த்துக்களையும் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சபையின் செயலராகப் பணியாற்றிய திரு. அழகர்சாமி அவர்கள் 1964 முதல் தொடர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். நானும் இந்த அவையிலே 1964-ல் வந்து உறுப்பினராகச் சேர்ந்துகொண்டவன். அன்றை யிலிருந்து நானும் இன்று வரையில் தொடர்ந்து இருக்கிறேன். சட்ட மன்றப் பேரவையாயினும், மேலவையாயினும் அதனுடைய செயலாளராகப் பணி யாற்றுவது என்பது, நமது ஜனநாயக சட்ட மன்ற இயல் துறையில், ஒரு முக்கியமான பொறுப்பாகும். அண்மையிலே சட்ட மன்றச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு. ஆர். வி. கிருஷ்ணய்யரைப் பாராட்டுகிற நிகழ்ச்சியில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் பேசியதைச் செய்தித்தாளில் படித்தேன். அதில் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நீதிபதியினுடைய தன்மையை ஒத்த நடுநிலைமையும், சான்றாண்மையும், சமன் செய்து சீர்தூக்குகிற கோல் போல் ஒரு பக்கம் சாயாமையும் அந்தப் பொறுப்புக்கு மிக இன்றியமையாதது என்ப தாக அந்த சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அதிலேயே மேலும் அவர் சொல்லும் போது, அவர்கள் நிரம்பப் புலமை பெற்று சட்ட இயல் துறையில் புலமை பெற்று, மே பார்லிமெண்டரி பிராக்டிஸ் போன்ற பல நூல்களில் ஆழ்ந்த அனுபவம் பெற்று, அவையெல்லாம் இயல்பாக தமக்குத் தெரிந்திருக்கிற அறிவின் முதிர்ச்சியால் சட்ட மன்றத் தலைவர்களுடைய காதருகே அவர்தன் எழுப்புகிற சிறு ஒலிகள் அந்தப் பேரவையில் எழுகின்ற சிக்கல்களையும் நிலவும் அனலையும் அமைதிப்படுத்தி தென்றல் வீசுமளவுக்குத் தீர்த்துவிடுகிற ஆற்றல் பெற்றவை என்றார்கள். அத்தகைய ஆற்றல் அவரிடம் இருந்தது என்று திரு.



வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் குறிப்பிட்டிருந்ததை செய்தித்தாளில் பார்த்தேன். அதேபோன்ற திறமை இவர்களுக்கு இருப்பதால்தான் இவரை அங்கு தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அது இந்த அவையிலே புலப்படுவதற்கு அதிக வாய்ப்பில்லை. ஏனென்றால் இந்த அவை அவ்வளவு சிக்கல்களை உருவாக்குகிற அவையில்லை. சீரிய முறையில் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, அமைதியாக இருந்து, ஆராய்கிற ரிசர்ச் செண்டர் மாதிரி உள்ளது. பல கருத்துக்களை இங்கு ஆராய்ந்து தெளிவுபடுத்துகிற இந்த அவையில் தொடர்ந்து பணியாற்றி இதில் பெற்ற திறமையையும், புலமையையும், அனுபவத்தையும் அங்கே வழங்க இருக்கிறார்கள். அந்த சபையின் சிறப்பான நடவடிக்கைகளுக்கு அவருடைய அனுபவமும், மேற்கூறிய சான்றாண்மையும், நடுநிலை பிறழாத நல்ல தன்மையும், பாராளுமன்றச் செயலாளருக்கு வேண்டிய அவ்வளவு நல்ல பண்புகளும் அவரிடம் இருந்து வருமென்று நம்புகிறேன்.

சட்ட மன்றத் தொடர் கூட்டத்திற்கு இங்கு வந்தபொழுது, ஒரு நாள் அவர்களைப் பார்க்கப் பேரவைக்குச் சென்றிருந்தேன். அவர்கள் அங்கு இல்லை. அவருடைய அறையில் நுழைந்து பார்த்துவிட்டு வந்தேன். அதற்கு முன்பு அங்கு சென்றிருக்கிறேன். அறிஞர் அண்ணாவின் படம் அவர்களுக்கு முன்னே இருந்து வழிகாட்டிக்கொண்டிருக்கும். ஜனநாயக முறையிலே இந்தியத் துணைக் கண்டத்திலேயே பொறுமையோடு ஜனநாயகத்தைப் பேணி, மாற்றாருக்கும் மதிப்புக் கொடுத்து நடத்திய பெருமை அண்ணா அவர்களுக்கு உண்டு. ஜனநாயக மரபுக்கு அவரை ஒரு வழிகாட்டி என்றே சொல்லலாம். அவருடைய படம் அங்கிருந்து அந்த உணர்வை ஊட்டிக்கொண்டிருந்தது. இப்போது அந்தப் படத்தைக் காணவில்லை. அது எங்கே போனது என்று தெரியவில்லை. வருமென்று நம்புகிறேன். அதைக் கண்டு வரவழைத்து அங்கே மாட்டிக்கொண்டால், அந்த நடுநிலைமையும் சான்றாண்மையும் பெற்று அந்த உணர்வோடு அங்கே நல்ல முறையில் தொடர்ந்து பணியாற்ற, தொண்டு புரிய பயனுடையதாக இருக்குமென்று நம்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் அவர் களுக்குத் தெரிவித்துக் கொண்டு அவர் இந்த சபை மூலம் பெற்ற அனுபவம் அவர் ஏற்றிருக்கிற பொறுப்புக்கும் ஜனநாயக மரபுக்கும் ஏற்புடையதாக இருக்குமென்று கூறி வாழ்த்துகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஒட்டி நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1968-வது ஆண்டில் மேலவை உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜூன் மாதத்தில் பதவிப் பிரமாணம் செய்வதற்கு, இங்கு வந்தபொழுது, அப்போது சுதந்திராக் கட்சித் தலைவராக இருந்த திரு. சா. கணேசன் அவர்கள் இங்கே இருந்தார்கள். அவர்கள் அந்தப் பிரமாணம் முடிந்த பிறகு, என்னை உடனடியாக திரு. அழகர்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1977 ஜூலை 13

சாமி அவர்களுடைய அறைக்கு அழைத்துச் சென்று, அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போதே, "இவர் புதிதாக சட்ட மன்றத்திற்கு வந்தவர். அதுவும் இதற்கு முன்னால் அவர் இருந்த இடம் திரு. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் சிறப்பாகப் பணி புரிந்த இடம். ஆகையால் அவர்கள் அடிக்கடி உங்களை வந்து பார்ப்பார்கள். அவருக்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 4-20)

அதற்குப் பிறகு நான் பலமுறை பல பிரச்சினைகளைப் பற்றிய சந்தேகங்களை, விதிமுறை பற்றிய சந்தேகங்கள் வரும்போது, எப்போதும் நான் பார்ப்பது திரு. அழகர்சாமி அவர்களைத்தான். அவருடைய அபிப்பிராயங்களுக்கு எப்போதும் மதிப்புக் கொடுத்து, அவரிடம் சிறப்பான அபிப்பிராயங்களைப் பெறுவது என் வழக்கம். நான் மட்டுமல்ல, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களும் அவரிடம் மிகச் சுலபமாக அணுகக் கூடிய ஒரு வாய்ப்பு அவருக்கும் இருந்தது, அவர்களுக்கும் இருந்தது. சட்டமன்ற மேலவைச் செயலாளர், பேரவைச் செயலாளர் என்று சொன்னால், பொதுவாக புதிதாக வரக்கூடிய உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் அவர் ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்ற கருத்து உண்டு. சில சந்தர்ப்பங்களில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, எல்லாக் கட்சிகளுக்கும் சேர்த்து, ஆராய்ந்து ஒரு நடுநிலையான கருத்தினைச் சொல்கிறபோது, ஆட்சியில் இருக்கிற கட்சிக்காரர்களுக்கு ஆலோசனை அதிகமாகச் சொல்கிறார்கள் என்ற அபிப்பிராயம் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு வருவதுண்டு. அப்போதும் இப்படிப் பேசப்பட்டது உண்டு. ஆனால் திரு. அழகர்சாமி அவர்களைப் பொறுத்த வரை, அந்த உறுப்பினர் ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும், எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தாலும்—எந்த உறுப்பினர் அவரை அணுகி ஆலோசனை வேண்டுமென்று சொன்னாலும், எது நியாயமான ஆலோசனை என்பதை அவர் எப்போதும் நல்கிவந்தார் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். புதிதாக வந்திருக்கக் கூடிய உறுப்பினர்கள் யாரா வது சிறப்பாகச் சட்ட மன்றத் துறையில் பணி புரிய வேண்டுமென்று சொன்னால், செயலாளரிடம் கருத்துக்களைச் சொல்லி, அவருடைய ஆலோசனைகளைக் கேட்கும் வாய்ப்பு பெற்றால், நல்ல முறையில் செயல்பட முடியும்.

மேலவையைப் பொறுத்தவரை, திரு. அழகர்சாமி அவர்கள் கடந்த பல ஆண்டுகளில் பல முக்கியமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். மேலவையின் விதிமுறைகள் பல ஆண்டுகளுக்கு முன்னால், 1951 என்று நினைக்கிறேன்; அப்போது தான் அந்த விதிமுறைகள் திருத்தி அமைக்கப்பட்டதாக இருந்தன. அதிலே ஒருசில குறைபாடுகளைக் கண்டபோது, அப்போதிருந்த கல்வி அமைச்சர் திரு. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடன் நானும் நண்பர்களும்



1977 ஜூலை 13] [திரு. ஜி. சுவாமிநாதன்]

பேசி அந்த விதிமுறைகளை மாற்ற வேண்டுமென்று சொன்னபோது, அதற்காக ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு கிட்டத்தட்ட ஓராண்டு காலம் அந்த விதிமுறைகளைப் பற்றி ஆராய்ந்து அதிலே மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களும் உறுப்பினராக இருந்து, நல்ல கருத்துக்களின் அடிப்படையில் அந்த விதிமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டன. அப்போதிருந்த விதி முறைகள் எல்லாம் ஆங்கிலத்தில் இருந்ததால், மதிப்பிற்குரிய திரு. ராம கிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னதைப் போல, பல பிரச்சினைகளை உறுப் பினர்கள் எழுப்ப முடியாத அளவிற்கு நிலைமை இருந்தது. உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்றால், விதி ஆங்கிலத்தில் இருக்குமே, தெரியாமல் என்ன செய்வது என்ற நிலைமை இருந்ததை மாற்றி, தமிழிலும் அந்த விதி முறைகள் மொழிபெயர்க்கப்பட மிக முக்கியமான காரணமாக இருந்தவர் திரு. அழகர்சாமி அவர்களாகும்.

முக்கியமாக எனக்கு ஆச்சரியமாகத் தோன்றியது ஒன்று. பொதுவாக அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதினால், அந்தக் கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் வராது. அது அரசாங்கத்தின் முக்கியமான இலக்கணம். சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் போடுகின்ற கடிதத்திற்குக் கூட பதில் வருவதில்லை. வந்தாலும், ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு பதில் போடுவது என்பது தான் அரசாங்கத்தில் முறை. தற்போதுகூட அரசாங்கத்தின் எந்தத் துறைக்குக் கடிதம் எழுதினாலும் கூட, அந்தக் கடிதம் கிடைத்தது என்று பதில் வருவதற்குக் கூட மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் ஆகின்றன. சில துறை களைப் பொறுத்தவரை, பதில் கூட எழுத மாட்டேன் என்கிறார்கள். பாராளு மன்றத்தை எடுத்துக்கொண்டால், அங்கே இருக்கிற உறுப்பினர்கள் துறை களுக்கு கடிதம் எழுதினால், பதினைந்து நாட்களுக்குள் அதற்கு பதில் அனுப்ப வேண்டும் என்ற நிலைமை அங்கே நிலவி வருகிறது. இங்கேயிருக்கும் அமைச்சர்களுக்குக் கூடத் தெரிவித்துக்கொள்கிறேன். சொல்லக் கூடிய காரியங்கள் சில சமயங்களில் நிறைவேற்றப்பட முடியாதவையாக இருக்கக் கூடும். அதையாவது எழுதி, பதினைந்து நாட்களுக்குள் அனுப்பினால், எங்க ளிடம் யாராவது ஒரு காரியம் சொல்லும்போது, இப்படிப் பதில் கடிதம் வந்திருக்கிறது என்று சொல்ல முடியும். ஆனால் சட்ட மன்ற மேலவையைப் பொறுத்த வரையில், எந்தக் கடிதம் நாங்கள் எழுதினாலும், உடனுக்குடன் அடுத்த நாளே கவனிக்கப்பட்டு, இரண்டு நாட்களுக்குள் திரு. அழகர்சாமி அவர்கள் இருக்கக்கூடிய நேரத்தில் எங்கள் கடிதங்களுக்கு பதில் வந்துகொண் டிருந்தது. அதேமுறை தற்போதும் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்த வரையில், மிகச் சிறந்த நிர்வாகியாக அவர்கள் இருந்து வந்தார்கள். மிகச் சிறந்த பெரியவர்கள் எல்லாம் இந்த மேலவையிலே உறுப்பினர்களாக

இருந்திருக்கிறார்கள். நான் வந்தபோது டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். அதற்கு முன்னால் டாக்டர் ராஜமன்னார் இருந்தார் என்று சொல்கிறார்கள். திரு. சத்தியமூர்த்தி அவர்கள் இந்த அவையில் ஒரு உறுப்பினராகவும், அதுபோலவே டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் உறுப்பினராகவும் இருந்ததாகச் சொல்கிறார்கள். இந்த அவை பாரம்பரியம் மிக்க ஒரு அவையாக இருந்து வருகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ராஜாஜி அவர்கள் இந்த அவையிலே இருந்திருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 1952 இல் ராஜாஜி அவர்கள் இருக்கிறபோது, நம்முடைய துணைத் தலைவர் அவர்களும் அவரோடு சேர்ந்து இந்த அவையிலே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பேசிய பேச்சுக்களை எப்போது பேசினார்கள், என்ன பேசினார்கள், என்று அறியக் கூடிய அளவிற்கு ஒரு "இண்டக்ஸ்" தயாரித்திருக்கிறார்கள். பேச்சுக்களை எடுத்துப் பார்ப்பதற்கு வழியில்லாமல் இருந்த நிலைமை மாறி, திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே இருக்கிறபோதுதான், யார் பேசினாலும், என்ன பேசினார்கள், எப்போது பேசினார்கள் என்ற விவரங்கள் நமக்குத் தேவையானால், அந்த விவரங்கள் அனைத்தையும் விரைவில் எடுத்துப் பார்க்கத் தக்கவகையில் ஒரு "இண்டக்ஸ்" தயாரித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட அந்தப் புத்தகங்கள் ஏழு 'வால்யூம்' என்கிற வகையில் போடப்பட்டிருக்கின்றன. இது திரு. அழகர்சாமி அவர்கள் செய்த ஒரு நல்ல காரியம் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று, இந்த சட்ட மன்ற மேலவையில் நான் உறுப்பினராக வந்த போது, ஏதோ ஒரு போராட்டம் நடந்துகொண்டிருந்தது. உறுப்பினர் என்ற முறையில் அவைக்கு வருவதற்காக, சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து கிளம்பி என்னுடைய காரில் வந்து கொண்டிருந்தபோது, "அந்த வழியாக நீங்கள் வரக் கூடாது" என்று மறித்தார்கள். பிறகு நான் வேறு வழியாகப் போக அனுமதித்தார்கள். நான் திரு. அழகர்சாமி அவர்களிடம் வந்து, மாலை நான்கு மணிக்கு அவைக்கு வரும்போது, 3½ மணியளவில் இப்படித் தடுத்து நிறுத்துகிறார்களே, அதற்காக உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்று அவர்களிடம் தெரிவித்தேன். அதே நிலை தான் இப்போதும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. சட்ட மன்றத்தின் ஒரு மைல் சுற்றளவிற்கு 50 பேர் சேர்ந்து வரக்கூடிய அளவில் போராட்டம் நடத்தினால், உள்ளே நுழைய அனுமதிக்க மாட்டார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பிரச்சினைபற்றிச் சொன்னபோது, அவர் பதில் சொன்னார். திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இங்கேயிருக்கும் சமயம் திரு. கே. வி. ராமசாமி என்ற காங்கிரஸ் உறுப்பினர் இருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற



போது, அந்த உறுப்பினரும், அவர்கூட நாற்பது நபர்களும் இந்த சட்ட மன்றத்திற்குள்ளாக வர முயற்சித்த சமயத்தில், வரக் கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டார்கள். நிறுத்தியவுடன் இங்கே உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து, "உறுப்பினர் வருவதை எப்படித் தடுக்க முடியும்?" என்று கேட்ட போது அதற்குத் தீர்வு காண முடியாமல் சிக்கல் ஏற்பட்டபோது, அப்போது "Parliamentary Affairs" என்ற "லண்டனில் இருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்து, பாராளுமன்ற மண்டபத்திற்கு ஒரு மைல் சுற்றளவிற்குள் இதுபோன்ற வகையில் 40 பேர்கள் வருவதாக இருந்தால், அந்த உறுப்பினர் தவிர பாக்கி பேரை தடை செய்யக்கூடிய அளவிற்கு ஒரு விதி போடலாம் என்ற கருத்தை டாக்டர் ஏ. எல். முதலியார் கமிட்டியைப் போட்டு, அதற்கான விளக்கங்களை எல்லாம் தந்து, நான்தான் எழுதி வைத்திருக்கிறேன், ஆகவே நீங்கள் உரிமைப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம்" என்று சொன்னார்கள். எந்த அரசாங்கம் இருந்தாலும், ரொம்ப நல்ல முறையில் இது இயங்குகிறது. அண்மையில் வங்காளத்தில் இருக்கிற சட்ட சபையில் திரு. அஜாய் முகர்ஜி இருந்தபோது, பெரும் போராட்டம் நடத்தி, அமைச்சர் பெருமக்களைப் பிடித்துத் தள்ளியதோடு, சட்ட மன்ற உறுப்பினர்களையும் 'கேரோ' செய்து, நான்கு மணி நேரம் வெளியே வர முடியாத அளவிற்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்படி சில மாநிலங்களில் நிலைமைகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்பொழுது இப்படி ஒரு விதி கொண்டுவருகிற அளவிற்கு ஒரு நிலைமையை உற்பத்தி செய்தவர் திரு. அழகர்சாமி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையின் செயலாளர் என்ற முறையில் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் கூட திரு. அழகர்சாமி சிறந்த முறையில் சேவை செய்கிறார் என்பதற்கு உதாரணம், கம்பன் கழகத்தின் செயலாளராக இருந்து மிகச் சிறந்த முறையில் 'பைபிள்' போன்ற அளவில், அழகான முறையில் இராமாயணத்தைப் புத்தகமாகக் கொண்டுவர சிறந்த பணிகளை எல்லாம் செய்தது. அவர்கள் மிக்க ஆற்றல் உள்ளவர்; அனைவரிடமும் தன்மையான முறையில் பழகக் கூடியவர். அணுகிக் கேட்பவர்களுக்கெல்லாம் நல்ல ஆலோசனைகளை, கட்சிப் பாகுபாடில்லாமல் வழங்கக் கூடியவர். அவர் இங்கிருந்து சென்றது, மேலவையைப் பொறுத்தவரை நம்முடைய துர்ப்பாக்கியம், பேரவையைப் பொறுத்தவரை அதற்கு அந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது. அவருடைய சேவையை அங்கேயுள்ள நண்பர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், பயன்படுத்திக்கொள்வார்கள் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் மதுரையில் 1926 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் நாள் பிறந்தார். 1949 ஆம் ஆண்டிலிருந்து சென்னை உயர்நீதி மன்றத்தின் அசல் மேல் முறையீடு குறித்த

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1977 ஜூலை 13

(பிற்பகல் 4-30)

சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினராக இருந்தார். 1955 ஆம் ஆண்டில் சட்ட மன்றத் துறைப் பணியில் சேர்ந்தார். 1964 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை தமிழ் நாடு சட்டமன்ற மேலவைச் செயலாளராகவும், பின்னர் 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவைச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். இவர் அகில இந்தியாவிலுள்ள சட்ட மன்றத் துறைச் செயலாளர்களிலேயே பணி மூப்புடையவராவார். இவர் காமன்வெல்த் பார்லிமெண்ட் அவை எழுத்தர் குழுவின் உறுப்பினராவார். காமன்வெல்த் பார்லிமெண்ட் சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளைக்குச் செயலாளருமாவார். மேலும் கம்பன் இலக்கியக் கழகத்தின் செயலாளருமாவார்.

எதிர்க் கட்சித் தலைவரவர்களும், காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியது போன்று, நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே இருக்கிறபோது, கிட்டத்தட்ட 4½ ஆண்டுக் காலம் அவருடைய உழைப்பை, மற்ற சேவைகளை என்னால் உடன் இருந்து பார்க்க முடிந்தது. இந்த அவை நடக்கும்போதெல்லாம், ஒரு வினாடிகூட இப்படி அப்படி கவனத்தைச் செலுத்தாமல், அக்கறையோடு இருப்பார்கள். இந்த அவை எப்போதுமே நல்ல முறையில் நடைபெறும் அவை. மற்றவர்களுக்கு இந்த அவை அதிக வேலை தருவதில்லை. அப்படிப்பட்ட மரபை இந்த அவை பெற்றிருந்தாலும், அவர் எந்த நேரத்தில் எது நிகழுமோ என்று மிக எச்சரிக்கையாக அவையை நடத்தக்கூடியவர். அவரோடு இந்த மன்றத்திற்கு வெளியேயும், அவர் ஏற்றுள்ள இலக்கியப் பணியிலே நான் தொடர்புடையவன். அதன் காரணமாக அவர் அடிக்கடி என்னிடம் வந்து ஆலோசனைகள் கேட்பார். அவர் வீட்டு மொழி தெலுங்காக இருந்தும்கூட வேறு யாரையும்விட, தமிழிலே குறைவற்ற நிலையைப் பெற்றுள்ளார். வீட்டு மொழியை வேற்றுமொழியாக உடையவர்களுக்கு, தமிழ் ஆட்சி மொழியாகிவிட்டால், என்ன ஆகுமோ என்ற ஐயப்பாடெல்லாம் இன்னும் பிரச்சினையாக இருக்கிறது. நண்பர் திரு. அழகர்சாமி போன்றவர்கள் இருந்திருந்தால், நாட்டுமொழி எதுவோ அதையே, வீட்டு மொழி வேறுபட்டவர்கள்கூட, எடுத்து நிறம்படச் செயலாற்ற முடியும் என்பதை அவர் மேலவையிலுடைய சட்டத் திருத்தத்தின்போதெல்லாம் பாடுபட்டதைக் கொண்டு அறிந்தேன். ஆதலால் அவருக்குப் பாராட்டு வழங்குவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு இந்த அவை கொடுக்கிற பாராட்டிலே நானும் கலந்து கொள்கிறேன்.

இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகக் கருதுகிறேன்.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. எஸ். எஸ். ராம்சாமி படையாச்சி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சில வார்த்தைகளைச் சொல்ல முற்படுகிறேன். 17 மாத குடியரசுத் தலைவரின் ஆட்சி முடிந்து, இந்த மாநிலத்தில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை அமைந்திருக்கிறது. அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு நிர்வாகம் நடத்திக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக திரு. எம். ஜி. ஆர். அவர்கள் முதல்வராக உள்ள இந்த மந்திரி சபையில் உள்ள நான்கு அமைச்சர்கள் எம்.எல்.சி. ஆகப் போகிறார்களென்று நான் நினைக்கிறேன். அதனை, இந்த அவைக்கு, எங்களுக்கு அளித்த பெரிய மரியாதையென்று நான் ஏற்றுக்கொண்டு, முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு உகந்தாற்போல், கவர்னர் அவர்கள் உரையிலே, முதலிலே கிராம மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நாங்கள் பாடுபடுவோமென்று கூறியிருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பேனென்று கூறியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் உடனடியாகச் செய்வதுதான் மிக முக்கியமாகும். ஆனால் முன்பெல்லாம்கூட குடி தண்ணீருக்கு அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சில கிராமங்களில் குடி தண்ணீர் வசதி செய்யப்படவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தக் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவோமென்று அழுத்தம் திருத்தமாக ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய திட்டங்கள், செய்ய இருக்கின்ற நடவடிக்கைகள் பற்றிய விவரம் சொல்லப்படவில்லை. ஏற்கெனவே கவர்னர் அவர்கள் நிர்வாகத்தில் இருந்தபோது, முந்தைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் திட்டமிடப்பட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டம், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள 10 கிராமங்களைச் சேர்த்து செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 400 ரூபாய் வருவாய் வருவதற்கான வழி ஏற்பாடு செய்யப்படுமென்று கூறப்பட்டது. அதற்கான பல காரியங்களும் அப்போது செய்யப்பட்டன. ஆனால் அந்தக் காரியங்கள் இப்போது எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, அதை மேற்கொண்டு செய்யலாமா அல்லது மாற்றங்கள் செய்ய வேண்டுமா என்பதை ஆராய்ந்து, அதை மேற்கொண்டு கவனிக்க வேண்டுமென்று குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன். எப்படியாவது கிராமங்களில் உள்ள மக்கள் முன்னேற வேண்டுமென்பது தவிர வேறு ஒன்றுமில்லை. இதை இந்த அரசு செய்தால்,

அதை அந்த அரசு செய்தது, அதற்குப் போட்டியாக இருக்க வேண்டுமென்று எதுவும் செய்ய வேண்டாம். கிராம மக்களின் வாழ்வு வளம் பெற வேண்டுமென்று காரியங்களை வேகமாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு முதல்வரவர்களால் நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சர்களுக்கு பல்வேறு இலாக்காக்களைக் கவனிக்கும் பொறுப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. முன்பிருந்த ஆட்சியிலே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்று ஒரு தனி அமைச்சர் போடப்பட்டு, அவரிடம் அந்த இலாகா பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரிசன நலத் துறைக்கு எப்படி தனியாக அமைச்சர் இருக்கிறாரோ அப்படி, அவர்களைவிட அதிக எண்ணிக்கையுடைய பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஓர் அமைச்சர் இருக்க வேண்டும். முன்பிருந்த கழக அரசு தனி அமைச்சரை அவர்களுக்காக நியமித்து, காரியங்களைச் செய்தது. செய்தது எப்படியிருந்தாலும் ....

***மாண்புமிகு திரு. பி. சவுந்தரபாண்டியன் :*** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் எப்படி பின் தங்கியோர் நலத் துறையை அரிசன நலத் துறை அமைச்சரவர்களே பார்த்தாரோ அதே வகையில்தான் அவர் வழி நடக்கும் புரட்சித் தலைவரும் ஒரே அமைச்சரிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :*** இப்போது யார் பொறுப்பில் இருக்கிறதென்பதைச் சொல்லியதற்கு நன்றி. பிற்பட்ட நலத் துறை அமைச்சர் என்று சொன்னால் போதும் ....

***மாண்புமிகு திரு. பி. சவுந்தரபாண்டியன் :*** தாங்கள் அப்படி அழைப்பதென்றால், எனக்கு ஆட்சேபணையில்லை.

***திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :*** அரிசனங்களைவிட அதிக எண்ணிக்கையுடைய பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. நீங்கள் செய்வீர்களென்ற நம்பிக்கை இருக்கிறது. இயற்கையாகவே உங்களுக்கு அவர்கள்மேல் கனிவும் இருக்குமென்று நம்புகிறேன். அரிசனங்களுக்குத் தனித்தனியாக பல கிராமப் பகுதிகளிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகமாகக் கட்டிக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அதேபோன்று இன்னும் கீழ்நிலையில், தாழ்ந்த நிலையில், வறுமையில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும், குறிப்பாக இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசும், பல்வேறு சட்டங்களும் அரிசனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன. அதை நான் வரவேற்கிறேன். அதைப் போன்று இன்னும் பல நன்மைகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும்.



அவர்களைப் போலவே இன்னும் கீழ் நிலையில் இருக்கிறவர்கள் நம்முடைய மாநிலத்தில் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கும் தகுந்த வசதிகளையும், வாய்ப்புகளையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கவர்னர் உரையிலே, தமிழகத்தில் 1974 ஆம் ஆண்டில் 59 சதவிகிதம் மக்கள் வறுமையில் இருக்கிறார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வறுமைக்குரியவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களுக்குத்தான் பெரும்பாலான வறுமை பாத்தியமாக இருக்கிறது. எனவே அந்த வறுமையைப் போக்க என்னென்ன செய்ய முடியுமோ அதை விரைவாக, துரிதமாகச் செய்ய வேண்டுமென்று நான் குறிப்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக தமிழகத்திலே நிலவுகிற நீர்ப்பாசன வசதிகள்பற்றி உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக காவிரி நீர் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது. காவிரி நீர் வேறு மாநிலத்திலிருந்து வருகிறது. அதில் பல சங்கடங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால் நமக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இனியும் நாம் பாதிக்கப்படாமல் இருக்கும் நிலை ஏற்பட வழி செய்ய வேண்டும். நாங்கள் இன்னும் நீர்ப்பாசன வசதியை விஸ்தரிக்கப் போகிறோம். அதனால் நீர் கொடுங்களென்று கேட்கவில்லை. இப்போது ஒவ்வொரு ஆண்டும் சென்று கேட்கும் நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே இதற்கு எப்படியாவது ஒரு நிரந்தரமான முடிவைக் காண வேண்டும். ஒவ்வொரு ஆண்டும்

(பிற்பகல் 4-40)

இப்படிப் போய் ஒவ்வொரு தரம் தண்ணீர் விடுங்கள், தண்ணீர் விடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கின்ற நிலை இருக்கிறது. அதை நம்பி ஒவ்வொரு தடவையும் தங்களிடமிருக்கின்ற கொஞ்சம் பணத்தையும் விவசாயத்திற்காகச் செலவு செய்து, பிறகு தண்ணீர் வராமல் நஷ்டம் வந்தால், நிலைமை மிகவும் பயங்கரமானதாக இருக்கும். இதில் மக்களுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும். மத்திய அரசு, மாநில அரசு உறவு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்று நாம் பல முறை பேசிக்கொண்டு வருகிறோம். தண்ணீர் வசதி குறைபாடுகள் இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நாம் நிவர்த்திக்க வேண்டும். அதிர்ஷ்டவசமாக, நமது நாட்டுப் பிரதமராக வந்திருக்கின்றவர்கள், ஒரு கட்சியின் கொள்கைக்காக குறிப்பிட்ட சாராரின் நன்மைக்காகச் செயல்படுபவராகத் தெரியவில்லை. கட்சிப் பாதுகாப்புக்காகப் பேசுபவராகத் தெரியவில்லை. நாட்டினுடைய நன்மைக்காகவும், பொது மக்களுடைய நன்மைக்காகவும் அவர் சேவை செய்பவராக இருக்கிறார்கள். இந்த காவிரி நீர்ப்பாசன விஷயத்தில் உள்ள பிரச்சினை தமிழக மக்களை ஒவ்வொரு ஆண்டும் பயத்திலும் பீதியிலும் வைத்துக் கொண்டிருக்கிறது. அதைப் போக்குவதற்கு தக்க வழிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வசதி தமிழ் நாட்டிலே பற்றாக்குறையாக இருக்கிறது. பற்றாக்குறை அமைச்சராக, மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது காண்ட் பற்றாக்குறை, நீர் பற்றாக்குறை உள்ள இலாக்காக்களின் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் இதையெல்லாம் கவனித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்க உத்தரவாகியிருக்கிறது என்றும், தோண்டி எடுக்கப் போகிறோம் என்றும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். பல ஆண்டுகளாகப் பத்திரிகையிலே வருகிறது. அதை எந்த அளவுக்கு நிறைவேற்றப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அதையும் நாம் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ஜில்லாவிலே இருக்கிறது. அதை விஸ்தரிப்பதன் மூலம் நம்முடைய மின்சாரப் பற்றாக்குறையை வேண்டிய அளவுக்குக் குறைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே சேலம் உருக்காலை அமைக்க ரூ. 10 கோடி அளவிற்கு அனுமதித்திருப்பதாகச் சொல்கிறார்கள். எத்தனையோ வருடங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பத்து வருடங்களாக வருகிறது வருகிறது என்று சொல்கிறார்கள். எப்போது நிறைவேற்றப்படும் என்பது தெரியவில்லை. வளர்ந்து வருகின்ற பிரச்சினைகளை, வேலையில்லாத நிலைமைகளை எல்லாம் போக்குவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு குறிப்பாக இங்கு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற தலைவர், முதல்வர் அவர்கள் மத்திய அரசை அணுகி இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, பொதுவாக கவர்னர் உரையிலே (Family welfare) குடும்ப நலத் திட்டத்தைப்பற்றி குறிப்பிடவில்லை. வட நாட்டிலே எலக்ஷனிலே அதன் காரணமாக தோல்வி வந்துவிட்டது என்று எண்ணிவிட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன். குடும்ப நலத் திட்டம் இல்லை என்றால் போடுகிற திட்டங்கள் எல்லாம் குலைந்துவிடும். குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்தை கண்டிப்பாக அமுல் படுத்த வேண்டும். இதிலெல்லாம் அரசு பல ஆய்வுகளைச் செய்தார்கள். அதிலே அவர்கள் ஈடுபடாது விட்டுவிடுவார்கள் என்று சொன்னால் இன்றைக்குப் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் வீணாகிவிடும். இன்றைக்கு இருக்கிற மருத்துவ வசதி, நீர்ப்பாசன வசதி, பள்ளிக் கல்வி வசதிகள் குறைந்துவிடும். 10 ஆண்டுகளிலே இன்றைக்கு 60 கோடிக்கு மக்கள் தொகை வந்திருக்கின்றது. 10 ஆண்டுகளுக்கு முன்னால் 30 கோடிதான் மக்கள் தொகை இருந்தது. இன்னும் பத்தாண்டுகள் போனால் மேற்கொண்டு ஒரு 30 கோடி மக்கள் தொகை அதிகரிக்கலாம். இப்படிப் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் அதிகமாகிவிடும். கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்





காமல், குடும்ப நலத் திட்டத்தைக் கொஞ்சம் கண்டிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். குடும்பத்திற்கு இரண்டு பிள்ளைகள் இருப்பது என்ற நிலையை ஏற்படுத்தி, அதற்கு மேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிள்ளைகள் இருப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. அதற்கான பலனுள்ள ஒரு திட்டத்தை அரசியல் வாதிகளுடன் கூடிப் பேசி உருவாக்க வேண்டும். ஒரு திட்டவட்டமான முடிவான நடவடிக்கையை எடுத்துக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். அது நாட்டிற்குப் பொதுவான பிரச்சினையாக, ரொம்பவும் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. கட்சிக் கண்ணோட்டமின்றிச் செய்ய வேண்டும். அதிகக் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் ஆளாக்காமல் அதை சுமுகமாக எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த அரசுக்குள்ள பிரச்சினை, காவிரிப் பிரச்சினை. சேலம் இரும்பாலைத் திட்டம் ஒரு பெரிய திட்டம். நெய்வேலித் திட்டம் ஒரு பெரிய திட்டம். இந்தத் திட்டங்களையெல்லாம் உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிற்படுத்தப்பட்ட மக்கள் அமைச்சர் அவர்களிடம் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களை லிஸ்டில் சேர்ப்பதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அந்த விசாரணைக் கமிஷன் சில பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. பெருவாரியாகப் பார்த்தால்கூட, நான்கு அல்லது ஐந்து ஜில்லாக்களில்தான் அதிகமாக இருப்பார்கள். இந்த மாநிலத்தில் வன்னியர்கள் கொஞ்சம்தான் இருப்பார்கள். கடந்த ஆண்டுகளில் பார்த்தால், அவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில், என்ஜினியரிங் கல்லூரிகளில் இடம் கிடைத்திருப்பது குறைவுதான். மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தகுந்தபடி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 10 அல்லது 15 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 200 பேர்களாவது தேர்வு பெற்றிருக்க வேண்டும். எப்படியோ பரம்பரையாகப் படித்தவர்கள், உயர்ந்தவர்கள்தான் அரசாங்கத்திலே உயர்ந்த நிலையில் வந்துகொண்டிருக்கின்றார்கள். இதற்கு முன்பு இருந்த அரசிடம்கூட மகஜரைக் கொடுத்தோம். 50 சதமாவது கொடுக்க வேண்டும். அதிலே கால் பங்காவது தனியாக வன்னியர்களுக்கு என்று பிரித்துக் கொடுக்க வேண்டும். அரசாங்கம் கொடுத்திருக்கலாம். கலைஞர் முதலமைச்சராக இருந்த அன்றைக்குக் கொடுத்தோம். அதற்குப் பிறகும்கூட நான் ஒரு

மகஜரைக் கொடுத்தேன். பிரைம் மினிஸ்டராக இருந்த திருமதி இந்திரா அம்மையார் அவர்களை இதற்காகப் பார்த்தோம். இந்த மகஜரை கவர்னர் அவர்களிடம் கொடுத்தோம். ஹோம் மினிஸ்டர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களைப் பார்த்தோம். அதையெல்லாம் அவர்கள் விசாரணைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். பல முறைகள் சந்தித்துக் கேட்டேன். அது சம்பந்தப் பட்ட பைல்கள் எல்லாம் இலாக்காவிலே இருக்கின்றன என்றார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்து அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் பன்னிரண்டு பேர் பேசுவதற்காகப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பத்து மணித்துளிகள் வைத்தாலும் பன்னிரெண்டு பேருக்கு நேரமில்லை. ஆகையால் தயவு செய்து பேச்சுக்குரிய நேரத்தைச் சுருக்கிக்கொள்ளுமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எல். ராமகிருஷ்ணத் தேவர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இந்த 12 நாட்களாக எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எல்லாக் காரியங்களைப்பற்றியும் பேசி அத்தனைக்கும் உடனடியாகத் தீர்வு கிடைக்க வேண்டுமென்ற முறையில் பேசிவிட்டார்கள். அவர்களுடைய வழக்கத்தைப் பின்பற்றி நானும் சில வார்த்தைகளைச் சொல்ல முன்வருகிறேன். புதிய அமைச்சரவை ஏற்பட்டு பதின்மூன்று நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள்ளாக அத்தனை காரியங்களையும் முடிக்க வேண்டுமென்று சொல்வது அவ்வளவு சரியாக இல்லை. வரவர இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று நாம் பொறுத்துப் பார்த்து, பிறகு கேட்க வேண்டும். சமீபத்தில் பட்ஜெட் வருகிறது. அதில் எல்லா விவரங்களையும் நாங்கள் கொடுக்கிறோம் என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். அதில் உங்களுடைய முறையீடுகளையெல்லாம் தீர்க்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் புதிதாக ஒன்றும் இல்லை. என்றைக்குமே கொடுக்கிற முறைப்படிதான் வந்திருக்கிறதே ஒழிய, இதில் விசேஷமாக ஒன்றுமில்லை. இருக்க வேண்டுமென்பதுமில்லை. ஏதோ சுருக்கமாக 12 பக்கமாக இருப்பதை இருபது பக்கமாக வைத்து, ஒரு சர்ச்சையும் இல்லாமல், அத்தனையும் கோர்த்துவிட்டாலுங்கூட, அப்போதும் சர்ச்சை வரத்தான் செய்யும். மனிதப் பண்பு அப்படித்தான் இருக்கும். எல்லோரும் அவர்களுடைய ஜில்லா, அவரவருடைய ஏரியாவைப்பற்றித்தான் பேசுகிறார்கள். பொதுவாக இராமநாதபுரம் ஜில்லாவில் இருக்கக்கூடிய கஷ்டம் சொல்ல முடியாது. யாருக்கும் மனது நோகும்படியாகவோ துன்புறுத்தவோ பேசவில்லை. இருக்கும் நிலைமைச்





சொல்கிறேன். எல்லா அமைச்சர்களும் பார்த்த ஜில்லாதான் அது. தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளையும் இராமநாதபுரம் பகுதியையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். காகிதத்திலே நன்றாக அச்சடித்துக் கொடுத்துள்ளார்கள். 70 பேர் கிராமத்திலும் 30 பேர் நகரத்திலும் இருக்கிறார்கள் என்று சொல்லும் இந்தப் பேச்சு ரொம்பக் காலமாக, 52 வருஷமாக, பேசப்படுவதுதான். நகரத்தில் இருப்பவர்கள் எல்லாம் கிராம மக்களைப்பற்றிப் பேசிவிட்டு மாலையில் சூட்டும் ஹேட்டும் மாட்டிக் கொண்டு பீச்சுக்குக் காற்று வாங்கப் போய்விடுவார்கள். கிராமத்தில் உள்ளவர்கள் இதைக் கேட்டுக் கேட்டு வாயைப் பிடித்துக் கொண்டு உழுவதற்குப் போய்விடுவார்கள். இதுதான் நடந்து வருகிறது. 'உலகமே உழுகிறவன் பின்னாடி' என்று ஒரே வார்த்தையில் புலவர்கள் புகழ்ந்து விட்டுப் போய்விட்டார்கள். பெரியவர்கள், ஞானிகள் எல்லாம் புகழ்ந்திருக்கிறார்கள். அது ஒன்றுதான் எங்களுக்குக் கிடைத்துள்ள பாக்கியம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** புலவர்கள் புகழ்கிறபோது, உறுப்பினர் அவர்களுக்கு ஓட்டு கிடையாது.

**திரு. எல். ராமகிருஷ்ணத் தேவர்:** சந்தோஷப்படுகிறேன். இப்போது வந்திருக்கிற அமைச்சர்களும் இந்தப் புகழ்ச்சியிலேயே இருந்துவிடாமல் கிராமத்துக்கு வந்து எங்கே என்ன செய்ய வேண்டுமென்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். சாதாரண பழமொழி உண்டு — 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்று. பாலுக்குச் சர்க்கரை இல்லாமல் ஏங்குகிறவர்களுக்கும், கூழுக்கு உப்பில்லாமல் ஏங்குகிறவர்களுக்கும் துக்கம் ஒன்றுதான். ஒரே நிலையில் வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுவரையில் மற்றவர்கள் எதும் பண்ணவில்லை என்று சொல்ல நான் தயாராக இல்லை. என்ன செய்தாலும் வரவில்லை. அது எங்கள் துரதிர்ஷ்டம். இப்போது முதலமைச்சர் அவர்கள் புறப்பட்டு பெங்களூர் போனார்கள். உடனே தண்ணீர் வந்துவிட்டது. தஞ்சைக்கும் திருச்சிக்கும் தண்ணீர் கொண்டு வந்துவிட்டார்கள். நாங்கள் கேட்டால், எங்கிருந்து தண்ணீர் கொண்டுவருவது? அதுதான் துரதிர்ஷ்டம் என்றேன். மேலே போக வேண்டியதுதான். எங்களுக்கு ராக்கெட் தெரியாது, கார் தெரியாது, பிளேன் தெரியாது. முதலமைச்சர் முதல் நாள் போய் மறுநாளே தண்ணீர் கொண்டுவந்துவிட்டார். எங்கள் ஊருக்குப் போனால் கேட்பார்கள். "மெட்ராசுக்குப் போனீர்களே, அவர்களிடம் சொல்லி மேக மண்டலத்திலிருந்தாவது தண்ணீர் கொண்டுவரச் சொன்னால் என்ன" என்று கேட்பார்கள். 70 சதம் நீங்கள், 30 சதம் நாங்கள் என்று சொல்லிக்கொண்டே பட்டணத்தில் இருப்பவர்கள் சாப்பிட்டுக்கொண்டு காலம் கழிக்கிறார்கள். இப்போது வந்திருக்கிறவர்கள் ஏன் செய்யவில்லை என்று கேட்க முடியாது. இனிமேல்தான் செய்யப்போகிறார்கள். எல்லோருக்கும் துன்பம் இல்லாமல் கொஞ்சம் ஈவு நிறுத்துப் போடணும். ராமகிருஷ்ணத்

தேவருக்கும் இரண்டு கிலோ, எதிர்க் கட்சித் தலைவருக்கும் இரண்டு கிலோ என்று போட்டால் சரியாக வருமா? அவருக்கு எட்டு கிலோ வேண்டும்; எனக்கு இரண்டு கிலோ இருந்தால் போதும். ஆகையால் அந்தந்தப் பகுதி மக்களுக்கு அவர்கள் நிலைமைக்கேற்ப வசதிகளைச் செய்தால், அதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இரண்டு கட்சிக்காரர்களும் ஆட்சி பண்ணுகிறார்கள். இரண்டு பேரும் அண்ணா வழியைப் பின்பற்றுகிறோம் என்கிறார்கள். அண்ணா வழியில் நல்லது செய்தால் நாங்கள் குறை சொல்ல மாட்டோம். என்னுடைய அதிர்ஷ்டம் போல் இருக்கிறது. நான் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்துவிட்டார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் குடிக்கத் தண்ணீர் முதலில் கிடைக்கச் செய்ய வேண்டும். பல இடங்களில் துரப்பணம் போட்டால்தான் தண்ணீர் வரும். கிராமம் கிராமமாக முதலில் தண்ணீர் இருக்க வேண்டும். எங்களுக்குள்ள துரதிர்ஷ்டம் தண்ணீருக்கு வழியில்லாமல் இருப்பது. இப்போது முதலமைச்சர் போனார் கருநாடகத்துக்கு. காவிரியைத் திறந்து விடச் செய்தார். தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குத் தண்ணீர் வந்து விட்டது. அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். எங்களுக்கு அப்படியல்ல. தண்ணீரைத் தேட வேண்டும். எப்படிக் கொடுக்கப் போகிறார்கள்? கோட்டையிலே கொலுவீற்றிருக்கிறோம் என்றில்லாமல் கிராமங்களுக்குச் சென்று பார்க்க வேண்டும். சும்மா அமைச்சர்கள் ஊர் சுற்றுகிறார்கள் என்று சிலர் சொல்வார்கள். ஊர் சுற்றிப் பார்க்காமல் எப்படி அந்தந்தப் பகுதி மக்களின் தேவைகளைக் கண்டு பரிகாரம் தேட முடியும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருப்புக்கோட்டை ஏரியா பூராவும் நன்றாகப் பார்த்திருக்கிறார்கள். கிராமம் கிராமமாக சர்வே செய்தது போல சுற்றிப் பார்த்தது இந்தப் பயணம் தான் என்று நினைக்கிறேன். அவர்களுக்குக் கிராம மக்கள் எப்படிக் கஷ்டப் படுகிறார்கள் என்பது தெரியும், மேலெழுந்தவாரியாக கிராம மக்கள்தான் நாட்டின் முதுகெலும்பு; அவர்கள் 70 சதம், நாங்கள் 30 சதம் என்று பேசினால் பிரயோஜனமிருக்காது. கிராம மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று பார்த்து, ஆவன செய்தால், அதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

(பிற்பகல் 5-00)

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் என்பவை சாதாரணமாக வந்துவிடவில்லை. இது காந்தியடிகளுடைய திட்டம். அதற்குப் பின்னால் நேருஜி, காமராஜ் காலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லா கிராமங்களுக்கும் வந்தன. அப்போது நான் எம்.எல்.ஏ. ஆகக் கூட இருந்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் எங்களைக் கூப்பிட்டு கிராமத்தில் கட்சிப் பாகுபாடு இல்லாமல்





அந்தந்த ஊருக்கு வேண்டிய தேவைகளைப் பார்த்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று காமராஜ் அவர்கள் சொன்னார்கள். அந்தப்படிதான் இன்று வரை நடந்திருக்கிறது. நடந்து வந்தது. நேற்று மாண்புமிகு உறுப்பினர் மதுரை முத்து அவர்கள் கூட இதுபற்றிச் சொன்னார்கள்.

நம்முடைய உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்களுக்கு இதிலே அனுபவம் அதிகம். எல்லா பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் அந்த அனுபவம் உண்டு. நானும் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மன் தான். நீங்கள் கொண்டுவந்திருக்கிற திட்டத்தை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. எல்லாத் தேர்தலுக்கும் மக்கள் தான் ஓட்டுப் போட வேண்டும். அதை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் கட்சி சார்பில் பஞ்சாயத்துக்களுக்குத் தலைவர்களை நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால், ஒவ்வொரு கிராமத்திலும் பத்துக் கட்சிகள் தேர்தலில் போட்டியிடக்கூடும். இப்போது நடைபெற்ற தேர்தலில் பல கட்சிகள் போட்டி போட்டார்களே, அதைப் போன்ற நிலைமை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பட்டு, அதனால் குரோதம், மன மாச்சரியம் ஏற்பட்டு, அது ஓராண்டு காலத்திற்கு நீடிக்கும். அதனால் கிராமம் நல்ல முறையில் முன்னேற முடியாது. இதன் காரணமாக கண்மாய்கள் மடை திறப்பதில் தகராறுகள் வரும். இதையெல்லாம் நீங்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். யார் வேண்டுமானாலும் போட்டி போடலாம் என்றால், யார் வருகிறார்களோ அவர்கள் வரட்டும். இதிலே கட்சி கூடாது என்பது தான் என்னுடைய கருத்தாகும். அனுபவ ரீதியில் இதனைச் சொல்கிறேன். ஆகவே மக்கள் ஓட்டுப் போட்டுத் தலைவர்கள் வரவேண்டுமென்பதை நாங்கள் வரவேற்கிறோம். இதைத்தான் நேருஜி அவர்களும், காமராஜர் அவர்களும் சொன்னார்கள்.

இருபது அம்சத் திட்டத்தில் ஏகப்பட்ட வேலைகள் எங்கள் மாவட்டத்தில் நடந்தன. அந்த வேலைகள் எல்லாம் அரைகுறையாக நடந்து இப்போது தடைபட்டு நிற்கின்றன. பாலங்கள் எல்லாம் பாதி அளவில் கட்டப்பட்ட அளவில் நிற்கின்றன. அந்த வேலைகளையெல்லாம் அரசு மிகத் துரிதமாகச் செய்ய வேண்டும். கண்மாய் மடைகள் கட்டி, சிமெண்ட் பூசப்படாமல் அப்படியே இருக்கிறது. மழை வந்தால் எல்லாம் கரைந்துவிடும் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இது பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லஞ்சம், ஊழல்பற்றி இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது அதிகமாகத் தாண்டவமாடுகிறது. ஒரு குளம் வெட்டுவதற்காக அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கினால், அதிலே 45,000 ரூபாய் தான் செலவாகிறது. மீதி 55,000 ரூபாய் பல வகைகளிலும் போகிறது. [illegible] முழுவதையும் எடுத்துக்கொண்டால் [illegible]. இவையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துக்களுக்கு, அதனுடைய தலைவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். எங்கள் ஊரிலிருந்து இராமநாதபுரம் 20 மைலில் இருக்கிறது. கடந்த புயலின்போது ஒரு முறை ரோடுகள் எல்லாம் அரித்துக் கொண்டு போய்விட்டது, 'போட்'டில் போனோம். கால்நடையாக காமராஜர் பரமக்குடிக்கு வந்தார். ரேடியோவில் அவர் வருவதாகக் கேள்விப்பட்டுத்தான் இராமநாதபுரம் போனேன், சென்று அவரிடம் நிலைமைகளைச் சொன்னேன். பொதுப் பணித் துறை அதிகாரிகளை அழைத்துக் கேட்டார். ஒரு வாரத்தில் எஸ்டிமேட்டை அனுப்புவதாகச் சொன்னார்கள். இந்த வேலைகளையெல்லாம் செய்துவிட்டு, 'எஸ்டிமேட்'டை அனுப்புங்கள் என்று கூறினார். இதெல்லாம் பழைய கதை. எட்டே நாட்களில் வேலைகள் முடிவுற்று, பஸ் போக ஆரம்பித்துவிட்டது. கண்மாய்களை எல்லாம் தூர் எடுத்து முடித்தார்கள். இதெல்லாம் முன்பு நடந்தது. விவசாயிகளைப் பொறுத்தவரையில், எல்லோரும் உழவர்கள் பின்னால், வைர வியாபாரி முதற்கொண்டு, அவன் பின்னால் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்காமல், அவனுக்கு என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து செய்ய வேண்டும். குடிநீர் பற்றி முதலமைச்சர் பேசினார். நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். மனிதனுக்கு தண்ணீர் கூட இல்லாமல் அவன் எப்படி இருக்க முடியும் என்பதைக் கூறி, அதைப்பற்றி அவர்கள் எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் ஒரு வருஷமாவது பூரணமாக விளைந்தது என்பது கிடையாது. ஒரு வருஷம் முக்கால் விளைச்சல் இருக்கும். அடுத்த மூன்றாண்டுகளுக்கு முற்றிலும் ஒன்றும் இல்லாமல் இருக்கும். இந்தச் சென்னையையே எடுத்துக்கொள்ளுங்கள். கடற்கரையில் முறுக்கு, சுண்டல் விற்பவர்கள், சிறுவர்கள் எட்டு வயது முதல் பத்து வயது வரை உள்ளவர்கள் அனைவரும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ராசசிங்கமங்கலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர்கள் தான். ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் கொடுத்து, கூடுகஞ்சியைக் கொடுத்து, நூற்றுக்கணக்கான பேர்கள் திருவாடானை, பரமக்குடி, இராமநாதபுரம் தாலுகாவிலிருந்து சென்னைக்கு வந்து சுண்டல், முறுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையில் நாங்கள் இருக்கிறோம். அதைத் தான் நாங்கள் உங்களிடம் சொல்லுகிறோமே தவிர வேறல்ல. எப்படியும் நீங்கள் ஒரு பெரிய சூழ்நிலையை உண்டுபண்ணியிருக்கிறீர்கள். முதலமைச்சரும், பொதுப் பணித்துறை அமைச்சரும் முதல்நாள் போய், மறுநாளே தண்ணீர் கொண்டு வந்துவிட்டோம் என்ற ஒரு பெரிய புகழை உண்டு பண்ணியிருக்கிறார்கள். எனவே உங்களை ஒரு புரட்சித் தலைவர் என்று சொல்கிறோம். அதைவிட இது பெரும் புரட்சியாக இருக்கிறது. இதைப் பார்த்து எங்கள் பகுதியிலே உள்ள மக்கள் நாங்கள் சென்றதும், "நீங்கள் என்ன அங்கே போய் தூங்கி விட்டீர்களா? நீங்கள் சொல்லி நமக்கு ஒரு வழி கேட்கக்கூடாதா? இன்னுமே





கேட்கவில்லையா?" என்று கேட்பார்கள். ஆகவே எங்களுக்கு வழி செய்யக் கூடிய வகையில், எங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் வகையில் மத்திய சர்க்காருடன் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 70 சதவிகிதம் கிராமம், 30 சதவிகிதம் நகரம் என்று இனிமேலும் சொல்ல வேண்டாம். நீண்டகாலமாக இதைச் சொல்லி வருகிறார்கள். ஆகவே, எல்லாம், எல்லா மக்களுக்கும் கிடைக்க என்ன செய்ய வேண்டுமோ அதனை அந்தந்த அமைச்சர்களும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. சாம்பசிவம்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் உரையின் ஆரம்பத்திலே 17 மாத கால நீண்ட ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கிறது. அரசியலில் 17 மாதம் என்பது மிகச் சாதாரணம். இருந்தாலும் நீண்ட ஆட்சி என்று குறிப்பிட்டதற்குக் காரணம், மக்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைத் தான் விரும்புகிறார்கள், ஜனாதிபதியின் ஆட்சியை விரும்பவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக, நீண்ட ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப் பட்ட ஆட்சி அகற்றப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இன்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் வரவேற்பதில் ஆச்சரியமில்லை. இந்த நாடே வரவேற்கிறது.

கவர்ச்சிக்கு ஓட்டளித்தார்கள் என்று நேற்றுப் பேசிய இரண்டொருவர் குறிப்பிட்டார்கள். கவர்ச்சி என்ன என்பதைப்பற்றித்தான் எல்லோரும் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். உண்மையில் கவர்ச்சி மட்டும் இருந்தால் போதாது. அவர்கள் ஏற்றிருக்கும் பாத்திரங்களின்படி அவருடைய வாழ்க்கை லட்சியங்களை அமைத்துக்கொண்டு, அதன்படி நடந்ததால்தான் அவர் பெயரில் நாமும் மக்களும் நம்பிக்கை வைத்து வாக்களித்தார்கள் என்று பெரியவர்களும்,

(பிற்பகல் 5-10)

நல்லவர்களும் கூறுகிறார்கள். எப்படியென்றால், நாடகத்தில் நடிப்பவர்களெல்லாம் நல்லவர்களாகிவிட முடியாது என்பதை நாடு அறியும். ஆகவே, பொறுமையின் காரணமாகத் தங்கள் தோல்விக்கு வேறு காரணம் கிடைக்காமல், கவர்ச்சி வெற்றியை அளித்ததென்று, சொல்லித் தப்பித்துக் கொள்ளலாமென்று திரும்பத் திரும்பச் சொல்லலாம். நல்ல உள்ளம் உடையவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள். நான்கு முழம் கட்டியவர்கள் எல்லாம் காந்தியாக மாட்டார்கள். எம்.ஏ. படித்தவர்கள் எல்லாம் அண்ணா

ஆக மாட்டார்கள் ; சிலப்பதிகாரம்பற்றிப் பேசுபவர்களெல்லாம் சிலம்புச் செல்வர் ஆக மாட்டார்கள். அப்படித்தான் நடிப்பவர்களெல்லாம் நல்லவர்களாக முடியாது. அதற்கெல்லாம் தேவையான தகுதி, ஆற்றல், மக்களுடைய நம்பிக்கை அத்தனையும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கை நம்முடைய முதல்வரிடத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். உண்மையிலே இதைப் பாராட்டிப் போற்ற வேண்டும். உண்மை, திறமை, பேச்சு, செயல் இவையெல்லாம் ஒன்றாக இணைவது கஷ்டம். உண்மையானவர்கள் திறமையாக இருக்க மாட்டார்கள் ; திறமையுள்ளவர்கள் உண்மையாக இருக்க மாட்டார்கள். இது சாதாரணமாக இருக்கும் உண்மை. அதேபோன்று பேச்சாற்றல் பெற்றவர்கள் பெரும்பாலும் செயலாற்றல் உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள் ; பேச்சாற்றல் இல்லாதவர்கள் செயலாற்றும் தன்மையுடையவர்களாக இருப்பார்கள். இந்த நான்கும் உள்ளவர்தான் நமது புரட்சித் தலைவர். அவரிடம் உண்மை, திறமை, பேச்சாற்றல், செயலாற்றல் எல்லாம் இருக்கிறது. அதைப் புரிந்து கொண்டுதான் மக்கள் இன்று அவரை ஆட்சிப் பொறுப்பில் ஏற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. 1946 ஆம் ஆண்டிலிருந்து பார்த்தால், பட்டம் பெற்றவர்கள்தான் படித்தவர்கள் ; பட்டம் பெறாதவர்கள் படிக்காதவர்களென்ற தவறான பிரச்சாரம் நடைபெறுவதைப் பார்க்கிறோம். படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று சொல்லும்போது, அவர்களுடைய படிப்பு வேறு, அறிவு வேறு என்று சொல்லத்தான் தோன்றுகிறது. 1946 ஆம் ஆண்டிலிருந்து பல முதலமைச்சர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். திரு. பிரகாசம் அவர்கள் ஆண்டிருக்கிறார்கள் ; அதற்குப் பிறகு திரு. ஓமந்தூரார். அவருக்குப் பிறகு திரு. குமாரசாமி ராஜா ; அவருக்குப் பிறகு திரு. காமராஜ் ; அவருக்குப் பிறகு திரு. பக்தவத்சலம் ; அவருக்குப் பிறகு அண்ணா ; அவருக்குப் பிறகு கலைஞர் கருணாநிதி ; அவருக்குப் பிறகு இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆண்டுகொண்டிருக்கிறார். அப்படிப் பார்க்கும்போது, படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குச் சமமாக, பட்டம் பெறாதவர்கள் ஆண்டிருக்கிறார்கள். பட்டம் பெறாதவர்கள் வரிசையில் நம்முடைய முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். ஓமந்தூராருக்கு நேர்மையும், திறமையும் இருந்தது, பொறுமையில்லை என்று பேசிக்கொண்டார்கள். திரு. காமராஜ் அவர்களுக்கு நேர்மை, திறமை, பொறுமை எல்லாம் இருந்தது. இருந்தாலும் அவர் தானாக விட்டுவிட்டுப் போய்விட்டார். கலைஞர் அவர்களுக்கு நேர்மை கொஞ்சம் குறைவென்ற எண்ணம் இருப்பதால்தான், திறமையிருந்தும் கடைசிவரை ஆள முடியவில்லை என்ற கருத்து வெகுவாக மக்களிடையே பேசப்படுகிறது. நம்முடைய தலைவர் நேர்மை, திறமை, பேச்சாற்றல், செயலாற்றல் அத்தனையும் கொண்டிருப்பதால், அவருடைய ஆட்சி நல்ல முறையில், மிகவும் சீரிய முறையில், கடைசிவரை ஏழை எளிய மக்களுக்குத் தொண்டாற்ற





முடியுமென்று கருதுகிறோம். அவருடைய லட்சியம் அப்படிப் பட்டது. காவிரி நீர்ப்பிரச்சினையில் அவர்கள் வெற்றி பெற்றதை எல்லோரும் ஒரு மனதாகப் பாராட்டியிருக்கிறார்கள். அது போன்று டி.யூ.சி.எஸ். விவகாரத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அங்கே ஸ்டிரைக் நடந்தது. நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பேசி, 5 நிமிடங்களிலே, வெற்றிகரமாக சமரசம் செய்து வைத்திருக்கிறார்கள். அங்கே என் நண்பர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நம் கட்சிக்கு வரப்போகிறார்கள். அவர்கள், முதலில் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறீர்களென்று கேட்டார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்த பிறகு, “ஆஹா, எதிர்பார்த்ததை விட மிகவும் மகிழ்ச்சியடையும் வண்ணம், சுமுகமாகவும், போற்றிப் புகழும்படியாகவும் செய்தார்கள்” என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். மேலும், இப்படிப் பட்ட ஆட்சியை வரவேற்க நாங்கள் தவறி விட்டோமே என்று வேதனைப் பட்டார்கள். அப்படி, பிரச்சினைகளை எடுத்த எடுப்பிலேயே முடித்து வைக்கக் கூடிய நல்லதொரு அமைச்சரவையை முதல்வரவர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள். அண்ணா சொன்ன பொன்மொழிகள்,—கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சொன்னார்கள். அதை நமது முதல்வரவர்களிடம் முழுக்க முழுக்கப் பார்க்கிறோம். மாற்றான் தோட்டத்து மல்லிகை ; எதையும் தாங்கும் இதயம். நீதி நிலைமைக்கு கட்டுப்பட்டது ; வாதத்திற்கு மருந்து ; பிடிவாதத்திற்கு மருந்தில்லையென்று சொன்னார்கள். எதைச் சொன்னாலும் பொறுத்துக் கொள்ளலாமென்று சொன்னார்கள். ஆகவே, அதற்கு அண்ணாவின் அறவழி என்று பொருள். நமது முதல்வரவர்கள், நீதி, நேர்மை, கண்ணியத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் சொல்லும் கருத்துக்கள் நல்லவையென்றால், அதை முழு மனத்தோடு ஏற்றுக்கொண்டு செயல்படுவோம் என்ற உறுதியைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழியை ஒட்டியில்லாமல், தன்னைப்போல பிறரை நினைத்து, செயல்பட்டு, தகுந்த வழி காட்டி ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆட்சியிலே பிரச்சினையைப் பார்த்துத்தான் முடிவெடுக்கப்படும். எடுத்துக்கொண்ட பிரச்சினை நியாயமானதா, இல்லையா என்று பரிசீலித்து முடிவெடுப்பார்கள். யார் பிரச்சினையைக் கொண்டு வந்தது என்று பார்த்து, அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கும் நிலை இருக்காது. எப்படியும் நியாயமான பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படும். நியாயமில்லாத பிரச்சினைகளை யார் கொண்டுவந்தாலும், எவ்வளவு செல்வாக்கு உடையவர்கள் கொண்டு வந்தாலும், அதைத் தலைவரின் காதில் சொல்லக்கூடிய துணிவு கூட யாருக்கும் ஏற்படாது. அப்படிப்பட்ட உண்மையான ஆட்சியிலே நல்ல பல திட்டங்களை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். மேலும் இருமொழிக் கொள்கை பற்றியும், மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பது பற்றியும் ஆளுநர் அவர்கள் உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். டெல்லியில்

அவர்கள் இதுபற்றிப் பேசும்போது சற்றும் பின்வாங்கியதாகத் தெரியவில்லை. அதை உறுதியாகச் சொல்கிறார்கள். அதற்காக எந்தவிதத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். அதில் வெற்றி காணவிட்டால், இந்த ஆட்சியை விட்டுப் போகத் தயாராக இருக்கிறேன் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே இந்தத் தமிழகத்தின் தனித் தன்மையை அவர்கள் காப்பாற்றுவார்களென்ற நம்பிக்கை எங்கு ஏற்பட்டிருக்கிறது.

உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கவர்னர் உரை என்பது ஒரு கொள்கை விளக்க உரை. பிரச்சினைகளைச் சொல்லும் உரை. வருகின்ற பட்ஜெட்டிலே அவைகளுக்கான திட்டங்கள் அறிவிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதுதான், பேசியதெல்லாம் பேச்சுத்தானா, அதற்கு செயல் வடிவம் இருக்கிறதா என்று நீங்கள் எண்ணிட இடம் இருக்கிறது. அதற்கு இடமில்லாமல் எந்த அளவுக்குக் கொள்கைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குச் செயல் வடிவம் கொடுத்து, ஆவன செய்யுமென்று கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக கிராம மக்களைப் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பெரியார் அவர்கள் கிராமங்களை கீழ் சாதி என்றும், நகரங்களை மேல் சாதி என்றும் குறிப்பிடுவார்கள். கிராமங்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்ய வேண்டும். குடிநீர், போக்குவரத்து, மின்சாரம், வைத்திய உதவி, ஆரம்பக் கல்வி வசதி இவைகளை ஏற்படுத்தித் தந்துவிட்டால், ஏறத்தாழ கிராம மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்து விட்டோமென்று சொல்லலாம். கிராம மக்களும் தங்களுக்கு எல்லாம் கிடைக்குமென்று நம்பி வாக்களித்திருக்கிறார்கள். படித்த மக்கள் வாக்களிக்கவில்லை, படித்த மக்கள் நகரங்களில் வாக்களிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். சென்னையில் மட்டும் தான் படித்தவர்கள் இருக்கிறார்களா? படித்தவர்கள் சென்னையைவிட அதிகமாக நாகர்கோவிலில் இருக்கிறார்கள். பாளையங்கோட்டையில் படித்தவர்கள் இருக்கிறார்கள். திருச்சி, சேலம், மதுரை எல்லா இடங்களிலும் உள்ள படித்தவர்கள் எப்படி வாக்களித்தார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது அது பிரச்சினையல்ல. இங்கு தேர்தல் வேலை சரியாக நடைபெறவில்லை என்பது என்னுடைய கருத்து. வருகிற தேர்தலில் இப்படிப் பட்ட நிலைமை இல்லாமல் இருக்குமென்று கருதுகிறேன்.

கடைசியாக, இந்த அரசின் கொள்கைகளை நல்ல முறையில் சொல்லியிருக்கின்ற கவர்னர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஆட்சி, நீதி, நேர்மையுடன் ஒழுங்காக நல்ல முறையில் நடக்குமென்று கூறிக் கொண்டு, வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.





(பிற்பகல் 5-20)

**திரு. எம். சங்கரலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பிரச்சினை ஒன்றினை எழுப்பியிருக்கிறார்கள் இந்த அவையிலே. ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, அவருடைய பண்புகளைச் சுட்டிப்பேசுவது மரபு அல்ல. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகிறபோது, நான் குறுக்கிட விரும்பாமல் அவருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று இருந்துவிட்டேன். கலைஞர் அவர்களுக்கு 'நேர்மை இல்லை' என்று அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். குறிப்பேடுகளிலே அந்த வார்த்தைகள் ஏறி இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பொது மேடைகளில் பேசுகிற மரபை இந்த அவையிலும் கடைப்பிடிக்க அனுமதித்தால், அந்த மரபை எங்கள் எல்லோருக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசும் போது, அவருடைய பண்புக்கு இழுக்கு ஏற்படுகின்ற நிலையில் பேசக்கூடாது என்ற மரபைத் தான் இந்த அவையில் வைத்திருக்கிறார்கள். அதற்கு மாறாக அவர் பேசியது இருக்கிறது. மாண்புமிகு தலைவரவர்களுடைய தீர்ப்பைக் கேட்கிறோம். அப்படி ஏற்றுக்கொள்ளப்படுகிறதாக இருந்தால் அந்த மரபை இரு சாராருக்கும் அனுமதிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இரா. சாம்பசிவம்:** 'நேர்மை அற்றவர்' என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்று சொல்கிறேனே தவிர, நான் அவர்கள் மீது குற்றம் சாட்டவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம்:** பொதுமக்கள் பேசுவதைச் சொன்னதாகச் சொல்கிறார்கள். பொதுமக்கள் ஏதேதோ பேசுவார்கள். எல்லாவற்றையும் இந்த சபையில் சொல்ல முடியாது. நேற்றிலிருந்து மேலவையின் மரபு கெட ஆரம்பித்திருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அந்த மரபைக் காக்க ஆளுங் கட்சியினர்தான் முன்னோடியாக இருக்க வேண்டும். அந்த மரபைக் காக்க வழி வகுத்து நடத்துவது என்பதுதான், "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்பது தான் இந்த நாட்டினுடைய நிலைமை. இந்த முறை நேற்றே மாற்றி கடைப் பிடிப்பதாகத் தோன்றுகிறது. அதற்குப் பதிலளிக்க வேண்டி நாங்களும் தொடர்ந்து அப்படிப் பேசினால், மரபு கெட்டுவிடும் என்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு தலைவரவர்களுடைய தீர்ப்பை அறிந்துகொண்டால், அதன்படி நாங்களும் நடந்து கொள்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசியபோதே நான் நினைத்தேன். குறை சொல்வது வேறு, குற்றம் சாட்டுவது வேறு. "நேர்மை அற்றவர்" என்ற வார்த்தை குற்றமாக எடுத்துக்கொள்ளப் படுமானால், இந்த அவையினுடைய கவுரவத்தைப் பாதுகாக்க, அதற்கு வருத்தம் தெரிவித்தால் சரியாகிவிடும்.

**திரு. இரா. சாம்பசிவம்:** துணைத் தலைவரவர்களே, 'நேர்மை அற்றவர்' என்று நான் சொல்லவில்லை. 'நேர்மை அற்றவர்' என்று நானே சொன்னதாகக் கருத வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அப்படி அவையிலே சொல்லக் கூடாது என்பதுதான் மரபு. அவையின் மரபு கெட்டுவிடக்கூடும் என்பதனால் தான் சொல்கிறேன்.

**திரு. இரா. சாம்பசிவம்:** அவர்களைப்பற்றி நான் ஏதும் தரக்குறைவாகப் பேசவில்லை. அப்படி நான் ஏதேனும் நினைத்துப் பேசியிருந்தால் குறிப்பேட்டிலே அது இருக்கக்கூடாது.

**திரு. எம் சங்கரலிங்கம்:** அப்படியானால் எதுவும் குறிப்பேட்டிலே இருக்கக் கூடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த இரண்டு பேர்களுடைய பேச்சுகளும் குறிப்பேட்டிலே வந்துவிடுகிறது அல்லவா? அவை அப்படியே இருக்கலாம்.

**THIRU A. R. DAMODARAN:** Hon. Deputy Chairman, there was a time, Sir, when I thought that I would not have an opportunity of ever making a speech in this House since I am due to retire in 1978 and when the Emergency was introduced and the D.M.K. Ministry dismissed and seventeen months elapsed, I thought that you would all have to bid farewell to me *in absentia.* I am, therefore, grateful, Sir, that at long last Tamil Nadu has joined the mainstream of democratic Government, that we have had both Parliamentary Elections and Assembly Elections and that we have a popularly elected Government in power to rule us for the next five years. It is a matter of great pride and pleasure that a new Ministry has been sworn in and although there may be political differences, Sir, between parties on this side and the other side, may I say, Sir, that it has always been the tradition in this House to partake in the debates of this House in a give-and-take spirit without causing personal offence to any particular person? I have no doubt that the traditions of this House will be maintained because, after all, we represent various sections of the electorate like Panchayat Unions, Graduates and teachers and it is necessary for us to bring, while we participate in this debate, certain information which may be useful to the Members of the Ruling Party.



Sir, on this occasion, it will be impossible for me to refrain from making a reference to the lifting of the Emergency which has rendered the restoration of normalcy possible in our country and I wish to make no bones about it that I was one of those who felt very strongly indeed, when the Proclamation was made on June 25th of 1975, that our country was in for a period of despondency and gloom. I am very glad that at long last the spirit of the people has been able to re-assert itself and we have duly elected Governments all over our country. The rigorous trampling of civil rights, the degradation of human dignity, the suppression of freedom of speech, the subjugation of the free Press, all these, Sir, are conditions which would have resulted in the development of a totalitarian regime and I would like to say, Sir, although others may express it in a milder manner, that I am one of the happiest persons today to be able to participate in a free Democracy. I congratulate the Government, Sir, on having come to grips with the various problems which have been mentioned in the Governor's Address. I realise that the time at their disposal has been short and that they would have to devote a great deal of study, time and attention to the problems facing our State to evolve various measures which have been promised to us in the coming Budget. Since a promise has been made that all suggestions made in this House would be duly considered while presenting the Budget, I take the liberty of adverting to a few salient features. In view of the limited time at my disposal, I hope both the Members of the House and the stenographer who is taking down my speech will forgive me for my speed. I wish I could slow down but my time would be exhausted and, therefore, I shall refer to only certain salient features which I feel are necessary for the progress of our State.

Sir, reference has been made to the need for ensuring a clean and honest administration and I do not think any Member of this House would object to the enunciation of this principle. It has been my privilege, since I entered as a Member of this House in 1966, to witness three different Governments which have come and gone—rather, I am sorry, two Governments which have come and gone and one which remains at present. Mr. Bhaktavatsalam was Chief Minister of the Congress Ministry when I entered in June 1966; the Congress Ministry was voted out in 1967 and the D.M.K. Ministry was sworn in; again in 1971 it was sworn in and now we have this new Ministry. Sir, Tamil Nadu has always

maintained a certain standard in Government administration and it is the earnest wish of all the Members of this House that these standards should, if necessary, be strengthened and be improved upon to the maximum extent possible. But some of us feel, Sir, that with the best intentions of the Ministry in power, and I have no doubt that this Government have those good intentions in mind, the very system of Government as it exists today results in corruption at various levels with the result that it becomes almost impossible to check corruption. You may ask the people, Sir, of the difficulties they experience when they go to the Registrar's office for registration of land documents, when they go to various authorities for the grant of licences and permits and when they go even to local authorities for permission to put up factories-buildings. At every stage, Sir, on every subject and at every level of Government administration, there is, unfortunately, a block which, in my opinion, has been brought about because we have inherited a system of Government that is invariably rules and regulations-oriented and not development-oriented.

(பிற்பகல் 5-30)

It is necessary for the leaders who are in charge of the Ministries to enthuse the administrative services and to see that the Government servants co-operate fully in the task of ensuring a clean and honest administration, because while I have every sympathy for the Ministers who will administer the departments, actually all their good ideas and work can be set at naught, if they have a non-co-operative bureaucracy. The choice of personnel for manning the departments and the choice of personnel for implementing the Plan schemes will have to be done on a very selective basis and I hope that the Ministers in charge of the various Ministries will, after they have been able to come to grips with the problems facing them, be able to devote attention towards the removal of the many irritants in Government administration which cause the common man a great deal of worry. I would like to say that in so far as the Local Authorities are concerned—I am mentioning this because we have laid great stress on industrialisation in the rural areas as well as in the semi-urban areas, to promote employment and income opportunities—invariably when an application is made to a Panchayat or a Municipality for licence to operate a Motor the way in which the officer looks at the application is: "How can he reject the application and send it back to the applicant?" and he does not see whether he could sanction that





application, with one or two corrections, if necessary and send it back to the applicant. In every field when we have to go for such licences or permits, it has become an invariable feature of Government administration to be needlessly obsructive and I hope, in the cleansing operation which the Hon. the Chief Minister has mentioned, the Government will be able to address itself to this major task of cleansing the administration at all levels of administration.

Sir, we are at an important stage in the administration of our State now, because the very important Seventh Finance Commission has been appointed and much will depend upon the allocation of resources to the State for its development and planning needs. I am sure the Hon. the Finance Minister will give us an idea of what the State intends to ask for regarding the transfer of resources from centre to State by the Seventh Finance Commission. I hope that due attention will be paid in this regard, because in the Sixth Finance Commission, Tamil Nadu lost heavily in the transfer of resources from the Centre to the State. The principle of upgradation of administrative services that was adopted by the Sixth Finance Commission has affected Tamil Nadu in a very big way. Apart from that, the grants that were given under Article 275 (1) of the Constitution were severely restricted in the case of Tamil Nadu, because of its standard of administration. We face a number of problems and whatever we may say, we must remember that according to the President's budget which was presented and sent to the Members of the House, the total deficit is of the order of 12 crores of rupees and I certainly do not think the Hon. the Finance Minister will be able to raise much taxation resources, since the powers of the States are very limited and restricted to the fields of sales tax which is inflationary and vehicles tax which is already over-saturated, registration taxes which are already very heavy and probably one or two minor taxes like land revenue which can never be resorted to as a source of revenue. It will require a financial wizard to raise the resources in the State. I certainly hope that the Finance Minister who is to face us when he presents the Budget will be able to present a balanced budget.

Over the past several months, due to various restrictions imposed on freedom, industrial relations and industrial development have undergone a major crisis. I have full sympathy for the working class which was not allowed to state its case and to represent its grevances. Naturally, Sir, their bottled-up emotions of the past

19 to 20 months have erupted after the elections, resulting in a spate of labour disputes, strikes, lock-outs and various other factors affecting industrial production and industrial development. I would like to make an appeal as a non-partisan member of this Council, as one who does not belong either to the ruling party or strictly to the opposition party, that it is only fair that the people of this State should give a minimum period of six months for the Labour Minister and for the other Members of the Cabinet to ponder, to try to understand and solve the various problems that exist in a multitude of industries in our State. It is unreasonable for us to expect, in the midst of heavy legislative work that the Ministers have on hand, that these disputes could be solved overnight, that bonus problems could be solved overnight, and that wages problems could be solved overnight. I would, therefore, make a very sincere and honest appeal, as a citizen of this country, as a citizen of this State, to all the classes, not only the working classes but also the industrial establishments to see that somehow a truce is declared and we have a period of peace at least for a period of six months. It would be unfair if we were to take advantage and try to load more problems on the Ministry when it has to be given time to settle its own views on such issues. I make an appeal to the Ministry also to ensure that there is no sort of fear created in any section of the society whether they belong to the employees or to the employers and to maintain fair impartiality so that scare is not created and unnecessary fears are not aroused in the minds of those who may seek to set up new industrial ventures in our State. Sir, it is of paramount importance and although we have stressed the necessity for industrial development, I believe that 65 per cent of our problems are due to the terrific shortage of power that Tamil Nadu has been suffering from over the past 6 to 7 years. If the truth must be told, it is inevitable that Tamil Nadu should suffer from power shortage because we have almost exhausted our hydro-electric resources and the only way in which we can generate power is to start more Thermal Stations, which would in turn mean a higher power tariff. Unless, as has been suggested in the Governor's Address, we are able to settle our problems amicably—water and power problems—with the neighbouring States of Kerala, Karnataka and perhaps even Andhra, it will be very difficult for us to develop the idea of a Southern Grid which is probably the only solution to the problem. Tamil Nadu has a very high capacity for electricity generation. The installed capacity is over 2,000 MWs. in Tamil Nadu. Kerala has below 900



MWs. Karnataka has hardly 1,000 MWs. and Andhra Pradesh has about 1,200 MWs. Among these four Southern States, in spite of the power development over the past 5 to 6 years, due to very poor allocation from the Planning Commission, we have not been able to develop it very much. It is of paramount necessity that power should be developed because otherwise the Hon. the Labour Minister will have to land up with problems of lock-outs and shutdowns which will inevitably arise when the industry is not able to work to full capacity.

(பிற்பகல் 5-40)

Sir, I realise that my time is very nearly up. I request you to give me four or five minutes more so that I may finish some other points.

The problem of rural development has been stressed by this Government very rightly because Tamil Nadu has always devoted considerable attention to the development of agriculture and the rural areas. The Central Government is also seized of this problem and one of the propositions that has been made is that instead of starting big industries in urban areas, it would be better to diversify and start small-scale industries and rural industries. While I agree with the general concept, I think an in-depth study is necessary in our State and I would suggest to the Hon. the Chief Minister that it is necessary for us to study the type of rural industries that we can promote in Tamil Nadu. It is easy for us to say that we should start industries in the rural areas; but when I come to grips and ask any industrialist or any person who remains in the rural areas, they are not able to come up and suggest one dozen or two dozen specific industries. It is a very vague concept and I would also like to add that if we are going to have rural development and rural industrialisation, we must improve the purchasing power in these areas. Otherwise, all these factories are likely to come to a standstill. One of the good schemes that was introduced last year—one of the very few good schemes—was the fixation of higher minimum wages for agriculture. I would like to commend to the new Ministry that this is a direction in which we should think because, to my mind, Sir, it is not possible for us to introduce rapid industrialisation in the rural areas within a period of five or ten years. It requires enormous finances which, in turn, depend upon Central Plan allocations, etc.

Y811,52 N77
N78.13821

Seventy-five per cent of our population lives on agriculture according to the Census statistics published in 1971. We have 4.6 million cultivators and 4.5 million landless labourers constituting a labour force of 9.1 million, out of a total working population of approximately 13 million. Seventy-five per cent of our population remains on agriculture. How are we going to improve, Sir, by starting, say, even 100 industries and spending Rs. 20 crores? How much employment can be provided to all these rural labourers? I, therefore, consider it absolutely inevitable that if we want to improve the condition of our landless labourers, the question of minimum wages will have to be tackled in a very practical and realistic manner. I agree that certain minimum wages have been fixed but I think we must also ensure that these wages are paid and I would also like the Government to consider my suggestion because I have always felt that instead of paying in money—rupees and paise, say, Rs. 5 or Rs. 6 we can introduce the scheme whereby some payment could be made in kind also. This is the only kind of payment which will help the landless labourer to fight the evils of inflation.

As far as the cultivators are concerned, I have made an appeal, Members of the House have also made an appeal, and I think the Members of the Ruling Party have also mentioned in their manifesto that cultivators will be given a fair deal, that a reasonable price will be fixed for paddy and other foodgrains and that due attention will be paid to growth of commercial crops also. Sir, a few years ago, the charge was made against agriculturists that they were devoting their attention to the growth of cash-crops like groundnut, sugarcane, etc., and that sufficient attention was not being devoted to the cause of paddy. Now, from what my Friend Thiru Ganapathi has said, we find ourselves in a situation of shortage of gingelly and oilseeds. It is natural that there should be a shortage of these products because with emphasis shifting from crop to crop, we have not been able to plan what is required in our State. Tamil Nadu produces approximately 8,00,000 tonnes of groundnut as against the All-India production of 5 million tonnes. We can easily step up the production of groundnut by 25 to 30 per cent by some more intensive development of oilseeds cultivation. We have devoted a great deal of attention to paddy cultivation. May I also plead with the Hon. the Minister for Agriculture that due and adequate attention is necessary to the



whole range of agriculture ? We have been devoting our attention to food crops only because that is the first priority; but we must diversify agricultural activity. Multiple cropping, new technological practices, new oilseeds, Animal Husbandry, development of inland fisheries, vegetable and fruit cultivation—all these are not luxuries. One acre of grape cultivation can fetch a revenue of Rs. 9,000 to a farmer. Karnataka has done it and Andhra has done it. Why should we not help farmers in our own State? I have not been able to get any technical advice from our Agricultural Department regarding grape cultivation. It is cultivated on dry lands and it is a very useful crop for the agriculturist because he would be able to diversify agriculture. The tremendous pressure on the Government for an increase in the procurement price of paddy may not be raised year after year if we give the agriculturist an opportunity to diversify by growing various commercial crops which give better revenue per acre.

Sir, without mentioning about Education, it would be singularly inappropriate on my part to sit down, representing as I do a Constituency of Graduates. I would just like to touch one or two points. I realise that the finances of the Tamil Nadu Government are in a difficult stage. But on one point I must express my very emphatic opinion and that is this. In 1973, when the University Grants Commission mentioned to all States that the teachers who were teaching in Colleges and Universities might be given an increment in salary, it was suggested by the University Grants Commission that 80 per cent of the increment would be met by the University Grants Commission and that only 20 per cent need be met by the Tamil Nadu Government. We Members on this side of the House raised it with the then Hon. Minister for Education, Navalar Nedunchezhiyan, who, unfortunately, was not able to come to a decision on this subject. What has happened as a result of this delay in decision, Sir? A decision delayed is a decision denied. From 1973 to 1977, four years have already elapsed, and even if the Tamil Nadu Government introduce it this year, the benefit of the 80 per cent subsidy which we would get from the University Grants Commission would be limited to the year 1978. I mention this only as an instance to request this new Government that in matters pertaining to grants from the Centre and from the University Grants Commission, extremely prompt attention is required and a decision, however pleasant or

[Thiru A. R. Damodaran] [1977 ஜூலை 13

unpleasant it may be, has to be taken so that we may not lose the benefits that accrue from such devolution of grants. Nine States in the Indian Union have already implemented the University Grants Commission scales of pay and in nine such States the University teachers are drawing the enhanced scales of pay. Why should teachers in Tamil Nadu alone suffer, Sir, from this disparity just because the Tamil Nadu Government are not able to meet that 20 per cent subsidy, when we are spending crores of rupees on education and when we are spending almost Rs. 110 crores on primary and secondary education and a niggardly sum of Rs. 6 to 7 crores on University education and higher education? I would plead with the Government that when framing the Budget, consideration may also be given to the position of teachers in our Colleges and Universities.

One word more and I have done, Sir. In 1965, when the Bhaktavatsalam Ministry was in power, a Committee was constituted to form a Post-Gradutate Institute of Medical Education in Adyar. The Secretary of the Department, the Chief Engineer (Public Works), etc., were constituted into a Committee and the late Dr. A. L. Mudaliar was the Chairman of that Committee. The Central Government had promised substantial aid if a Post-Graduate Institute of Medical Education was started in Adyar and it was then expected in 1965 that like the Chandigarh and the Delhi Post-Graduate Medical Institutes, an Institute would be opened in Madras. The Bhaktavatsalam Ministry gave its approval to this. Two hundred acres of land was allotted to the complex in Taramani in Adyar area and the Institute of Basic Medical Sciences was also constructed out of the Rs. 35 lakhs which was given by the University Grants Commission. In 1967, when the late Dr. C. N. Annadurai assumed office as Chief Minister, Dr. A. L. Mudaliar addressed a letter on the 14th of January 1967, of course, when he was very unwell and in spite of his ill-health. The late Dr. Annadurai was kind enough to promise and Thiru Sadiq Pasha also had given a public promise to the Medical Profession at a meeting that a sum of Rs. 35 lakhs was to be allotted for the Post-Graduate Institute of Medical Education. It was in 1967 and we are now in 1977. The 200 acres of land is still there and the Institute of Basic Medical Sciences which was constructed with Rs. 35 lakhs is still remaining there. But, unfortunately, Sir, the idea of developing this into a first class Post-Graduate Institute of



1977 ஜூலை 13] [Thiru A. R. Damodaran]

Medical Education similar to that in Delhi and Chandigarh has been floored because of the lack of grants from the Ministry of Health. I make particular mention of this because, here again, like the University Grants Commission episode, Tamil Nadu is losing the opportunity of establishing an Institute which could hold its pride of place in the entire Far East. We have all the skills in Tamil Nadu and we have excellent Post-graduate teachers in medicine. But, unfortunately, the decision to start this Institute has been delayed for some reason or other—some say that it is because they want to develop the General Hospital as this Institute and others say that they do not want to develop this because of lack of finance. I would only like to mention that there was a proposal in the 1975-76 Budget to construct five peripheral hospitals in Madras City, four of which have already been constructed. This Institute requires only a 400 or 500-bedded hospital to be constructed at Adyar and since the ground is available, I would make an earnest appeal to the Hon. the Chief Minister and the Hon. the Finance Minister kindly to consider this scheme. Even if the files have been lost in Government, I have got with me the entire file containing the correspondence exchanged between the Government and Dr. A. L. Mudaliar and I will hand it over to the Hon. the Chief Minister. It was his dream and it was he who wanted to have an All-India Institute started in Tamil Nadu. I am asking that that dream should be fulfilled as I sincerely feel that it would be of great help in furthering medical education and research in our State if this proposal could be pushed through.

Thank you very much for your indulgence, Sir.

(மாற்றுத் தலைவர் திரு. வே. தங்கப்பாண்டியன் தலைமை)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சரவைக்கு இஸ்லாமிய சமுதாயத்தினுடைய நல்வாழ்த்துக்களை முதற் கண் நான் சமர்ப்பிக்கின்றேன். நமது அருமை புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சபைக்குப் புதியவர் அல்ல என்பது சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அவர்கள் 1962 ஆம் ஆண்டில் எம்.எல்.சி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சபையில் வீற்றிருந்தார்கள். அந்த ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தேர்வுபெற்ற பேரவை உறுப்பினர்கள் 51 பேர். அந்த 51

பேர் ஓட்டுப் போட்டு, இரண்டு எம்.எல்.சி.க்களைத் தேர்ந்தெடுக்க முடியும். அப்படி எடுப்பதற்கு முஸ்லிம் லீக்கிற்கு ஒரு ஸ்தானமும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு ஸ்தானமும் ஒதுக்கப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்கு நமது அருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எம்.எல்.சி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(பிற்பகல் 5-50)

முஸ்லிம் லீக் கட்சிக்கு என்று ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்கு அடியேன் எம்.எல்.சி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். சில ஆண்டுகள் கழித்து, 3 அல்லது 4 ஆண்டுகள் என்று நினைக்கிறேன், நம்முடைய இப்போதைய முதல்வரவர்கள் இந்தச் சபையிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு, அடுத்து வந்த தேர்தலிலே அவர்கள் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு அடுத்த தேர்தலிலும் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இப்போது நடந்த தேர்தலிலும் மக்களின் நல்லாதரவைப் பெற்று, அவர்கள் முதலமைச்சராக அந்த ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் அருமையான காட்சியை நாம் காண்கிறோம். என்னைப் பொறுத்த மட்டில், 1962 ஆம் ஆண்டில் அவர்களுடன் இந்தச் சபைக்கு வந்த நான், ஆண்டவன் அருளால் தொடர்ந்து மூன்று தேர்தல்களில் தேர்வுபெற்று, இந்தச் சபையிலே தொடர்ந்து இருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். நமது அருமை முதல்வரவர்களையும் சேர்த்து, 5 முதலமைச்சர்களை எனது பதவிக் காலத்தில் பார்த்திருக்கிறேன். நாங்கள் இருவரும் இந்தச் சபைக்கு வந்தபோது, மாண்புமிகு திரு. காமராஜர் அவர்கள் முதல்வராக இருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு, திரு. பக்தவத்சலனார் முதலமைச்சராக இருந்தார்கள். அதற்கு அடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள்; அதற்கு அடுத்து கலைஞர் கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்து, இன்றைக்கு நம்முடைய அருமை முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக வீற்றிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். புரட்சித் தலைவரவர்கள் இந்த நாட்டின் முதல்வராக வந்தது, தமிழக மக்கள் பெற்றிருக்கிற பெரும் பேறு என்று நான் சொல்லுவேன். அவர்கள் திரைப்பட உலகத்திலே பெரும் நட்சத்திரமாகப் பிரகாசித்து, பெரிய வருமானத்தைப் பெற்றார்கள். அவர்களுக்கு மாதம் எவ்வளவு வருமானம் வந்ததென்பது எனக்குத் தெரியாது. உத்தேசமாகப் பல லட்சம் ரூபாயை ஒவ்வொரு மாதமும் சம்பாதிக்கும் நிலையில் அவர்கள் இருந்தார்களென்று நான் நினைக்கிறேன். பல லட்சம் ரூபாயை ஒரு மாதத்திற்குச் சம்பாதித்தவர்கள் முதல்வராகிறார்கள். அவருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் இப்போது. இங்கே கொஞ்சம் எல்லோரும் கவனிக்க வேண்டும், சிந்திக்க வேண்டும். பல லட்சம் ரூபாயைத் தியாகம் செய்துவிட்டு, ஒரு ஆயிரம் ரூபாய்க்கு வந்தார்கள். அதன் அடிப்படை என்ன என்பதைத்தான் நாம்



பார்க்க வேண்டும். அவரைப் பொறுத்தமட்டில், அவரது வாழ்க்கையைக் கவனித்தவர்கள் நன்கு அறிவார்கள். சிறு பிராயம் முதற்கொண்டு பொது மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அதிக ஆர்வத்தோடு பணியாற்றி, மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தார்கள். இன்றைக்கு பெருவாரியான மக்கள் அவருக்கு வாக்களித்து முதல்வராக உட்கார வைத்திருக்கிறார்கள். அவரும் அதை ஏற்றுக்கொண்டு, லட்சோபலட்சம் வருமானத்தை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மக்களுக்காக ஏற்றுக்கொண்ட பெரும் தியாகத்தை நான் பாராட்டுகிறேன். உண்மையிலேயே அவர்களுடைய சேவை மனப்பான்மைக்கு முன்பு லட்சோப லட்சம் என்பது ஒன்றுமில்லை என்பதைப் பார்க்கிறோம். அவர்களின் நல்ல எண்ணம், அவர்களுடைய ஆட்சி எவ்வளவு தூய்மையாக அமையுமென்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு என்று நான் நினைக்கிறேன். ஆண்டவன், அவருடைய நல்ல பணியிலே பெரும் வெற்றியைக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

தேர்தல் சமயத்திலே ஒரு பத்திரிகையைப் படித்தேன். அது ஆங்கிலப் பத்திரிக்கை. ஒரு பெரியவர் பேசியதாகப் படித்தேன்.

"Mr. M. G. R. may be a hero in the films, but he is going to be a zero in the Assembly". என்று அந்தப் பத்திரிக்கையில் எழுதியிருந்ததைப் பார்த்தேன். ஆனால் ஒரு வார காலமாக சட்ட சபையில் அவர்கள் கையாண்ட முறைகள், அவர்கள் ஆற்றிய சேவைகள்—இவைகளைப் பார்க்கும்போது "He is not only a hero in the films but he is the outstanding hero in the Legislature". என்று சொல்லத் தோன்றுகிறது. அப்படிச் சொல்லுமளவுக்கு அவர்கள், அவருடைய திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் பெருமிதப்படுகிறேன். பாராட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடன் சிறு பிராயம் முதற்கொண்டு நெருங்கிப் பழகுவதற்கான நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் முதல்வரான பிறகும், முன்பு எப்படி எளிமை இருந்தாரோ, பழகினாரோ அதேபோன்று, இம்மியளவும் மாற்றம் இல்லாமல் நடந்து கொண்டார்கள். அதேபாணியில் தொடர்ந்து பழகி வந்தார்கள், கடைசி மூச்சு இருக்கும் வரையில். அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருந்தார்கள். நான் அப்போது அருகில் இருந்தேன். இந்தத் திட்டத்தை இப்படித் தீட்டுகிறீர்களே; அப்படியில்லையே; காங்கிரஸ் ஆட்சியில் இப்படித்தானே திட்டம் தீட்டியிருக்கிறார்கள்; நீங்கள் அதை மாற்றுகிறீர்களே என்றேன். அதற்கு, "அவர்கள் அப்படித் திட்டம் தீட்டித் தீட்டி, பெயரைக் கெடுத்துக்கொண்டார்கள்; அவர்கள் வழியில் நாமும் சென்று பெயரைக் கெடுத்துக்கொள்வதா? அவர்கள்

கையாண்ட முறையை விட்டு, நல்ல, புதிய முறைகளைக் கையாண்டு, மக்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அதைச் செய்ய முயற்சிக்கிறேன்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். இதை நான் புதிய அமைச்சரவைக்கு ஒரு உபதேசமாக அமைகிறதென்று நினைவூட்ட முற்படுகிறேன். முன்பு இருந்தவர்கள் ஏதேதோ வழிகளைக் கையாண்டு, தங்கள் பெயரைக் கெடுத்துக்கொண்டதைப் பார்த்தோம். அவர்கள் கடந்த தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்து, மீண்டும் அமைச்சரவையை அமைக்க இயலாத நிலைமை ஏற்பட்டதைப் பார்க்கிறோம். அப்படியில்லாமல், நீங்கள் புது முறைகளை வகுக்க வேண்டும். வல்லுநர்கள், நிபுணர்கள் ஆலோசனைகளைப் பெற்று, புதிய புதிய முறைகளைக் கையாண்டு மக்களுக்கு உருப்படியான நன்மைகள் கிடைக்கக் கூடிய வகையிலே திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று அமைச்சரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தை வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். முதல்வரவர்கள் சொன்ன கருத்துப்படி நடக்க வேண்டுமென்று பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கப்பாண்டியன்): பேச வேண்டிய உறுப்பினர்கள் நிறைய இருப்பதால், இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாற்றுத் தலைவரவர்களே, 12 உறுப்பினர்கள் இன்று பேச இருப்பதாகச் சொன்னார்கள். தேவையானால் மேலவை நடைபெறும் காலத்தை நீட்டிக்கொள்ளலாம். 7 மணி என்பது 7½ மணிவரைகூட நீடிக்கப்பட்டு, மேலவை நடைபெற்றிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: படி அரிசித் திட்டத்தைப்பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருந்தார்கள். முதலமைச்சரானவுடன் திருச்சிக்கு வந்தார்கள். நான் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். படி அரிசித் திட்டத்தை நீங்கள் முன்பே அறிவித்தீர்கள்; ஆனால் திட்டத்தை அமல்படுத்தவில்லை; மக்கள் நான்கு புறத்திலும் குறை சொல்லுகிறார்கள்; எப்படியாவது அந்தத் திட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டேன். அதற்கு ஏகப்பட்ட ரூபாய் செலவாகிறதென்று யோசிக்க வேண்டியிருக்கிறதென்று அவர்கள் சொன்னார்கள். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, அதைக் கடைப்பிடித்தால் நலமாக இருக்குமென்று சொன்னேன். படி அரிசி மக்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னீர்கள்; அந்த வாக்குப்படி எல்லா இடங்களிலும் கொடுக்க முடியாது. எந்தெந்தக் கடைகள் அரசாங்கத்தின் சார்பிலே நடத்தப்பட்டு உணவுப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகிறதோ அந்தக் கடைகளில் படி



அரிசித் திட்டத்தை அமலாக்குங்கள் என்று சொன்னேன். ஏதோ ஒரு கணக்கு போட்டுக் காட்டினேன். இவ்வளவு அரிசி நியாய விலைக் கடைகளில் போடுகிறார்கள்; அதனால் நஷ்டம் 4 அல்லது 5 கோடி அளவுக்குத்தான் ஏற்படும்; இது பெரிய நஷ்டமாகாது என்றும் சொன்னேன். அதை அரசாங்க கஜானாவிலிருந்து ஈடுகட்டிவிடலாம்; திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் 18 கோடி, 20 கோடி ரூபாய்க்கு சப்ளிமெண்டரி பட்ஜெட் வந்து நிறைவேற்றியிருக்கிறோம்; எனவே நீங்கள் இந்த 5 கோடி ரூபாய் அளவுக்குச் செய்யலாம்; அது உங்களுக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துகொடுக்குமென்று நான் சொன்னேன். யோசிக்கலாமென்று சொன்னார்கள், யோசிக்க வேண்டியதில்லை; நல்ல காரியமென்று பட்டால் உடனே செய்ய வேண்டுமென்று சொன்னேன். மாதம் எனக்கு ஞாபகம் இல்லை; 6 ஆம் தேதி சொன்னேன். அன்றைக்குத்தான் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபிறகு முதலாவதாக திருச்சிக்கு வந்தார்கள். அடுத்த மாதம் முதல் தேதி போட வேண்டுமென்று சொன்னேன். அவரும் முயற்சிக்கிறேன் என்றார். அடுத்த முதல் தேதி திண்டுக்கல்லிலே

(பிற்பகல் 6-00)

வியாபாரிகள் மத்தியிலே அண்ணா ஒரு படி அரிசி விநியோகிக்க அறிவிக்கப்படும் என்று பேசுகிறார்கள். சென்னையிலே ஒரு படி அரிசி போடுவதாக அறிவிப்பு வந்தது. அது மக்களுக்கு அவர் சொன்ன வாக்கைக் காப்பாற்றியது. அரசாங்கத்துக்கு ரூ. 6 அல்லது ரூ. 7 கோடிதான் நஷ்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. எந்த அளவுக்கு மக்களுக்குத் திருப்தி என்பதை நாம் கவனிக்க வேண்டும். திருப்தி அளிக்கக்கூடிய ஒரு திட்டம் அது. ஏழை எளிய மக்கள் பாராட்டக்கூடிய ஒரு திட்டம். அதில் ஒரு சிறு தொகை நஷ்டப்பட்டாலும், அண்ணா அந்தத் திட்டத்தை அமுல்படுத்தியதை இந்த அமைச்சரவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என் சமுதாயத்தைப்பற்றி இரண்டொரு கோரிக்கைகளைச் சொல்லிவிட்டு முடிக்கிறேன். தீபவாளி, பொங்கல் வந்தால், கைத்தறி நெசவாளிகளுக்கு, கைத்தறித்துணிகளுக்கு ரிபேட் கொடுப்பது உண்டு. கிருஸ்துமஸ்க்கும் கொடுக்கிறார்கள். ரம்ஜான், பக்ரீத் போன்ற இஸ்லாமிய பண்டிகைகளுக்கும் அந்த ரிபேட் கொடுக்க வேண்டுமென்று, அந்தக் கோரிக்கையை அரசு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளிகளைப் பொறுத்து, கடையநல்லூரிலே சுமார் 400 தொழிலாளர்கள் வழக்கில் இருக்கிறார்கள். இந்த வழக்கு தொடர்ந்து 10 வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்துக்கு 10 லட்சம் ரூபாய் செலவு. 400 தொழிலாளர்களும் வழக்காட வருவதற்கு ஆகின்ற செலவுகள் போய் இன்னும் பல இன்னல்கள் ஏற்படுவதைக்குறித்து பல முறை நான் அரசிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்று

வற்புறுத்தியிருக்கிறேன். அவர்கள் எந்த நோக்கத்திலோ பார்ப்போம், பார்ப்போம் என்று காலம் பூராவும் தட்டிக் கழித்துவிட்டார்கள். இந்த அரசாவது தொழிலாளர்கள் மீது கருணை கொண்டு அந்த வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கோர்ட், வழக்கு என்று மேலும் கஷ்டப்படுத்துகின்ற நிலை வேண்டாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : என்ன பிரச்சினை என்பதைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, on a point of explanation. The hon. Member is requesed to give the number of the case, so that it may lend itself for proper examination by the concerned department of the Government.

THIRU K. S. ABDUL WAHAB: Sir, I shall give the particulars as soon as possible. அதைக் கவனிப்பதற்கு அமைச்சர் அவர்கள் வாக்களித்திருப்பதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, தக்கிணி முஸ்லீம்களை பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும். இதற்கு முன் இருந்த அரசு அவர்களை "Backward" என்று அறிவித்தது. சலுகைகளுக்காக சர்டிபிகேட் கொண்டுவரச் சொல்கிறார்கள். தாசில்தார்களிடத்திலிருந்தும், டெபுடி தாசில்தார்களிடத்திலிருந்தும் சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால் அவர்கள் அதற்கான நிருபணம் கொண்டுவரச் சொல்கிறார்கள். பணக்காரர்கள் எப்படியும் வாங்கிவிடுவார்கள். ஏழைகள் எங்கே போவார்கள்? இது தொடர்ந்து அவர்களுக்கு இன்னலாக இருப்பதால், எல்லா முஸ்லீம்களையும் "Backward Community" என்று அறிவித்துவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் உரையின் மீது சிலபல கருத்துக்களைச் சொல்லிக்கொள்வதற்கு முன்வருகின்றேன். கவர்னருடைய உரையானது எப்போதும் போலவே அமைந்திருக்கின்றது. எந்தவிதமான சாரமும் இதிலே இல்லை. இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்த பிரச்சினைகள் தான் நாட்டிலே பெரிதாக இருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, போன வருடம் சரியாக விளையவில்லை. இந்த வருடம் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். கருநாடகத்தோடு பேசி, 100 கோடி கன அடி தண்ணீர்



கிடைப்பதற்கு வழி செய்திருப்பதாக அறிவிப்பு வந்திருக்கிறது. அது குறித்து நான் மிக்க சந்தோஷம் அடைகிறேன். இருந்தாலும் காலாகாலத்தில் பயிர் ஏறியிருக்க வேண்டும். திருச்சி தஞ்சை போன்ற மாவட்டங்களில் இப்போது நாற்றுவிட்டு நடவு ஆகி இருக்க வேண்டும். இனி மழைக்காலம் வந்துவிடுகிறது. அறுவடை ஆகும்போது நல்ல மழைக்காலமே வந்துவிடும். அந்த நெல், மழைக்காலத்தில் அறுவடை செய்யும்போது தாடி, மீசை எல்லாம் முளைத்தது போலத்தான் இருக்கும். பாட்டை வசதிகளைப்பற்றி அதிகமாகச் சொல்வதற்கு இல்லை. ரோடுகள் ஓரளவுக்கு இருக்கின்றன. பாதைக் குறைபாடுகள் நாளாவட்டத்தில் சரியாகிவிடும். மழைக்காலத்தில் விளைந்த நெல்லைக் காய வைக்க முடியாது. வியாபாரிகள் அந்த நெல்லைக் கையிலே எடுத்துப்பார்த்து விலையைக் குறைத்துக் கேட்பார்கள். இன்று விவசாயிகளினுடைய நிலை பயமாக இருக்கின்றது. போன தடவை அப்படி நடந்தது. இந்தத் தடவையும் விவசாயம் அப்படித்தான் இருக்கிறது. அந்தக் காலத்தில் குறுவையானாலும் சரி, தாளடியானாலும் சரி, சம்பாவானாலும் சரி, நல்ல உயரமாக வளரும். ஆள் போனால் தெரியாது. இந்தக் காலத்தில் வளம் உள்ள நிலத்தில் பயிரிட்டால் கூட, உயரம் குறைவாக இருக்கிறது. பயிர் அறுத்துப் போட்டால், மாட்டுக்கு நல்ல வைக்கோல் கிடைக்கும். விவசாயிகள் பராமரிக்கின்ற கால்நடைகளுக்கெல்லாம் அந்த வைக்கோலை, புல்லைத் தீவனமாகப் போடுவார்கள். அந்தப் பயிர்களின் உயரம் இப்போது குறைந்துவிட்டது. எவ்வளவு உரம் போட்டாலும், அது வளரவில்லை. காலாகாலத்திலே சாகுபடி செய்யவில்லை என்றால், அவர்கள் என்ன செய்யமுடியும்? கவர்ண்மெண்டில் இருப்பவர்களும் என்ன செய்வார்கள்? மழை இல்லை. தண்ணீர் நாம் போய் கேட்டுக் கேட்டு வாங்க வேண்டியிருக்கிறது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கருநாடக ராஜ்யத்தில் போய்க் கேட்டு தண்ணீர் வரவேண்டியிருக்கிறது. எனக்கு நினைவு வருகிறது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் பயங்கரமான வெள்ளம் வந்தது. திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் எங்கே பார்த்தாலும் வெள்ளக்காடாக இருந்தது. எங்கு பார்த்தாலும் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது அந்தக் காலத்திலேயே. அந்த மாதிரித் தண்ணீரைக் கண்ணாலும் இப்போது நாம் பார்ப்போமோ என்ற நிலைதான் இருக்கிறது. அந்த அளவில் இன்று விவசாயிகள் பிரச்சினை நாட்டிலே இருக்கிறது. கவர்னருடைய உரையிலே உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கொடுக்கப்போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே நுகர்வோர்களுக்கும் விலை ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையைச் சமாளிக்க அந்தக் காலத்திலே ஏதோ சப்சிடி கொடுக்கின்ற முறைதான் கொண்டிருந்தார்கள். நாட்டிலே கவர்னர் ஆட்சியிலே குவிண்டாலுக்கு ரூ. 100, ரூ. 95 என்று விலை இருந்தது. அந்த விலைக்கு வாங்கிக் கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட ரூ. 65-க்குக் குறையாமல் இருந்தது. இப்போது பல லட்ச ரூபாய் நஷ்டமாகிவிட்டது. இப்போது

விளைச்சலே இல்லை. விலையைப்பற்றியும் கவலையில்லை. உற்பத்தியாளர்கள் சாகுபடிக்குச் செய்கின்ற செலவுக்குகூட கட்டுப்படியாகவில்லை. மற்ற பொருள்கள் சாகுபடி செய்யலாமா என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். தண்ணீர்க் கஷ்டம் நிரந்தரமாக வந்துவிடும் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு என்ன என்ன சிரமங்கள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவைகளை நீக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 15-ந் தேதி தண்ணீர் திறந்துவிட்டால், அந்த மாதம் போய்விடும். விவசாயிகள் நாற்று போட முடியாது. அதற்குப் பிறகு அவர்கள் என்ன செய்ய முடியும்? ஆடி மாதத்திலேதான் அடுத்த போகம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நிறைய நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் விவசாயம் செய்கின்றவன். சர்க்காரைக் குறை சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த நிலைமைகளை உணர்ந்து சர்க்கார் உற்பத்தியாளர்களுக்குக் கணிசமான உதவிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-10)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, இரண்டு உறுப்பினர்களும் உச்ச வரம்புக்கு உள்ளே வைத்திருக்கிறார்களா? அதிகமாக வைத்திருக்கிறார்களா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர்:** உச்ச வரம்பு வந்த பிறகு அதிகமாக வைத்திருக்க முடியுமா? தஞ்சை மாவட்டக்காரர்கள்தான் ஆயிரம் வேலி, இரண்டாயிரம் வேலி என்று வைத்திருப்பதாக எங்கும் பேசாக இருக்கிறது. அதைப் பார்த்துத்தான் எல்லா விவசாயிகளும் கற்றுக்கொள்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர்:** நேரம் கொஞ்சம் அதிகமாகத்தான் தரவேண்டும். விவசாயிகளின் கஷ்டத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் நிலவரியை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** சார், நான் நிலவரியை அதிகமாக்க வேண்டுமென்று சொல்லவேயில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர்:** நிலவரி குறைவாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்ல முடியுமா?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** திரு. தாமோதரன் அவர்கள் சொல்லியது, நிலவரியை அதிகப்படுத்த முடியாது, ஏனென்றால் அதற்கும் பிரஷர் உண்டு என்பதுதான்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர்:** அவர் சொல்லியதை நீங்கள் தமிழில் சொல்லியதற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) எட்டு ரூபாய், பத்து ரூபாய் தண்ணீர்த் தீர்வை, சர்சார்ஜ் எல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது, நிறைய வந்து விடுகிறது. இந்த சர்க்கார் வந்து பத்து நாட்கள்தான் ஆகிறது. கவர்னர் உரையில் பரிகாரம் காணவில்லை என்றுதான் சொல்கிறேன். நெல் விலை ஏதாவது கூடுதலாகக் கொடுத்தால்தான், குவிண்டாலுக்கு ரூ. 120 கொடுத்தால்தான் கட்டுப்படியாகும். லட்சக்கணக்கான விவசாயிகள் நெல் விலை கட்டுப்படியாகாமல் கொஞ்சம் வாழை போடுகிறார்கள். பம்பு செட் வைத்துப் பார்த்துக்கொள்கிறார்கள். கரும்பு நிறையப் போடுகிறார்கள். கரும்புக்கு சரியான விலை இல்லை. போராட்டம் நடக்கிறது இப்போது. அமராவதி ஆலைக்குப் போனால் ரூ. 150. மற்ற இடங்களில் அது இல்லை. கூட்டிக் கொடுத்தால் தான் விவசாயிகளுக்கு உற்சாகம் வரும். உற்பத்தி பெருகும். கல்யாணம் பண்ணினால்தான் பிள்ளை பிறக்கும். (சிரிப்பு) உற்பத்தி செய்தால் தானே பண்டங்கள் கிடைக்கும்? பல தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். தொழிற்சாலைத் தொழிலாளிகளுக்குச் செலவழிக்கும்போது, ஏன் விவசாயிகளுக்குக் கூடாது? வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதைப் பார்த்தால், விவசாயத்தில் அதிகம் பேர் ஈடுபடுவார்கள் என்று தெரிகிறது. அவசியம் ஏற்படும். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பார்த்தால், காலையிலும் மாலையிலும் கூட்டம் கூடிக்கொண்டுதான் இருக்கிறது. கேட்டால் 1972-ம் வருஷம் போடுகிறோம், 1973-ம் வருஷம் போட்டுக்கொண்டிருக்கிறது என்கிறார்கள். இதில் டிகிரி ஹோல்டர்களுக்குத் தனி எக்சேஞ்சு இருக்கிறது. அந்த இடத்திலும் கூட்டம் குறைவாக இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறோம். கிராஜுவேட்களுக்குப் போன அமைச்சர் அவையில் ஏதோ 120, 140 என்று சம்பளம் கொடுத்தார்கள். வருஷா வருஷம் நிறைய வந்துகொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள் நகரத்திற்கு வந்துவிடுகிறார்கள். பொம்மனாட்டிகள் இப்போது நிறையப் படிக்கிறார்கள். தெருவில் டெல் பாட்டத்தைப் போட்டுக்கொண்டு ஆண் பெண் இருவரும் நடக்கிறார்கள். ஆணா பெண்ணா என்று தெரியவில்லை; கிட்டே போன பிறகுதான் தெரிந்துகொள்ள முடிகிறது. (சிரிப்பு).

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கண்ணாடி அணிந்திருந்தார்களா பார்க்கும்போது? இல்லையா? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : படிக்கிறபொழுது தான் கண்ணாடி தேவை. மற்ற வேலைகளில் தேவையில்லை. சீட்டித் துணியைக் கிழித்துப் பையன்கள் கைலியாகக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கவர்னர் உரையிலே கருத்துச் சொல்ல வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நேற்று கவர்னர் உரையில் எல்லோரும் எதைப் பேசினார்கள் ? அவரவர்கள் அரசியலைத்தான் பேசினார்கள். அதற்குத் தாங்கள்தான் அவகாசம் கொடுத்தீர்கள். என்து நண்பர் திரு. சி. வி. ராஜ கோபால் அவர்கள் குடுமியைப்பற்றியெல்லாம் பேசினார். அந்தக் காலத்து நிலைமைகளைப் பேசினார். அதைப்பற்றி நான் கோபித்துக்கொள்ளவில்லை. வேலை யில்லாத் திண்டாட்டம் போவதற்கான உருப்படியான செயல் கவர்னர் உரையில் இல்லாதது குறித்து வருத்தப்படுகிறேன். எல்லோரும் ஸ்ட்ரைக்கில் ஈடுபடு கிறார்கள். அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை எட்டு பைசாவி லிருந்து பத்து பைசாவாக உயர்த்தியதும் போராட்டம் நடத்தினார்கள். துப்பாக்கி சூடெல்லாம் நடந்தது. பல பேரைச் சுட்டார்கள். இப்போது விவசாயிகள் எங்கேயிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நெருக்கடி நிலைமை இருந்ததால், ஒன்றும் செய்ய முடியவில்லை. நெருக்கடி நிலைமை போன பிறகு, அந்த உரிமைகள் வந்த பிறகு, நல்ல மாதிரி நடந்துகொண்டிருக்கிறது. நெருக்கடி காலத்தில் பட்ட அவஸ்தையைச் சொல்ல முடியாது. 30-ம் தேதி அமைச்சரவை கலைக்கப்பட்டது. 1-ம் தேதி காலை வெளியே செல்கிறேன். போலீஸ் வான்கள் எங்கு பார்த்தாலும் சுற்றுகின்றன. அதிலிருந்து திபு திபுவென்று வடநாட்டுப் போலீஸ் வந்து இறங்குகிறது. கண்ணில் பட்டவர்களை யெல்லாம் பிடித்து 'கும்கும்' என்று நாலு குத்துவிட்டு, அப்படியே அள்ளித் தூக்கி வானில் போட்டார்கள். வெளியே வருவதற்குக் கூட அச்சமாக இருந்தது. நாங்கள் இரண்டு மூன்று பேர் போய் டி. எஸ். பி.யைப் பார்த் தோம். சொன்னோம். இல்லாவிட்டால் அந்தக் குத்து எங்கள் மேலும் விழும் போல் இருந்தது. எங்கள் ஊரில் உள்ள சத்திரங்களையெல்லாம் காலி செய்து வைத்திருந்தார்கள். நாங்கள் போய்க் கேட்டோம். எங்களையும் பிடிக்கப் போகிறீர்களா என்று. உங்கள் பெயரும் செட்டியார் பெயரும் லிஸ்டில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பொம்பலூர் ஊராட்சித் தலைவரைக் கொண்டுபோய் விட்டார்கள். மனிதர்களை அடிப்பது போல் அடிக்கவில்லை. மரக்கட்டையாக நினைத்து அடித்தார்கள். அடித்து அடித்து உள்ளே கொண்டு போய்த் தள்ளினார்கள். வேண்டாதவர்கள் யாராவது இருந்தால், அவன் வீட்டுச் சுவரில் ராத்திரியோட ராத்திரியா போய் "இந்திரா காந்தி ஒழிக" என்று எழுதிவைத்துவிட்டாலே போதும். மறுநாள் அந்த வீட்டுக்காரரை





இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள். "ஐயா, எனக்குத் தெரியாது யார் எழுதினார்கள் என்று, பகலிலே எழுதினாலும் கண்டுபிடிக்கலாம். இரவில் எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள்", என்று சொன்னாலும் கேட்பதில்லை. "உன் வீட்டுச் சுவற்றில்தானே எழுதியிருக்கிறது. வா" என்று கொண்டு போகிறார்கள். வாரக் கணக்கில் உள்ளே வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினருடன் சேர்த்து இன்னும் ஐந்து பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடித்துக் கொண்டால் நல்லது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நெருக்கடி நிலைமை முடிந்தது. ஆனால் அடிபட்டவன் பட்டவன்தான். பரிகாரம் இல்லை. வந்தது உள்நாட்டுப் போலீசாக இருந்தாலும், அவர்களுக்குத் தெரியும். இன்னின்னாருக்கு உடம்பு தாங்காது-வலிக்கும் என்று. வந்தது வெளி ஊர்க்காரர்கள்-வடநாட்டுக் காரர்கள். அவர்கள் சொல்வது எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் பேசுவது அவர்களுக்குப் புரியவில்லை. எங்கள் ஊர் சத்திரங்கள் எல்லாம் ரொம்பி விட்டது. கோதுமை, மூட்டை மூட்டையாக இறங்கியது. நெய் டின் டின்னாக, வெங்காயம், உருளைக்கிழங்கு எல்லாம் மூட்டை மூட்டையாக வந்து இறங்கின. பார்பர் எல்லாம்கூட விமானத்தில் கொண்டுவந்து இறக்கினார்கள். கோயமுத்தூர், திருச்சி, மதுரை பூராவும் நிரம்பிவிட்டது.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். பஞ்சாயத்து யூனியன், முனிசிபல் சேர்மன் போன்ற பதவிகளில் இருப்பதில் உள்ள சிரமங்கள் எல்லோ ருக்கும் தெரியும். இருந்தாலும் நிற்காமல் இருக்க முடியவில்லை. அவர்களுக்குக் கொஞ்சமாவது அதிகாரம் கொடுக்க வேண்டும். மதுரை மேயராக இருந்த பெரியவர் முத்து அவர்களுக்குத் தெரியும். போடிநாயக்கனூர் தலைவர் இருந்தார். ஆளும் கட்சிக்கும் அவருக்கும் தகராறு. அந்த விவகாரம் ஐகோர்ட் வரையில் போனது. அவரும் ஒரு ஆக்சிடெண்டில் இறந்துவிட்டார். கமிஷனரிடம் பைலைக் கேட்டால், அவர் கொடுப்பதில்லை. ஆளும் கட்சிக்கு மெஜாரிடி இருக்கிறது. அதிகாரம் இல்லை. சேர்மன் என்று கவுரவமாக எழுதி ஒட்டிக்கொள்ளலாமே தவிர, வேறு ஒன்றுமில்லை. தீர்மானம் போட்டால், நிறைவேற்ற வேண்டியது கமிஷனர். ஆளும் கட்சி எதிர்க் கட்சியாக இருந்தால், ஒன்றுமே செய்ய முடியாது. அதிகாரங்களைத் தருவதாக சட்ட சபையில் சொல்லியிருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தலுக்கு ஒரு ஓட்டு, சட்ட சபைக்கு ஒரு ஓட்டு, நகரசபைத் தலைவருக்கு ஒரு ஓட்டு, பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு ஒரு ஓட்டு என்று வைத்துவிட்டால், நன்றாக இருக்கும்.

(பிற்பகல் 6-20)

1977 ஆம் ஆண்டே தேர்தல் ஆண்டு போல இருக்கும் என்று நினைக்கிறேன். சுவர்களை எல்லாம் இன்னும் அழிக்கவே இல்லை. அவைகளை முனிசிபல் தேர்தலுக்காக அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். "எங்கள் சின்னம், ஏழைகள் சின்னம்; எங்கள் சின்னம், விவசாயிகள் சின்னம்" என்று எல்லாக் கட்சியினரும் எழுதுகிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களுடைய சின்னமும் ஏழைகள் சின்னம் என்கிறார்கள். ஒரு கட்சி கூட பணக்காரர்கள் சின்னம் என்று எழுதி வைக்கவில்லை. இப்போது முதற்கொண்டே வரக்கூடிய நகர மன்றத் தேர்தலுக்காகச் சுவர்களை எல்லாம் பிடித்துக்கொண்டுவிட்டார்கள். ஆக அமைச்சரவையை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பஞ்சாயத்து, நகர்மன்றத் தலைவர்களுக்குக் கொஞ்சம் அதிக அதிகாரம் கொடுங்கள். எல்லாம் இப்போது கமிஷனர்கள் கையில்தான் இருக்கிறது. அதில் கொஞ்சம் தலைவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். "Punishment, Transfer, Prosecution" போன்ற அதிகாரங்களை நகரசபைத் தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டும். எங்களால் ஒன்றும் பண்ண முடியவில்லை. உள்ளபடியே 15 ஆண்டுகளை ஸ்ரீரங்கம் 'சேர்மென்'ஆக ஓட்டிவிட்டேன். ஆனால் நகரசபை அதிகாரிகள் செய்யும் லஞ்சத்தை ஒழிக்க முடியவில்லை. 'டவுன் ப்ளானிங் செக்ஷன்' என்று ஒன்றிருக்கிறது. அதன் விதிகளை மீறி வீடு கட்டக்கூடாது. ஆனால் அதை மீறி கட்டாதவர்கள் யாரும் கிடையாது. அவர்கள் கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எப்படிக் கட்டுகிறார்கள்? யார் அதுபற்றி, எப்படி நடவடிக்கை எடுப்பது? 'டவுன் ப்ளானிங் ஆபீசர்' இடம் என்னை ப்யூன் வேலையில் சேர்த்துவிடுங்கள் என்று எத்தனை சிபாரிசு? என்ன காரணம்? ஆகவே தலைவர்களுக்கு அதிகாரம் கொடுத்தால் தான், இதையெல்லாம் ஒடுக்க உதவியாக இருக்கும். நகரசபைத் தலைவர்களிலும் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. அதற்காக ஒரு கமிஷன் போட்டார்கள். என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆகவே தலைவர்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகாரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விலைவாசி ஏறிவிட்டது குறித்தும், எண்ணெய் விலை குறித்தும் நண்பர் திரு. கோ. சி. மணி ரொம்ப நன்றாகப் பேசினார். கலப்படம் எதிலே இல்லை? அரசியலில் கூட கலப்படம் வந்துவிட்டது. எல்லா இடங்களிலும் அரசியல் கட்சிகள் ஒன்று சேருகின்றன. உணவு கலப்படம்பற்றி இங்கே அழகாகக் குறிப்பிட்டார்கள். கடலெண்ணெய் விலை குறைந்தபாட்டைக் காணோம். முன்பெல்லாம் நல்லெண்ணெய் அதிக விலை விற்கும், கடலெண்ணெய் விலை குறைவாக இருக்கும். இப்போது கலிகாலம்; கடலெண்ணெய் விலையேறி, நல்லெண்ணெய் விலை அதை விடக் குறைவாக இருக்கிறது. உணவுப்பொருள்கள் இறக்குமதியாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அது எங்கேயிருக்கிறது என்று





தெரியவில்லை. சமுத்திரத்தில் இருக்கிறதா, அல்லது வெளிநாட்டிலேயே இருக்கிறதா? நம் நாட்டிற்கு வந்த கடலெண்ணெயில் பெரிய ஊழல் நடந்ததாகவும், 230 கோடி ஊழல் என்றும் பத்திரிகைகளில் வந்தது. 230 கோடி என்றால் எத்தனை பேரல் இருக்குமோ? ஊழலே 230 கோடியென்றால், எவ்வளவு வந்திருக்கும்? அது எங்கே வந்தது, என்னவாயிற்று என்று நமக்குத் தெரியவில்லை.

அடுத்து, கல்வியைப்பற்றிச் சொல்லியாக வேண்டும். எந்தக் காலேஜிலும் இடம் கிடைப்பதில்லை. எம்.எல்.ஏ. ஆஸ்டலில், பையன்-தந்தை, பையன்-தந்தை என்ற விதமாகத்தான் சூழ்ந்துகொண்டு சிபாரிசுக்காக வருகிறார்கள். ப்ரொபெஷனல் காலேஜில் இவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறான், இண்டர்வ்யூவில் இவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறான் என்று மக்களுக்குத் தெரியும்படியாகப் போட்டுவிட்டால், உண்மை நாட்டிற்குத் தெரிந்துவிடும். இப்போது ஒன்றும் தெரியமாட்டேன் என்கிறது. சிபாரிசை எந்த சர்க்கார் வந்தாலும் குறைக்க முடியாது. ஆகவே மார்க் எவ்வளவு என்ற விவரத்தைத் தெரியும்படியாகச் செய்துவிட்டால், மக்கள் தெரிந்துகொள்ள முடியும். ஜனநாயக சர்க்கார் என்று சொல்கிறோம். ஜனநாயகத்தை வளர்க்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். நான் உங்களை மட்டும் சொல்லவில்லை. நாங்களும் இதைத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். திருச்சியில் ஒரு காலேஜ் இருக்கிறது. எப்போது பார்த்தாலும், அங்கே நெருக்கடி தான். நாட்டிலே நெருக்கடி நிலை போன பிறகும், படிப்பு நெருக்கடி இன்னும் போகவில்லை. முன்பு பள்ளிக்கூடத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை. இப்போது ஸ்திரீ சாதிகளும் படிப்பதால், அவர்களுக்கு எப்படியாவது இடம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். ஸ்திரீ சாதி என்றால் பெண்கள், அதாவது தமிழில் மகளிர்களுக்கு முக்கியமாக வாய்ப்பு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆக, கவர்னர் உரையில் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. இவைகளை நிவர்த்தி செய்ய பட்ஜெட்டில் ஏதாவது செய்ய வேண்டும். அதிகாரிகளைப்பற்றியெல்லாம் இங்கே சொல்லப்பட்டது. எங்கள் பகுதியில் இரண்டரை கோடி ரூபாய்க்கு ஒரு 'Dam' கட்டப்பட்டது. அதிலே ஒரு வாய்க்கால் எங்கள் ஊர்ப்பகுதியிலே இருப்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அதற்கு ஒத்துக்கொண்டார்கள். அதிகாரிகள் செய்வதற்கு அமைச்சர்களைக் குறை சொல்ல முடியாது. இங்கே மராமத்து அமைச்சர் இருக்கிறார். அந்த வாய்க்காலைச் சேர்த்தால், அங்குள்ள [illegible] ஏக்கர் பாசன வசதி பெறும். அந்த Dam இன்னும் திறக்கப்படவில்லை. அநேகமாக நீங்கள் தான் அதனைத் திறப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இதைச் சேர்த்துக்கொண்டால், அந்த அய்க்கட்டுப் பகுதிகள் பயன்பெறும். சமயம் [illegible]

வெள்ளம் இருக்கும்போது திருச்சி காயும். அப்போது இதிலே தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டால், நல்ல உதவியாக இருக்கும். ஆகவே இதனையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு சந்தோஷமான செய்தி. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பலமுறை இங்கே முதலமைச்சராக இருந்தும், அகில இந்திய ரீதியில் காங்கிரஸ் தலைவராக இருந்தும், ஏழைகளுக்கு தன்னுடைய உடலை அர்ப்பணித்துத் தியாகம் செய்த தலைவர். அந்தப் பெருந்தலைவருக்கு இந்த மன்றத்தில் படம் வைக்கவில்லை. அவருடைய படம் இங்கே தெரியாமல் இருந்தது. இப்போது அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு, புதிதாக வரப்போகிற ஜனாதிபதி அவர்கள் அதனைத் திறக்க, ஏற்பாடு செய்வதைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. ஆர். தாமல் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரையிலே நன்றி தெரிவிக்கும் விதத்தில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே நடந்த தேர்தலில் மக்களது பெருத்த ஆதரவையும், தீர்ப்பையும் பெற்று ஆட்சிப் பொறுப்பில் நிலையாக, வலுவாக அமர்ந்துள்ள புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும் தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகத்தின் சார்பிலே—ஏனைய ஆசிரியப் பெருமக்களின் சார்பிலே பாராட்டுதல்களை, வாழ்த்துதல்களை முதலாவதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சரவையிலே அறிவாற்றல், நேர்மை, தொண்டுள்ளம், மக்களுடைய உணர்வுகளை அறிந்து, அவர்களுடைய நிலைமைகளை உணர்ந்து பணியாற்றக் கூடிய அனுபவம் மிக்க, தனித்தனி துறைகளில் தனித்திறனும், தகுதியும் பெற்ற பலர் இடம் பெற்றிருப்பது—கடந்த 15, 16 மாத காலமாக தமிழகத்திலே சிறப்பாக ஜனாதிபதி ஆட்சி நடந்த காலத்தில் மக்களுக்கும், நிர்வாகத்திற்கும் ஏற்பட்ட இடைவெளியைப் போக்கவும், இந்த அமைச்சரவையின் புதிய திட்டங்களான லஞ்ச ஊழல், வீண்விரயம், பாரபட்சம் ஆகியவைகளை ஒழித்தல், விவசாயப் பெருமக்களுக்கு நல்ல நீர்வசதி, பாசன வசதி செய்தல், கூட்டுறவை வளர்த்தல், ஏழையெளிய மக்களுக்கு சட்ட உதவி கொடுத்தல் போன்ற நல்ல திட்டங்களைத் திறம்பட நிறைவேற்ற உதவி செய்வதோடு கூட நிர்வாகம் நேர்மையாகவும், நீதியாகவும் நடைபெற வேண்டியது உண்மை என்ற நிலைமையில் என்னுடைய வாழ்த்துக்களை இந்த அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(பிற்பகல் 6-30)

(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

லஞ்ச ஊழல் பற்றி பலரும் பல கோணங்களில் பேசுவதைக் கேட்டேன். என்னுடைய கருத்து ஒன்றையும் அதில் கூற விரும்புகிறேன். லஞ்ச ஊழல் என்பது எல்லா காலங்களிலும், எல்லா நிலைகளிலும் காணப்படும் ஒன்றாக இருக்கிறது. லஞ்ச ஊழலை உருவாக்குவது மூன்று நிலைகள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்நியச் செலாவணி நிலை நாட்டுவதற்கு லஞ்ச ஊழல் காரணமாக இருக்கிறது. சலுகைகளைப் பெறுவதற்கு லஞ்ச ஊழல் காரணமாக அமைந்திருக்கிறது. மூன்றாவதாக, பிரச்சினைகளைத் துரிதமாக, வெகுவாகத் தீர்க்காத காரணத்தாலே, நாட்டிலேயுள்ள நிர்வாகத்திலே, எல்லாத் துறைகளிலும் லஞ்ச ஊழல் நீடிக்கிறது. ஆங்கிலத்தில் "Delay breeds Corruption" என்று சொல்லுவார்கள். அதைத் திருத்தி "Delay means Corruption" என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நல்ல எண்ணத்துடன், உயர்ந்த சிந்தனையுடன் நிர்வாகம் எல்லா நிலைகளிலும் தாமதத்தைப் போக்கும் உறுதியுடன் நடவடிக்கைகளை எடுத்தால், நிச்சயமாக இந்த அரசு புனிதமானதொரு காரியத்தைச் செய்ததாகும். தமிழகத்தில் தேர்தலுக்கு முன்பாகவே, இப்போது ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள மாண்புமிகு முதல்வரவர்கள், ஆசிரியர்கள் பிரச்சினையை நன்கு ஆய்வு செய்து, நல்ல முடிவுகள் அறிவிக்கப் படுமென்று உறுதி கூறியதற்கு ஆசிரியர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகக் கல்வித் துறையிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. 1972-73 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு சில பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டுமென்ற நோக்குடன் போராட்டத்தில் ஈடு பட்டார்கள். ஆனால் அந்தப் போராட்டத்தின் விளைவாக, தீர்வு காண முடியாத நிலையில் மேலும் பல சிக்கல்கள் உருவாயின. 1973 ஆம் ஆண்டு மதுரையில் பட்டதாரி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்த போது, இப்போது ஆட்சிப் பொறுப்பில் முதல்வராக அமர்ந்திருக்கிறவர்கள், அவர்களை வெற்றி பெற வாழ்த்தியதை நினைவுக்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அன்று நடந்த போராட்டத்தின் விளைவாக [illegible], புதிய பிரச்சினைகளும் உருவாயின. [illegible] அவர்கள் பணிக்குச் செல்லாத காலம் 15 அல்லது 16 நாட்கள் அந்தச் சமயத்தில் இருக்கும். அது குறித்து பதிவேடுகளில் பதியவைத்து, [illegible] காலத்தில் அந்தக் காலத்திற்கு ஊதிய உயர்வை இழந்தனர். அவர்கள் மன்னிப்புக் கடிதமும் எழுதிக் கொடுத்தார்கள். [illegible] அது ஒரு தடையாக, [illegible] மன்னிப்புக் கடிதத்தை [illegible] குறிப்பை நீக்கவும் ஆசிரியர்கள் சார்பில் [illegible]. 'ஏ' பிரிவு துறையிலே இரண்டு விதமான பள்ளிகள் இயங்கி வருகின்றன.

பள்ளிகள் முழுவதும் அரசுப் பள்ளிகள். 'பி' பிரிவு பள்ளிகள் அனைத்தும் முந்தைய ஜில்லா போர்டு பள்ளிகள். ஒரு பிரிவு இணைப்பு கூடாதென்றும், மற்றொரு பிரிவு இணைப்பு வேண்டுமென்றும் கூறுகிறார்கள். ஒரு பிரிவினர் இணைவதால் வாய்ப்புக்கள் குறைந்து விடுமென்றும், மறு பிரிவினர் இணைந்தால் வாய்ப்புகள் நிறைய கிடைக்குமென்றும் கூறுவதால், அங்குள்ள ஆசிரியர்களிடையே பொறாமையும், எரிச்சலும், பகையும் வளர்ந்து வருகிறது. இதனால் கல்வித் துறையிலே கல்வியின் தரம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வெகு விரைவில் இந்த இணைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 1-4-1970 முதல் 3-3-1973 வரை நியமிக்கப்பட்ட 706 பட்டதாரி ஆசிரியர்களின் பணிக் காலம் வரன் முறைப்படுத்தப்பட்டு, நிரந்தரம் செய்யப்படுவார்களென்று அரசாணை இருந்தும், இன்றும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் கடந்த ஏழு ஆண்டுகளில் ஒரேவொரு ஊதிய உயர்வு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நிலையை உணர்ந்து அவர்களுக்குத் தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் தேர்வு ஆணைக் குழு இந்த ஆசிரியர்கள் தகுதியுடையவர்கள் அல்லவென்று கூறும் நிலையை மாற்ற வேண்டும். முந்தைய அரசு பட்டதாரி ஆசிரியர்களின் பணிக் காலம் வரன்முறைப்படுத்தப்படுமென்று கூறியுள்ளதால், அவர்கள் பணியை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே மூன்று ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களிருந்தால், அவர்களை நிரந்தரமாக்கக்கூடிய ஒரு உத்தரவையாவது அல்லது ஒரு விதிமுறையையாவது வகுக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலுமுள்ள ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாத அவல நிலைதான் இருந்து வருமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தனியார் பள்ளிகளிலும், ஆசிரியர்கள் பெருந் தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். கல்வித் துறையிலே, சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளை ஒன்றும் செய்ய முடியாது; அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

"All minority communities whether based on religion or language shall have the right to establish and administer institutions of their choice."

என்று அரசியல் சட்டக் குறிப்பு எடுத்துக்காட்டாக வைக்கப்படுகிறது.

"We do not have any objection to these minorities establishing and administering institutions. I also belong to a minority community but as a representative of the teaching community I strongly feel that the Government should come forward to see that the teachers enjoy the rights of security of service."

[illegible]





எந்த நிலையிலும் தனியார் பள்ளியை நடத்துபவர்கள் மைனாரிடிகளாக இருந்தாலும் சரி, இதர பள்ளிகளாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்புக் கொடுக்க ஒரு விதி இருக்க வேண்டும். காரணம் என்னவென்றால் நிர்வாகத்தினுடைய சுதந்திரத்தையோ, பொறுப்பையோ ஆசிரியர்கள் கேட்கவில்லை. வேறு எந்த ஒன்றையும் ஆசிரியர்கள் வேண்டவில்லை. பணிப் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். அரசு முழுக்க முழுக்க ஊதியமும், அகவிலைப்படியும் ஆசிரியர்களுக்காக வழங்கும்போது இப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. பள்ளி நிர்வாகிகளுக்கு அந்த அதிகாரம் வழங்கப்படக்கூடாது. ஆசிரியர்களுக்கு முழுப் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும். மதுரையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். தெற்கு வாசல் நாடார் உயர்நிலைப் பள்ளியில் சில குறைபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. 1974 ஆம் ஆண்டிலே உண்டாக்கி, 1-12-1975-ல் அமுலாக்கப்பட்ட சட்டத்தில் வகுக்கப்பட்ட விதிமுறைகளின்படி 18 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர் ஒருவர் அந்தப் பள்ளியில், பள்ளிக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நிர்வாகத்திலே ஏற்பட்ட சில குறைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதன் முடிவு என்னவென்றால், அந்த ஆசிரியர் மீது நூற்றுக்கும் அதிகமான குற்றச்சாட்டுக்கள் உருவாக்கப்பட்டு, அவருக்கு சாட்சியாக இருந்த ஒரு காவற்காரரும், அவரும் கடந்த ஒன்பது மாத காலமாகத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். "நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை, காரணம் அவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள்" என்று கல்வித் துறையில் சொல்கிறார்கள். இந்த அரசு லஞ்ச ஊழல் ஒழிப்பதை தன்மையானதொரு குறிக்கோளாக, கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கும்போது, பள்ளிகளில் இத்தகைய தவறுகள் ஏற்படாமல் தடுத்து, ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு ஏற்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் பாரபட்சமென்று சொல்லக்கூடிய அளவுக்கு, நிர்வாகமானது அரசுப் பள்ளிகளுக்கும், பிற பள்ளிகளுக்கும் வேறுபாட்டை உண்டாக்கியிருக்கிறது. சில்லரைப் பணியாளர்களாக தனியார் பள்ளிகளில் பணியாற்றுபவர்களின் பணி இன்னும் வரன்முறைப்படுத்தப்படவில்லை. கடந்த 15-1-1977, பொங்கல் தினத்தன்று இதர பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு வளர் ஊதியம் வழங்கப்பட்டுவிட்டது. தனியார் பள்ளிகளிலுள்ள சில்லரைப் பணியாளர்கள் மட்டும் வளர் ஊதியம் பெறாத நிலையில் வருந்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறையிலேயுள்ள பள்ளிகளிலேயும், தனி அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் மாநகராட்சிகளிலுமுள்ள கல்வித்துறை, விதிமுறைகளுக்குப் புறம்பாக நடந்து வருகின்றது. 1975-76 ஆம் ஆண்டில் பணியாற்றிய ஆசிரியர்கள் 1976-77 ஆம் ஆண்டில் பணி நீக்கம் செய்யப்படக் கூடாதென்று

கல்வித்துறை ஆணை பிறப்பித்தது. ஏனென்றால் 10-வது வகுப்பில் பணி யாற்றுகிற ஆசிரியர்களுக்கு விருப்பப் பாடம் இல்லாததால் பணி குறையக் கூடிய நிலையில், வேலை நீக்கம் செய்யக்கூடாதென்று கல்வித்துறை ஆணை பிறப் பித்தது. ஏதாவது அசந்தர்ப்பச் சூழ்நிலை ஏற்படுமென்றால், மாவட்டக் கல்வி அதிகாரிக்குத் தெரிவித்து, அவரது மாற்றுப் பணி உத்தரவைப் பெற வேண்டு மென்று சொல்லியிருந்தும், மதுரை மாநகராட்சியில் பல ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் நம்முடைய தமிழ் நாட்டில் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டும், மதுரை மாநக ராட்சியில் அநேக பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத நிலையிலே தேர்வு உயர்வு கொடுத்துள்ளார்கள். அதைப்பற்றி எடுத்துச் சொன்னோம். உடனடியாக என்ன செய்தார்களென்றால், நான்கு, ஐந்து உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களை மற்ற பள்ளிகளிலிருந்து எடுத்து, இல்லாத பள்ளிகளுக்குப் போட்டார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் இருக்க வேண்டுமென்று ஆணையிருந்தும், பல பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இன்றைக்கு பல உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் படித்துவிட்டு, வேலை யில்லாமல் இருக்கிறார்களென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

இந்த நேரத்திலே 1978 ஆம் ஆண்டிலே நம்முடைய தமிழகத்திலே 10 ஆண்டு கல்வித் திட்டம் வருகிறது. ஒரு வகுப்பு, 11-வது வகுப்பு தவிர்க்கப்படுகிறது. 11-வது வகுப்பு தவிர்க்கப்பட்டால், 1977 இறுதி ஆண்டுத் தேர்விலே ஆறு லட்சம் மாணாக்கர்கள் எழுதுவார்கள். இதில் மூன்று லட்சம் மாணவர்கள் பள்ளிகளிலே குறைந்து போகிறார்கள். மூவாயிரம் பள்ளிகளில் மூன்று லட்சம் பேர்கள் குறைந்து போகிறார்கள். ஐந்து ஆயிரம் ஆசிரியர்கள் பணி இழக்கும் நிலை. இப்போது இருக்கிற அரசு அதற்கு நல்ல திட்டம் வகுக்க வேண்டு மென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய அமைச்சரவையிலே குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் மனம் நிம்மதி அடையும்படி ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், மாநிலக் கல்விப் பணியிலே தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்ற அவர்களே இங்கு கல்வி அமைச்சராகியிருக்கிறார். அவர் கல்வித் துறை யிலே உள்ள சட்ட திட்டங்களை அறிந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக சட்டம் தெரிந்த நிபுணர் அவர்கள் ஆசிரியர்கள் குறைகளைப் போக்க வேண்டும். அவர்கள் ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு இழத்தலைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு எங்களுடைய ஒத்துழைப்பு உண்டு என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



கிராமப்புறத்திலே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இருக்கிற திட்டத்தைப் பாராட்டுகிறேன். அடுத்து, ஆசிரியர் பயிற்சி பெற்ற இளைஞர் களும், பட்டதாரிகளும், இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களும் வேலை இல்லாது தவிக்கிறார்கள். அவர்களையெல்லாம் அரசு மனதில் கொள்ள வேண்டும். மத்திய அரசு சமீப காலத்திலே ஒரு திட்டத்தை வகுத்து, வருகிற 10 ஆண்டுக் கால அடிப்படையிலே எழுதப் படிக்கத் தெரியாதவர்களில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். அந்தத் திட்டத்தை நம்முடைய அரசும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கிராமமாக இருந்தாலும் நகரமாக இருந்தாலும், பயிற்சி பெற்ற ஆசிரியப் பெருமக்களையும், வேலையில்லா இளைஞர் அணியினரையும் பணி யில் அமர்த்த வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக் கழக மானியக் குழு எடுத்த பரிந்துரைகளை நிச்சயமாக அமல் நடத்த வேண்டிக் கொள்கிறேன். இந்த அரசு ஊதியக் குழுவை அமைக்கப் போகிறது என்று அறிந்தேன். அப்படி பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கும் அலுவலர் களுக்கும் ஒரு குழு அமைக்க வேண்டும். 1970 ஆம் ஆண்டு வெளி வந்த ஊதிய விகிதத்தின் குறைபாடுகளும், முரண்பாடுகளும் ஊதிய வேறுபாடுகளும் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஊதியக் குழு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நிதியமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக இந்த அரசினுடைய மதுவிலக்குத் திட்டத்தை உண்மையாகவே பாராட்டுகிறேன். கிராம மக்களிடையே வேலை வாய்ப்பு ஏற்படுத்துவது, கிராம மக்களுக்கு எழுதப் படிக்க ஏற்பாடு செய்வது, மதுவிலக்கைத் தீவிரமாக அமல் நடத்துவது இவைகள் எல்லாம் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன். வணக்கம்.

* திரு. அ. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அமைச்சரவை இந்தத் தமிழகத்திற்குப் புதிதாக இருக்கிறது என்றாலும்கூட, அவர்கள் வாக்களித்த மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின் றார்கள். இலட்சோப இலட்சம் மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த கவர்னர் உரையில் இல்லாதது பெரும் அதிருப்தியாக இருக்கிறது என்பது உண்மைக்குப் புறம்பானதாக இல்லை என்று கருதுகிறேன்.

1967-ல் அமைந்த அமைச்சரவையில், மாண்புமிகு முதல்வராக திரு. அண்ணா அவர்கள் இருந்தார்கள். அன்றைக்கு ஒரு திட்டம் சொன்னார்கள். அந்தத் திட்டம்பற்றி மக்களிடத்திலே பரவி இருந்தது. அரிசியைப் பொறுத்த வரையில், அது ஒரு காட்சிப் பொருளாக இருந்த காலம் அது. அப்போது அண்ணா அவர்கள், "நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், ரூபாய்க்கு ஒரு படி அரிசி மக்களுக்குக் கிடைக்க வகை செய்வோம். நம்பி உங்கள் வாக்கைத் தாருங்கள்", என்று கேட்டார்கள். அன்றைக்கு மக்கள் அண்ணா அவர்களை ஆட்சியில் அமர்த்தினார்கள். இன்று மாண்புமிகு முதலமைச்சராக மதிப்பிற்குரிய எம். ஜி. ஆர். அவர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அவர்கள் சுற்றுப்பயணத்தின்போது, தெளிவாகக் கூட்டங்களில் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே வாகனங்களுக்கு என்று இன்சூரன்ஸ் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதுபோல விவசாயிகளுக்கும் அவர்களுடைய பயிர்ப் பாதுகாப்பு வசதி தருகிறேன் என்று சொன்னார்கள். அந்தந்தப் பகுதியிலே விவசாயப் பெருங்குடி மக்களும் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டதால்தான், நம்பியதால்தான் வாக்களித்தார்கள். அவருடைய கவர்ச்சியால்தான் அவர் ஆட்சியைப் பிடித்துவிட்டார் என்பதை நான் நம்பத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் அவருடைய வார்த்தைகளை முழு அளவுக்கு நம்பித்தான் அவரைத் தமிழகத்தின் அரியாசனத்தில் அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. நான் மிகப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் வருமுன் காப்பவனாக இருக்க வேண்டுமே தவிர, வந்தபின் காப்பவனாக இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பது பற்றி ஒன்றும் காணோம். சில நாட்களுக்கு முன்னால் விவசாயிகள் போராட்டம் நடந்தது. நான்கு ஆயிரம், ஐந்து ஆயிரம் வண்டிகளை, மாடுகளை எல்லாம் கொண்டுவந்து நிறுத்தி, அன்று முழுவதும் போராட்டம் செய்து ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறார்கள். சேலம், ராசிபுரம், திருச்செங்கோடு, கரூர், கள்ளக்குறிச்சி ஆகிய ஊர்களில் எல்லாம் போராட்டம் செய்திருக்கிறார்கள். ஊர்வலம் கூட வந்தார்கள். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றும் இன்னும் பல குறைகளையும் வைத்திருக்கிறார்கள். இது குறித்து அரசு நிபுணர்களோடு கலந்தாலோசித்து, அதற்குத் தக்க தீர்வு காணவில்லை என்பது என்னுடைய கருத்து. பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்பற்றி இந்த கவர்னர் உரையிலே ஒரு வரி கூடக் கோடிட்டுக் காட்டப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளுக்கு மட்டும் அல்ல. விவசாயத்தை நம்பி இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, அந்த ஏழை மக்களுக்கும் [illegible]



அளிக்கப்படும் என்றார்கள். இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு என்ன பாது காப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்குக் குறைந்த உற்பத்தி செய்கிறார்கள். குறிப்பாக சேலம் மாவட்டத்தில், தர்மபுரி மாவட்டத்தில் நீர்ப் பாசன வசதி இல்லை. மேட்டூரிலிருந்து வருகின்ற நீரைப் பயன்படுத்துகின்றவர்கள் தஞ்சாவூர், திருச்சி பகுதியினர்தான். ஆனால் இங்குக் கிணற்றுப் பாசனத்தைத்தான் நம்பி இருக்கின்றனர் விவசாயிகள். 100 அடி, 90 அடி தோண்டினாலும்கூட, நீர் இல்லாத நிலைமைகளை எல்லாம் நாங்கள் பார்க்கிறோம். ஜியாலஜிஸ்ட் இன்னும் 50 ஆண்டு காலத்தில், சேலம், கோவை, தர்மபுரி பகுதிகள் வரண்டுபோகக்கூடும் என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியெல்லாம் ஆழமான கிணறு தோண்டி அதி

(பிற்பகல் 6-50)

லிருந்து நீர் இறைத்துக் கரும்பு பயிரிடுகிறார்கள். அப்படிக் கரும்புப் பயிரை வளர்த்து அங்குள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கொண்டுபோய் போடுகிற பொழுது ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 110 தந்தார்கள். அந்த ரூபாய் 110-ல் கரும்பு வெட்டுக் கூலியை விவசாயி ஏற்றுக்கொள்ள வேண்டும். மில்லுக்குக் கொண்டுபோகிற லாரி செலவை விவசாயி ஏற்றுக்கொள்ள வேண்டும். கடைசியில் பார்த்தால் ரூபாய் 79 விவசாயிக்குக் கிடைக்கிறது. இதே நேரத்தில் தனியாக வெல்லம், சர்க்கரை காய்ச்சுகிறவர்கள் கரும்பை நிலத்தில் வந்து பார்க்கிறார்கள். ஒரு டன்னுக்கு ரூபாய் 160 தந்துவிட்டுப் போய்விடுகிறார்கள். வெட்டுக் கூலி அவர்களைச் சேர்ந்தது. அது மட்டுமல்ல, லாரி வாடகை அவர்களைச் சேர்ந்தது. ஆகையால் விவசாயிகளுக்கு தனியாரிடத்தில் டன்னுக்குக் கிடைக்கக் கூடியது ரூபாய் 160. ஒரு டன் கரும்புக்கு ஒரு மூட்டை சர்க்கரை கிடைக்கிறது. ரூபாய் 79-க்குக் கரும்பு வாங்கினால், அதை சர்க்கரையாக விற்கும்போது, ரூபாய் 400 கிடைக்கிறது. ஆக இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகளை இந்த அரசாங்கம் களைய வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். எங்கள் பகுதியில் குறிப்பாகச் சொன்னால், இன்றைக்கு அங்கு சாலை வசதிகள் கிடையாது. கரும்பை உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து மோகனூர் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு போக சாலை வசதி இல்லை. போன முறை மோகனூர் ஆலையினால் அக்ரிமெண்ட் செய்யப்பட்ட கரும்பு 400 ஏக்கரில் இருந்தது. இன்றைய தினம் அந்த ஆலைக்குக் கரும்பு அனுப்ப ஒப்பந்தம் செய்யப்படவில்லை. அந்த சாலையில் நான்கு மழைத் தூற்றல் விழுந்துவிட்டால், லாரிகாரர்கள் வர மாட்டார்கள். அவ்வளவு மோசமாக இருக்கிறது சாலை வசதி. இந்த அவையில் அதைப்பற்றிப் பலமுறை பேசியிருக்கிறேன். இப்போதும் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சர்க்கரை ஆலைக்கு 400 ஏக்கரில் உற்பத்தியாகிற கரும்பு அக்ரிமெண்ட் செய்யப்படாமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றால், போக்குவரத்து வசதியைச் செய்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் பிரகாரம் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குச் சம்பளம் தரவேண்டுமென்று அழகாகச் சொன்னார்கள். சென்ற ஆறு மாதங்களுக்கு முன்பு தமிழ் நாடு அரசு உறுதிமொழி கொடுத்தது, 1977 ஜூன் மாதத்திலிருந்து அந்தச் சம்பளம் பெறலாம் என்று சொன்னார்கள். அதற்குத் தமிழக அரசு நியமித்த கமிஷன் தலைவராக மதிப்பிற்குரிய துணைவேந்தர் திரு. [illegible] ஆதிசேஷய்யா இருந்தார். நிதித் துறைச் செயலாளர் திரு. குகன் இருந்தார். கல்வித் துறைச் செயலாளர் திரு. சங்கபாஷ்யம் இருந்தார். அவர்கள் எல்லாம் சேர்ந்து அறிக்கை வெளியிட்டார்கள். அதன் முடிவு என்ன என்று இந்த உரையில் காட்டப்படவில்லை. அந்த யு.ஜி.சி. சம்பள விகிதப் பிரகாரம் கல்லூரியில், பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குக் கொடுத்தால், அதற்கு 80 சதவிகிதம் சப்சிடி கூட கிடைக்கும். நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது 20 சதவிகிதம்தான். இதையொட்டி மூன்றாவது சம்பளக் கமிஷனின் பரிசீலனையில் சேர்க்கப் போகிறார்கள். அப்படிச் செய்தால், அரசுக்கு வரவேண்டிய 80 சதவிகிதம் சப்சிடி குறையலாம் என்று அச்சப்படுகிறார்கள். அது நியாயமாகவும் இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

கவர்னர் உரையில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன். சென்னை சட்டக் கல்லூரியில் வருந்தத்தக்க காரியம் ஒன்று நடந்திருக்கிறது. இன்றைக்கு 62 பேர் தமிழ் எடுத்துப் படித்திருக்கிறார்கள். 62 பேர் தேர்வு எழுதியதில் மூன்று பேர்தான் பாஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதை அரசு கவனிக்க வேண்டும். அந்தக் கல்லூரியிலே தமிழிலே படிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்றால், ஸ்டைபண்டு கொடுக்க வேண்டும். கல்லூரியில் சேர ஒரே அப்ளிகேஷன் வைத்திருக்கிறார்கள். ஆங்கில வகுப்பில் இடமிருந்தால் சேர்ப்பார்கள். தமிழில் சேரப் போனால், விருப்பம் இல்லாமல் அதில் திணிப்பதைப் போல, அங்கே சேர்க்கிறார்கள். ஆகையால் அதை முறைப்படுத்தி, தமிழுக்கு உற்சாகம், [illegible] இத்தனை சீட் என்று ஆக்க வேண்டும். நீதி மன்றங்களில் தமிழில் வாதாடுகிறோம். தமிழிலேயே தீர்ப்பு எழுதப்படுகிறது என்பதையெல்லாம் கண்டு பெருமைப்படுகிறோம். சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியில் தமிழ் எடுத்துப் படிக்கிற மாணவர்களுக்கு ஸ்டைபண்டு தர வேண்டுமென்று ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முந்திய அரசு அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுப்பதாக இருந்தது. இங்கே கேள்வியாகக் கேட்டபோது கூட, அரசின் பரிசீலனையில் இருக்கிறது; அது முடிந்ததும் [illegible] கொடுக்கப்படும் என்றார்கள். ஆனால் நான்கு வருடமாக தமிழ் எடுத்துப் படிக்கிறவர்களுக்கு எந்தவிதமான [illegible] கிடைக்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாடு





பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் ஒருவர் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் தமிழ் தெரியாதவராக இருந்தால், நான்கு ஆண்டுகளுக்குள்ளாக 'லாங்குவேஜ் டெஸ்ட்' எழுதி அவர் 'பாஸ்' செய்ய வேண்டும். நான்காண்டுகளில் 'பாஸ்' செய்யாவிட்டால், வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்துவிடலாம் என்று விதியிருக்கிறது. அப்படி ஒரு ஜி.ஓ. இருக்கிறது. ஆனால் சென்னை சட்டக் கல்லூரியில் என்ன நடந்தது? நான்கு ஆண்டுகளுக்குள் தமிழ் டெஸ்ட் எழுதி 'பாஸ்' செய்ய முடியாமல் அவர் அரசுக்கு விண்ணப்பித்தார். நான் டெஸ்ட் பாஸ் செய்யவில்லை, எனக்கு 'எக்சம்ஷன்' கொடுக்க வேண்டுமென்று சொன்னார். அதற்கு அரசிடமிருந்து, உங்கள் கோரிக்கை நியாயமானதல்ல, தமிழில் பாஸ் செய்ததாக வேண்டுமென்று அவர் கொடுத்த அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்றால், அவருக்கு எக்சம்ஷன் கொடுக்கப்பட்டது மட்டுமல்ல; உத்தியோகத்தில் புரமோஷனும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அவருக்குத் தமிழே தெரியாது. தமிழைப் பாட மொழியாக வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தமிழ் தெரியாதவர்களுக்கு எக்சம்ஷன், பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள்.

கல்லூரிகளில் பணி புரிகிறவர்கள் ஆறு ஏழு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்கள். தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அவர்கள் நிரந்தரப்படுத்தப்படவில்லை. அவர்களுக்கு அதனால் விரக்தி ஏற்படுகிறது. எந்த நேரத்தில் தங்களை டிஸ்மிஸ் செய்வார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்து வருகிறது. அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எங்கள் பகுதியிலே குறிப்பாக நாமக்கல்லில் இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. சேலம், தர்மபுரி மாவட்டத்திற்குச் சேர்த்து ஒரே ஒரு மகளிர் கல்லூரி நாமக்கல்லில் இருக்கிறது. அங்கு போதுமான ஹாஸ்டல் வசதியில்லை. பேராசிரியர்கள் இல்லை. ஆய்வுக் கூடங்கள் கிடையாது. பி.எஸ்ஸி. வைத்திருக்கிறார்கள். கெமிஸ்ட்ரி, பாட்டனி எல்லாம் இருக்கிறது. லேபரட்டரி கிடையாது. [illegible] இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரே மகளிர் கல்லூரியிருக்கிறது. ஆனால் அந்தக் கல்லூரியிலே இடம் கிடைத்தாலும் கூட, தங்கள் மகள்களை அழைத்துக் கொண்டு ஹாஸ்டலில் இடம் தேடி பெற்றோர்கள் அலைவதைப் பார்க்கிறோம். நாமக்கல்லிலிருந்து நான்கைந்து பர்லாங் தள்ளி ஆண்கள் கல்லூரி கட்டப்பட்டுள்ளது. ஊருக்குப் புறத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரியில் விடுதியே இல்லை. மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். உடனடியாக அவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. பாலசுப்பிரமணியம்] [1977 ஜூலை 13

(பிற்பகல் 7-00)

குடி நீர் வசதியைப்பற்றியும், சாலை வசதியைப்பற்றியும் ஆளுநர் உரையில் அழகாக, தெளிவாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எப்படி செயல்படப் போகிறது என்பது தெரியவில்லை. எங்கள் பகுதியில் எல்லாம் 'கொல்லிமலை' அடிவாரத்தில், சேந்தமங்கலம் பகுதியில் 30,000 மக்கள் குடிநீர் வசதி பெற வேண்டும் என்பதற்காக அங்கே திட்டங்கள் போடப்பட்டன. அதற்காக ரூபாய் 15,000 டெபாசிட்டும் செய்யப்பட்டது. மாதிரிக் கிணறுகள் தோண்டப் பட்டன. நீர் ஊற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு, இது போதும் என்று நிர்ணயித்து, 30,000 பேருக்கு இதிலிருந்து 'சப்ளை' செய்ய முடியும் என்று சொன்னார்கள், நீர்த்தேக்கத் தொட்டிக்காக கோட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்த்து இடத்தைக் குறிப்பிட்டார். ஆனால் ஏறக்குறைய நானும் ஓராண்டு காலமாக இதுவரை போராடியும், வாதாடியும் பார்க்கிறேன். இதுவரை எதுவும் நடக்க வில்லை. ஏன் என்று தெரியவில்லை. 'எஸ்டிமேட்' போட்டு, 28 இலட்சம் என்று நிர்மானித்தார்கள். கொல்லிமலை அடிவாரத்திலிருந்து குடி தண்ணீர் கொண்டு வர எல்லாத் திட்டங்களும் போடப்பட்டுவிட்டன. ஆனால் இதுவரை யில் அதன் முடிவு என்னவாயிற்று என்பது தெரியவில்லை.

அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற " Raw materials "-ஐ வைத்து, அங்கங்கே தொழிற்சாலை ஏற்படுத்தலாம் என்று சொன்னார்கள். எங்கள் பகுதி மலையைச் சேர்ந்த பகுதி, அலுமினியம் செய்வதற்கான தாதுப் பொருள் கள் கிடைக்கின்றன. அங்கேயிருந்து தினந்தோறும் நான்கு லாரிகளில், ஆறு லாரிகளில் அந்தத் தாதுப் பொருள்களை வெட்டியெடுத்து மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலைக்குக் கொண்டு போகிறார்கள். ஆகவே எங்கள் பகுதியிலேயே ஒரு சிறிய பாக்டரி மாதிரியாவது அரசு முதலீடு செய்து வந்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள், குறிப்பாக பழங்குடி மக்கள், கொல்லிமலையில் வசிக்கின்ற " tribal people " வாழ்க்கைத் தரம் நல்ல முறையில் உயர முடியும். அங்கேயுள்ள மிகப் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புத் தர முடியும்.

மேலும் அந்தப் பகுதியில் பலவிதமான பழவகைகள் கிடைக்கின்றன. அதன் மூலமாக அதிலே 'ஜாம்' செய்து, பழங்களை பக்குவப்படுத்தி, வெளிநாடு களுக்கு அனுப்பக் கூடிய தொழிற்சாலைகளை இந்த அரசு அங்கே அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். சக்திமோகன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரையின்மீது நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் என்னுடைய கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்து சில வார்த்தைகள் கூற



1977 ஜூலை 13] [திரு. ஆர். சக்திமோகன்]

விரும்புகிறேன். புதிய அரசாங்கம் தோன்றிய ஒரே வாரத்தில் இந்த கவர்னர் பேருரை வழங்கப்பட்டிருக்கிறது. இதில் முழுக்க, முழுக்க அனைத்து விவரங் களும் குறிப்பிடவில்லை, கூறியிருப்பது கொஞ்சம், கூறவேண்டியவை அதிகம் என்றெல்லாம் இந்த அவையில் பேசப்பட்டது. ஆனால் நமது நாட்டிலே ஜன நாயகம் தாறுமாறாக விரிவுபட்டு இருக்கின்ற நிலையில், அன்றாடம் புதுப்புது பிரச்சினைகள் நிறைய தோன்றிக்கொண்டிருக்கின்றன. தோன்றுகிற பிரச்சினை கள் அத்தனையையும் உள்ளடக்கி, அவைகளுக்குத் தீர்வு காணும் வகை என்ன என்பதையெல்லாம் விளக்கமாக கவர்னர் உரையில் கூற முடியாது. அதிலும் குறிப்பாக இந்த உரையிலே அவர்கள் கூறும்போது, அடுத்து 'பட்ஜெட்' தொடர்க் கூட்டம் வருவதால் இந்தக் கூட்டத்தில் அரசின் முக்கியமான கொள் கைகளை, குறிக்கோள்களை மட்டும் குறிப்பிட விழைகிறேன் என்பதால், இந்த கவர்னர் பேருரையின் மூலம் இதற்குமேல் விரிவாக எதிர்பார்க்க இயலாது. ஆனால் புதிய அரசாங்கத்தின் நல்லெண்ணம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை நான் உணர்கிறேன். ஏனென்றால் தேசிய நோக்கம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் அவருடைய நல்லெண்ணத்தின் எதிரொலியை வெளிப்படுத்தும் வகையில் சில விவரங்களைக் கூறியிருக்கிறார்கள். கொடுக்கப் பட்டிருக்கிற 12 பக்கங்களிலும், இல்லாதவர்களை எந்த அளவுக்கு இருப்பவர் களாக உயர்த்தலாம் என்ற ஒரு தேசியத் தத்துவத்தை எப்படி மெய்ப்படுத் தலாம், எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்ற விவரங்கள்தான் இதில் காணப் படுகிறது.

இந்த நாட்டில் 'மெஜாரிட்டி'யாக உள்ளவர்கள் ஏழை மக்கள், பிற்படுத்தப் பட்டவர்கள், பின்தங்கியவர்கள். இப்படி 'மெஜாரிட்டி' யாக உள்ள ஏழை மக்களின் வாக்குகளைப் பெற்றுதான் ஆட்சி அமைகின்றது. கடந்த காலத்தைப் பார்த்தால், 'மெஜாரிட்டி' ஏழை மக்களின் வாக்குகளைப் பெற்று அமைந்த அரசாங்கங்கள், மைனாரிட்டியாகவுள்ள பணக்காரர்கள் அல்லது வசதி படைத் தவர்களுக்காக நடைபெற்றதைத் தான் கண்டோம். நமது புதிய அரசு, இல்லாதவர்களை எல்லாம் இருப்பவர்களாக மாற்றப் பாடுபடும் என்ற நம்பிக்கை யோடு நான் இந்த ஆளுநர் உரையைப் பார்க்கிறேன்.

ஏராளமான விஷயங்கள்பற்றிப் பேச வேண்டியிருந்தாலும், நேரம் கொஞ்ச மாக இருப்பதால், நான் முக்கியமான சில வேண்டுகோள்களை மட்டும் இந்த அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, மாமதுரையிலே இட்டத்தட்ட ஐந்து முதல் ஏழு இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மேலும் சுற்றுப்புறங்களிலிருந்து ஏராளமான மக்கள் மதுரைக் கல்லூரியில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக வருடந்தோறும் இடமின்றி அவதிப்படும் காட்சியையும், கல்லூரிகளிலே இடமில்லாமல் திரும்பு கிற காட்சியையும், பிள்ளைகளைக் கல்லூரியில் சேர்க்க [illegible]

பிடிக்கலாம் என்று அலைகின்ற நிலைகளையும் தான் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அங்கே அரசாங்கப் பெண்கள் கல்லூரி ஒன்று தான் இருக்கிறது. தனியார் கல்லூரிகள் மூன்று இருக்கின்றன. பெண்கள் அதிகமாகப் படிக்க முன் வருகின்ற காரணத்தால், இடம் கிடைப்பதில்லை. அரசினர் கல்லூரி 'பிரின்சிபால்' சமாளிக்க முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டு, நான்கைந்து நாள் 'லீவ்' போட்டுவிட்டுப் போய்விடுகின்ற நிலைமை அங்கே இருக்கிறது. மார்க்குகள் முறை என்று வைத்திருக்கிறார்கள். அப்படியும் சில சிபாரிசுகள் வருகின்றபோது, அவைகளையும் சேர்த்தாக வேண்டிய கட்டாயம் வருகின்றது. ஆகவே மதுரைக்கு மேலும் இரண்டு அரசினர் பெண்கள் கல்லூரி வேண்டும். புதிய அரசாங்கம் நிச்சயமாக அடுத்த கல்வி ஆண்டிலேயே மற்றும் இரண்டு பெண்கள் கல்லூரிகளை மதுரையில் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும் கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் 17 மாதங்களாக நடைபெற்ற நெருக்கடி கால சட்டங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால், வாதப்பிரதி வாதங்கள் வரும். அவசர காலச் சட்டம் எதற்காக அன்றைக்குப் போடப்பட்டது என்பதற்கான விளக்கம் அன்றே தரப்பட்டிருக்கிறது. போட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் தான் அன்று போட்டார்கள். போட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் சில பல முறைகேடுகள் இருக்கலாம். அத்துமீறிய செயல்களாக இருக்கலாம். அதற்காக அவசர காலச் சட்டம் போட்டதே தவறு என்று வாதிட்டால், அது சரியல்ல. எந்த அரசாங்கமாக இருந்தாலும், நல்ல முறையில் கொள்கைகளை நிறைவேற்றத் தேவையான சட்டங்களைப் போட்டுக்கொள்ளத் தான் செய்யும். ஆகவே போட்ட சட்டம் தவறு என்று சொல்வது தவறு. அதே சமயம் நடைமுறையில் ஏற்பட்ட அத்துமீறிய அக்கிரமங்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னார்கள். அவைகளுக்கு நிச்சயமாக இந்த அரசாங்கம் விசாரணைக் கமிஷன் வைத்தோ, தனிப்பட்ட முறையில் விசாரித்தோ, அத்துமீறல்கள் நடந்திருந்தால் கண்டனமோ, தண்டனையோ கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதுகுளத்தூர் மறவர்கள் மறுவாழ்வுத் திட்டம் பற்றி சில [illegible] குறிப்பிட விரும்புகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கூறி வருகிறோம். குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆட்படுத்தப்பட்டு பல ஆண்டுகளாக தங்கள் வாழ்க்கையிலே எந்தவிதமான வாய்ப்பும் வசதியும் பெறாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு ஒரு மறுவாழ்வளிக்க முதுகுளத்தூர் மறவர் "Reclamation" அமைக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்டிருந்தோம். முந்தைய அரசு அதற்கான ஏற்பாடு [illegible] ஆரம்பித்திருந்[illegible].





**திரு. வே. தங்கப்பாண்டியன் :** முதலமைச்சருடைய தொகுதி அருப்புக் கோட்டை. அங்கே ஏராளமான மறவர்கள் இருக்கிறார்கள். மேலும் அந்த இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் மறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் பூராவிற்கும் சேர்த்து ஒரு யோசனை சொன்னால், நன்மையாக இருக்கும்.

**திரு. ஆர். சக்திமோகன் :** குற்ற பரம்பரைச் சட்டத்தில் ஈடுபடுத்தப் பட்ட மறவர்கள் முதுகுளத்தூரில் உள்ளவர்கள்தான். ஜில்லா பூராவும் என்று சொன்னால், எல்லாப் பகுதிகளும் இந்தச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படவில்லை. குறிப்பாக திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப் பின்பற்றிய மக்கள் என்ற காரணத்தினால், அன்றைய ஆங்கிலேய அரசு அவர்களுக்கெல்லாம் தனியாக குற்ற பரம்பரைச் சட்டம் என்று ஒன்றைப் போட்டு பல கொடுமைகளைப் புரிந்தார்கள். அக் கொடுஞ் சட்டத்தை எதிர்த்து பசும்பொன் தேவரவர்கள் நடத்திய பெரும் போராட்டத்தால் சட்டம் நீக்கப்பட்டது என்றாலும், மக்கள் இன்றுவரை கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே வீரம் விளையாடிய பூமி அது. விடுதலைப் போராட்டத்திற்காக அரும்பாடுபட்ட மக்கள் அவர்கள். வானம் பார்த்த பூமி அது. விவசாயத்தைக் கவனிக்காமல், வீரத்தில் நாட்டம் செலுத்திக் கொண்டிருந்துவிட்டதால், பெரும் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இன்றைக்கு அமைந்திருக்கிற புதிய அரசில், குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் தொகுதியின் உறுப்பினராக ஆகியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாபெரும் தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 1952 ஆம் ஆண்டில் போட்டியிட்டு, கிட்டத்தட்ட ஏழெட்டு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற தொகுதியில் இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆகவே அங்கேயிருக்கிற மக்கள் எந்த வாய்ப்பும் வசதியும் கடந்த பல ஆண்டுகளாகப் பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு "Reclamation" அமைத்து அவர்களுடைய வாழ்க்கைக்கு நல்ல வழியைக் காட்ட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-10)

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகங்களில் கட்சி சார்பற்ற முறையிலே, நகரங்களிலுள்ள பிரமுகர்களைக் கொண்ட மக்கள் பிரதிநிதித்துவக் கமிட்டி என்று அமைத்து, சாதாரண மக்கள்கூட அங்கு சென்று தங்கள் குறைகளைக் கூறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இப்போது சாதாரண மக்கள் தங்கள் குறைகளைச் சென்று கூற முடியவில்லை. எனவே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் மக்கள் பிரதிநிதித்துவக் கமிட்டியென்று அமைத்து, அதிலுள்ளவர்கள் மக்களின் குறைகளைக் கேட்டு, அவை

களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லும் ஏற்பாட்டைச் செய்தால், நலமாக இருக்கும். முதல்வரவர்கள் அப்படிப்பட்டதொரு திட்டம் வைத்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதை விரைவில் அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, மதுரை மாநகராட்சித் தேர்தல், இதர நகரசபைத் தேர்தல்கள், பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றியெல்லாம் கவர்னர் அவர்கள் உரையிலே கூறப்பட்டுள்ளது. அதில் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்களையும், நகராட்சி மன்றத் தலைவர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பது மாதிரி நகராட்சித் தலைவர்களையும் மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி மேயர் தேர்தலில், சென்னையிலுள்ள 'கம்யூனல் ரொடேஷன்' முறை இல்லாமல், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்கென ஒரு தனி அதிகாரத்தைக் கொடுத்து, மாநகராட்சியை நடத்தினால், மக்களுக்கு நல்ல சேவைகளைச் செய்ய முடியுமென்று கருதுகிறேன். ஏனென்றால் ஆளுங்கட்சி, ஆளப்படும் கட்சி என்று இருக்குமானால், மேயரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுத்தாலுங்கூட, விருப்பு வெறுப்புகளினால் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வாய்ப்பு இருக்கும். எனவே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் போன்று, மாநகராட்சி மேயரையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியாத முறையில் அமெரிக்க முறையிலான சட்டம் இருக்க வேண்டும். மேயர் சார்ந்துள்ள கட்சி நகரவையில் மெஜாரிடியோ இல்லையோ கட்சி பலத்தைக் கொண்டு அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரக் கூடாதென்ற வகையில் சட்டமிட்டு, அவருக்குரிய பதவிக்கால கெடுவரை இடைஞ்சலில்லாமல் நிர்வாகம் செய்ய வகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதலைப் போராட்ட வீரர்கள் பென்ஷன் திட்டம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக ஐ.என்.ஏ. வீரர்களுக்கு 1966 ஆம் ஆண்டு முதல்—1966 என்றுதான் நினைக்கிறேன்—மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குள் வருமானம் இருப்பவர்களுக்கு மாதம் 50 ரூபாய் பென்ஷன் தரப்படுமென்று அறிவிக்கப்பட்டது. பிறகு 50 ரூபாய் 75 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதில், 'நூறு ரூபாய்க்குள் வருமானம் உள்ளவர்களுக்கு' என்று இருப்பதை நிச்சயமாக எடுத்துவிட வேண்டுமென்று மாநில அரசாங்கத்திடம் 4–5 ஆண்டுகளாக வேண்டப்பட்டு வருகிறது. இன்னும் அந்த வருமான வரம்பு நீக்கப்படவில்லை. பென்ஷன் பெறுகிற I.N.A. வீரர்களுக்கு—விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் நூறு ரூபாய் வருமானத்திற்கு பதிலாக 110 ரூபாய் வருமானம் கிடைக்கிறதென்று யாராவது மொட்டை



மனு போட்டால்கூட, பென்ஷன் கொடுப்பது நிறுத்தப்படுகிறது. கிராமக் கணக்குப் பிள்ளைகளிலிருந்து, பொறுமை கொண்ட பிறர் வரை பென்ஷன் வாங்குகிறவர்கள் மீது, அபிப்பிராய பேதங்களினால், தகராறினால் மனத்தாங்கலினால் வருமானம் நூறு ரூபாய்க்கு மேல் வருகிறதென்று பேர் குறிப்பிடாமல் எழுதிவிட்டால் அந்தப் பென்ஷன் அத்துடன் நிறுத்தப்பட்டுவிடுகிறது. மறுபடியும் அதை வாங்க முடியவில்லை. நாம் தியாகிகளுக்குத் தான் பென்ஷன் கொடுக்கிறோம். அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள். தியாக மான்யமாகத்தான் கொடுக்கப்படுகிறது. 100 ரூபாய் வருமானம் என்பது 1966 ஆம் ஆண்டிற்குச் சரியாக இருக்கலாம். இன்றைக்கு நூறு ரூபாய் என்று சொல்வதானது சரியாக இருக்காது. 75 ரூபாய் பென்ஷன் வாங்குவதற்காக 100 ரூபாய்க்குமேல் வருவாய் பெறக் கூடாதென்று தேசிய நோக்கம் கொண்ட முதல்வரவர்கள் எண்ண மாட்டார்கள். நமது முதல்வரவர்களும் நேதாஜி சுபாஷ் பாபுவைப் பின்பற்றுபவர்கள்தான் ; அவர் கொள்கைகளில் பற்றுக் கொண்டவர்கள்தான். நேதாஜி சுபாஷ் பாபுவும் பட்டபி சீதாராமையாவும் தேர்தலில் போட்டியிட்டபோது, காந்திஜி பட்டாபி சீதாராமையாவை ஆதரித்தார். போஸ் அவர்கள் பக்கம்தான் நியாயம் இருந்தது ; அவரை காந்திஜி நாப்பினர் ஆதரிக்காததற்காக மனம் வருந்தியதாக முதல்வரவர்கள் தம்முடைய சுயசரிதத்தில் கூறியுள்ளார்கள். அவரிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். விடுதலைப் போராட்ட வீரர்களுக்காகச் செய்ய வேண்டிய நலன்களைச் செய்ய வேண்டுகிறேன். அவர்களை நிம்மதியற்ற நிலையில் மான்யம்பெற வைத்திருப்பது பெரும் குறையென்றும் கூறி, நூறு ரூபாய் என்றிருப்பதை நிச்சயமாக நீக்கி விடுதலைப் போராட்ட வீரர்களாக இருந்தாலும், இடைத் தொல்லையின்றி நிம்மதியாக மான்யம் பெறத்தக்க வகையில் உத்தரவிட வேண்டுமென்றும், 75 ரூபாய் பென்ஷனை நூறு ரூபாயாக தமிழ் நாடு அரசு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை வைக்கப்போகிறோமென்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்றுகூட மதுரை முத்தண்ணன் அவர்கள் இது பற்றிக் குறிப்பிட்டார்கள். நியாய விலைக் கடைகளில் அதிக அநியாயங்கள் நடக்கின்றனவென்று கூறினார்கள். நான்கு கிலோ சர்க்கரை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து எடை போட்டுப் பார்த்தால், 3¼ கிலோதான் இருக்கிறதென்றார்கள். இப்போது சர்க்கார் தரப்பில் வைக்கப்படும் கடைகள் நியாய விலைக் கடைகள் என்றால், ஏற்கெனவேயுள்ள தனியார் கடைகள் அநியாய விலைக் கடைகளென்று சர்க்கார் ஒத்துக்கொள்கிறதா? அப்படி ஒத்துக்கொள்ளுமானால், அதை நாம் அனுமதிக்கலாமா? ஒன்று, தனியார் கடைகளில் அநியாய விலைக்கு விற்கிறார்களென்றால், அவைகளை நியாய விலைக் கடைகளாக மாற்ற

வேண்டும் அல்லது அந்தக் கடைகளுக்குள்ள அனுமதியை ரத்து செய்து அரசாங்கமே கடைகளை நடத்த வேண்டும். நியாய விலைக் கடைகளை நிர்ணய விலைக் கடைகளென்று சொல்வது நல்லதென்று உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன்படி செய்வதோடு அவைகளை நல்ல முறையில் கண்காணித்து நடத்தினால்தான், மக்களுக்கு அவைகள் பயன்படும். நியாய விலை என்ற பெயரால் அநியாயம் நடக்கிறபோது, அதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். மக்கள் போடுவதை வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். வீட்டில் நிறுத்துப் பார்த்தால் குறைகிறது. அவர்களிடம் தெரிவித்தால், நாங்கள் போடும்போது சரியாகத்தான் இருந்ததென்று கூறுகிறார்கள். அது பற்றி நானே ஒரு தடவை கலெக்டர் அலுவலகத்திற்குப் போய் நான்கு கிலோ என்று போட்டது 3.25 கிலோதான் இருக்கிறதென்று எடுத்துக் காட்டினேன். ஒரு வாரத்திற்குக் கொஞ்சம் கெடுபிடி இருந்தது. மறுபடியும் பழைய நிலைமை ஆரம்பித்துவிட்டது. சர்க்கார் இப்படிப்பட்ட நியாய விலைக் கடைகளை மட்டும் வைப்பது போதாது. அதன் நன்மைகள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வரவர்கள், புதிய அரசாங்கத்தின் மூலம் மெஜாரிட்டியாக வுள்ள, பின் தங்கிய, வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு ஏராளமாகச் செய்யப் போகிறோமென்று கூறியிருப்பதை மக்கள் முழுக்க முழுக்க நம்பியிருக்கிறார்கள். ஜனநாயக நெறியின் முழு அம்சத்தோடு அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். "ஜனநாயகத்தை எத்தனை மக்கள் நம்புகிறார்களென்பது ஜனநாயகத்திற்கு முக்கியமல்ல. ஜனநாயகம் யாரை நம்புகிறது என்பதுதான் முக்கியம்" என்று அரிஸ்டாடில் கூறுகிறார். ஜனநாயகத்தை மக்கள் நம்புவதைவிட, ஜனநாயகம் யாரை நம்புகிறது என்பதுதான் முக்கியம். எனவே ஜனநாயகத்தால் நம்பப்படுகிற புரட்சித் தலைவரவர்கள் தம்முடைய ஆட்சிக் காலத்தில், "இல்லாத" மக்களை இயன்ற வரையில் 'இருப்பவர்'களாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது எனது கருத்துக்களை வழங்குவதற்கு அனுமதி அளித்ததற்காக நான் மெத்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரை என்பது ஆட்சியிலே இருப்பவர்களுடைய கொள்கைக் குறிப்பு என்பதை நாம் அறிவோம். அந்தக் கொள்கைக் குறிப்பில் கோடிட்டுக் காட்ட வேண்டியவைகளை ஆளுநர் அவர்கள் காட்டவில்லையென்றுதான் என்னைப் பொறுத்தவரையில் நான் வருத்தப்படுகிறேன்.





பதினேழு மாத குடியரசுத் தலைவரின் ஆட்சியில் நாட்டிலே நடைபெற்ற அக்கிரமங்களும், கொடுமைகளும் நம்முடைய நாட்டிலே மக்களாலே இன்றைக்கும் பேசப்படுகிறது. அப்படிப்பட்ட கொடுமைகளை, வேதனைகளை யெல்லாம் நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையிலே கோடிட்டுக் காட்டியிருக்கலாம். திரைப்படத் துறையிலே, "one-line treatment" என்று சொல்லுவார்கள். அதைப்போல ஒரு வரியில்கூட குறிப்பிட்டுச் சொல்லியிருக்கலாம். ஆனால் மேதகு ஆளுநர் அவர்கள் அது பற்றிக் குறிப்பிடாதது குறித்து நிச்சயமாக நாட்டு மக்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அதைப் போலவே புதிதாக வந்துள்ள ஆட்சியிடமிருந்து மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள். ஆளுநர் அவர்கள் உரை அத்தகைய எண்ணங்களையெல்லாம், அத்தகைய எதிர்பார்ப்புக்களையெல்லாம் பிரதிபலிக்குமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படி எதிர்பார்த்த மக்கள், ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்றும் இல்லாதது கண்டு வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆளுநர் அவர்கள் உரையிலே பல திட்டங்களை இந்த அரசு எடுத்துக்கொள்ளுமென்று குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் ஆகியோர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு என்ன திட்டங்களையெல்லாம் இந்த ஆட்சி செய்யப் போகிறதென்பதை திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. நான் நேரமில்லாத காரணத்தால், இந்தத் துறையை மட்டும் எடுத்துச் சொல்லி அமைய ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 7-20)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அரிசன வீட்டு வசதி வாரியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் மூலமாக கிராமங்களிலே வாழ்கின்ற ஏழை, அரிஜன மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வீடுகளைக் கட்டித் தந்தது முன்பிருந்த அரசாங்கம். குடியரசுத் தலைவர் ஆட்சி இந்தத் தமிழகத்தில் ஏற்பட்ட உடனே இந்தத் திட்டம் தடைப்பட்டது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, அந்தத் திட்டத்திற்குரிய வேலைகளை, நடைமுறைகளை அப்போது செயல்படுத்தவில்லை. கழக அரசு ஆட்சியிலே குறையாக இருந்தவைகளைத்தான் நிறைவேற்ற முடிந்தது. அந்த வீடுகளைத்தான் முடித்தார்கள். புதிதாக வீடுகள் கட்டித் தரப்படவில்லை. இந்த ஆட்சியிலாவது அப்படிப்பட்ட வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் அவர்களின் உரையின் மீது நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் பேசுகிறபோது, வீடுகளை எல்லாம் மாடி வீடுகளாகக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அது நல்ல யோசனை இல்லை என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமத்தில் வாழ்கின்ற அரிசன மக்கள் மாடி வீடுகளில் வசிக்கின்ற அளவுக்கு உயர்த்திக்கொள்ளவில்லை.

உயர்த்தப்பட்டு வசதிகளைப் பெற்று வாழ்கின்ற அளவுக்கு அவர்கள் உருவாக்கப்படவில்லை. அவர்கள் சொந்தமாக வைத்திருக்கின்ற ஆடு மாடுகளை, கால்நடைகளை வைத்துக் காத்துக்கொள்கின்ற வசதி இதனால் குறைந்து விடும். ஆகவே இப்போது இருக்கின்ற முறையே போதுமானது. அந்த முறையிலே கட்டித் தரலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அதனால் அவர்கள் நல்ல முறையில் அவைகளை எல்லாம் பராமரிக்க முடியும்.

**திரு. க. அறிவழகன் :** தஞ்சை மாவட்டத்தில் கிராம மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்குள்ளேயே வெள்ளம் வந்துவிடுகிறது. அப்போது அவர்கள் படுகின்ற கஷ்டம் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது. அரசாங்கம் கட்டித் தருகிற வீடுகள் மாடி வீடுகளாக இருந்தால், வெள்ளம் வரும்போது வசதியாக இருக்கும் என்பதால் அந்தக் கருத்தைச் சொன்னேன்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** நான் சொல்வது, அவர்களுடைய உடைமைகள், கால் நடைகள், அவைகளை வைத்துப் பராமரிக்க வசதியாக இருக்கும். மாடி வீடுகளாக இருந்தால், அவர்கள் நிச்சயமாகப் பலன் பெறுவது முடியாததாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. அது மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்திலே பின்தங்கி இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் ரீதியாக அண்ணல் அம்பேத்கார் இயற்றிய சட்டத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகள் சரியாகப் பரிபாலிக்கப்படுகின்றனவா என்பதை அரசு கவனித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய மாநில அரசு உறவுபற்றி எல்லாம் நம்முடைய கவர்னர் பெருமானுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய பாரதப் பிரதமர், மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் அந்த உரை நிகழ்த்தும்போது கட்சிப் பற்று அற்ற உணர்வோடு, தோழமை உணர்வோடு இருப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையே தோழமையான உறவு இருந்தால்தான் உண்மையான, ஆரோக்கியமான ஆட்சி உருவாக முடியும். அப்படிப்பட்ட உறவை ஏற்படுத்தி ஆரோக்கியமான நிலைமையை உருவாக்க வேண்டும். இந்த அரசு சுமுகமான முறையில் உறவை வளர்த்துக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

இந்த கவர்னர் உரையில், மது விலக்குத் திட்டத்தை நல்ல முறையில் அமுலாக்குவோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்று முன்தினம் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தியா முழுவதற்கும் மது விலக்கு அமுல் நடத்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நான்



இன்றைக்குக் கவலைப்படுவதெல்லாம், மதுவிலக்கு என்ற பெயரிலே, நாட்டிலே நம் ஏழை மக்களிடத்திலே சொல்லும்போது, அந்த குற்றத்தைக் காட்டியே அந்த மக்களைத் துன்பப்படுத்துகிற நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். இந்த அரசாங்கம் புதிதாக வந்திருக்கிறது. அதைத் தடுக்க ஆங்காங்கே சர்வ கட்சிக் கமிட்டிகளை, மக்கள் கமிட்டிகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்தான் அவர்களுக்கு எந்தவிதமான தவறும் ஏற்படா வண்ணம் நல்ல முறையில் காப்பாற்ற முடியும். ஆகவே இந்த ஆட்சியில் நிரம்ப எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த எதிர்பார்ப்புகளெல்லாம் இந்த கவர்னர் உரையில் இல்லாதது அவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-25)

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

**வியாழக்கிழமை, 1977 ஜூலை 14.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. [illegible]) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. உரிமைப் பிரச்சினை.

**"மக்கள் குரல்" நாளேட்டின்மீது மேலவை நடவடிக்கைகள் குறித்து தவறான செய்தி பிரசுரித்தது குறித்து.**

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 13-ம் தேதிய "மக்கள் குரல்" என்ற நாளேடு இம்மேலவை நடவடிக்கை பற்றிய ஒரு செய்தியைத் தவறாகப் பிரசுரித்திருக்கிறது. செய்தியைத் தவறாகப் பிரசுரிப்பதன் மூலம் இங்கு நடைபெறாத செய்தியை நடைபெற்றதாகவும், அதே செய்தியைத் திரித்துக் கூற முற்படுவதன் மூலம் மேல்சபையின் நடவடிக்கைகளை தவறான பாதைக்கு இட்டுச் செல்வது போலும் அந்தச் செய்தி வெளியாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் மதுரை மேயர் அண்ணன் முத்து அவர்கள் தம்முடைய பேச்சில் எந்த இடத்திலும் முன்னாள் முதலமைச்சர் என்றோ, அல்லது அவருடைய பெயரையோ குறிப்பிடவில்லை. அப்படி அவர்கள் குறிப்பிடாமல் இருந்துங்கூட, அந்தப் பத்திரிகையில் அவருடைய பேச்சை வெளியிடுகிறபோது, முன்னாள் மேயர் பேசிய போது முன்னாள் முதலமைச்சர் என்றும் முதலமைச்சர் கருணாநிதி என்றும் பேசியதாகவும், அவர் சென்ற இடத்திலெல்லாம் குளு குளு வசதி அமைக்கப்பட்டதாகவும் ஒரு செய்தியைத் தவறாக வெளியிட்டிருக்கிறது. ஒரு உறுப்பினர் பேசாத செய்தியைப் பேசியதாக நாட்டு மக்கள் மத்தியில் உள்நோக்கம் கற்பிக்கிற தன்மையிலே வெளியிட்டிருப்பது இந்த அவையின் உரிமையை மீறுவதாக இருக்கிறது. இப்படி ஒரு பத்திரிகை தொடர்ந்து எழுதினால், அவையின் நடவடிக்கை

நாட்டு மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதிலிருந்து தவறுவதாக ஆகும். இது கடுமையான உரிமைப் பிரச்சினையாகும். உறுப்பினர் சொல்லாத பெயரை, தான் எண்ணியபடி இணைத்து வெளியிட்டிருப்பது அரசியல் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், அவையின் உரிமையை மீறுவதாக உள்ளது என்பதால், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பரிசிலனை செய்து நல்ல முடிவு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் பேசியதை நடவடிக்கைக் குறிப்பில் பார்த்தேன். அதில் எந்தப் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அதற்கான விளக்கத்தை அந்தப் பத்திரிகைக்கு எழுதிக் கேட்டபின், என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

2. கவன ஈர்ப்பு.

(1) இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட கடன், வரி வசூலிப்பதில் அதிகாரிகள் கெடுபிடி குறித்து

திரு. வே. தங்கப்பாண்டியன்: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ்,

"இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட கடுமையான வறட்சியின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த அரசாங்கக் கடன்கள், கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதிலும், நிலவரி வசூலிப்பதிலும் அதிகாரிகள் கெடுபிடியுடன் நடந்து கொள்கிறபடியால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லல் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக வயலுக்கு வயல் நேரடியாகச் சென்று பயிர்களைப் பார்வையிட்டு அதன் அடிப்படையில், விளைச்சல் சேர வேண்டிய வரி நிலுவையைத் தள்ளுபடி



செய்வதற்காகவும், நிலுவை வசூலைத் தள்ளிப் போடுவதற்காகவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஒரு வயலில் விளைச்சல், 25 சதவீதமும் அதற்குக் குறைவாகவும் இருந்தால், கூடுதல் நன்செய்த் தீர்வைகள், தண்ணீர்த் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, உள்ளூர் 'செஸ்' முதலியவை உட்பட, 1385 ஆம் பசலி ஆண்டுக்கான (1-7-1975—30-6-1976) நிலவரி தள்ளுபடி செய்யப் பட்டது. நிலங்களுக்கான உள்ளூர் 'செஸ்' மேல் வரி விதிக்க வேண்டாமென ஊராட்சி ஒன்றியங்களுக்கு உத்தரவிடப்பட்டது. ஓர் உழவருக்குச் சொந்தமான நிலங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலங்கள் நிலவரித் தள்ளுபடி பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தால், கடன் தவணைகள் வசூலிப்பு அடுத்த பசலி ஆண்டுக்கு ஒத்திப்போடப்பட்டன. நிலவரி தள்ளுபடி பெறத் தகுதி உடைய நிலங்களுக்கு வேளாண்மை வருமான வரித் தள்ளுபடியும் அளிக்கப்பட்டது. விளைச்சல் 37 பைசாவை விடக் குறைவாக உள்ள நிலங்களுக்கு அனாவாரிச் சான்றிதழ் வழங்கப் பட்டதின் மூலம் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்கள் நடுத்தர காலக் கடன்களாக மாற்றப்பட்டன. வறட்சியால் பாதிக்கப்பட்ட பிற மாவட்டங்களுக்கு மேற்சொன்ன சலுகைகள் அளிக்கப் பட்டதுடன், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் 1386-ஆம் பசலி ஆண்டில் (1—7—1976 முதல் 30—6—1977 வரை) இச்சலுகைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

நிலவரி, அரசுக் கடன்கள் ஆகியவற்றை வசூலிப்பது மேற்கூறிய ஆணைகளுக்கிணங்க செய்யப்படுகின்றன.

நிலவரி, அரசுக் கடன்கள் ஆகியவை துன்புறுத்தி வசூலிக்கப் பட்டுள்ளன என்பதை இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் மறுத்துள்ளார். நிலவரியாகவும் கடன்களாகவும் மொத்தம் வசூலிக்கத் தக்க தொகை ரூ. 3,24,04,664-ல் இப்பசலி ஆண்டில் ரூ. 55,94,762-ஐ மட்டுமே மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலித் துள்ளார். இத்தொகை, நிலுவைத் தொகையில் 1/6 பாகமே யாகும். வட்ட அதிகாரிகள் எந்தவொரு நேர்விலும் வலுக் கட்டாய நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. நயந்து கேட்கும் முறையிலேயே முழு வசூலிப்பும் செய்யப்பட் டுள்ளது. கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில், மதுரையி லுள்ள இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிச் செயலாளர், அனாவாரிச் சான்றிதழ்களைப் பெற்ற பின்னர்,

[திரு. கி. மனோகரன்] [1977 ஜூலை 14

குறுகிய காலக் கடன்களை நடுத்தர காலக் கடன்களாகவும், நடுத்தர காலக் கடன்களை நடுத்தர கால மாற்றுக் கடன்களாகவும் ஏற்கெனவே மாற்றியுள்ளார். 1976-77-ல் மாற்றுக் கடன்கள் சம்பந்தப்பட்ட தொகை ரூ. 640.03 இலட்சமாகும். நகுதி வாய்ந்த நிகழ்வுகளிலேயே ரொக்கமாக ரூ. 437.56 இலட்சம் வசூலிக்கப்பட்டது. 390 கிராமங்களுக்கும் 553 பகுதிக் கிராமங்களுக்கும் அனாவாரிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே அரசுக்குச் சேரவேண்டிய தொகைகள் துன்புறுத்தி வசூலிக்கப்பட்டுள்ளன என்று கூறுவது சரியல்ல.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, அந்த அனாவாரிச் சான்றிதழ்கள் வழங்குவதில்தான் பலவிதமான சிரமங்கள் தோன்றுகின்றன. கிராமக் கர்ணம் என்னும் கணக்குப்பிள்ளை, முன்சிப் போன்றவர்களால் வழங்கப்படுகிற காரணத்தால், அதை வேண்டியவர்களுக்குத்தான் வழங்குகிறார்கள். அதனால் பல விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்குவதற்காகச் சொல்லவில்லை இதை. அருப்புக்கோட்டைத் தாலுகாவில் நான் இப்போது சட்டசபைக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பு கடன் வசூல் கெடுபிடியை உண்டாக்கியிருக்கிறார்கள். அப்படிக் கெடுபிடி செய்து கடன்தொகைகளை இப்போது வசூலிக்கக் கூடாது என்று அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு போட்டிருந்தாலும்கூட, அவர்கள் அதைக் கடைப்பிடிக்கவில்லை. அனாவாரிச் சான்றிதழ் அடிப்படையில் கொடுக்கப்படுவதால் அந்தச் சான்றிதழ்கள் சரிவர அளிக்கப்படவில்லை. இதற்கான திட்டவட்டமான அறிவிப்பை அரசு வெளியிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் வசூலிப்பதில் கடுமையான கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்றும், அதுபற்றி உடனடியாக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் ஏற்கெனவே அறிக்கையிலே கொடுத்திருக்கிறேன். அப்படி எந்தவிதமான தொல்லையும் அவர்களுக்குத் தரப்படவில்லை என்று நான் தெரிவித்தபின், அப்படிப்பட்ட தொல்லைகள் விவசாயிகளுக்கு எந்தப்



1977 ஜூலை 14] [திரு. கி. மனோகரன்]

பகுதியிலாவது அதிகாரிகள் மூலமாக இழைக்கப்படுமானால், அதுபற்றித் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் குறிப்பாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுவரையில் அரசின் கவனத்திற்கு இப்படிப்பட்ட செய்திகள் வரவில்லை. முதல் முறையாக இந்தச் செய்தி மாண்புமிகு உறுப்பினரிடமிருந்து, அதுவும் பொறுப்புள்ள உறுப்பினரிடமிருந்து வந்திருப்பதால், இதுபற்றி அரசு தன்னளவிலும் உறுப்பினர் அவர்கள் கொடுக்கிற தகவல்கள் மூலமாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு வழியாக அது அமையும் என்று கூறிக்கொண்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களைத் தொல்லையிலிருந்து விடுவிப்பதற்கும்தான் இந்த அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து அமைகிறேன்.

(பிற்பகல் 4-10)

(2) சென்னை, காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்த செல்லம்மாள் மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்காமை குறித்து.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட நிகழ்வினை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"சென்னையிலும், காஞ்சிபுரத்திலும் உள்ள பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்த செல்லம்மாள் மகளிர் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்குக் கடந்த நான்கு மாதங்களாகச் சம்பளம் வழங்காமை குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சென்னையிலும், காஞ்சிபுரத்திலும் உள்ள பச்சையப்பன் அறக்கட்டளை கல்லூரிகளில் சம்பளம் கொடுக்காமல் இருந்த நிலைமை குறித்து விசாரிக்கப்பட்டு அவர்களிடம் விவரம் கேட்கப்பட்டு, சிலமாதங்களாக அவர்களுக்குத் தரப்படாமல் இருந்தது என்றும், அதற்குப் பிறகு தோராயமாக ஒரு தொகையை

[திரு. செ. அரங்கநாயகம்] [1977 ஜூலை 14

அனுப்பி அவர்களுக்குப் பட்டுவாடா செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு, மீதியிருக்கும் சில மாதங்களுக்கான சம்பளத்தைத் தருவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. க. அறிவழகன்: துணைத் தலைவரவர்களே, இவ்வாறு ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுப்பதில் தயங்குகிற கல்லூரிகளைப் பொறுத்தவரை, அரசே நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குகின்ற திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைப் பரிசிலித்து நாங்கள் முடிவு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிகமான இடங்களைப் பிடித்து, இங்கே ஆட்சி அமைத்திருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, கவர்னர் பெருமான் உரையின் மீதான விவாதத்தில் ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

முதலில் நான் குறிப்பிடக்கூடிய நிகழ்ச்சி, அண்மையில் இந்த அவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமும், அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் பேரிலும் இங்கே பேசப்பட்ட காவிரி நீர்ப் பிரச்சினையாகும். தமிழகத்தின் ஒரு முக்கியமான பிரச்சினை, அதுவும் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மிக மிக முக்கியமான பிரச்சினை, இந்த காவிரி நீர் பிரச்சினை என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களும் கருநாடக மாநிலத்திற்குச் சென்று, அங்கேயுள்ள முதலமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் கலந்து பேசி, நம்முடைய மாநிலத்திற்கு, அதுவும் குறிப்பாகக் காவிரி டெல்டா பகுதியில் உள்ளவர்களுக்கு குறுவை பயிரிடுவதற்குப் போதுமான தண்ணீரை அவர்கள் கொடுப்பது என்ற உறுதியைப் பெற்று வந்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியை நான் அன்றைய



1977 ஜூலை 14] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தினமே தெரிவித்துக் கொண்டேன். அந்த அடிப்படையில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பலர் என்னை வந்து அணுகிய நேரத்தில் எல்லாம் குறுவை போடலாம், சென்ற ஆண்டைப் போல நஷ்டம் ஏற்பட்டாலும் போடலாம் என்று சொன்னேன். விவரம் கேட்ட போது, இந்த அரசு உறுதிமொழி கொடுத்திருக்கிற காரணத்தால், நாணும் குறுவை சாகுபடி செய்யலாம் என்ற உறுதிமொழியை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன் என்பதை அமைச்சர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எப்படியும் தஞ்சை மாவட்டத்துக்காரர்கள், காவிரி டெல்டா பகுதியில் உள்ளவர்கள் குறுவை பயிரிடுவதை நிறுத்துவதாக இல்லை. எவ்வளவு நஷ்டமானாலும், குறுவையை நிச்சயமாகப் போட்டே தீருவோம் என்ற உறுதியை எடுத்துவிட்டாலும்கூட, தண்ணீர் கிடைப்பதின் மூலம் நஷ்டம் இல்லாத நிலைமையை உருவாக்கலாம். கவர்னர் உரையின் மீது அமைச்சர் பெருமக்கள் உரையாற்றுகிறபோது, இந்த நிலைமையை மேலும் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சைக்கு 17 ஆம் தேதி வருவதாகச் சொல்கிறார்கள். அப்போது பெரும்பாலான தஞ்சை மாவட்ட விவசாயிகள் அமைச்சர் அவர்களைச் சந்திப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தச் சமயத்தில் அவர்களுக்கு இந்த உறுதிமொழியை நிச்சயமாக அளிக்க வேண்டும். ஏன் இதைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன் என்றால், நான் அதனைத் தெரிவிக்க விரும்பாவிட்டாலும், ஓரளவு சொல்லித் தீரவேண்டிய கட்டாயத்தில் சொல்கிறேன்........ இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, கடந்த சில ஆண்டுக் காலமாக கருநாடக மாநிலத்திற்கும், நமது மாநிலத்திற்கும் பேச்சுவார்த்தை நடக்கிற போது, இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சரும், பொதுப் பணித் துறை அமைச்சரும் கருநாடக மாநிலத்திற்குச் சென்று சில சமயங்களில் பேசினார்கள். அதே முறையில் சென்ற ஜனாதிபதி ஆட்சி இருந்தபோதும், இது சம்பந்தமாக கருநாடக மாநிலத்திற்குச் சென்று பேசப்பட்டது. அப்போது அங்கேயிருந்த முதலமைச்சர் உறுதிமொழி அளித்து, சில சந்தர்ப்பங்களில் அந்த உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை. ஆனால் இப்போது கொடுத்த உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும், நிச்சயமாகக் காப்பாற்றப்படும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் நல்ல முறையில் அணுகப்பட்டு, இரு

நாளில் சென்று முடித்து வந்த காரணத்தினால், அந்த முதலமைச்சரிடம் நல்ல முறையில் பழகி, அந்த உறுதிமொழியைப் பெற்றிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கி. அறிவழகன் : தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் செய்கிறவர் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். கருநாடக மாநிலத்தில் நண்பர் அவர்களுடைய கட்சி ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது; ஆகவே இந்த உறுதி மொழியைக் காப்பாற்ற வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள்தான் கேட்டுக்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பை நம்முடைய உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களை நான் இதுவரையில் அரசியல்வாதி என்ற கண்ணோட்டத்தில்தான் அறிந்திருந்தேன். கிட்டத்தட்ட பல ஆண்டுக் காலமாகப் பழகியிருந்தும்கூட, அவர் தஞ்சை மாவட்ட விவசாயி என்று சொல்லும்போது, எனக்கும் நண்பர்களுக்கும் புதுமையாக இருக்கிறது.

திரு. கி. அறிவழகன் : நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்பட்ட அளவிற்கு எனக்கு நிலம் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தக்கால் நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் என்ன உறுதிமொழியைக் கொடுக்க முடியும்? நாங்கள் கொடுக்கும் உறுதிமொழி எல்லாம் குறைவையைச் சாகுபடி செய்யப் போகிறோம் என்பதுதான். அரசாங்கத்தின் சார்பில்தான் உறுதிமொழி அளிக்கப்பட வேண்டுமே தவிர, விவசாயிகள் சார்பில் எந்தவிதமான உறுதிமொழியும் அளிக்க முடியாது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மேலவைத் துணைத் தலைவர்களே, உறுதி அளிக்க வேண்டுமென்றுகூட நான் கேட்கவில்லை. உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அவர் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்த கருநாடக அரசைச் சந்தேகிக்கும் நிலையில் இருந்தால் போதும் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.





திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவா வர்களே, இந்தப் பிரச்சினையை நான் கட்சி நோக்கத்தோடு அணுகவில்லை. இங்கே இருக்கக் கூடிய அமைச்சர் பெருமக்களும், மாற்றுக் கட்சிக்காரர்களும்கூட கட்சிக் கண்ணோட்டத்துடன் அதை அணுகுவார்கள் என்று நான் கருதவில்லை. அமைச்சர் பெருமக்கள் இதுவரையில் அதைக் கட்சிக் கண்ணோட்டத்துடன் அணுகியிருந்தால், அதைத் தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். கருநாடக மாநிலத்திலகூட, அங்கே இந்தப் பிரச்சினையை அணுகும்போது, எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒருமனதாக அணுகுகிறார்களே தவிர, எந்த ஒரு கட்சிக்காரர்களும் தனிப்பட்ட அபிப்பிராயத்துடன் இருக்கவில்லை. அங்கே எல்லாக் கட்சிக்காரர்களும் நமக்கு தண்ணீரைத் தரக்கூடாது என்ற ஒரே கருத்தினைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இது மாநிலம் தழுவிய பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் கட்சி சார்புள்ள ஒரு உறுப்பினன் என்பதை விட, தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு விவசாய உறுப்பினன் என்ற கண்ணோட்டத்துடன்தான் நான் அதை அணுகுகிறேன். அது சரியானது என்றே அமைச்சர் பெருமக்கள் கருதுவார்கள் என்று நினைக்கிறேன்.

இது கடந்த பல ஆண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது, 1974 ஆம் ஆண்டோடு அது முடிகிறது என்றாலும், 1969-லிருந்து இந்தப் பிரச்சினை நம் மாநிலத்தில் தொடங்கப்பட்டது. 1969-லிருந்து 1977 வரை கடந்த ஒன்பதாண்டுக் காலமாக இந்தப் பிரச்சினை பேசப்பட்டு வருகின்றது என்பதை நான் அமைச்சர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பேசப்பட்டு வருகின்றது என்பது மட்டுமல்ல, எந்தவிதமான ஒரு உடன்படிக்கையும், முடிவும் ஏற்படாத நிலைமை ஏற்பட்டு, கருநாடக மாநிலத்தில் உள்ளவர்கள் அணைகளைக் கட்டுகிறார்கள் என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டது. கபினி ஆற்றில் அணை கட்டி, பிறகு ஹேமாவதியில் கட்டி, அதற்கும் பிறகு சொர்ணவதியில் கட்டினார்கள். கட்டுவதே சரியானதா, தவறானதா என்ற பிரச்சினை எல்லாம் பேசப்பட்டு, அப்போதிருந்த 'ப்ளானிங் கமிஷ'னில் இரண்டு மூன்றாண்டுக் காலத்திற்கு சேர்க்கப்படாமல், பின்னால் அதைக் கட்ட ஆரம்பித்தார்கள். அணைகளைக் கட்டக்கூடாது என்று முதலிலிருந்து நாம் சொல்லி வந்தும், இப்பொழுது அணை முடிந்த நிலையில் நாம் பேசவேண்டியவர்களாக இருக்கிறோம். " Cauvery Valley Authority " என்ற அளவில் ஒரு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1977 ஜூலை 14

ஆய்வுக் குழு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருப்பதாக நான் பத்திரிகை மூலமாகப் பார்த்தேன். நம் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களும், மற்ற மாநில முதலமைச்சர்களும் மத்தியிலே இருக்கக்கூடிய விவசாய அமைச்சர் அவர்களும் இந்தக் கூட்டத்திலே கலந்துகொள்வதாக அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். கூட்டம் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம் மிக விரைவிலே

(பிற்பகல் 4-20.)

இருந்தாலும் கூட, அது சரியான காலமல்ல என்பது என்னுடைய கருத்துக்கு எட்டியது. இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு திங்களில் நம்முடைய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதன்மீது விவாதங்கள் சட்டசபையில் நடைபெறும் காலம் அது. அதே நிலைமைதான் கருநாடக மாநிலத்திலும் இருக்கும். மத்தியிலும் அப்போது பாராளுமன்றக் கூட்டம் இருக்கும். அந்த நிலைமையில் ஒரு நாள் அங்கே போய்ப் பேசுகிறபோது, இரண்டு மாநிலங் களிலும் சட்ட சபைக் கூட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலைமையில், எதையும் பேசித் தீர்க்க முடியாது. இதைக் கொஞ்சம் தள்ளிப் போட்டால்கூடப் போதும், சட்டசபை முடிந்த பிறகு, நிதானமாக அதைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து, அவகாசம் எடுத்துக்கொண்டு, பேச வேண்டும். டெல்லிக்குப் போய்ப் பேசவேண்டுமானால், அதற்காக நான்கு அல்லது ஐந்து நாட்களை ஒதுக்கி வைத்துக்கொண்டு பேச வேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஏதோ காலையில் விமானத்தில் போய்ப் பேசிவிட்டு, மாலையில் திரும்பி வரக்கூடிய பிரச்சினையல்ல. " Cauvery Valley Authority " அதாவது காவிரிப் பள்ளத் தாக்கு ஆணைக்குழு கடந்த ஆண்டில் இரண்டு, மூன்று தடவை கூடிப் பேசியது. தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு ஆணைக் குழு அமைத்த அடிப்படையில் காவிரிப் பள்ளத்தாக்கு ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவில் இரண்டு கருத்துக் களைச் சொன்னார்கள். ஒரு கருத்து, காவிரி நீரைப் பங்கீடு செய்துகொள்வது பற்றியதாகும். எந்த அடிப்படையில் அந்த நீரைப் பங்கீடு செய்துகொள்வதென்ற முடிவைத் தெரிவித்தார்கள். அந்த முடிவு அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டதைப் பார்த்தேன்.



1977 ஜூலை 14] [திரு. ஜி. சுவாமிநாதன்]

முடிவு ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு, அதை எப்படி நிறை வேற்றுவது என்பதுபற்றிச் சொல்லப்பட்டது. ஏறக்குறைய ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. அந்தந்த மாநிலங்களில் இருக் கக்கூடிய பொதுப் பணித் துறை அதிகாரிகள் சகல விவரங்களையும் கொண்டுவந்து கொடுப்பார்கள், அமைச்சரவைக்குச் சொல் கிறேன், அந்தப் பிரச்சினையை முதலிலிருந்து கடைசிவரை நீங்கள் பேச வேண்டும். காவிரி நீர்ப் பங்கீடுதான் முக்கியமானது; அந்தப் பங்கீட்டைப் பற்றி எப்படி நிர்வாகம் நடத்துவது என்பது முக்கியமல்ல. அந்தப் பங்கீடு விஷயம் சரியான முறையில் நிர்ண யிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இப்போது நிர்ணயிக்கப்பட்டிருப்பது தமிழகத்திற்குச் சாதகமாக அமைய வில்லை என்ற ஒரு சந்தேகத்தை எழுப்புகிறார்கள். எனவே முதலில் அந்த நிர்ணயத்தைச் சரி செய்துகொண்டு, அதற்கப்பால் நிர்வாகத்தைப் பற்றிப் பார்க்கலாம். இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இப்போது நீங்கள் போய் வந்தீர்கள். அடுத்த முறை டெல்லிக்குக் கூப்பிடுவார்கள். தமிழ் நாட்டிலுள்ள முதலமைச்சர் அங்கே போய்ப் பேசலாம்; அவர்கள் இங்கே வந்து பேசலாம். கேரள முதலமைச்சர் எங்கள் மாநிலத்திற்கு வாருங்கள் என்று அழைக்கலாம். இடையில் புதுவை மாநில முதலமைச்சர், காவிரி நீரில் எங்களுக்கும் பங்குண்டு என்று தானும் பேச்சு வார்த்தையில் சேர்ந்துகொள்ளலாம். மறுபடியும் இரண்டு, மூன்று ஆண்டுகளாகிவிடும். இதுபற்றிப் பேசிக் கொண்டே இருப்போம். இதற்கு எந்தவிதமான முடிவும் ஏற்படாதென்ற நிலையில் இருக்கும். எனவே இதற்குக் குறிப் பாக ஒரு காலக்கெடு வைத்து, time-bound' என்று வைத்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். 1974-ல் ஒப்பந்தம் முடிந்தது. ஒப்பந்தம் முடிந்து கிட்டத்தட்ட 2, 3 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இன்னும் ஓராண்டுக்குள் இதில் ஒரு முடிவு ஏற்பட வேண்டும். இந்த ஆண்டு நீங்கள் கருநாடக மாநிலத் தோடு பேசுகிறீர்கள். அவர்கள் அடுத்த ஆண்டு இருக்கிறார்களா, இல்லையா என்பது தெரியாது. எந்த அமைச்சரைக் கண்டு, யார் எப்படிப் பேசுவது என்ற பிரச்சினை எழக்கூடும். இப்போதிருக்கும் சுமுகமான நிலைமையில் இதைப்பற்றிப் பேசி, அவர் களுக்கும் மின்சாரப் பற்றாக்குறை இருந்து, நமக்கும் நீர் பற்றாக் குறை இருந்துள்ள நிலைமையில், barter முறையில் ஒரு வியாபாரத்தைச் செய்து அவர்கள் மின்சாரத்தையும், நாம் தண்ணீரையும் இப்போது பெற்றுள்ளோம். அவர்களுக்கும்

தேவையான மின்சாரம் இருந்து, நமக்குத் தேவையான தண்ணீர் இல்லையென்றால், அவர்களுக்கு வேறு எது தேவை என்று தேடும் அவசியம் நமக்கு ஏற்படும். அடுத்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு முன்னால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும். அந்த முடிவு ஒரு ஒப்பந்தத்தில் ஏற்பட வேண்டும். காவிரிப் பள்ளத்தாக்கு ஆணைக்குழுவின் கூட்டத்திற்குப் பிறகு, அதாவது இன்னும் மூன்று மாதத்திற்குள் ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, காவிரி நதி நீர் ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், இந்திய அரசு இரண்டு குழுக்களை அமைத்துள்ளது. ஒன்று, தொழில் நுட்பக் குழு; மற்றொன்று, காவிரிப் பள்ளத்தாக்கு ஆணைக் குழு. காவிரிப் பள்ளத்தாக்கு ஆணைக் குழுவில் அரசுச் செயலாளர்கள் தான் கூடிப் பேசியிருக்கிறார்கள். அது அந்த மட்டத்தில்தான் இருக்கிறது. தொழில் நுட்பக் குழுவில் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்கள் கலந்து கொண்டார்கள். இந்த இரண்டு குழுக்களின் அறிக்கைகள் கிடைத்த பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடைபெறுமென்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நம்முடைய மாநிலத்திலிருந்து ஆளுநர் திரு. சுகாடியா அவர்கள் சென்றார்கள். அவருடன் பொதுப் பணித்துறைச் செயலாளர் சென்றார். மாநில அளவில் மைய அரசுடன் கலந்து பேசினார்கள். காவிரி நதி நீர்ப் பங்கீட்டைப் பொறுத்த அளவில் கருநாடகத்துக்கு எவ்வளவு, தமிழ் நாட்டிற்கு எவ்வளவு என்ற பிரச்சினைகளெல்லாம் பேசப்பட்டிருக்கின்றன. Tentative formula, என்ற அளவில் ஒப்பந்தம் உருவாகியிருக்கிறது. அதை முடிந்த ஒப்பந்தமாகக் கருத வேண்டாமென்று சொல்லிக்கொள்வேன். அதற்குப் பின்னாலே கருநாடக மாநிலத்திலிருந்து நான்கு வால்யூம் அளவில் ஒரு புத்தகம் போட்டு, நம்முடைய மாநிலத்தில் இருக்கிறவர்கள் விவசாயம் செய்கிறார்கள்; தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறவர்கள் எப்படித் தண்ணீரை உபயோகப்படுத்துகிறார்கள்; எப்படி வீணாகச் செலவழிக்கிறார்கள்; எப்படி பம்ப்செட் போடுவது என்பது பற்றியெல்லாம் அதிலே சொல்லியிருக்கிறார்கள். பம்ப் செட் போடுவது நமக்குத் தெரியாததல்ல. ஒரு பம்ப்செட் போட 400 ரூபாய் செலவாகும். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த நீரை எடுக்க பம்ப்செட் போட்டுக்கொள்ளுங்களென்று



அவர்கள் சொல்கிறார்கள். கட்டின அணை போதாமல், அவர்கள் இன்னும் மூன்று அணைகளைக் கட்டுகிறார்கள். 'மூட்டை' என்ற இடத்தில் ஓர் அணைக்கட்டு; ஹோர்கனக்கல்லில் இன்னொரு அணைக் கட்டு; மேலும் கருநாடக மாநிலத்தில் மற்றொன்று. இப்படி அணைகளைக் கட்டப்போகிறோமென்று அவர்கள் திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்; நம்முடைய மாநிலத்திற்கும் அனுப்பியிருக்கிறார்கள். அங்கேயிருந்து சிலரை இங்கேயனுப்பி, காவிரி டெல்டா பகுதியைப் பார்த்து, விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் இவர்கள் வரும்போது, விவசாயிகள் என்ற முறையில் நாங்கள் அவர்களைப் பார்த்து தஞ்சை விவசாயிகளின் பிரச்சினைகளைச் சொல்லுவோம். ஒருசமயம் அதிகாரிகள் வந்தார்கள். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு மழை பெய்திருந்தது. அவர்கள் எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு, வந்த பிறகு நாங்கள் விருந்தும் கொடுத்தோம். அப்போது அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் வறட்சியே இல்லை, எங்கும் தண்ணீர் இருக்கிறதென்று கூறினார்கள். நான் அவர்களிடத்தில், இங்கே இரண்டு நாட்களுக்கு முன்பு மழை பெய்ததைப்பற்றி யாரும் சொல்லவில்லையா என்று கேட்டேன். அவர்கள், யாரும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். மழை பெய்ததால் ஏற்பட்ட நீர்நிலைகளைக்கூட நீர்நிலைகளென்று கருதும் நிபுணர்கள் இருக்கிறார்கள். எனவே இதுகுறித்து முதலமைச்சரவர்கள் சென்று பேசும்போது ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும். மூன்று மாதத்திற்குள் ஒரு முடிவு ஏற்படா விட்டால், நமக்கு இருக்கக்கூடிய நிரந்தரமான பரிகாரங்கள் ஒன்றிரண்டுதான். 1956-ம் ஆண்டு சட்டப்படி நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற தண்ணீர்த் தகராறைத் தீர்க்கும் அளவில் நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். அதற்காக ஒரு நடுவர் மன்றத்தைப் போட வேண்டுமென்று மூன்று மாதத்திற்குப் பிறகு கேட்க வேண்டும். மூன்று மாதத்திற்குப் பிறகு நடுவர் மன்றத்தைப் போடச் சொல்லலாம். ஆனால் சட்டத்தில் இருக்கும் குறைபாடுகள் என்னவென்றால், மாநில அரசு நடுவர் மன்றத்தைப் போட வேண்டுமென்று தீர்மானம் போட்டுச் சொன்னாலும், மத்திய அரசு தேவையில்லை என்று கருதினால், அந்தத் தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியில்தான் போடும். பேச்சு வார்த்தையில் தீர்வு காணலாமென்ற நம்பிக்கையை மத்திய அரசு இழந்தால், அதற்குப்பிறகு சட்டத்தின் அடிப்படையில் அரசுக்கு இந்த தண்ணீர் பிரச்சினையில் தோன்றினால் ஓராண்டில் நடுவர் மன்றத்தை அமைக்கலாமென்று இருக்கிறது. மத்திய

தோன்றலாம் அல்லது மூன்று ஆண்டுகள் கழித்துத் தோன்றலாம். இந்த நிலைமையில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக உச்ச நீதி மன்றத்தில் ஓர் வழக்கு போடப்பட்டது. அரசாங்கத்தைச் சார்ந்து இல்லாமல் வழக்குப்போட வேண்டுமென்று சொன்னோம். அதை ஏன் சொன்னோமென்றால், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய பாத்தியதையாய் அது இருக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னோம். Riparian rights, உரிமைகள் பாதிக்கப்படும்போது வழக்குப் போட உரிமையிருக்கிறது. அதன் அடிப்படையில் போட்டோம். வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது அந்த வழக்கை வாபஸ் செய்தார்கள். தஞ்சை மாவட்ட விவசாயிகள் அல்லாத, இன்னும் சில பேர் கூட இருந்துகொண்டு, அந்த வழக்கை வாபஸ் செய்தார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வேறு யார் யார் இருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பெயர்களைச் சொல்லாமல் இருந்தால், நல்லதென்று நினைக்கிறேன். வழக்கை அவர்கள் வாபஸ் செய்தார்கள். ஏன் செய்தீர்கள் என்று கேட்டபோது, அப்போது விவசாய அமைச்சராக இருந்த திரு. ஜகஜீவன் ராம் அவர்களைக் கண்டு பேசினோம்; அவர்கள், வழக்கை வாபஸ் செய்தால் பேசுவதற்குச் சௌகரியமாக இருக்குமென்று சொன்னதால், வாபஸ் செய்தோமென்று சொன்னார்கள். வழக்கு தொடர்ந்து நடைபெற்றிருந்தால், உச்ச நீதி மன்றம் அந்த வழக்கிற்கு ஒரு முடிவைச் சொல்லியிருக்க வேண்டும். அதற்கு கருநாடக அரசாங்கமும் கட்டுப்பட்டதாக இருந்திருக்கும். இந்த அவையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 17 ஆம் தேதி முதலமைச்சரவர்கள் வருவதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே, உச்ச நீதி மன்றத்திலே தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பிலே ஒரு வழக்கைப் போடுவதாக ஒரு முடிவை நாங்கள் எடுத்துவிட்டோம். அந்த வழக்கைப் போடுவோம். அந்த வழக்கின் முடிவு விரைவில் வருமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசு, சட்டத்தின் அடிப்படையில் இதற்கு முயலாவிட்டால், நீங்கள்கூட ஒரு வழக்கை உச்ச நீதி மன்றத்திற்குக் கொண்டுபோகலாமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வேன். இப்போதைய சட்டத்தின்





அடிப்படையில் உச்ச நீதி மன்றத்திற்குச் செல்லும் வாய்ப்புக்கள் அரசுக்கு அளிக்கப்படவில்லை. மத்திய அரசு ஒரு முடிவெடுத்த பிறகுதான் நாம் வழக்குப் போட முடியும். கடந்த நான்கு ஆண்டுகளாக ஒரு முடிவும் எடுக்கப்படாததால், விரைவில் ஒரு இறுதி முடிவை எடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடிய ஒரு ஆணையை நாம் கோர்ட்டிலிருந்து பெற முடியுமென்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறது. அதைப்பற்றி நானும் படித்துப் பார்த்தேன். 6 மாத காலத்திற்குள் நடுவர் மன்றத்திற்கு அனுப்பும் காரியத்தைச் செய்து, அடுத்த குறுவை சாகுபடிக்குள் தீர்த்தரமான பரிகாரத்தைச் செய்யுமென்று தமிழகம் பெரிதும் எதிர்பார்க்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.30)

கிராம மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவது குறித்து நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையிலே ஒரு சிறப்பான குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். கிராம மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை, பொருளாதார உயர்வை மேம்படச் செய்வதற்கு மத்திய அரசும் மாநில அரசும் பல ஆண்டுகளாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து இருக்கும் ஒரு பிரச்சினையாகத் தான் இருந்துகொண்டிருக்கிறது. நேற்றையதினம் பேசும்போது, நம்முடைய நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அந்தப் பிரச்சினையைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். கிராம மக்களுடைய பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். மாநில வளர்ச்சிக் குழுவில், டெல்லியில் அமைச்சர் திரு. சரண்சிங் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் கிராம மக்களை மேம்படுத்த, கிராமத்திற்கு அருகாமையிலே சிறு தொழில்கள் வைத்து அந்தச் சிறுதொழில்கள் மூலம் நல்ல வேலைவாய்ப்புக்களை கிராம மக்களுக்கு ஏற்படுத்தித் தரமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் கிராம மக்களுடைய பொருளாதாரத்தைப் பெருக்கமுடியும் என்று சொல்கின்றார்கள். என்னுடைய எண்ணத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலமாகவே, கிராம மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவது குறித்து எண்ணுகிறவைகள் எல்லாம் சரியானவை என்று சொல்வதற்கில்லை. காரணம் 20 ஆண்டுகளாக நாம் கொண்டிருக்கின்ற கருத்து சரியாக இருக்கும் என்று நான் சொல்வதற்கில்லை. அதுவும் இத்தனை ஆண்டுகளாக நமது மாநில அரசுகளும், மத்திய அரசும் செய்து

ஏற்பாடுகளைப் பார்க்கும்போது, கிராம மக்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடைந்திருக்க வேண்டும். பதிலாக கிராம மக்களுடைய வாழ்க்கைத்தரம் கீழே போய்க்கொண்டிருக்கிறது. கவர்னர் அவர்கள் அவருடைய உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். அடிப்படையான காரணம் என்ன? நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், 70 சதம் மக்கள் கிராமங்களிலே வாழ்கின்றார்கள். கிட்டத்தட்ட 4½ கோடி மக்களில் கிட்டத்தட்ட 3¼ கோடி மக்கள் கிராமங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த 3¼ கோடி மக்கள் அங்கே விவசாயத்தைதான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களிலே இருக்கும் விவசாயிகள் எவ்வளவு பேர்கள்? Statistical Hand book என்ற ஒரு புத்தகத்திலே எடுத்துப் பார்த்தேன். அதிலே போட்டிருக்கின்றார்கள். நமது மாநிலத்திலே மொத்தம் 50 லட்சம் பேர்கள் பட்டாதாரர்கள். அவர்களிலே ஒரு ஏக்கருக்குள்ளாக எவ்வளவு பேர்கள் வைத்திருக்கின்றார்கள் என்று பார்த்தால், 45 சதவிகிதம் பேர்கள் ஒரு ஏக்கருக்குள்ளே வைத்திருக்கின்றார்கள். ஒரு ஏக்கருக்குள் வைத்திருப்பவர்கள் என்று அவர்கள் கணக்கெடுத்துக் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலே அந்தக் குறிப்புகளை நான் சொல்ல முடிகிறது. ஹேண்ட்புக்கில் சொல்லியிருக்கின்றார்கள். 1.25 ஏக்கருக்குள் வைத்திருப்பவர்கள் 31 சதவிகிதம், 1.25 ஏக்கரிலிருந்து, 2.5 ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் 20 சதவிகிதம், 2.5 ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் 20 சதவிகிதம். ஆக நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடியவர்களிலே 50 லட்சம் பட்டாதாரர்கள் என்று இருக்கின்றது. இருக்கக் கூடிய நிலச்சொந்தக்காரர்களிலே 74 சதம் பேர்கள் 5 ஏக்கருக்குள்ளாக நிலம் வைத்து வாழக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய பிளானிங் கமிஷனிலே சொல்லப்பட்ட கருத்து கிராமத்திலுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் இல்லாமல், முழு நேர வேலையில்லாமல் அனாவசியமாகப் பொழுதைக் கழிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும். 25 லட்சம் மக்களைக் கிராமத்திலிருந்து புரட்டி அவர்களை நகரத்திலே உள்ள பெரிய தொழிலிலே வைத்தால்கூட அந்தத் தொழிலிலே ஒரு மாதத்திற்கு ரூபாய் 15 வாங்கியவர், ரூபாய் 500 வாங்கினாலும் இது முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு, கிராமத்திற்கு அருகிலே சிறு தொழில்களை ஏற்படுத்தினோம்





என்று சொன்னால், ரூபாய் 150-லிருந்து ரூபாய் 200 வரை சம்பாதிப்பார்கள், சுபிட்சமாக கிராமத்திலே வாழலாம் என்று அளவுக்கு திரு. சரண்சிங் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர்களும் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் கிராமத்தில் 3¼ கோடி பேர்கள் இருக்கின்றார்கள். நகர்ப்புறங்களில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறார்கள்? மத்திய மாநில அரசுகளால் எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன? பத்து லட்சம் பேர்கள் மத்திய அரசு மாநில அரசு அலுவலகங்களில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் லோகல் பாடிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். இன்னொரு 16 லட்சம் பேர் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், பெரிய தொழில்கள் இவைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். 258 ஆம் பக்கத்திலே ஸ்டேடிஸ்டிகல் புத்தகத்தில் இருக்கின்றது. இந்த 10 லட்சம் பேர்களும் இன்னொரு 16 லட்சம் பேர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், இருக்கின்ற 4½ கோடி பேர்களிலே, 26 லட்சம் பேர்களுக்குத்தான் நகர்ப்புறங்களில் வேலை வாய்ப்பு இருக்கிறது. இவ்வளவு காலமாக, 1947 முதல் 1977 வரையிலே நாம் செய்த மகத்தான காரியம் இவ்வளவுதான் என்று சொல்ல வேண்டும். கிராமப்புறங்களில் வேலையில்லாதவர்கள் எத்தனை பேர்கள்? 3½ லட்சம் பட்டதாரிகள், 50 லட்சம் கைத்தொழிலாளர்கள், லட்சக்கணக்கில் இருக்கிறார்கள், அவர்களின் குடும்பத்தைச் சேர்த்து கிட்டத்தட்ட ஒரு கோடி பேர்கள். இதில் 25 சதவிகிதம் அல்லது 30 சதவிகிதம் பேர்கள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்ந்தால், அவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்க சிறு தொழில்களை ஆரம்பித்தால், கிட்டத்தட்ட சில ஆயிரக் கணக்கானவர்களுக்கு நாம் வாய்ப்பளிக்கக்கூடும். மாநிலத்தில் லட்சக்கணக்கில், ஒரு கோடிக்கு மேலாக இருக்கின்றார்கள் என்று சொல்லலாம். இன்னும் ஒரு ஆண்டு காலத்தில் எந்த சிறு தொழில் பொருளாதாரத்தைக் கொண்டும் எல்லோருக்கும் வேலை வாய்ப்புக்களை அளிக்கக்கூடிய நிலையில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வேலை வாய்ப்புத் திட்டத்தினுடைய நிலைமை குறித்து அங்கத்தினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும் நானும் ஒரு குறிப்பை அது குறித்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உள்ள ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 65 சதம்

பேர்கள், 25 வயதிற்குட்பட்டவர்கள் இருக்கிறார்கள். மற்றும் இருக்கின்ற 4½ கோடி ஜனத்தொகையில், கிட்டத்தட்ட 2¼ கோடிக்கு வயதானவர்களும் மற்றும் குழந்தைகளும் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவரவர்களே, நானும் ரொம்பவும் ஜாக்கிரதையாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். மொத்த ஜனத்தொகை 4½ கோடியில், 75 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் என்று சொன்னேன். இத்துடன் ஒவ்வொருவர் குடும்பத்திலும் மேலும் 4 அல்லது 5 பேர்கள் என்று வைத்துக் கணக்கிடலாம். அப்படிக் கூடுதலாகின்ற எண்ணிக்கையைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் சொல்கின்றார்கள். நான் சொன்னதில் குழந்தைகளும், பிள்ளைகளும், வயதான வேலையில்லாதவர்களும் உண்டு. 70 லட்சம் என்று சொல்கிறேன். அது ஒரு கோடிக்கும் வரலாம். குடும்பங்களில் உள்ளவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியுமா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். கிராமப் பொருளாதாரத் திட்டத்திலுள்ள பல சிக்கல்களைப் பற்றி நானும் கலந்தாலோசித்தேன். எனக்குத் தோன்றியது, கிராம மக்கள் அங்கேயே இருந்து விவசாயத்தில் ஈடுபட்டு, இன்னும் அதிகமான பொருளாதாரச் சக்தியைப் பெற்று வாழ வழிவகை செய்ய வேண்டும். இங்கு கிட்டத்தட்ட 70 சதம் பேர்கள் விவசாயத்தில் இருக்கின்றார்கள். நான் ஒரு கணக்கு எடுத்துப் பார்த்தேன். ஜப்பான், தாய்லாந்து நாடுகளில் விவசாயத்தில் உள்ளவர்கள் நம் நாட்டைப்போல் இல்லை. ஜப்பான், தாய்லாந்து, கொரியா ஆகிய நாடுகளில் கிட்டத்தட்ட 5 ஏக்கரிலிருந்து 6 ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் 70 சதவிகிதம் பேர் இருக்கின்றார்கள். ஜப்பான் நாட்டிலே கிட்டத்தட்ட ஏக்கருக்கு அங்கு இருக்கின்ற 100 பேர்களில் விவசாயத்திலே ஈடுபட்டு வேலை பார்ப்பவர்கள் 87 பேர். ஒரு ஏக்கருக்கு 8.7 சதவிகிதம் பேர்கள். சௌத் கொரியாவில் 8.9 சதவிகிதம் பேர் ஒரு ஏக்கருக்கு இருக்கின்றார்கள். தாய்லாந்தில் ஒரு ஏக்கருக்கு 7.9 பேர்கள். ஈஜிப்டில் ஒரு ஏக்கருக்கு 2.4 சதவிகிதம் பேர்கள். இந்த நிலைமைதான் அந்த நாடுகளில் இருக்கின்றது. நம் நாட்டினைப் பொறுத்தவரையில், ஒரு ஏக்கருக்கு 3.9 சதவிகிதம் பேர்கள் இருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.





(பிற்பகல் 4-40)

ஜப்பான் நாட்டிலே கிட்டத்தட்ட ஒரு ஏக்கருக்கு 9 பேர் விவசாயத்தை நம்பி வாழ்ந்து பொருளாதாரத்தில் அதிக சுபிட்சமாக இருக்கிறார்கள். அப்படி "Per acre yield" என்று நம்முடைய நாட்டுக்கும் ஜப்பான் நாட்டுக்கும் தாய்லாந்து நாட்டுக்கும் கிட்டத்தட்ட ஒரு ஏக்கருக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 4,200 வரையில் வருகிறது. அந்த அளவுக்கு சம்பாதிக்கிறார்கள். அந்த அளவுக்கு அதிகப்படியானவர்கள் அத்தொழிலை நம்பி வாழ்ந்து விவசாயத்தில் வளம் பெருக்குகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் நான் சொல்வதெல்லாம் நாம் 25 ஆண்டுகளாக எண்ணிய எண்ணங்கள் அடிப்படையிலே தவறானவை. புதிய முறையில் இந்த எண்ணத்தை மாற்றியமைத்தால் நல்லது. அதற்கான கருத்துக்களின் அடிப்படையில் தொகுத்த விவரங்கள் இன்னும் வைத்திருக்கிறேன். அரசுக்கு அவற்றைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். அந்த முறையில் செய்தால், அடுத்த ஐந்தாண்டுகளில் ஓரளவேனும் நம் நாட்டிலே சுபிட்சத்தைக் கொண்டுவரும் காரியத்தை நாம் செய்ய முடியுமென்று சொல்லிக் கொள்கிறேன். நெல்லுக்கு அதிக விலை வேண்டுமென்று பேரவையிலே பேசப்பட்டது. இங்கும் அந்தப் பிரச்சினை பேசப்படுகிறது, ஆளுநர் உரையில் மாநில அரசின் கொள்கை என்ன? அதிக விலை நெல்லுக்கு என்று சொல்லும்போது, என்ன கொள்கையின் அடிப்படையில் இருக்கிறோம்? "We are neither for producers nor for consumers; but we are for the people" என்று சொன்னார்கள். நான் தெரியாமல்தான் கேட்கிறேன். இரண்டு வகை இருக்கிறது. ஒன்று உற்பத்தியாளர்கள், இன்னொன்று வாங்கி உண்பவர்கள். மூன்றாவதாக வருகிற பொது மக்கள் என்றால் யார் அவர்கள். ஒன்று உற்பத்தியாளராக இருக்க வேண்டும் அல்லது வாங்கி உண்பவர்களாக இருக்க வேண்டும். மூன்றாவது பிரிவினர் யார் என்பது தெரியவில்லை. இரண்டுக்கும் இடையேதான் அரசு முடிவெடுக்க வேண்டும். இதுவரையில் என்ன செய்தது அரசு? அக்ரிகல்சர் பிரைஸ் கமிஷன் என்று மத்தியில் ஒரு அமைப்பு வந்தது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு அதிக விலை வேண்டுமென்று கேட்டபோது, ரூபாய் 74 என்று அதற்கு விலை வைத்தார்கள். இங்குள்ள விவசாயிகள் ரூபாய் 120 கொடுக்க வேண்டுமென்று கேட்ட பிறகு ரூபாய் 100-க்காவது வருவார்களா என்று பார்த்தும், கொஞ்சமும் அந்த போதில்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1977 ஜூலை 14

இடம் கொடுக்காமல் ரூபாய் 74 என்ற அடிப்படையில் வைத்து விட்டுப் போய்விட்டார்கள். இதனால் விவசாயிகளுக்குப் பெருத்த இழப்பு ஏற்படுகிற நிலை உருவாகியிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமப் புறங்களில் சுபிட்சம் வேண்டுமென்றால், விவசாயிகள் விளைவிக்கின்ற தானியங்களுக்கு அதிக விலை தந்தால்தான் முடியும். உற்பத்தியாகிற பண்டங்களுக்குக் குறைந்த விலை கொடுத்துவிட்டு அதிலேதான் அவர்கள் வாழ வேண்டும். சுபிட்சம் வளரவேண்டுமென்றால், லாபம் இல்லாவிட்டால் கீழேதான் அவர்கள் போகவேண்டியிருக்கும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது. விவசாயிகள் சிலர் சுபிட்சமாக இருப்பதாகவும் மிகப் பெரும் பொருள் சம்பாதித்திருப்பதாகவும் சிலர் சொன்னார்கள். பெரும் பொருள் சம்பாதிக்கிறவர்களாக இருந்தால், அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் விவசாய வருமான வரியாக ரூ. 12,000-க்கு மேல் பெறுகிற பணத்திற்கு எடுத்துக் கொள்வது பற்றி ஆட்சேபணை இல்லை. ஜனதா அரசைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்கிறேன். ஜனதா தலைவர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் தேர்தலில் சொன்னார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம். விளை பொருள்களுக்கு அதிக விலை கொடுக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். கோதுமை உற்பத்தியாளர்களுக்கு மட்டும் ரூபாய் 20 கேட்டவுடன், அதைக் குறைத்து ஐந்து ரூபாய் கொடுத்தார்கள், பதல் என்று ஒருவர் இருந்தார், மத்திய அமைச்சராக. இப்போது பஞ்சாப் முதலமைச்சராக இருக்கிறார். அவர் ரூபாய் 20 வாங்கித் தருகிறேன் என்றார். சொல்கிற காரியங்களை அமைச்சரான பிறகு செய்வது கஷ்டமான காரியம். 20 ரூபாய் கேட்டதற்கு அதில் 25 சதவீதம் செய்வோம் என்று ஐந்து ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். விவசாயப் பொருள்களைப் பற்றி புதிதாக ஒரு பாலிசியைச் சொன்னார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** துணைத் தலைவர் அவர்களே, இடது காங்கிரஸ் . . . இ. காங்கிரஸ், இல்லை. புதுக் காங்கிரஸில் உள்ளவர்கள்தான் அதைப்பற்றிச் சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த அவையில் ஒரே காங்கிரஸ்தான் இருக்கிறது.



1977 ஜூலை 14]

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அந்தக் காங்கிரஸ் தலைவராக இருக்கிறவர், ஏற்கனவே ரூபாய் 95, 105 என்று வைத்து அதில் வெரைடி பிரகாரம் பிரித்துக் கொடுத்தார்கள். ஜனதா தலையிட்டால் விலை குறையவில்லை. அதற்கு முன்பே காங்கிரஸ்காரர்கள்தான் விலையைக் குறைத்தார்கள். நானும் இப்போதுதான் வந்திருக்கிறேன். அந்தக் கட்சியும் ஆட்சிக்கு வந்து அதிக காலம் ஆகிவிடவில்லை. குழந்தைப் பருவம், வளர வளரத்தான் குடும்பத்தைப் பார்க்க முடியும். முதலில் உங்கள் வீட்டைப் பார்த்துக்கொள்ளுங்கள் சரியாக. பிறகு எங்கள் வீட்டைப் பார்க்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நீங்களும் நானும் அந்தக் கட்சிகளுக்கு இப்போதுதான் போயிருக்கிறோம். திரு. பலராமன் கூடச் சொன்னார்கள் ஒரே காங்கிரஸ்தான் என்று. நாங்கள்—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள். இப்போது வந்திருக்கிறவர்கள்தான் செய்ய வேண்டும். அவர்கள் சொல்லியதை ஒன்றுமே நடத்தவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அரசு உற்பத்தியாளர்கள் விஷயத்தில் இருந்தபடியேதான் இருக்கிறது. நாங்கள் சொல்லியும் நடக்கவில்லை. நீங்கள் சொல்லியும் ஒன்றும் நடக்கவில்லை; இதில் காங்கிரஸ், ஜனதா என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. குறுவைப் பயிருக்காக நாமும் ஒரு திட்டம் போட வேண்டும். இங்குள்ள விவசாயிகளுக்கு எவ்வளவு விலை வேண்டுமென்று நிர்ணயம் செய்யப் போகிறோம் என்பதை, என்ன விலை கொடுக்கப் போகிறோம் என்பதை நான்கைந்து மாதங்களுக்கு முன்பே தெரிவித்துவிட வேண்டும். முன்பு இருந்தபடியேதான் இப்போதிருக்கிறது. அப்படிபலட நிலையை ஓரளவுதான் பார்க்கிறோம். நாம் கொடுப்பது ரூ. 20 என்றால், மத்திய அரசிலிருந்து ரூ. 10 ஆவது கொடுப்பார்களா என்ற முடிவைத் தெரிந்து குறுவை போடுவதற்கு முன்பே சொன்னால்தான், இன்னும் கொஞ்சம் உற்சாகமாக வேலையில் அவர்கள் ஈடுபட முடியும். எந்தக் காரியத்தைச் செய்பவர்களும், வியாபாரிகளாக இருந்தாலும், செய்வதற்கு முன் அதில் லாபம் எவ்வளவு வருகிறது என்றுதான் பார்ப்பார்கள். லாபத்தை எண்ணித்தான் அதற்கு வேலை செய்வார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், அண்மையில் செல்லி பெய்கிற பொழுது தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையில், நெல் விளைகிற மாநிலத்தைப் பொறுத்தவரை, இதாவது ஒரு விலையை நிர்ணயித்து, அதை மத்திய அரசு உடனடியாக

அறிவிக்கும்படி செய்ய வேண்டும். மத்திய அரசினுடைய நிலைமை என்னவென்று தெளிவு படுத்த வேண்டும். குறுவை போடுவதாக இருந்தால், அக்டோபர் நவம்பர் மாதங்களில்தான் விளைச்சல் வரும். நமது நாட்டில் விளைச்சலில் எவ்வளவு அறுவடையாகும் என்று நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்கலாம். அதிகப்படியான பாலிசி மாட்டரில் பின்னர் விளைச்சலின் அடிப்படையில் பார்ப்பதாக இருந்தாலும், முன்கூட்டியே ஒரு உத்தேச விலை நிர்ணயத்தைச் செய்யலாம். கோதுமையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் செய்தார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, the hon. Member has suggested that this Ministry should represent to the Government of India regarding an increase in the procurement price for paddy. May I point out that whatever may have been the practice in the past, agriculture is a State subject and we have the entire right to fix the price of paddy for the food-growers in our State? Whatever might have been followed in the past was a convention but was not a legal duty and I think that this aspect might also be investigated by the Government.

திரு. ஜி. சுவாமிநாதன்: நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் மத்திய மாநில உறவுகளைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர், பொருளாதார உறவுகளைப் பற்றி நன்கு புரிந்தவர். மாநிலத்திற்கு வருகிற பணம் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் பிளானிங் பட்ஜெட் மூலம் மத்திய அரசு விரும்பினால் கொடுக்கலாம். ஃபைனான்ஸ் கமிஷன் உரிமை பறிக்கப்பட்டு அதன் மூலம் வருகிற பணத்தையெல்லாம் குறைத்துவிட்டது. மத்திய அரசு விரும்பினால், திட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு தருகிறது என்பதைப் பார்த்தால், கிட்டத்தட்ட 60-லிருந்து 70 சதவிகிதம் அதுவும் மத்திய அரசு அமைச்சர் பெருந்தகை மனம் வைத்தால்தான் மாநிலங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் பத்து ரூபாய் கொடுத்தால், அதில் கோடிக்கணக்கான பணம் வரக்கூடும். நீங்கள் கேட்பதைப் பற்றி ஆட்சேபணையில்லை. அதில் அதற்கான பொறுப்பை நீங்கள் மட்டுமே எடுத்துக்கொண்டு வருகிற பணத்தைச் செலவு செய்வதைப்பற்றி ஆட்சேபணையில்லை. இந்த இழப்பீட்டுத் தொகைக்கு நிகரான தொகையை ஒதுக்க அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள்.





THIRU A. R. DAMODARAN: Sorry, Sir. I am not talking of a subsidy for paddy. What I stated was that the fair procurement price could be fixed for the producers and the selling price could be based on that procurement price. I am not saying that the Government of Tamil Nadu should give a subsidy for the distribution of paddy. Therefore, the allocation of Plan funds has nothing to do with the fixation of the procurement price for paddy.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நான் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய போனஸ்—ஈட்டுத் தொகையைச் சொல்லவில்லை. அடிப்படை நிர்ணய விலை எவ்வளவு கொடுக்கலாம் என்று சொல்கிற உரிமை அக்ரிகல்சர் ப்ரைஸஸ் கமிஷனுக்கு உண்டு. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு எல்லா மாநிலங்களுக்கும் அது தெரிவிக்கப்பட்டு மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அவர்கள் மூலமாகத்தான் நடைபெற்று வருகிறது.

(பிற்பகல் 4-50)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் எனக்குத் தெரியும். சென்ற முறை, நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்கே தெரியும். 44 ரூபாய் வரையில் வைத்தார்கள். இங்கே இருக்கக்கூடிய அரசு இன்னும் அதிகமாகக் கொடுக்கலாம் என்று சொல்லி, பத்து ரூபாய் அதிகமாக போனஸ் என்ற முறையில் அந்தச் சமயத்தில் கொடுத்து, அதற்காக இழப்பீட்டுத் தொகையை எங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசு அதைக் கொடுக்கவில்லை. இதுவரை கொடுத்ததாகவும் தெரியவில்லை. அந்தப் பிரச்சினை அப்படித்தான் உருவாகும். அப்படி உருவாகவில்லை என்று சொன்னாலும், அவர்களிடம் வந்து மோதுகிறபோது, அவர்கள் கொடுக்கிற பணங்களைக் குறைப்பது என்பது இந்த அடிப்படையிலே மட்டும் குறைப்பது என்று அர்த்தமில்லை. நமக்கும் அவர்களுக்கும் இருக்கிற தொடர்பை வைத்து, எவ்வளவு கொடுக்கலாம், எவ்வளவு குறைக்கலாம், எவ்வளவு கூட்டலாம் என்பது மத்திய அரசுக்குத் தெரியும். நமக்கும் அவர்களுக்கும் ஒரு தீர்மானமான முடிவு, நிலையைப் பொறுத்தவரையில் ஏற்படுவதற்கு முன்னால், அவர்களிடம் சென்று ஒரு கொள்கை அடிப்படையில், எல்லா மாநிலங்களுக்கும் வைத்துக்கொண்டிருக்கிற முடிவை நாம் சென்று மாற்ற வேண்டுமென்று சண்டையிடுவதோ, அதன் காரணமாக நமக்கு

வரக்கூடிய பணத்தின் அளவுகளைக் குறைத்துக்கொள்வதோ நமக்கு நல்லதாக இருக்காது. நண்பர் திரு. தாமோதரன் அவர்களும் இதை விரும்பமாட்டார் என்ற முடிவைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இதைப் பொறுத்த ஒரு கொள்கை முடிவை அவர்கள் எடுக்கலாம். நாமும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை—கோதுமையைப் பொறுத்தவரை, எல்லா மாநிலங்களுக்கும் போகலாம் என்று சொன்னார்கள். பஞ்சாப்பில் இருக்கும் கோதுமை கன்னியாகுமரி வரை கொண்டு வரப்படலாம். கேரள மாநிலத்திற்குப் போகலாம் என்று சொன்னார்கள். தென் மாநிலங்களைப் பொறுத்தவரை, அவர்கள் வைத்திருக்கக்கூடிய முடிவு என்னவென்றால், ஆந்திர மாநிலம், கருநாடகம், தமிழகம் ஆகிய மூன்றையும் ஒரு பகுதியாக வைத்து, கேரளத்தைப் பொறுத்தவரையில், அங்கு நெல் போக்குவரத்துக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்கு அதிகப்படியான விலை வேண்டுமென்று சொன்னால், கேரள மாநிலத்தையும் சேர்த்து வைத்து, இங்கே இருக்கக்கூடிய நெல் அங்கே போகக்கூடிய நிலை ஏற்பட்டால்தான், குறுவையைப் பொறுத்தவரை, அதிக விலை தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்குக் கிடைக்கும். ஏனென்றால் போடக்கூடிய குறுவையில் ஏறக்குறைய 80 சதவிகிதம் குறுவை நெல்லை கேரள மாநிலத்தில் அவர்கள்தான் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே அங்கே சென்றுதான் விற்பனையாக்கப்படுகிறது. இருக்கக்கூடிய விவசாயிகளைப் பொறுத்தவரை—நான் ஏன் இதைச் சொல்கிறேனென்றால்—அரசாங்கம் எடுத்துக் கொள்முதல் செய்யலாம். அரசாங்கம் கொள்முதல் செய்துகொண்டு தான் இருந்தது. இலட்சக்கணக்கான டன்களை நாம் கொள்முதல் செய்தோம். கொள்முதல் என்று சொல்வதே தவறான கருத்து என்பது என்னுடைய அபிப்பிராயம். நாட்டிலே பற்றாக்குறையாக உணவுப் பொருள்கள் இருக்கிறபோது, அரசாங்கம் அந்தப் பற்றாக் குறையையும் எடுத்து, தன்னுடைய கிட்டங்கியிலே அடுக்கிக்கொண்டு, அதனால் ஆறு மாதங்களில் வரக்கூடிய பற்றாக்குறையை நான்கு மாதங்களிலேயே உற்பத்தி செய்து, பிறகு கிட்டங்கியில் இருக்கும் அரிசியை, நெல்லை எடுத்துப் பார்க்கும்போது, அது புழுத்துப் போய் மக்களுக்குச் சரியாகப் போட முடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டு, இவ்வளவு பிரச்சினைக்கும் நம்முடைய கொள்முதல் காரணமாகிறது. கொள்முதல் காலத்தில் பார்த்தால், இங்கே இருக்கக்கூடிய செயலாளர்கள் இங்கேயிருந்து பம்பாய்க்குப் பறப்





பதும், ரிசர்வ் வங்கியிடம் சென்று பணம் கேட்பதும், அவர்கள் இத்தனை கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாது என்று சொல்வதும், விவசாயிகள் நெல் மூட்டைகளை வைத்துக்கொண்டு மழையிலே கஷ்டப்படுவதும் தொடர்ந்து வரும் காரியங்களாகும். இதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்திற்கு அதிகாரிகள் வருவதும், அங்கே இருக்கிறவர்கள் இதற்காக ஒரு 'டார்கெட்' நிர்ணயித்து, அதற்குப் பிறகு மாவட்ட அதிகாரிகள் அரிசியை எடுக்கச் செல்வதும், அதன் காரணமாக மக்களுக்கு ஆட்சியின்மீது வெறுப்பும், அவதூறும் ஏற்படுவதும் தொடர்ந்து கிட்டத்தட்ட ஐந்தாறு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டார்கள். "இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் கொள்முதல் என்ற அளவில் அரிசியையோ, நெல்லையோ, கோதுமையையோ வாங்குவதில்லை. எங்களுக்கு இருப்பது எங்களுக்குப் போதுமானது. உபரி மாநிலங்கள் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஏற்பாடு செய்து, அதிக விலை வரக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி, 'ஃப்ளோர் பிரைஸ்' என்று சொல்லக்கூடிய அடிப்படை நிர்ணய விலையை மட்டும் வைத்துக்கொள்வோம். நாங்கள் இதில் தீவிரமாக ஈடுபட மாட்டோம். ஏனென்றால் பணத்தை அனாவசியமாகச் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை" என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். இந்த முடிவினை பொதுவாக நாம் பார்க்கிறபோது, நல்ல முடிவாகத்தான் தெரிகிறது. இந்த முடிவின் அடிப்படையில் பல சிக்கல்கள் உண்டு. நான் இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் கூட, நம்முடைய மாநில அரசு அந்த அடிப்படையில் நம்முடைய நெல்லுக்கும் ஒரு முடிவெடுக்கலாமா என்பதைத் தாங்களும் கலந்தாலோசித்து, மத்திய அரசையும் பார்த்து, இதுவரை நான்கைந்து ஆண்டுகளாக மக்களுக்கும், அரசுக்கும் எழுந்துள்ள இடர்ப்பாடுகள், துன்பங்கள் நேராத வண்ணம், அரசும் கஷ்டப்படாத வண்ணம் ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே இருந்தபோது, ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அது குத்தகையாளர்களை நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக ஆக்கக்கூடிய சட்டம். "Conferring of ownership right on tenants" என்று சொல்லக்கூடிய ஒரு சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வந்தார்கள். நம்முடைய மாநிலத்தைப்

பொறுத்தவரையிலே இலட்சக்கணக்கான குத்தகைதாரர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, இந்த நிலம் சொந்தம் என்ற உண்மை, அந்த அடிப்படை அவர்களுக்கு வந்தாலல்லாது, அந்தக் குத்தகைதாரர்கள் சரியான முறையில் அவர்கள் நிலத்தைச் செப்பனிட்டு பயிரிட விரும்பமாட்டார்கள். எல்லா நாடுகளையும் பொறுத்தவரையில் கூட, குத்தகைதாரர்களுக்கு அவரவர்கள் வைத்துள்ள நிலங்களுக்கு அவரவர்களைச் சொந்தக்காரர்களாக ஆக்கக்கூடிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே, இந்தக் குத்தகைதாரர்களை நிலச் சொந்தக்காரர்களாக ஆக்கக்கூடிய சட்டம் இரண்டு முறை கொண்டுவரப்பட்டு, ஒருமுறை அதைத் தீர்மானிக்க முடியாமல் நிறுத்தப்பட்டு, அடுத்த முறையும் கொண்டு வரப்பட்டு, அப்படியே நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குத்தகைதாரர்களை நிலச் சொந்தக்காரர்களாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்கும்போது, ஒரு பெரும்பான்மையான மக்களுடைய பேராதரவு இந்த அமைச்சரவைக்குக் கிடைக்கும். ஆனால் அதிலே ஒரு பிரச்சினை. குத்தகைதாரர்களை நிலச் சொந்தக்காரர்களாக ஆக்கும்போது, சிறு நிலச்சுவான்தார்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இன்னொரு சங்கடம் இருக்கிறது. அவர்கள் குத்தகைக்கும் விட்டுவிட்டார்கள். விட்ட குத்தகையிலிருந்து அவர்களுக்கு எந்தவிதமான நெல்லோ, பணமோ கிடைக்கவில்லை. 'கிஸ்தி'யை மட்டும் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே எடுக்கப்பட்ட நிலங்கள் முழுவதற்கும் இவ்வளவு பணம் என்று நிர்ணயித்து, அந்தப் பணத்தை பணமாகவோ அல்லது "Land Ceiling Act" என்று சொல்லக்கூடிய உச்ச வரம்புச் சட்டத்தின் அடிப்படையில் இவ்வளவு பணம் என்று சொல்லி அவர்களுக்கு 'Guarantee" ஆகவோ Bond ஆகவோ கொடுத்தோமே, அதைப் போலக் கொடுத்துவிட்டால், நிச்சயமாக அவர்களும் மகிழ்ச்சியோடு நிலத்தை விட்டுவிடுவார்கள். பல இலட்சக்கணக்கான குத்தகைதாரர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆவார்கள். அவர்களுக்கும் கிட்டத்தட்ட பத்து அல்லது இருபதாண்டு காலத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கலாம். இதிலே நான் இன்னொரு ஆலோசனையைக்கூடச் சொல்ல விரும்புகிறேன்.





"Tenants Finance Corporation" என்று சில மாநிலங்களில் வாரியங்கள்—கார்ப்பரேஷன்கள் அமைத்திருக்கிறார்கள். அதிலே மாநில அரசு கொஞ்சம் பணம் போடுகிறார்கள். மத்திய அரசிலிருந்து கொஞ்சம் வாங்குகிறார்கள். எல்.ஐ.சி.யிலிருந்து—வங்கியிலிருந்து கொஞ்சம் பணம் வாங்கிக்கொள்கிறார்கள். அந்தப் பணத்தை இங்கே இருக்கக்கூடிய குத்தகைதாரர்களுக்குக் கொடுத்து, அந்தக் குத்தகைதாரர்கள் அந்தப் பணத்தின் மூலமாக நிலச்சுவான்தாரர்களுக்குப் பணம் கொடுத்து வாங்கிக்கொள்கிறார்கள். பத்தாண்டுகளில் அந்தப் பணத்தைக் குறைந்த வட்டியின் அடிப்படையில் திருப்பிக் கொடுக்கிறார்கள். அந்த அடிப்படையில் செய்தால், நிச்சயமாக நம் நாட்டில் உள்ள ஏழை எளிய குத்தகைதாரர்களுக்குப் பயன்படும். அந்தச் சட்டத்தைத் தருவித்துப் பார்த்து, அதனைக் கொண்டுவர முடியுமா என்பதை நீங்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முடிவாக நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு லஞ்ச ஊழலை அறவே ஒழிப்பது என்ற எண்ணத்திலே மிகவும் மும்முரமாகவும், முனைப்பாகவும் இருப்பதுபற்றி என்னுடைய மகிழ்ச்சியையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன். லஞ்ச ஒழிப்பு என்று சொல்லும்போது, இது ஆரம்பத்திலே அமைச்சரவையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அமைச்சரவையிலிருந்து ஆரம்பித்து, அது அடியிலே இருக்கிற மக்கள் வரை போனால் ஒழிய, மேலே இருக்கிறவர்கள் ஒழுங்காக இருக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டாலொழிய, கீழே இருக்கிறவர்கள் ஒழுங்காக இருக்கமாட்டார்கள். கீழே இருக்கிறவர்களிடம் போய் நீங்கள் ஒழுங்காக இருக்க வேண்டுமென்று சொன்னால், "அங்கே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சரியாக இல்லை, நாங்கள் மட்டும் எப்படி இருக்க முடியும்?" என்ற கேள்வியை எழுப்புவார்கள். அது மட்டுமல்ல. சென்ற காலத்தில் எல்லா மாநிலங்களிலும் என்ன நடந்தது என்பதைப் பார்க்க வேண்டும். அமைச்சர்கள், அதற்குப் பிறகு சட்டமன்றப் பேரவை, மேலவையிலே இருக்கிற என்னைப் போன்ற உறுப்பினர்கள் சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும். அதிகாரிகளைப் பொறுத்தவரையில், என்ன செய்கிறார்கள் என்றால், ஆங்காங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அதுவும் அவர்கள் ஆளுங்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களாக இருந்தால், அவர்களோடு நெருங்கிப் பழகி தொடர்பு கொள்ள ஆரம்பிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்

களிடம் சதாகாலமும் யாராவது வந்து இந்தக் காரியத்தைச் செய்து கொடுங்கள், அந்தக் காரியத்தைச் செய்து கொடுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, தேர்தலின்போது ஓட்டுகள் வாங்கிக் கொடுக்கப் பயன்பட்டிருப்பார்கள். 5,000 வாக்குகள் வாங்கிக் கொடுத்திருப்பார். கார் கொடுத்து உதவியிருக்கக்கூடும். பணம் கொடுத்து உதவியிருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் வந்து எனக்கு இங்கே இருக்கக்கூடிய கல்லூரியில் இடம் வேண்டுமென்றோ, இந்த அதிகாரியின் இடத்திற்கு வேறு ஒரு இடத்திலிருந்து என்னுடைய தம்பியைக் கொண்டு வந்து மாற்ற வேண்டுமென்றோ கேட்டால், மறுக்க முடியாது. உடனே நான் அதை எடுத்துக்கொண்டு அமைச்சர்களிடம் வந்து நீங்கள் எப்படியாவது செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அமைச்சர் பெருமக்களும் "இப்படி 25 சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து சொல்லும்போது, நாம் என்ன செய்வது? அவர்களை நம்பித்தானே நாம் இருக்கிறோம்" என்று அவர்கள் செய்யும் ஒரு நிலைமை உருவாகும்போது, அந்த நபர் அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களைப் பிடித்துக்கொண்டு, அங்கேயிருக்கிற அதிகாரிகளை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற முடிவிற்கு வருகிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களுக்கு ஒரு வேலை ஆகவேண்டுமென்று சொன்னவுடனே, அதிகாரிகள் அதை முடித்துவிட்டு, உடனே அவர்களுக்குப் போன் செய்து நான் இந்த வேலையைச் செய்து விட்டேன் என்று தெரிவித்துவிட்டு, பிறகு அந்த அதிகாரியின் மீது ஏதோ லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வருகிறபோது, அவருக்கு வேண்டியதாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் சென்று அவர் ரொம்ப நல்லவர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு வருகிறார்கள். யார் ரொம்ப லஞ்சம் வாங்குகிறாரோ, அவரைப் பார்த்தால், அவருக்குச் சிபாரிசு செய்ய நான்கைந்து பேர் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் ஒரு அமைச்சரிடம் ஒரு பிரச்சினை பற்றி பேசச் சென்றபோது . . . . .

**THIRU A. R. DAMODARAN**: Sir, may I caution the hon. Member that this may be considered to be a reflection on the Members of the Lower House as well as the Upper House? In expressing this criticism, he should be more general.

**THIRU G. SWAMINATHAN**: Thank you.





நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. பொதுப்படையாகச் சொன்னேன். திரு. தாமோதரன் அவர்கள் சொல்வது வாஸ்தவம். நான் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எல்லா மாநிலங்களிலும் நடக்கக்கூடிய காரியம். உலகெங்கும் நடக்கக்கூடிய காரியம் . . . . .

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்**: 'செண்டரிலும்' என்று சேர்த்துச் சொல்லுங்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்**: உலகெங்கும் என்று சொல்லும்போது, 'செண்டரும்' சேர்ந்ததுதான். ஊழல் எங்கே முக்கியமாக ஆரம்பமாகிறது என்று சொன்னால், அரசியல்வாதிகளின் வாழ்க்கையே ஊழலில் தான் ஆரம்பமாகிறது. காரணம் ஒரு தேர்தலில் அரசியல்வாதி நிற்காமல் எப்படி மந்திரியாக, எம்.எல்.ஏ.-வாக ஆக முடியும்? ஆக தேர்தலில் எவ்வளவு செய்யலாம் என்றால் 12,500 ரூபாய் செலவு செய்யலாம் என்று இருக்கும்போது . . . .

**திரு. இளம்பரிதி**: உறுப்பினர் அவர்கள் அரசியல் வாதிகளிலிருந்து ஊழல் ஆரம்பமாகிறது என்று சொல்கிறார். நான் தேர்தலில் நிற்கவில்லை. நான் அரசியல் வாதியாகத்தான் இந்த மேல்சபைக்கே வந்திருக்கிறேன். ஆகவே பொதுப்படையாக .....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: பொதுப்படையாகத் தான் சொல்கிறார். ஏற்கனவே திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதை ஒப்புக் கொண்டிருக்கிறார். குறிப்பிட்டு யாரையும் சொல்லவில்லை. ஒருவர் இருந்தாலும் கூட பொதுப்படையாகச் சுட்டிக்காட்ட உரிமையுண்டு. இல்லாவிட்டால் எப்படிப் பேச முடியும்? உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

(பிற்பகல் 5-00)

**திரு. ஜி. சுவாமிநாதன்**: துணைத் தலைவரவர்களே, தேர்தலில் நிற்கும்போது இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. போவைத் தேர்தலுக்கு 15,000 ரூபாய் செலவு செய்யலாமென்றிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு 25,000 ரூபாய் செலவு செய்யலாமென்றிருக்கிறது. ஆனால் எவ்வளவு செலவு செய்கிறார்களென்று பார்த்தால், சட்ட மன்றத் தேர்தலுக்கு லட்சம் ரூபாய் வரை செலவு செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நான் போவை

உறுப்பினர் தேர்தலுக்கு நின்றதில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் 3 லட்சம் ரூபாய் செலவாகிறதென்று சொல்லுகிறார்கள். தேர்தலுக்குப் பிறகு உறுப்பினராகிய பிறகு, ரிடர்ன் கொடுக்கும் போது, பொய் ரிடர்ன் கொடுப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி மாதிரி உண்மையாளவர்களும் இருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** திரும்பவும் அதே கஷ்டத்திற்கு வருகிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. இதற்கு நான் ஒரு வழியைக் கூற விரும்புகிறேன். தேர்தலுக்கு நிற்கக்கூடியவர்கள் இவ்வளவு ரூபாய் செலவழிக்கலாமென்று இருக்கும் சட்டத்தைத் திருத்த வேண்டும். தேர்தலில் இவ்வளவுதான் செலவு செய்யலாமென்று இப்போது இருப்பதை மாற்றி, பேரவைத் தேர்தலில் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்யலாமென்றும், நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்யலாமென்றும் சட்டத்தை மாற்றி விட்டால், சட்டத்தை மீறுகிற நிலை இருக்காதென்ற கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தேர்தலில் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட வேண்டியிருக்கிறது. வேட்பாளர்களிடம் செலவு செய்யப் பணமில்லை. எனவே கட்சிகள்தான் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே கட்சிகள் பணம் தேட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. அவர்கள் அதற்குரிய காரியங்களைச் செய்து, தகுந்த முறைகளைக் கையாண்டு பணத்தைச் சேர்க்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அவர்களால் செலவு செய்ய முடியுமென்ற நிலைமை இருக்கிறது. கட்சிக் கணக்குகள் தணிக்கை செய்யப்படாது இருக்கும் வரை, இப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கும். மேற்கு [illegible]



ஜெர்மனியில் ஒரு முறையை வைத்திருக்கிறார்கள்; அங்கே கட்சிகள் எவ்வளவு வாக்குகள் பெற்றிருக்கின்றனவோ அந்த வாக்குகளின் அடிப்படையில் அரசாங்கமே பணத்தை ஒதுக்கி விடுகிறது. அரசியல் கட்சிகள், ஜனநாயகத்தின் அடிப்படையில் அரசாங்கத்தை நடத்தக்கூடிய கட்சிகளாக இருப்பதால், அந்த அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கமே பட்ஜெட்டில், அந்தக் கட்சிக்கு இவ்வளவு, இந்தக் கட்சிக்கு இவ்வளவு என்று அறிக்கை மூலம் தெரிவித்துவிட்டு, தணிக்கைக்கும் அந்தக் கணக்குகளை உட்படுத்தி விடுகிறார்கள்.

அடுத்து, நான் சொல்வதை அமைச்சர் பெருமக்கள் விரும்புகிறார்களோ, இல்லையோ தெரியாது. சென்ற அமைச்சரவை இருந்தபோது நானும், திரு. ஏ. ஆர். தாமோதரனும் இதுபற்றி எடுத்துச் சொன்னோம். அமைச்சர்களிடம் மிகப் பெரிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மிகப் பெரிய அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்திற்கும், பொறுப்புக்கும் தகுந்த சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். இங்கே இருக்கிற அமைச்சர்களுக்கு இப்போது ஆயிரம் ரூபாய் சம்பளம். மத்தியில் இருக்கக்கூடிய அமைச்சர்களுக்கு 2,500 ரூபாய் சம்பளம். மாண்புமிகு அமைச்சர் திரு. ராகவானந்தம் வேண்டாமென்று சொல்லுகிறார். மற்ற அமைச்சர்கள் வாங்கிக் கொண்டால்கூட, அவர் வாங்கிக்கொள்ளமாட்டார் என்று எண்ணுகிறேன். அவர் என்னுடைய நெருங்கிய நண்பர். அமைச்சர்கள் எந்தவிதமான தவறும் இல்லாமல் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். 1,000 ரூபாய் வருமானத்தை வைத்துக் கொண்டு, வந்திருக்கிற நூற்றுக்கணக்கானவர்களுக்கு காப்பி வாங்கிக் கொடுத்தால்கூட, 500 அல்லது 700 ரூபாய் செலவாகிவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அறிவழகன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அமைச்சர் பெருமக்கள்பற்றி உறுப்பினரவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் உறுப்பினர்களைப்பற்றியும் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எனக்கு அதுபற்றிக் கவலையில்லை. நேரம் இருக்க வேண்டுமென்பதுதான் என் கவலை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** என்னைப் போன்றவர்களுக்கும், உறுப்பினர் திரு. அறிவழகன் போன்றவர்களுக்கும் சங்கடங்கள் இருக்கின்றன. அமைச்சர்களே ஆயிரம் ரூபாய்தான் சம்பளம் பெறுகிறார்களென்றால், உறுப்பினர்களுக்கு 550 ரூபாய்க்கு மேலே யார் தர முடியும்? முதலில் அமைச்சர்களுக்கு அதிக ஊதியங்கள் அளிக்கப்பட வேண்டும். மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் 700 ரூபாய்தான் ஊதியம் பெறுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 700 ரூபாய் இல்லை; 500 ரூபாய்தான்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட நெடுநேரமாகப் பேசிக் கொண்டிருந்த பேச்சை சுவாரஸ்யத்தோடு கேட்டுக்கொண்டிருந்தேன். அவரது பேச்சின் மையமாக விளங்கியது 30 ஆண்டுக் கால விடுதலைக்குப் பிறகும் இந்தியத் துணைக் கண்டத்திலே வாழும் மக்கள், 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்கள், 'Below the poverty-line' வறுமைக் கோட்டின் அடித்தளத்தில் வாழ்கிறார்களென்று குறிப்பிட்டது. அவர்களுக்காக வாதாடிக் கொண்டிருந்த மாண்புமிகு உறுப்பினரவர்கள் அமைச்சர்களின் சலுகைகளுக்காகவும், அவர்களது வசதிகளுக்காகவும் வாதாடுவது அந்த 70 சதவிகிதம் மக்களைப் பரிகசிப்பது போன்ற உணர்ச்சியை உருவாக்குகிறதென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பரிகசிப்பது என்பதல்ல. ஏழைகளின் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமென்றால், அது அமைச்சர்களின் கையிலேதான் அமைந்திருக்கிறது. உங்கள் அமைச்சரவைக்காக நான் சொல்லவில்லை. சென்ற அமைச்சரவை இருந்தபோதே சொன்னேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள், அப்போதைய முதலமைச்சரவர்கள், திரு. சுவாமிநாதன், திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்கள் ஆயிரம் ரூபாயில் வாழ்க்கை நடத்த முடியாதவர்கள்; அவர்களுக்கு இன்னும் பணம் அதிகமாக வேண்டும்; எங்களைப் போன்றவர்கள், சாதாரணமானவர்கள் ஆயிரம் ரூபாயில் வாழ முடியும், அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று சொன்னார்கள். பொதுவான ஒரு உணர்ச்சியைத்தான் நான் சொன்னேன். அப்படி இருந்தால் எல்லாம் சரியான முறையில் அமைய முடியுமென்ற கருத்தைத்தான் நான் சொல்கிறேன். உறுப்பினர் என்ற





முறையில் அந்தமாதிரிக் கருத்தைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறதென்பதைச் சொல்லி, அதை அமைச்சரவர்கள் ஒப்புக் கொள்வார்களென்றும் நான் நினைக்கிறேன். எங்களுக்கு அதிக ஊதியம் வேண்டாமென்று நீங்கள் சொல்லலாம். ஆட்சியிலே இருக்கும்போது அதிக ஊதியம் பெற்றுக்கொண்டார்கள் என்ற பிரச்சினையை எழுப்பக்கூடும். அதிக ஊதியம் எங்களுக்கு வேண்டாம்; நாங்கள் ஆயிரம் ரூபாயிலேயே நல்ல முறையில் சேவை செய்வோம் என்று சொல்லக்கூடிய உரிமை அமைச்சர்களுக்கு இருக்கிறது. மொத்தத்தில் பார்த்தால், கொள்கையின் அடிப்படையில் நம்முடைய மாநில அமைச்சரவையாக இருந்தாலும், வேறு எந்த அமைச்சரவையாக இருந்தாலும், அது சரியானதாக இருக்குமென்பதால்தான், அந்தக் கருத்தைச் சொன்னேன். அது நல்லதென்றால், எடுத்துக்கொள்ளுங்கள்; தேவையில்லாவிட்டால் விட்டுவிடுங்கள் என்று கூறி, பேச வாய்ப்பு அளித்ததற்கு தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைமீது நடக்கின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு எனது கருத்துக்களையும் சொல்லுவதற்கு அனுமதி அளித்ததற்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரை என்பது, அமைந்திருக்கின்ற அரசினுடைய கொள்கை விளக்கமென்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும் முதலில் கவர்னர் அவர்கள் உரையிலே அந்தந்த அரசுகளின் முக்கியக் கொள்கைகளும், குறிக்கோள்களும் கொடுக்கப்பட்டு, அதுகுறித்து அங்கத்தினர்கள் விவாதித்து, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அந்தக் கருத்துக்களில் ஏற்க வேண்டியவைகளை ஏற்று, சரியெனக் கண்டவற்றை நிதிநிலை அறிக்கையின் மூலம் நல்ல திட்டங்களாகக் கொண்டுவருவது வழக்கம். இங்கும், ஆளுநர் உரையின் பக்கம் 7-லே, அரசின் முக்கியமான கொள்கைகளையும், குறிக்கோள்களையும் மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விழைகிறேன் என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கு குறிப்பிட்டிருக்கின்ற கருத்துக்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தினுடைய முக்கிய குறிக்கோள்கள், கொள்கைகள் என்று நாம் கொள்ள

வேண்டும். இன்னும் இதைவிட சீரிய, முக்கியமான குறிக்கோள்கள், கருத்துக்கள் எல்லாம் இதில் இடம் பெறவில்லையென்று நாங்கள் இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுத்திருக்கிறோம். அதன் அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன். நம்முடைய நாட்டில் 17 மாதகால நீண்ட குடியரசுத் தலைவரின் ஆட்சி முடிவுற்று, ஜனநாயக முறையிலே அரசு அமைந்திருக்கிறதென்று தம்முடைய உரையிலே, முதல் பக்கத்திலே, மூன்றாம் பாராவிலே கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில் இருந்த நிலைமை மிகக் கொடுமையானதாகும். தமிழகத்திலே குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றது. மற்ற மாநிலங்களிலே அந்தந்த மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் ஆட்சியாக இருந்தாலும்கூட, இந்தியாவில் அரசியல் உரிமைச் சட்டத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு, இந்தியா ஒரு சர்வாதிகார நாடு என்று உலகமெங்கும் தெரிகின்ற அளவிலே இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் கொடுமைகளும், துன்பங்களும் விளைவிக்கப்பட்டன. ஒரு லட்சத்து எழுபதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அப்படி மக்கள் துன்பம் அனுபவித்துக்கொண்டிருந்த கால கட்டம் கழிந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் மற்ற மாநிலங்களில் இருந்த கொடுமைகளுக்கும் கூடுதலாக இங்கு ஜனநாயக ரீதியில் அமைந்த அரசை அகற்றிவிட்டு, ஜனநாயக முறையை முழுக்கக் கொலை செய்யும் ஒரு நிலையும் இங்கு இருந்தது. அது 17 மாதத்திற்கு அப்பால் முடிந்திருக்கிறது. ஜனநாயக ரீதியிலே ஆட்சி அமைந்திருக்கிறதென்று கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஜனநாயக அரசு இல்லாமல், ஒரு சர்வாதிகார ஆட்சி நடந்த பிறகு ஏற்படுகிற அரசுக்கு முதலிலே, முந்தைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட கொடுமைகளை அகற்றும் பொறுப்பு உண்டு. இரண்டு உலக யுத்தங்களை நாம் சந்தித்திருக்கிறோம். 1914-18-ல் முதல் உலக மகா யுத்தம்; 1939-44-ல் இரண்டாவது உலக யுத்தம். இரண்டு உலகப் போர்களை உலக ஜனநாயக நாடுகள் சந்தித்து, அதில் இறுதியிலே ஜனநாயக நாடுகள் வென்றன. அந்த நாடுகளில் யுத்தத்திற்குப் பிறகு நடந்த முதல் பாராளுமன்றக் கூட்டத்திலே 'Post-war reconstruction scheme" என்று முதலில் கொடுத்தார்கள்.





இந்தியாவிலும், மற்ற மாநிலங்களிலும் மத்திய அரசு கொடுக்க வேண்டியது. அதுவே அந்தக் கொடுங்கோல் ஆட்சி நடந்த காலத்தில், சர்வாதிகார ஆட்சி நடந்த காலத்தில் விசாரணையின்றி அரசியல்வாதிகளை, சட்ட மன்ற உறுப்பினர்களை, பாராளுமன்ற உறுப்பினர்களை, பொது வாழ்க்கையில் ஈடுபடுத்திக்கொண்டவர்களை, நல்லவர்களை, சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்த நல்ல உத்தமர்களை எல்லாம், உலகமெங்கும் பாராட்டுகிற பெரியோர்களையெல்லாம் சிறைக் கொடுமைக்கு உட்படுத்தியது வேதனைக்குரிய விஷயம்தான்.

(பிற்பகல் 5-10)

இன்னும் சில மாதங்கள் சிறையில் நீடித்திருந்தால், அவர்களுடைய வாழ்வுக்குக்கூட, அவர்களுடைய உயிருக்கே கூட ஆபத்து ஏற்பட்டிருக்கும். கொடுங்கோல் ஆட்சியில் ஏற்பட்ட கொடுமைகளை பாராளுமன்றத்திலேயே சொல்லக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. கொடுங்கோல் ஆட்சிக்குப் பிறகு வருகின்ற இந்த அறிக்கையிலே, அந்த ஆட்சியினால் ஏற்பட்ட கொடுமைகளை எல்லாம், அதனால் வாய்க்கப்பட்டிருக்கின்ற துன்பங்களை எல்லாம் எடுத்துக் காட்டி கொடுமைகளை அகற்றும் வழியை எடுத்துக் காட்டவில்லை. ஜனநாயக அரசிலே இதை எடுத்துச் சொல்லவேண்டியது முக்கியம். அவைகளை எடுத்துக் காட்டி நிவர்த்தி செய்ய வழிவகைகளைக் கண்டிருக்குமானால், அப்படிச் செய்வது தவறு அல்ல என்று நான் நினைக்கிறேன். அதைச் செய்யத் தவறினால், ஜனநாயகத்திற்கு நாம் செய்து வருகின்ற கடமையிலே, பண்பிலே, நாம் குறைபடுகிறோம் என்றுதான் சொல்கிறேன். என் மனதினுள்ளே நான் குறைபட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். இதை மற்றவர்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிலே—மற்ற மாநிலங்களில் நடந்தது பற்றிச் சொல்வது எனக்கு முறையல்ல—தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் என்ன என்ன கொடுமைகள் நடந்தன என்பதைப்பற்றி இந்த அவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த அவையினுடைய உறுப்பினர்களிலே பலர் சிறைக்குள்ளே தள்ளப்பட்டு, பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு அவதிக்குள்ளாயிருக்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களும், பேரவை

உறுப்பினர்களும் சிறையிடப்பட்டு பல துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதை நான் இங்கே விரித்துக் கூறத் தேவையில்லை என்று கருதுகிறேன். அது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். நமது ஜனதா கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் நேற்றுப் பேசுகின்றபோது சொன்னார்கள். யாராவது வேண்டாதவர்கள் இருந்தால் நம்முடைய வீட்டிலே வந்து சுவரில் 'இந்திரா காந்தி ஒழிக' என்று எழுதிப்போட்டுவிட்டால், மறு நாள் அந்த வீட்டிலே போலீஸ் படை வந்து நிற்கின்ற நிலைமையை உருவாக்கினார்கள். அதுதான் உண்மை. அது மட்டுமல்ல, யாராவது வேண்டாத அரசியல் கட்சிக்காரர் போலீஸ் ஸ்டேஷனிலே வந்து உட்கார்ந்து கொண்டு, சுட்டிக்காட்டுவார். சுட்டிக்காட்டப்பட்டவரைக் கைது செய்கின்ற சூழ்நிலை இருந்தது. என்று இந்த நாட்டிலே ஜனநாயக மரபு அழிக்கப்பட்டதோ, என்று அன்று இருந்த மந்திரி சபை அழிக்கப்பட்டதோ அன்றே ஜனநாயகம் மறைந்து விட்டது. அதை ஒட்டி ஒரு வாரம் இந்த நாட்டில் ஒரு காட்டு தர்பார் நடைபெற்றது. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் அந்த ஒரு கட்சிக்கு எதிராக ஆளும் கட்சி சார்பாக இருப்பவர்கள் போய் உட்கார்ந்துகொண்டு அவரைக் கைது செய், இவரைக் கைது செய், என்னிடத்திலே ஓடி வா, ராஜிநாமா பண்ணு, எழுதிக்கொடு, பத்திரிகையிலே கட்டம் போட்டுப் போடு என்று சொன்ன கொடுமைகளை எல்லாம் இங்கு சொல்லி வருணிக்கவே முடியாது. ஒருவேளை அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இவைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கலாம். அன்று இருந்த சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கலாம். அரசியலிலே ஈடுபட்ட, பொதுத்தொண்டிலே ஈடுபட்ட நிரபராதிகளுடைய குழந்தைகளை, பெண்களை எல்லாம் துன்பத்தை அனுபவிக்கச் செய்திருக்கிறார்கள். நாம் எல்லாம் சுதந்திரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோமே. அப்படித் துன்பம் அனுபவித்தவர்களுக்கெல்லாம் அந்தத் துன்பங்களை எல்லாம் துடைக்கின்ற பணியில் இந்த அரசு ஈடுபடவேண்டாமா? இந்த அரசிடம் இதை நான் முழு உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். அதில் ஒருவேளை இப்போது நீங்கள் கவனம் செலுத்தாமல் இருந்தாலும் கூட, இனியேனும் கவனம் செலுத்த வேண்டியது ஜனநாயக மரபுக்கு ஏற்றது, சுதந்திர உணர்வுக்கு ஏற்றது. இந்திய நாட்டைப் பொறுத்து, இரண்டாவது சுதந்





திரம் நாம் இப்போது அடைந்திருக்கிறோம். முதல் போரில் 1947-ல் சுதந்திரம் பெற்றோம். 1942-லே சுதந்திரப் போராட்டத்திலே சிறைக்குச் சென்ற பெருமை பெற்றவன். இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திலே, ஜனநாயகப் போரிலே, அந்த ஆண்டிலே, முதல் எதிர்ப்புக் குரலைக் கொடுத்தவன் நான். ஜனநாயகத்திற்கு எதிராக நடந்த அட்டூழியங்களுக்கு எதிர்ப்புக் குரலைக் கொடுத்த அந்த இயக்கத்திலே சேர்ந்து அணிவகுத்துக் கொண்ட பெருமைக்கு உட்பட்டவனாக இருந்தேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதில் துன்பப்பட்டவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு அரசு முனைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னும் இந்த மாநிலத்திலே 40-க்கு மேற்பட்டவர்கள் தீவிரவாதிகள் என்ற பெயரில், நக்சலைட்டுகள் என்ற பெயரில் சிறையில் இருக்கிறார்கள். இளைஞர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் இவர்கள் எல்லாம் இருக்கின்ற நிலையை நாம் எண்ணிப் பார்க்காமல் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தடுக்காமல், அகற்றுவதற்குச் சிந்திக்காமல் ஏதோதோ நன்மைகளை எல்லாம் செய்துவிடுவோம் என்று செய்ய முனைந்தால், அதையெல்லாம் இந்த நாடு ஏற்றுக்கொள்ளுமா என்பதைத்தான் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மிசா சட்டத்தில் எத்தனை பேர் கைதாக்கப்பட்டார்களோ அவர்களுடைய குடும்பங்களுக்கு பாதுகாப்பு நிதி கொடுக்க வேண்டும் என்பது நியதி, சட்டம். இந்தத் தமிழகத்திலே மிசா சட்டத்தின் கீழே குடும்பப் பாதுகாப்பு நிதியை 6 மாதத்திற்குள்ளாகப் பெற முடிந்ததா என்று பார்க்க வேண்டும். பல குடும்பங்களுக்கு 7, 8 மாதங்களுக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் பிச்சையெடுத்தார்கள், பட்டினி கிடந்தார்கள். சுதந்திரம் பெற்ற இந்த நாட்டிலே, ஜனநாயகத்தின் பெயரால், இந்த அவையிலே நாம் அமர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். ஜனநாயகம் கொலு வீற்றிருக்கின்ற இந்த நாளில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எத்தனை குடும்பங்கள், எத்தனை குழந்தைகள் பட்டினி கிடந்தன, எத்லதனை குழந்தைகள் பள்ளிப் படிப்பை இழந்தன என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் எத்தனை ஆற்றொணா கண்ணீர் வடித்திருப்பார்கள். அதையெல்லாம் களைய வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கின்றது. அதைப் பற்றி அவர்கள் குறிப்பிடாதது, அவைகள் எல்லாம் சரி எனக் கருதிவிட்டார்களோ என்று மக்கள் நினைக்க இடம்

தருகிறது. வேறு நடவடிக்கைகள் மூலம், வேறு வழிகள் மூலம், வேறு அறிக்கைகள் மூலம், அது அப்படி அல்ல என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே ஜனநாயக ஆட்சி அகற்றப்பட்டு, நடந்த கொடுமைகள், சித்ரவதைப் பட்டவர்களுடைய துன்பங்கள் ஆகியவற்றையெல்லாம் சுருக்கமாகச் சொன்னேன். தமிழகத்திலே இன்று இருக்கின்ற அரசு அண்ணா வழியிலே அமைந்த அரசு என்று சொல்கிறார்கள். இதற்கு முன்பு இருந்த அரசு அண்ணா வழியிலே வந்த அரசு என்று நான் சொல்கிறேன். 1967-க்குப் பின்னால் அண்ணாவின் அரசு அமைந்திருக்கிறது. 1967-க்குப் பின்னால் தமிழகத்திலே இருந்த அரசு, பெரியார் கண்ட அரசு, அண்ணா கண்ட அரசு. அந்த அரசு இன்று வரை இருக்கிறது. அந்த அரசு இந்த இடைக்கால 17 மாத காலத்தில் வேறுபட்டு இருந்தது என்று வைத்துக்கொள்வோம். இந்த 17 மாத கால இடைவெளியிலே பெரியாரும் அண்ணாவும் இந்த நாட்டிலே என்ன என்ன நடக்க வேண்டும் என்று நினைத்தார்களோ, நடத்தி வைத்தார்களோ, அத்தனையும் அழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இந்த நாட்டிலே பெரியார் எந்தப் பின்தங்கிய சமுதாயத்தினருக்காகத் திட்டம் வகுத்து வந்தார்களோ அதெல்லாம் டெல்லியிலே இருந்து வந்த ஒருவர் இங்கு பொறுப்பு ஏற்றபிறகு அந்த 17 மாத காலத்தில் அகற்றப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எல்லோருக்கும் தெரியும்.

இன்னும் இரண்டொன்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே உள்ள கல்விபற்றிச் சொல்லிக் கொள்கிறேன். 1-வது முதல் 10-வது வரை தமிழக அரசு பாட நூல்களை வெளியிடுகிறது. ஏனென்றால் தனிப்பட்டவர்கள் லாபத்தை முன்னிட்டு நம் இளம் உள்ளங்களுக்குத் தேவையான கருத்துக்களைச் சொல்லாமல் லாபக் கருத்தைச் சொல்லிச் சென்று விடுகிறார்கள் என்பதனால் பாடப்





புத்தகக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, 1-வது முதல் 10-வது வகுப்பு வரை தமிழ், ஆங்கிலம், வரலாறு இந்த மூன்று பாடப் புத்தகங்களையும் நாம் வெளியிட்டோம். அதையே எல்லாப் பள்ளிகளிலும் வைத்திருக்கிறார்கள். ஜனநாயக அரசு அகற்றப் பட்டவுடன், பொறுப்பேற்றுக்கொண்டவர்கள் அந்தப் பாடப் புத்தகங்களையெல்லாம் பறிமுதல் செய்தார்கள். அண்ணாவைப் பற்றியும், பெரியாரைப்பற்றியும் அதிகமாக பாடங்களில் புகுத்தி விட்டார்கள், அதை அகற்ற வேண்டும் என்று ஒரு ஆய்வுக்குழுவும் நியமித்தார்கள். அது ஒரு அறிக்கை கொடுத்தது. அந்த அறிக்கையின்படி அத்தனை புத்தகங்களையும் அகற்றினார்கள். 60 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பழைய புத்தகங்களை அகற்றினார்கள். இன்னும் டெக்ஸ்ட் புக்ஸ் சொசைட்டியிலே முடங்கிக் கிடக்கிறது. புதிய பாடப் புத்தகங்களை மூன்று ஆண்டுக்கு ஒரு முறை வெளியிடுவது வழக்கம். ஏனென்றால் மாணவர்களுக்கும் நன்மை. தங்கள் தங்கை தம்பியர்களுக்கு அந்தப் புத்தகங்களைக் கொடுக்கலாம். வெளியிடுபவர்களுக்கு சிரமத்தைக் குறைக்கிறது. மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வெளியிடுவதால், சுருக்கமான விலைக்கு அவர்களுக்குக் கொடுக்க முடியும். ஓராண்டுக்கு என்று சொன்னால் ரூ. 5-க்குக் கொடுக்க முடியும். அதையே மூன்று ஆண்டுகளுக்கு என்றால், ரூ. 2-க்குக் கொடுக்க முடியும். பலவித நன்மைகளைக் கருதி, ஒரு புத்தகத்தை வெளியிடும்போது, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று அறிவித்துவிட்டார்கள். அப்படி மூன்று ஆண்டுகளுக்கு என்று அறிவிக்கப்படுவதால், நிறுவனங்கள் நூல்களை ஒரே ஆண்டிலேயே முடித்துவிட்டு புதிய பாடப் புத்தகங்களை வெளியிட்டார்கள். இது தேச விரோதமானது, தேசிய ‘மெயின் ஸ்ட்ரீம்’-க்கு எதிரான கொள்கைகள் எல்லாம் புகுத்தப்பட்டனவாக இருக்கின்றன என்றார்கள். ஆகவே மாற்றுகிறோம் என்று சொன்னார்கள். அறுபது இலட்சம் ரூபாய் பாழாகிப் போனாலும், பரவாயில்லை. தேச விரோத உணர்வுகள் நாட்டிலே ஏற்பட்டுவிடக் கூடாது என்றார்கள்.

[திரு. எம். சங்கரலிங்கம்] [1977 ஜூலை 14

(பிற்பகல் 5-20)

உண்மை அப்படி இருக்குமானால், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஒவ்வொரு நூலாக நான் ஆய்ந்து பார்த்தேன். தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இவற்றைச் சொல்லிய பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அப்புத்தகங்களை ஒப்படைக்க அனுமதி கேட்டுக் கொள்கிறேன். ஆங்கிலப் புத்தகத்தைப் பற்றியும் தமிழ்ப் புத்தகத்தைப் பற்றியும் பின்னால் சொல்கிறேன். இப்போது வரலாறு நூலில் உள்ள மாற்றத்தைக் குறிப்பிடுகிறேன். இந்த நூல் இதற்கு முந்திய அரசு வெளியிட்ட 8-வது வகுப்புக்குரியது. இப்போது ஜனநாயகம் அற்றுவிட்ட நிலையில் சர்வாதிகார ஆட்சியில் வெளியிடப்பட்ட புத்தகம் இது. ஒருவேளை இதற்கு முந்திய அரசு வெளியிட்ட புத்தகத்தில் அண்ணா, பெரியார் படங்கள் இருந்திருக்குமோ என்றும் அதனால் அதை மாற்றிவிட்டார்களோ என்றும் நினைத்தேன். ஆனால் அட்டையில் குதுப்மினார், வேளாங்கண்ணி மாதா கோயில், பூரி ஜகந்நாத் கோயில், தஞ்சை பெரிய கோயில் என்று சர்வ மதக் கோட்பாடுகளைக் காட்டுகிற படங்கள் உள்ளன. சமரச மத ஒற்றுமை உணர்வு ஏற்படுத்துவதற்கான படங்களைப் புத்தக அட்டையில் போட்டது முந்தைய அரசு. மற்றும் காந்தி மற்றவர்கள் படம் போட்டிருக்கலாம். பழைய புத்தகத்தையும் புதிய புத்தகத்தையும் பார்த்து அதில் அவர்கள் செய்துள்ள மாற்றங்களைப் பார்க்கும்போது, ரூ. 60 லட்சம் பாழாக்கப்பட்டு மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. உள்ளே என்ன தவறு நடந்திருக்கிறதோ என்று பார்த்தேன். ஒவ்வொரு பக்கமாக பன்னிப் பன்னி படித்துப் பார்த்ததில், 47-வது பக்கத்தில் பழைய புத்தகத்தில் தொழிற் புரட்சி என்று எழுதியிருக்கிறது. இதுவரையில் ஒரு மாற்றமும் இல்லை. அதைத் தொழில் வளர்ச்சி என்று மாற்றியிருக்கிறது. புரட்சி என்ற சொல்லே கூடாதா? இப்போது புரட்சித் தலைவர் என்று முதலமைச்சர் அவர்களைச் சொல்கிறோம். தொழிற் புரட்சி என்று போட்டதைத் தொழில் வளர்ச்சி என்று மாற்றியிருக்கிறார்கள். பக்கம் 48-ல் துருக்கியர் படையெடுப்பு என்பதை ஆப்கானியர் படையெடுப்பு என்று மாற்றியிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மாற்றம் செய்யத்தான் ரூ. 60 லட்சம் பாழாக்கப்பட்டிருக்கிறது. அட்டையை மாற்றியிருக்கிறார்கள். வேறு ஒன்றுமேயில்லை. 67-வது பக்கத்தில்



1977 ஜூலை 14] [திரு. எம். சங்கரலிங்கம்]

அத்தியாயம் 6-ல் இந்திய வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் மேல் நாட்டுக் கல்விக் கருத்துக்களின் செல்வாக்கு என்ற ஒரு அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஏழு, எட்டாவது பிரிவுகளில் அ-பிரிவு பிரம்ம சமாஜம், ஆ-பிரிவு ஆரிய சமாஜம், இ-பிரிவு சமூக சீர்திருத்தம் என்று கொடுத்திருக்கிறார்கள். பழைய புத்தகத்தில் என்ன சொல்லியிருந்தது? 20 ஆம் நூற்றாண்டில் கோபால கிருஷ்ண கோகலே, மகாத்மாஜி, டாக்டர் அம்பேத்கார், பெரியார் ஈ. வே. ராமசாமி, அண்ணாதுரை, ராஜாஜி போன்ற இந்தியப் பெரியார்களின் முயற்சியினாலும் ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட புகைவண்டி, பேருந்து, வானொலி, திரைப்படம், கல்வி முதலியவற்றினால் உண்டான இந்தியமக்களின் கல்வி அறிவு வளர்ச்சியினாலும் இந்தியர்களிடையே இருந்து வந்த தீண்டாமை உணர்வு மறைந்தது என்று போட்டிருந்தது. அதில் விசேஷமாக ஒன்றுமில்லை. நானும் தேடிப் பார்த்தேன். புதிய புத்தகத்தில் என்ன மாற்றம்? 20-ஆம் நூற்றாண்டில் கோபால கிருஷ்ண கோகலே, மகாத்மாஜி, டாக்டர் அம்பேத்கார், சகோதரி சுப்புலட்சுமி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ராஜாஜி போன்ற இந்தியப் பெரியார்களின் முயற்சியினாலும் என்று தொடங்கி மற்ற ஆங்கிலேயர்களின் என்று வரும் கருத்துக்கள் தொடர்ந்து அப்படியே இருக்கின்றன. அதில் ஈ. வெ. ராமசாமி, அண்ணாதுரை என்ற பெயர்கள் எடுக்கப்பட்டுள்ளன. அண்ணா பெயரால் அமைந்த அரசு, அண்ணாவை வணங்கிவிட்டு அண்ணா சமாதியில் சென்று மாலையிட்டு வந்து அண்ணாவின் பெயரால் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சரவையைக் கேட்கிறேன். தமிழகம் மட்டுமல்ல. இந்தியா முழுவதும் சமூக சீர்திருத்தம் என்று சொல்லும்போது, இவர்களைப்பற்றிச் சொல்லி மேலும் ராஜாராம் மோகன் ராய் போன்றவர்களின் படங்களையும் போட்டிருக்கிறோம். பெரியார், அண்ணா பெயர் அகற்றப்பட்டு ஆரிய சமாஜம் இடம் பெறுகிறது. பிரம்ம சமாஜம் இருக்கிறது. ஈ. வெ. ரா. படம் கூட பழைய புத்தகத்தில் இல்லை. புதியதிலும் இல்லை. அப்படி ஒரு பெயரைச் சேர்ப்பதற்குக் கூட இந்த நாட்டில் உரிமையில்லை என்றால், இதற்கு முன்பு இருந்த ஆட்சியினால் செய்யப்பட்ட இந்தக் கொடுமை உங்கள் கண்ணில் படவில்லையா என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, 180-வது பக்கத்தில் ஒரு பெரிய மாற்றம் இருக்கிறது. அது என்ன? இலக்கிய வளர்ச்சி என்ற தலைப்பு. சமூகச் சீர்திருத்தம் வளர்ச்சி என்பதில்

வருகிறது. அடுத்து, இந்தியாவில் இலக்கிய மறுமலர்ச்சி என்று தலைப்பிருக்கிறது. முதலில் அதில் வங்காள இலக்கியம் பற்றிக் கூறுகிறார்கள். ரவீந்திரநாத் தாகூர் படம் இருக்கிறது. இரண்டாவதாக மராட்டிய இலக்கியம், மூன்றாவதாக தெலுங்கு இலக்கியம். நான்காவது தமிழ் இலக்கியம் என்று இரண்டு பாரா அதில் கடைசியில் சொல்லப்பட்டிருக்கிறது. மறைமலையடிகள், இராமலிங்கம் பிள்ளை, ரா. பி. சேதுப் பிள்ளை, திரு.வி.க., டாக்டர் சி. என். அண்ணாதுரை போன்றவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றினார்கள் என்று பழைய புத்தகத்தில் இருக்கிறது. புதிய புத்தகத்தில் மறைமலையடிகள், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, ரா. பி. சேதுப் பிள்ளை, திரு.வி.க. போன்றவர்கள் என்று மட்டும் இருக்கிறது. இந்த வரிசையில் ரா. பி. சேதுப் பிள்ளைக்கு அடுத்து அறிஞர் அண்ணாவுக்கு இடம் கொடுக்கத் தகுதியில்லையா என்று கேட்கிறேன். தமிழில் அவருக்கு ஈடாக, ஒப்பாக தமிழ் இலக்கிய உலகில் யார் தொண்டு புரிந்தது என்று கேட்கிறேன். அப்படிப்பட்டவரின் பெயரை அந்த வரிசையிலிருந்து அகற்றியது சாதாரணமானதா? ரூபாய் 60 லட்சத்துக்கு மேற்பட்ட மதிப்புள்ள புத்தகங்களை, அரசாங்கப் பணத்திலிருந்து அச்சிடப்பட்ட புத்தகங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும், பெற்றோர்களுக்கும் பணச் செலவை அதிகப்படுத்தியதை விட வேறு என்ன மாற்றம் செய்திருக்கிறார்கள்? இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் என்று பழைய புத்தகத்தில் இருந்தது. புதிய புத்தகத்தில் தேசியக் கொடி, தேசிய கீதம் என்று இரண்டு பகுதிகளைச் சேர்த்திருக்கிறார்கள். எட்டாவது வகுப்பில் தேசிய கீதம், நாட்டுக்கொடி என்று இரு பாடங்கள் மொழிப் பாடத்தில் இடம் பெற்றிருப்பதால், ஒரே பாடம் திரும்பத் திரும்பப் போடுகிற நிலை வராமல் ஒரு இடத்தில் காட்டினால் சுருக்கமாக இருக்குமென்று கருதி, கல்வி நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு அவர்களால் முடிவு செய்யப்பட்டது அது. இப்படிப்பட்ட மாற்றங்களைச் செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறீர்கள்? தமிழ்ப் பாடப் புத்தகங்களில் அண்ணா எழுதிய நாடக வளர்ச்சி என்ற பகுதியிருந்தது. தி. க. சண்முகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடத்திய நாடகநூல் வெளியீட்டு விழாவில் அண்ணா சென்று ஆற்றிய சொற்பொழிவு அது. அதை பத்தாவது வகுப்பில் நாடக வளர்ச்சி என்ற தலைப்பில், தமிழ்ப் பாடநூலில் வெளியிட்டிருந்தார்கள். அது அகற்றப்பட்டிருக்கிறது.





பெரியாரைப்பற்றி மொழிப் பாடத்தில் இருந்ததை அகற்றிவிட்டார்கள். இப்படி நான்கு முதல் ஆறாவது வகுப்பு வரை உள்ள வரலாற்று நூல்களை அகற்றிவிட்டு 1 முதல் பத்தாவது வகுப்பு வரை மொழிப் பாடத்தை மாற்றியிருப்பது யார்? இதற்கு முன்பு நடந்த அரசுக்குப் பொறுப்பேற்று டெல்லியிலிருந்து வந்த ஒருவர் இதுவரை சுயமரியாதை இயக்கம், தன்மான இயக்கம் இந்த நாட்டில் வளர்த்துள்ள நல்ல உணர்வுகளை அவருடைய உணர்வுகளினால்—அது என்ன உணர்வு அவருடையது என்று நான் சொல்லத் தயாராக இல்லை—அகற்றிவிட்டு, இளம் பிஞ்சு உள்ளங்களும் இந்த ஆண்டு அவற்றைப் படிக்கக் கூடாது என்று உத்தரவும் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். இதைச் சொல்லி மாண்புமிகு தலைவர் அவர்கள் கவனத்தோடு, இந்தப் புத்தகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். பழைய காலத்தில் சொல்வார்கள், வேதத்தில் மிக நுணுக்கமாக மற்றவர்கள் முன்னுக்கு வர முடியாத நிலைமையில் கருத்துக்களைப் புகுத்தி வைத்திருந்தார்கள் என்று. அதைப்போல் இப்போது அழகாகச் செய்திருக்கிறார்கள். ஒரு நிபுணர் குழு போட்டு, இதை ஆராய வேண்டும். இதற்கு யார் யார் பொறுப்பு? இதைப் போடுவதற்கு மாற்றுவதற்கு யார் யார் சிபாரிசு செய்தார்கள்? அப்படிச் செய்தவர்கள் இன்னும் இங்கேயே இருக்கிறார்கள். உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதைப் போல, காக்காய் பிடிக்கிற அந்த அதிகாரிகள் அவர்களைப் பற்றிக்கொள்ள எழுதிக் கொடுத்தது தான் இவை. அவர்கள் இப்போதுள்ளவர்களையும் பற்றுவதற்கு வருவார்கள். அவர்களைக் கண்டுபிடித்து நிரந்தரமாக கட்டாயப் பென்ஷன் கொடுத்து அனுப்ப வேண்டும். டெல்லிக்குச் சென்றுவிட்டால் கூட, அவரை ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் கூட, அவர் திரும்பி வராமல் பாதுகாத்து, அவர்களை விட்டுவிடாமல், இந்தப் பாழாக்கப்பட்ட ரூ. 60 லட்சத்துக்கு அவர்கள் பதில் சொல்கிற அளவில், நிபுணர் குழு அமைத்து, தயவு தாட்சண்யம் பாராமல், ஜனநாயகப் பாதுகாவலர்களாக உள்ள சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களையும் அக்குழுவில் சேர்த்து இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். சங்கரலிங்கம்] [1977 ஜூலை 14

(பிற்பகல் 5-30)

ஆளுநர் அவர்கள் உரையில் 3-வது பக்கத்தில் "ஒரு மாநிலத்திற்கும், இன்னொரு மாநிலத்திற்கும் உள்ள தொடர்பு நெருங்கியதாக மட்டுமல்லாமல், பிரச்சினைகளுக்கு இடங்கொடுப்பதாகவும் உள்ளன" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொடர்பு என்பது கடந்த 17 மாதக் காலத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கிவிட்டதோ என்றுதான் நான் நினைக்கிறேன். இருந்தாலும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்த அரசு பொறுப்பேற்றிருக்கக்கூடிய காலத்தில் அந்த உறவு எப்படி இருந்தது என்று சுட்டிக்காட்டி அந்த உறவை இடையில் இருந்தவர்கள் கெடுத்து வைத்திருக்கிறார்களோ என்று எண்ணி, அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கேரளத்தோடு இருந்த நல்உறவு என்றும் இருந்ததில்லை என்று சொல்லலாம். பரம்பிக்குளம்-ஆளியாறு என்ற திட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உருவெடுத்தாலும் கூட, ஒப்பந்தம் 1969-ல் தான் ஏற்பட்டது. அப்போதிருந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், அப்போதிருந்த உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்களும், அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் சென்று, அந்த ஆளியாறு-பரம்பிக்குளம் திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அது தொடர்ந்து செயல்பட வழி வகுத்தார்கள். அது உறவு நல்லவிதமாக இருந்தது என்பதைத் தான் காட்டுகிறது. பிறகு 1972-ல் சிறுவாணித் திட்டம் அப்போதிருந்த திரு. அச்சுத மேனன் ஆட்சிக் காலத்தில் உருவாயிற்று. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் திரு. ஈ. எம். எஸ். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஏற்பட்டது. பிறகு திரு. அச்சுத மேனன் அவர்கள் முதல்வராகவும், திரு. பேபிஜான், திரு. திவாகர்



1977 ஜூலை 14] [திரு. எம். சங்கரலிங்கம்]

ஆகியோர் அமைச்சர்களாகவும் இருந்தபோது, நம்முடைய அமைச்சர்கள் திரு. ப. உ. சண்முகம் அவர்களும், திரு. சாதிக் பாட்சா அவர்களும் சென்று பேச்சுவார்த்தை மூலம் திட்டம் உருவாக்கினர். அதற்குத் தொடக்க விழாவை நடத்தினர். அந்தப் பணி அப்போதைய நல்ல உறவைத் தான் காட்டிக்கொண்டிருக்கிறது.

'இடுக்கி' மின்சாரத் திட்டம் உங்களுக்குத் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்கப் போராடினோம். 'சேர்த்தால் தமிழ்நாடு இல்லாவிட்டால் சுடுகாடு' என்று கோஷம் வைத்து 1946-லிருந்து 1956 வரை போராட்டம். 1957-ல் வந்து சேர்ந்துவிட்டோம். தேவிகுளம், பீர்மேடு போன்ற கன்னியாகுமரியில் உள்ள ஐந்து தாலுகாக்களை செங்கோட்டையோடு சேர்க்க வேண்டும் என்பது எங்களுடைய போராட்டம். தேவிகுளத்திலும், செங்கோட்டையிலும், இந்தப் பிரச்சினையை வைத்து, தமிழர்களை அங்கே தேர்தலில் ஈடுபடச் செய்து இரண்டு முறை வெற்றி பெறச் செய்தோம். 1956-ல் மாநிலங்களுடைய புனரமைப்பில், மத்திய அரசு ஒப்புக்கொண்டது போல, அந்தப் பகுதி அங்கே போய்விட்டது. 1975-ல் இந்த அரசு 'டிஸ்மிஸ்' செய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னால், திருவனந்தபுரத்தில் அப்போதைய அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் வந்து, கேரள அமைச்சர் திரு. எம். என். கோவிந்தன் நாயர் அவர்களை வைத்து, 'இடுக்கி ப்ராஜக்ட்' பற்றி ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதை நிறைவேற்ற இங்கேயிருந்து 'சிமெண்ட்' கொடுக்க வேண்டுமென்றும் கேரளாவில் அவர்களுக்குப் போக எஞ்சியிருக்கக் கூடிய அந்த மின்சாரத்தையும் ஒரு விலை நிர்ணயம் செய்துகொண்டு, தமிழகத்திற்குத் தந்துவிடுவது என்றும் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. அதற்கு முன்னால் இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுவிட்டது. அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டபோது நானும் கூட உறுப்பினர் என்ற முறையில் அல்ல—சும்மா போயிருந்தேன். அப்போது அங்கே இருந்த திரு. கோவிந்தன் நாயர் அவர்கள் "நீங்கள் சீக்கிரமாக முடித்துவிடுங்கள், டெல்லியிலிருந்து ஆணை தமிழகத்தோடு ஒன்றும் செய்யாதீர்கள், ஒப்பந்தம் செய்யாதீர்கள் என்று வந்து கொண்டிருக்கிறது" என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட அண்டை மாநில அமைச்சர்களைப் பற்றிப் பேசுவதும், செய்திகளை வெளியிடுவதும் சாதகமாக இருக்காது. மறுப்பு வந்தால், நமக்குத் தலைகுனிவாகிவிடும். அதைப்பற்றிப் பேசாமல் என்னென்ன நிலைமைகள் இருந்தன என்பதை வெளியிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டிக் கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் தொடர்ந்து ஒப்பந்தம் செய்ய இருப்பதால், அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். நாம் சிமெண்ட் கொடுப்பது என்றும், அவர்கள் எஞ்சியிருக்கும் மின்சாரம் அனைத்தையும் நமக்குத் தருவதென்றும் ஒப்பந்தம் செய்தார்கள். அதனுடைய விளைவு தான் முதலமைச்சர் அவர்கள் இப்போது கருநாடகத்திற்குச் சென்று அவர்கள் 1924 ஒப்பந்தப்படி தண்ணீர் தர மாட்டோம், இப்போது வேண்டுமானால் தருகிறோம் என்று சொன்னதை, நமக்கு இருக்கிற 'கரெண்டை'க் கொடுத்து, வாங்கிக்கொண்டு வர வசதியாக இருந்தது. ஆக, கேரளத்தோடு இவ்வளவு நல்ல உறவு இருந்தது. கேரள மாநிலத்திற்கு மூன்று, நான்கு தடவைகள் அரிசி கொடுத்திருக்கிறோம். பத்மநாபசாமி கோவிலுக்கு, குருவாயூர் கோவிலுக்கு அரிசி தேவை என்றதும் கொடுத்தோம். அதைப் போலவே வங்காள அரசிற்கு, கன்னட மாநில அரசிற்கு, குஜராத் அரசிற்கு அரிசி கேட்டவுடன் கொடுத்தோம். இப்படி எல்லாம் மாநிலங்களோடு நல்ல உறவைத் தான் நிலைநாட்டி வந்தோம். அது மட்டுமல்ல. கேரள மாநிலத்தோடும், கன்னட மாநிலத்தினோடும் நமது மாநிலத்திலிருந்து விரைவுப் பேருந்துகள் போகவும், வரவுமான நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே ஆளுநர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அண்டை மாநிலப் பிரச்சினை என்பது கடந்த 17 மாத காலத்தில் தோன்றியிருக்கக்கூடிய ஏதோ பிரச்சினை என்று நினைக்கிறேன். அதுபற்றித் தெளிவாகச் சொல்லாவிட்டாலும், சுமுக நிலைமை மீண்டும் நீடிக்க இந்த அரசு பாடுபட்டு, வெற்றி காணும் என்று நம்புகிறேன்.





நமது மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். காவிரிப் பிரச்சினைபற்றி சிறப்பாகவும், விரிவாகவும் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சட்டப் பேரவை நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே ஒருநாள் சென்று, தஞ்சை மக்களுடைய மகிழ்ச்சியைப் பெறுகிற நிலையில் தண்ணீர் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நானும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நமது மாண்புமிகு உறுப்பினரும், மதுரை மாநகரின் முன்னாள் மேயரும் அண்ணனுமாகிய திரு. முத்து அவர்கள் நேற்று முந்தியதினம் பேசுகிற போது, காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அண்டை மாநில உறவுகள், சரியான தலைமை இல்லாததால், சுமுகமாக ஏற்படவில்லை என்று சொன்னார்கள். காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக, இதற்கு முந்திய திராவிட முன்னேற்றக் கழக அரசு அதனை தன்னுடைய சொந்தப் பிரச்சினையாக மட்டுமோ, அல்லது ஆட்சி செய்கின்ற அரசின் பிரச்சினையாக மட்டுமோ கருதிக்கொள்ளவேயில்லை. அதை இந்த நாட்டுப் பிரச்சினையாகக் கருதி, ஒவ்வொரு கட்டத்திலும் இந்த மேலவையிலும், பேரவையிலும் உள்ள எல்லா கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, இது தமிழகத்தின் மொத்தப் பிரச்சினை, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சட்டமன்றத்தில் உள்ளவர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று, அவர்களை அழைத்துவைத்துப் பேசி, அவர்களின் பிரதிநிதியாக, ஏவலாளர்களாக அந்த அரசு செயல்பட்டதை தவிர, தன்னிச்சையாகச் செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிக்கொள்கிறேன். அந்த முறையைப் பின்பற்றுவது ஜனநாயகத்திற்கு உகந்தது என்று இந்த அரசிற்கு நான் தெரிவித்து, பின்பற்றுவார்கள் என்றும் நம்புகிறேன். காவிரி நீரை இப்போது ஏதோ குறுவைச் சாகுபடி செய்ய, தர ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தந்தவர்கள் எத்தனை நாள் இருப்பார்களோ என்று அவர்களுடைய கட்சியைச் சார்ந்த திரு. சுவாமிநாதன் அவர்களே சந்தேகப்பட்டுச் சொன்னார்கள். நடக்கின்ற நிலவரத்தைக் கருதி, அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இப்போது போய் வாங்கிக்கொண்டு

வந்தது மட்டுமல்லாமல், இதில் நிரந்தர முடிவு காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். நமக்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீர் வேண்டும். இப்போது உள்ளபடி நாம் 'கரண்ட்' கொடுக்கிறோம். நாளை நமக்கே பற்றாக்குறை ஏற்பட்டால், நம்மால் கொடுக்க முடியாது. இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஒரு பொருளைக் கேட்பார்கள்; நம்மால் கொடுக்க முடியாது. ஆகவே 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி முடிவு செய்ய, இரண்டு அரசுகளும், இரண்டு முதலமைச்சர்களும் அவையின் கருத்துக்களையும் தெரிந்து, எதிர்க் கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, ஒரு ஒப்பந்தத்தினை உருவாக்க வேண்டும். ஆகவே இந்தப் பிரச்சினையை அணுகும்போது, நாங்களும் இப்போது ஆட்சியில் இருக்கிற அரசை, ஒரு கட்சி அரசாகக் கருதாமல், இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதிகளாக அவர்கள் சென்று கலந்துகொள்கிறார்கள் என்ற பெருமிதத்தோடு செல்லும்போது, அவர்கள் எங்களுடைய கருத்துக்களையும் தெரிந்து செல்லவேண்டுமென்று உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எதிர்க் கட்சித் தலைவன் என்ற நிலையில் சில கருத்துக்களைச் சொல்ல நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிற பொறுப்புணர்ச்சியால் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அவையில் ஒரு மரபு உண்டு. இப்போது இங்கே பேசிய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் மாதிரியா பேசினார்? காங்கிரஸ் கட்சிக்கும் சேர்த்துத் தான் 'டோஸ்' எல்லாம் கொடுத்தார். கட்சி காழ்ப்புணர்ச்சியை எல்லாம் மறந்துவிட்டு, விருப்பு வெறுப்புக்களைக் காட்டிக் கொள்ளாமல், தனி நபரைத் தாக்குவதை மரபாக வைத்துக் கொள்ளாமல், கொள்கைகளை முன்வைத்து விவாதிப்பது இந்த அவையின் மரபு. நானும் 13-வது ஆண்டாக இந்த அவையில் தொடர்ந்து இருக்கிறேன். ஆனால் இந்த உணர்வை வளர்க்க வேண்டியவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒருவேளை உணர்ச்சி வயப்பட்டு, அதிலிருந்து தடம் புரண்டாலும் கூட, ஆளுங்கட்சியினர் தடம் புரளாமல் இருந்து வழிகாட்ட வேண்டும். அவர்கள் தடம் புரண்டுவிட்ட பிறகு, நாங்கள் விட்டுவிட்டுப் போவது நல்லதாகாது. "சுருக்கத்து





வேண்டும் உயர்வு" என்று நான் அதைத்தான் அன்று குறிப்பிட்டேன். நாங்கள் எதிர்க் கட்சி என்றபடியால் கொஞ்சம் வேகமாகத் தான் பேசுவோம். அதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று இதனைப் பீடிகையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

(பிற்பகல் 5.40)

"இங்கிருந்த ஒரு அமைச்சர் எப்படியாவது மெட்ராசுக்கு தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று சொல்லி, நிபுணர்களெல்லாம் சொன்ன கருத்தை விட்டுவிட்டு, காவிரித் தண்ணீரை வீராணத்திற்கு விட்டு, அதை அப்படியே சென்னைக்குக் கொண்டுவருவேன் என்று சொன்னார்கள்; மற்றவர்களெல்லாம் மறுத்தார்கள்; இல்லை, நான் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள்; சொன்னதோடு நிறுத்தவில்லை; பெரிய விழா எடுத்தார்கள்; அங்கு ஒரு காவிரித் தாயை நிறுத்தினார்கள்; அவள் கையிலே குடம் கொடுத்தார்கள்; அந்தக் குடத்தில் நீர் வருமென்று எதிர்பார்த்தார்கள்; நீர் வரவில்லை; காவிரித் தாய்க்கு நீர் வரவில்லை, கிட்னி நோய்போல் தோன்றுகிறது" என்று சொன்னார்கள். அப்படி யார் காவிரித் தாயைக் கொண்டு வந்தது என்று பார்த்தேன். நீங்களெல்லாம் மதித்து வணங்குகிற தெய்வமாகிய அறிஞர் அண்ணாதான் வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், 1967-ல், அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு காவிரித் தாய் சிலையைத் திறந்து, வீராணம் திட்டத்தை உருவாக்கி நமக்குத் தந்தார்கள். அவர்கள்பற்றி ஏன் இவர்கள் இப்படிப் பேசுகிறார்களென்று தெரியவில்லை. நீங்களே ஆராய்ச்சி பண்ணி, கண்டுபிடிக்க வேண்டியதுதான். இதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை. உண்மையிலே அண்ணா அவர்கள் கொண்டுவந்த திட்டம் நன்கு ஆராய்ந்து, நல்ல முறையிலே அதைப்பற்றி அறிஞர்களெல்லாம் ஆராய்ச்சி செய்து, டெக்னிகல் ஒபினியன் கேட்டு, அதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து, ஆரம்பிக்கப்பட்டது. அந்தத்

* * * தலைவர் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காண்டிராக்டர்களைக் கொண்டு வரும்போது, அவர்கள் 'டெக்னிகல் நோ-ஹவ்' கிரீக் நாட்டு 'கொலாபரேஷன்'-உடன் இருந்தது. அவர்கள் அந்த வேலையை ஆரம்பித்தார்கள். அந்தத் திட்டத்திற்கான வாகம்-பைப்-ஐப் பொருத்துவதற்காக ஏதென்ஸ் நகரில் இருக்கக்கூடிய காண்ட்ராக்டர்கள் வருவதற்கு பாரின் எக்ஸ்சேன்ஜ் கிளியரன்ஸ் மத்திய அரசிடமிருந்து கிடைக்க இரண்டு வருடங்கள் ஆகியது. அதற்குப் பிறகு வேலையைத் தொடங்கினார்கள். அதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. வேலை நின்றது. அப்போது இருந்த அரசு, அந்த வேலையை எடுத்துச் செய்வதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு, அதில் தாங்கள் ஈடுபட மத்திய அரசுக்கு அனுமதி கோரி எழுதிய போதுதான், அந்த 'பைல்'-ஐ அவர்களே வைத்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகுதான் இந்த அரசை டிஸ்மிஸ் செய்தார்கள். அதிலுள்ள மற்றவைகளெல்லாம் விவகாரங்களிலுள்ளது. அந்த விவகாரங்கள் தீர்ந்து, முடிவெடுத்து, அந்த முடிவு விவாதத்திற்கு இங்கே வந்தால், அதைப்பற்றி நாம் விவாதிக்கலாம். * * *

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு தகவல் அளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் நான் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக இருந்தேன். இதே வீராணம் திட்டம்பற்றிப் பேச்சு வந்தபோது, அண்ணாவிடத்திலே, இது சரியாக வராதென்று தொழில் நுட்ப வல்லுனர்கள் கருதுகிறார்களென்று நான் சொன்னேன். அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள், பொதுப்பணித் துறை அமைச்சராக அன்று இருந்த திரு. கருணாநிதி அவர்கள் இது சரியாக வருமென்று நிர்பந்தமாக இருக்கிறார்கள், ஆகையால் இதைப் பார்ப்போம் என்று சொன்னாரே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** இந்தக் குறிப்பை அவர்கள் சொன்னதற்கு நன்றி. ஆனால் நான் இதுவரை நினைத்துக் கொண்டிருப்பது அரசுக்கு ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்கிற

---

* * * தலைவர் ஆணைப்படி நீக்கப்பட்டது.



தென்றும், எல்லாப் பொறுப்புக்களையும் முதலமைச்சர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான். யார் தவறு செய்தாலும் . . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, பல பேர்களுடைய நிர்பந்தங்களுக்கு பல பேர் ஆளாவது வேடிக்கை. எப்படி நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்போது, நான் சில நிர்பந்தங்களுக்கு ஆளாகி இதைச் சொல்கிறேன் என்று சொன்னார்களோ, அதைப் போல அறிஞர் அண்ணா அவர்களும் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, ஒரு தன்னிலை விளக்கமாக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சிலர் பேசுங்களென்று சொல்லிய நிர்பந்தத்தால் நான் பேசவில்லை. சிலர் பேசிவிட்டதனால், நான் பேசாமல் இருப்பது தவறு என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறேன் என்று சொன்னேன். * * கவர்னர் உரையிலே கல்வியைப் பற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நமது மாநிலத்திலே, கல்வியிலே புதிய சீர்திருத்தத்தைக் கொண்டுவர இருக்கிறார்கள். 10+2+3 என்ற கல்வித் திட்டம் அமுலுக்கு வருகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. 10+2+3 என்ற கல்வித் திட்டத்தை இதற்கு முன்பிருந்த மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் ஒருங்கே கொண்டுவர வேண்டுமென்று திட்டத்தை வகுத்து, எல்லா மாநிலக் கல்வி அமைச்சர்களையும் அழைத்து வைத்துப் பேசி, அந்தத் தீர்மானத்தை அமுல் நடத்தினார்கள். இப்போதுள்ள மத்திய அரசின் கல்வியமைச்சர், 10-வது வகுப்பு, அதற்கு மேற்கொண்டு இரண்டு வகுப்புகள் வைத்துக்கொள்வது அந்தந்த மாநில அமைச்சர்களின் பொறுப்பு என்று விட்டுவிட்டதால், அது புதிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் 10-வது வகுப்புவரை உயர் நிலைப் பள்ளிப் படிப்பை நடத்த இருப்பதால், ஆசிரியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வருகிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதுபோல வகுப்பு மாணவர் எண்ணிக்கையைக் குறைத்து, இப்போதிருக்கிற

---

* * தலைவர் ஆணைப்படி நீக்கப்பட்டது.

ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 40 என்பதை 1 : 25 ஆகக் குறைத்து ஆசிரியர்களைப் பாதுகாக்க வேண்டும். இரண்டாவது பிரச்சினை, ஹையர் செகண்டரிக் கல்வியை எங்கே கொண்டுவருவது என்பது. இதற்கு முந்தைய அரசு 400 பள்ளிகளில் என்று சொல்லியது. இடைக்கால 17 மாத அரசு 100 உயர்நிலைப் பள்ளிகளிலும், 100 கல்லூரிகளிலும் வைத்துக் கொள்ளலாமென்று சொல்லியது. இந்த அரசு விரைவில் இது குறித்து ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும். அடுத்த ஆண்டு மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் கண் கலங்காதிருக்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

(பிற்பகல் 5-50)

இதற்கு முன்னாலே இருந்த மத்திய அரசு கல்வியை கன்கரன்ட் லிஸ்ட்டிலே இருந்து யூனியன் லிஸ்டிலே மாற்றினார்கள். இப்போது இருக்கக்கூடிய மத்திய அரசு மத்திய அரசின் பட்டியலிலிருந்து அதை விலக்கியிருக்கிறார்கள். நமது மாநில அரசு கல்வியை மாநிலப் பட்டியலிலே கொள்ளவேண்டும். இந்த அரசு அதை வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வருகிறவன். அங்கேயுள்ள சில பிரச்சினைகளைச் சொல்லி முடிப்பது முறை என்று நினைக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் இங்கிருந்து 500 மைலுக்கு அப்பால் இருக்கக்கூடிய ஒரு மாவட்டம். அங்கேயுள்ள மக்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை வருகிறது என்றால், 3 நாட்கள், 5 நாட்கள் செலவழித்து வந்து தெரிவிக்க வேண்டியிருக்கிறது. மேலும் ரூ. 300 ஆவது இல்லாமல், பஸ் கட்டணம், ரெயில் கட்டணம் இவைகளுக்காக செலவு இல்லாமல், வர முடியாத நிலைமைகள் இருக்கின்றன. இந்த மாவட்டம் இவ்வளவு தொலைவில் இருப்பதனாலே, எவ்வளவோ வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்தாலும், காலதாமதம் ஆகிறது. உலக்கருவி அணைத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். முந்தைய அரசு ஆரல்வாய் மொழி, பொய்கை அணைத்திட்டம் நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்தார்கள். மாம்பழத்துறை அணை கட்ட, செயல் திட்டம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த இடைக்கால 17 மாத கால ஆட்சியிலே அவைகள் அகற்றப்பட்டன. இந்த அரசு அதைப்பற்றி ஆய்ந்து,





வருகின்ற நிதி நிலை அறிக்கையிலாவது இடம் பெறுகிற நிலையில் செய்து, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்கின்ற அளவுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது தஞ்சையிலுள்ள விவசாயிகள் எல்லாம் மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தஞ்சையை விட மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பது கன்னியாகுமரி மாவட்டம். ஏனென்றால் மேற்குத் தொடர்ச்சி மலையில் தொடர்ந்து மழை இல்லை. குடகு மலையின் மீது மழை பெய்து காவிரியிலே தண்ணீர் பெருகினால், தஞ்சைக்குப் பாசனம் கிடைக்கும். மேற்குத் தொடர்ச்சி மலையிலே தென் மேற்குப் பருவக் காற்று மழை பெய்யாததனால், பெருஞ்சாணி, பேச்சிப் பாறை ஆகிய இரு அணைகளிலும் 62 அடிக்குத் தண்ணீர் இருப்பதற்குப் பதிலாக, 13 அடி அல்லது 14 அடி தண்ணீர்தான் இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளெல்லாம் பயிர் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டும் இதே நிலைதான் ஏற்பட்டது. 20 ஆயிரம் ஏக்கரில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடி விட்டன. அழிந்தன. இந்த ஆண்டும் இதே நிலைதான் இருந்துகொண்டிருக்கின்றது. அதை இருக்கக்கூடிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிற தண்ணீரை முந்தைய பயிர்களுக்குக் கொடுத்து, புதிய அணைத் திட்டங்களை அங்கே கொண்டு வந்து முழு அளவிலே தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். நாம் கடலுக்குப் போகிற கேரளாவின் தண்ணீரைக் கேட்கிறோம். நாம் கடலுக்குப் போகிற ஆந்திரா தண்ணீரைக் கேட்கிறோம். நமது மாநிலத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே மழைக் காலத்திலே வருடத்திற்கு நான்கு மாதம் மழை பெய்யும். அங்கு இருக்கக்கூடிய எல்லா நதிகளும் கடலுக்குத்தான் போய்ச் சேர்கின்றன. அவைகள் குறுகிய ஆறுகள். ஒரு ஆறு 13 மைல் நீளம் இருக்கின்றது. இன்னொரு ஆறு 17 மைல் நீளம் இருக்கின்றது. அவைகள் கடலுக்குப் போகின்றன. மேல் மட்டத்திலே தான் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிப் புதிய நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து, அந்தத் தண்ணீரைத் தேக்கி, தண்ணீரை திருநெல்வேலி மாவட்டத்திற்கும், மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இருக்கின்ற வசதியைப் பெருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் இருந்த 17 மாத கால அரசு செய்த அநீதி சொல்லாமல் விடப்பட்டது. அண்ணா வழியில், பெரியார் காட்டிய வழியில் இந்த நாட்டிலே மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டு, தமிழ் மொழியைக் காத்து, தமிழ் மக்களிடையே இந்தி புகுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தி, இந்தி புகாத நிலைக்கு தன்னை ஆட்படுத்திக்கொண்டு தியாகம் செய்த பாரம்பரைக் குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த மான்யம் நிறுத்தப்பட்டு விட்டது. அது மட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அணைகளிலிருந்து தண்ணீர் கொண்டு வரலாம் என்று சொன்னேன். திருநெல்வேலிக்குக் கொண்டுவரலாம் என்று சொன்னேன். அந்தத் திருநெல்வேலி மாவட்டத்துடன் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நாங்கள் நடத்திய பெரும் போராட்டம் தியாகி மறவர்களை பலி கொடுத்த போர், அந்தப் போர் நமது துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். அதிலே ஈடுபட்டு துன்பம் அனுபவித்த தியாகிகளுக்கு, உயிரிழந்த தியாகிகளின் குடும்பங்களுக்குக் கொடுத்துவந்த மான்யம் நிறுத்தப்பட்டுவிட்டது. நிறுத்தப்பட்ட அதைக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையிலே, இன்று பல இடங்களிலே இடம் பெறுவதிலே நெருக்கடி இருப்பதால் ரூபாய் கேட்கிறார்கள். இங்கே இருக்கின்ற அநேக போராட்டங்களுக்கு காரணம் இதுதான். இது இன்று நேற்றுத் தோன்றியதல்ல. இது எல்லாப் பகுதிகளிலும் உண்டு. எப்போதுமே இருக்கக்கூடியது. பி.காம்., பி.ஏ. எகனமிக்ஸ் அட்மிஷன்களுக்கு ரூபாய் கேட்கிற நிலை இருக்கிறது. சில கல்லூரிகளிலே ஆளே இருக்காது. பி.ஏ. எகானமிக்ஸ் படிக்க சேர்வதற்கு என்று நூறு ரூபாய் கொடுத்தால்தான் ஆளே வரும். அப்படியும் நிலைமை இருக்கிறது. 20 பேர்களாவது குறைந்தது இருந்தால்தான் மான்யம் கிடைக்கும். 20 பேருக்குத் குறைந்தால் கடைசியில் இருக்கக்கூடிய ஆசிரியருக்கு வேலை போய்விடும். என் சம்பளத்தையே கொடுக்கிறேன், நீ வா என்று கூப்பிடுவார்கள். ஏனென்றால் அவருக்கு வேலை போய்விடும். பிரின்சிபால் 20 பேர்களுக்குக் குறைந்தால் அந்தக் கோர்சை சஸ்பெண்ட் பண்ணி விடுவேன் என்று சொல்வார். எனவே தன்னுடைய சம்பளத்திலிருந்தே கொடுப்பார்கள். பி.ஏ. எகனமிக்ஸ், பி.காம்., பி.எஸ்.ஸி., கெமிஸ்ட்ரி வகுப்புகளுக்கு இடம் இல்லாமல் நெருக்கடி இருக்கும்போது, நிறுவனத்தினர் அதற்குப் பணம் பெறுகிறார்கள்.





மாணவர்கள் பணம் கொடுத்து விடுவதால் கிளர்ச்சி பண்ணுவார்கள். இடம் கிடைத்த பிறகுதான், மாணவர்கள் கல்லூரி மாணவர்கள் என்ற உரிமை பெறுகிறார்கள். ஏனென்றால் அதைக் கொடுக்காமல் இடம் கிடைக்காது. கிடைத்தபின் போராட்டம் செய்கின்றார்கள். உரிமை பெற்றபின் போராட்டம் நடத்துகின்றார்கள். இது கல்லூரி தொடங்குகின்ற இந்த ஆண்டிலேயே ஆங்காங்கு தலை தூக்குவதை நாம் வீழ்த்த வேண்டும். அது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் அழுத்தமாக உத்தரவு போட்டிருக்கிறோம். கல்லூரியில் சேர்ப்பதற்கு 3 மாதம் முன்னரோ அல்லது 3 மாதம் பின்னரோ எந்தவிதமான நன்கொடையும் பெற்றோர்களிடமிருந்தோ, மாணவர்களிடமிருந்தோ, உறவினர்களிடமிருந்தோ வாங்கக்கூடாது, வாங்கினால் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பது சட்டம். இப்போது சட்டத்தை மதிக்கின்றவர்கள் குறைந்து வருகின்றார்கள். ஆகவே அதைத் தடுக்க வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கல்லூரியினுடைய முதல்வர் என்று அறிகிறேன். பி.காம். அட்மிசன் அவர்களுடைய கல்லூரியிலே எப்படி நடத்தப்பட்டது என்று சொன்னால் நலமாக இருக்கும்.

திரு எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பி.காம். அட்மிஷனைப் பொறுத்தவரையிலே, அவர்களே வந்து விசாரணை செய்துகொள்ளலாம். நான் அன்போடு என் செலவிலேயே அழைத்துச் செல்கிறேன். வருகிற நாளைச் சொன்னால் திருநெல்வேலிக்குக் கார் அனுப்புகிறோம். எங்கள் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்க எங்கள் கல்லூரியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறோம். மார்க் சதவிகிதத்தைப் பார்க்கிறோம். முதல் முறையில் பாஸ் ஆனவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு, இடம் இருந்தால் இரண்டாம் முறையில் பாஸ் ஆனவர்களுக்கும் இடம் கொடுத்துவிட்டு, இடம் இருந்தால் மூன்றாம் முறையில் பாஸ் ஆனவர்களுக்கும் இடம் கொடுக்கிறோம். அத்தனை பேரும் எங்கள் கல்லூரியில் படித்தவர்கள்தான். சென்ற ஆண்டு அப்படிச் செய்தோம். இந்த முறையில்தான் நாங்கள் அட்மிஷன் கொடுத்தோம் என்பதை நம்முடைய முஸ்லீம் லீக் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மேலேயும் அட்மிஷன் கொடுக்கப்படுகிறது.

எங்கள் கல்லூரியில் 60 சீட்டுகள்தான் இருக்கின்றன. எங்கள் கல்லூரி மாணவர்களுக்கு இவ்வளவு சீட்டுகள் என்று ஒதுக்கியிருக்கிறோம். மற்ற கல்லூரிகளிலிருந்து வருகிறவர்களுக்கும் கொடுக்கலாம். தவறாக இருந்தால், மன்னித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஏதாவது ஒரு வரையறை வைத்துக்கொள்வதற்கு கல்லூரித் தலைவரவர்களுக்கு உரிமை இருக்கிறது. இதே முறையிலே எல்லாக் கல்லூரிகளும் நடப்பதற்கு ஒரு வரையறை ஏற்படுத்தி இருந்தால், மாணவர்களிடையே எதுவும் சலசலப்பு ஏற்படாமலிருக்கும். கல்வியிலே அதிக நாட்டம் கொண்டுவர முடியும். நிர்வாகிகளை நாம் எவ்வளவு அழைத்துப் பேசினாலும், அவர்கள் சொல்வதைச் சொல்லிவிட்டு, செய்வதைச் செய்து கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்திலே செய்துகொண்டிருக்கிறார்கள். ஏதோ ஓர் எண்ணத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் மிகுந்த கடுமையான எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று அரசு சார்பில் மட்டுமல்ல, இந்தச் சமுதாயமும் எச்சரிக்கை விட வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக் கொள்ளுகிறேன்.

ஆசிரியப் பணி புரிகின்றவர்களும், மற்ற தொழிலாளர்களும், மற்ற ஊதியப் பணியில் ஈடுபட்டிருக்கின்றவர்களும், சம்பள உயர்வை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய விலைவாசியில் வாழ முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதை எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க ஊதியக் குழுவை நியமித்துச் செய்ய வேண்டும். அதிலே கல்லூரி ஆசிரியர்களுக்கு விதிவிலக்கு அளித்து, அவர்களுடைய மாநிலக் குழு விதிப்படி வழங்கினால், 80 சதவீதத்திற்கு, 4 ஆண்டுகளுக்கு மத்திய அரசிலிருந்து நிதி பெற முடியும். அந்த அடிப்படையில் சம்பளம் வழங்குவதாக இருந்தால், அந்த நான்கு ஆண்டுகளுக்கும் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே முன்னால் குறிப்பிட்ட அம்சங்கள் இடம் பெறாததற்கு என்னுடைய வருத்தத்தை இந்த அவையிலே சொல்லி, வருகின்ற நிதி நிலை அறிக்கையிலாவது இவைகள் செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.



(பிற்பகல் 6-00)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** வணக்கத்திற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்த மேலவைக்குரிய பண்போடும் தகுதியோடும் தரத்தோடும் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் முதலாவது நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையில் எதையெதைச் சொல்லவில்லை என்பதைப்பற்றி இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அனைத்தும் நல்ல எண்ணங்களின் அடிப்படையிலே, தமிழகம் எல்லா வகையிலும் எல்லா வழியிலும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற நோக்கத்துடன், தங்களுக்கு என்னென்ன மனதில் தோன்றுகிறதோ அவைகளை எடுத்து வைத்து, கண்ணியமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, இந்த மன்றத்திற்குரிய தகுதியை மற்றவர்கள் போற்றுகிற அளவுக்கு, கருத்துக்களை வெளியிட்ட பாங்கைப்பற்றி நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். நானும் ஒரு காலத்தில் இந்த மேலவை உறுப்பினனாக இருந்திருக்கிறேன் என்பதையும் எண்ணி, அந்த நாட்களில் நான் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபொழுது, என்னென்ன கருத்துக்கள் இங்கே பேசப்பட்டன என்பதையும், என்னென்ன பதில்கள் தரவேண்டிய அவசியம் மற்றவர்களுக்கு ஏற்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஒரு நாட்டின் ஆட்சி அந்த ஆட்சிக்கட்டிலிலே உட்கார்ந்திருக்கிற, அமர்த்தப்படுகிற, அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறவர்கள் மட்டும் நடத்துகிற ஒரு ஆட்சியாக இருக்க முடியாது. அது சரிவர நடைபெறவும் முடியாது என்பதை நாங்கள் தெள்ளத் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். ஒரு ஆட்சியை ஒரு தனி அரசியல் கட்சி நடத்திவிட்டு, இது எங்களுடைய சாதனை என்றோ, நாங்கள் மட்டும்தான் நிறைவேற்றிக் காண்பிக்கக் கூடிய தகுதியைப் பெற்றவர்கள் என்றோ கூறிக்கொள்ள முடியாது. உண்மையிலேயே ஒரு நாட்டின் நிலைமையைப் புரிந்துகொண்ட எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அப்படித் துணிவு கொள்ள மாட்டார்கள். சட்டப் பேரவையானாலும், சட்டமன்ற மேலவையானாலும் ஒட்டு மொத்தமாக இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும், அரசியல் கட்சிகளின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாது,

மற்ற கட்சிகளும் பிரிந்து நின்று எங்களுக்கு இந்தப் பொறுப்பில் எதிலும் பங்கில்லை என்று ஒதுங்கிவிட முடியாது. அல்லது தங்கள் கருத்துக்களைச் சொல்கிறவர்கள் மாறுபட்டுச் சொல்லிவிட்டார்கள் என்று எதிரிகளாகக் கருதப்படுகிற முறையோ அல்லது யாரோ உட்கார்ந்து ஆட்சி நடத்துகிறார்கள், அத்தோடு இந்த நிலைமை முடிந்து விடுகிறது என்ற நினைப்போ யாருக்கும் வர முடியாது என்பதையும் உணர்ந்திருக்கிறோம். ஒரு நாட்டில் ஜனநாயக வழியில் அரசு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கட்சியின் கையில் அரசை ஒப்படைத்து, இதை நடத்த வேண்டுமென்று சட்டம் உத்தரவிடுகிற நேரத்தில், அந்த ஆட்சியிலே இருக்கிற ஒரு அரசியல் கட்சி தங்களுக்கு மட்டும்தான் பொறுப்பு இருக்கிறது என்று எண்ணி, அந்த முடிவுக்கு வருவதும் ஒரு வேடிக்கையான பரிகசிக்கக்கூடிய நிலைமையாகிவிடும் என்பதையும் நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலே எத்தனைதான் புத்தகங்களை, அளவில் அடங்காப் புத்தகங்களைப் படித்திருந்தாலும், பட்டங்கள் பெற்றிருந்தாலும், எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் எத்தனை அறிவு வளர்ச்சிக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்களோ அதற்கேற்பதான் ஒரு நாட்டில் நல்ல ஆட்சி நிலவ முடியுமென்பதையும் நாங்கள் பரிபூரணமாக உணர்ந்திருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி என்ற நிலையில் நாங்கள் அந்த வாய்ப்பைப் பெற்று ஆட்சியில் இருக்கிற இந்த நேரத்தில் நாங்கள் எங்கள் கொள்கைகளை வெளியிடுகிறபொழுது, அந்தக் கொள்கை ஆளுநர் மூலமாக சட்டப் பேரவையிலே மேலவையிலே வைக்கப்பட்டு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும்போது, எங்கள் கொள்கையின் அடிப்படையில் நாங்கள் இன்னின்ன செய்வோம் என்பதை எடுத்துக் காட்டுகிற வாய்ப்பாக அதைப் பயன்படுத்துகிறோம் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதிலும் ஆளுநர் உரை எங்கள் கட்சியினுடைய, நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிற கொள்கையினுடைய ஓர் மதிப்பாகும் என்று யாராவது கருதினார்களானால், நான் அதற்குக் குறுக்கே நிற்கத் தயாராக இல்லை. அது மட்டுமல்ல, தமிழகத்தின் ஒட்டு மொத்தமான மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை, அன்றாடப் பிரச்சினைகளை, எதிர்காலப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டுச் சொன்னால், நீண்ட காலத்தைப்பற்றி எண்ணி அதற்காக ஒரு கொள்கை வகுத்திருக்கிற அடிப்படையிலே சொல்கிற எண்ணங்கள், கருத்துக்கள் அனைத்தும் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிறவர்கள் எண்ணத்திற்கு மாறாகப் போகு



மானால் ஒரு சில எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மாறாக இருக்குமானால், அது உண்மையிலேயே ஜனநாயகத்துக்கு உட்பட்ட நியதிக்கு வேறு வழியில்லாமல் அமைந்துவிடுகிறது என்பதை மற்ற மன்ற உறுப்பினர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நிச்சயமாகக் கருதுகிறேன். எங்கள் கொள்கையை ஆளுநர் உரையில் நாங்கள் வெளியிடும்பொழுது, முழுமையாக என்னென்ன இந்த நாட்டுக்குத் தேவை, உடனடியாகச் செய்ய வேண்டியவை என்னென்ன என்று நாங்கள் விரும்புகிறோமோ, நம்புகிறோமோ, நடத்த வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ அத்தனையும் முழுமையாக ஆளுநர் உரையில் சொல்லிவிட முடியாது என்றும், இதுவரையில் யாரும் அப்படிச் சொல்லிவிடவில்லை என்பதையும் நிதி நிலை அறிக்கையில்தான் முழுமையாக வெளியிடுவது முறையாக இருந்திருக்கிறது என்பதையும் இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆளுநர் உரை என்பது மேலே கோடிட்டுக் காண்பிக்கிற ஒரு உரையே தவிர, எங்களுடைய கொள்கையின் முழு வடிவமாக முற்றுப் பெற்றதாக அது அமைக்கப்படவில்லை என்பதையும் மீண்டும் அழுத்திச் சொல்ல விழைகிறேன். இந்த நாட்டில் எத்தனையோ பெரியவர்கள், அறிவில் மிக்கவர்கள், சான்றோர்கள் முதலமைச்சர் பதவியேற்று இங்கே ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். ஓமந்தூராரிலிருந்து காமராஜ் வரை, அறிஞர் அண்ணாவிலிருந்து கலைஞர் வரையிலும் இங்கே ஆட்சி நடத்தியிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொண்டு இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிற நாங்கள், அதிலும் அந்தப் பொறுப்பில் முதலமைச்சராக ஆக்கப்பட்டிருக்கிற நான், இவைகளை மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த மன்றத்தில் பேச்சைத் தொடங்குகிறேன் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தகுதியை திறமையை, பண்பை, கொள்கையை இந்த நாடு நம்பியிருக்கிறது. இந்த நாட்டின் ஆட்சி யார் கையில் ஒப்படைக்கப்பட்டதோ அந்த ஆட்சிக்கு அந்தப் பதவிக்கு ஆட்படுத்தப்பட்டவர்கள் தங்கள் அறிவையும் ஆற்றலையும் அனுபவத்தையும் தமிழக மக்களுக்கு எவ்வளவு சிறப்பாகச் செயலாற்றிக் காட்ட முடியுமோ, அந்த வகையில் அவர்களுக்கு உள்ள சூழ்நிலைக்கேற்ப, சுற்றுச் சார்புக்கேற்ப, அவர்களுடைய மனதில் தோன்றுகிற எண்ணங்களுக்கு, ஆசைகளுக்கு ஏற்ப அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் மதிக்காமல் இல்லை என்பதையும் சொல்லிக்கொள்வேன்.

ஆனால் நிறைவேற்றப்படுகிற சட்டங்கள் அமுலாக்கப்படுகிற விதி முறைகள் எல்லாம் இந்த நாட்டில் எந்த அளவுக்கு மக்களுக்கு மனத் திருப்தி அளிக்கிறது என்பதை வைத்துக்கொண்டுதான் தங்கள் வேலைகளிலே, முயற்சிகளிலே அந்த நல்லவர்கள் வெற்றி பெற்றார்களா என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த நிலையில்தான் தமிழகத்தில் 1967 ஆம் ஆண்டு அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபொழுது, மாபெரும் புரட்சியை இந்தத் தமிழக மக்கள் எளிதான வகையில், அமைதியான முறையில், தங்களுக்கே உரிய பண்பாட்டின் அடிப்படையில் சிறப்பாக நிறைவேற்றிக் காண்பித்தார்கள் என்பதை வரலாறு நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. புரட்சி என்று சொல்வதற்குக் காரணம், தமிழக மக்களுக்கு எத்தகைய வாழ்வு வேண்டும், தமிழ் மொழி எப்படி காப்பாற்றப்பட வேண்டும், தமிழ் எந்தக் காலத்திலும் எந்த மொழிக்கும் அடிமையாகிவிடக்கூடாது, அதோடு மக்கள் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு என்ற நிலை பொருளாதார அடிப்படையில் மட்டுமின்றி சமுதாய அடிப்படையிலும் இருக்கக் கூடாது என்ப

(பிற்பகல் 6-10)

வைகளை அடிப்படையாகக் கொண்டு, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உழைத்து, தமிழகத்திலே அவருடைய ஆற்றல் எங்கெங்கே பரவியதோ, எப்படி மக்கள் மனதில் பதிந்ததோ, அதற்கேற்ப தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய சூழ்நிலையை இந்த மக்களைக் கொண்டு ஏற்படுத்திக்கொண்டார்கள். அண்ணா அவர்கள் தமிழக மக்களுக்கு நல்லதொரு திட்டத்தை நிறைவேற்ற வாக்குக் கொடுத்து, சமதர்ம சமுதாய அடிப்படையில், அதை ஒழுங்காகவும், சீராகவும், நேர்மையாகவும் நடத்த வேண்டும் என்ற கடமை உணர்வோடு செயலில் இறங்கினார்கள். ஆனால் தமிழக மக்களின் துரதிருஷ்டம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டை ஆளவேண்டிய வாய்ப்பை இழந்த நிலைமைக்கு நாம் ஆளானோம். தமிழகம் ஒரு மாபெரும் நல்வாழ்க்கையைப் பெற்றிருந்த சூழ்நிலையிலிருந்து தவறி வேறு பாதைக்குப் போகவேண்டியிருக்குமோ என்ற ஐயத்தில் நாடு அன்று சஞ்சலப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு ஏற்பட்ட ஆட்சி 1971-72 ஆம் ஆண்டுவரை ஓரளவிற்கு அமரர் அண்ணா அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி செயல்பட்டாலும், மக்கள் மத்தியில் சந்தேகம், அவநம்பிக்கை, மனக்குறைகள் இவைகள் எல்லாம் ஏற்பட்டுவிட்ட நிலைமையை இந்த நாடு



உணர்ந்தது. அவைகளின் எதிரொலிதான், தோற்றுவித்து ஐந்தாண்டுகளே ஆகியிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய வாய்ப்பு பெற்றிருப்பது. எங்களுடைய கொள்கைகளை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது இதை நாங்கள் மறந்து விடவில்லை. மறக்க மாட்டோம் என்று இந்த அவையில் உள்ள நல்ல உள்ளங்களுக்கு நான் உறுதி கூறியாக வேண்டியிருக்கிறது. நான் இவைகளைச் சொல்வதற்குக் காரணம், தமிழக மக்கள் அமரர் அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து நிரம்ப எதிர்பார்த்தார்கள். அவர்களைப் பின்பற்றியவர்களிடமிருந்து நிறைய எதிர்பார்த்தார்கள். ஆனால் அமரர் காமராஜர் அவர்கள் 1971 ஆம் ஆண்டில் குற்றச்சாட்டுகளை மக்கள் முன்னால் வைத்து, ஆட்சியிலே இருப்பவர்கள் தவறு செய்கிறார்கள், நேர்மையாக நிர்வாகம் நடைபெறவில்லை, ஒழுங்கு குறைந்துவிட்டது, ஊழல் மலிந்து விட்டது, லஞ்சம் பெருகிவிட்டது என்றெல்லாம் சொன்னதை மக்கள் ஏற்றுக் கொள்ளாமல், 1971-ம் ஆண்டு மிகப் பெரிய பெரும்பான்மையான வித்தியாசத்தில் அண்ணாவினால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மீண்டும் வாய்ப்பளித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு அந்த மனக்குறைகள்—நான் முதலில் சொன்னேனே அவைகள் எல்லாம் மக்கள் மனதில் பதிந்துவிட, வேறு வழி என்ன என்று ஏங்குகின்ற காலம் உருவாயிற்று. இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம் நாங்கள் எப்படிப்பட்ட பொறுப்பை ஏற்றிருக்கிறோம் என்பதையும், எந்தச் சூழ்நிலையிலே இங்கே அமர்த்தப்பட்டிருக்கிறோம் என்பதையும், எந்த அடிப்படையின் காரணமாக எங்களுக்கு இந்த வாய்ப்பை தமிழக மக்கள் தந்திருக்கிறார்கள் என்பதையும் நாங்கள் உணர்ந்துதான் இருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான். ஆளுநர் உரையின் மீது உறுப்பினர்கள் அளித்திருக்கின்ற விளக்கங்கள், கோரிக்கைகள் ஆகியவைகளை அறிந்துகொள்ளத்தான் இந்த ஆளுநர் உரையை நாங்கள் வைத்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் இங்கே இவைகளை நான் குறிப்பிடுகிறேனே தவிர, வேறு எந்த நோக்கத்திலும் அல்ல என்பதைத் தலைவர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தில் பிரச்சினைகள் எவ்வளவு இருக்கின்றன என்பதை இந்த சில நாட்களாக இங்கே பேசிய எனது மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டிய விளக்கங்களிலிருந்து தமிழகம் எவ்வளவு தேவைகளை, எவ்வளவு நல்ல தன்மை

புள்ள திட்டங்களை, அவர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய அவசியமான திட்டங்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றித் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். ஏதோ மேலவைக்கு வந்துவிட்டோம், நாமும் ஏதாவது பேசினால் பரவாயில்லை, பேசிவிட்டுப் போவோம், குறிப்பேட்டில் இருக்கும் என்ற ஆசையில் பேசாமல், புள்ளி விவரங்களோடும், ஆழ்ந்த கருத்துக்களையும் அறிவுசார்ந்த நல்ல திட்டங்களையும் இங்கே வெளியிட்டு, எங்களிடம் நிரம்ப மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் சொன்னார்கள். இதிலிருந்து இந்த நாட்டின் தேவைகளை எத்தனையெத்தனை பிரிவுகளாக, பல வகைகளாக மக்கள் மத்தியில் இருக்கின்றன என்பதை நாம் உணரக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே பேசியவர்கள் பலர், அதிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், எங்களை ஆதரிக்க வேண்டியிருந்தாலும், ஆளுநர் உரையை ஆதரித்துப் பேசினாலும், அவர்களும் சில குறைகளை எடுத்துச் சொல்லி, இதைச் செய்ய வேண்டும், அதை நீக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே நான் உங்கள் உள்ளத்திற்கு முன்பாக ஒரு சிறிய கருத்தை வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். இத்தனை ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, 25 ஆண்டுகள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, ஏழாண்டுகள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, 17 மாதங்கள் என்று எடுத்துக் கொண்டாலும் சரி, எத்தனையோ கோடி ரூபாய்க்கு எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றியும் கூட, அறிவுள்ள பெரியவர்கள் பலர் கூடி வகுத்த திட்டங்களுக்குப் பிறகும், இந்த நிலை தான் தமிழகத்திலே இருக்கிறது என்கிற பதில் நமக்குக் கிடைக்குமானால், ஆட்சிக்கு வருகின்ற எங்களைப் போன்றவர்கள் அடிப்படையிலிருந்து ஒரு திருத்தத்தை, ஒரு மாற்றத்தை எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அமரர் அண்ணா அவர்களின் குறிக்கோளில் என்னென்ன இலட்சியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகள் மக்கள் மத்தியில் சொல்லப்பட்டு, அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். தொழில் பிரச்சினையானாலும் சரி, தொழிலாளர் பிரச்சினையானாலும் சரி, ஆசிரியர் பிரச்சினையானாலும் சரி, மாணவர்கள் பிரச்சினையானாலும் சரி, கட்டிடம் கட்டுவோரைப் பற்றிய பிரச்சினையானாலும் சரி, கட்டிடங்களை இடிக்க வேண்டியது பற்றிய பிரச்சினையானாலும் சரி,





கோவிலைப் பாதுகாக்க வேண்டிய பிரச்சினையானாலும் சரி, கோவிலுக்குள் போகக் கூடாது என்ற பிரச்சினையானாலும் சரி, அல்லது வேறு வகையில் சிந்தித்துப் பார்த்தால் உயர்ந்தவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் என்று கருதிக்கொண்டாலும் சரி, வாழ்வாங்கு வாழ இடமில்லாத வறியவர்களாக இருக்கிற ஏழை மக்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான நிலைமையை உருவாக்கித் தருவோம் என்ற உறுதியான திட்டங்களாக இருந்தாலும் சரி, எதைப்பற்றி எடுத்துக்கொண்டாலும், தமிழக மக்களுடைய இன்றைய நிலைமைக்கு ஏற்ப அவர்களை வாழவைக்க வேண்டிய கட்டாயத்திற்கு நாமனைவரும் உட்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை மட்டும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இவ்வளவிற்கும் இங்கே இதற்கு முன்னால் நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். தமிழகத்தில் நீதியை எடுத்துக் கொண்டாலும் சரி, நிர்வாகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, நாகரிகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, பண்பாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, கலாச்சாரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அதைவிட நம்முடைய பாரம்பரியம் என்று சொல்கிற அந்த நிலைமைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, இவை அத்தனையிலும் எந்த மாநிலத்திற்கும் எந்த நாட்டிற்கும் தமிழகம் பின்வாங்காது, உயர்ந்து நிற்கும் என்பதையும் உயர்ந்து இருக்கிறது என்பதையும் நாம் நிச்சயமாக பெருமையோடு கருதிக் கொள்ளத்தக்க வகையில் நம்முடைய முன்னோர்கள் ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-20)

நமக்கு முன்னால் இருந்தவர்கள் அந்த உறுதியைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் திட்டமிட்ட பிறகு, அதை நிறைவேற்ற வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், நம்முடைய திட்டங்களின் அடிப்படை நோக்கம் எங்கே சிதறி விடுகிறது, எங்கே தவறி விடுகிறது என்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எவ்வளவோ அறிவாற்றலும், எத்தனையோ திட்டங்களும், கோடிக் கணக்கான பணமும், இந்த நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உழைப்பும் இந்த நாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட பிறகும், இங்கே இருக்கின்ற மேலவை உறுப்பினர்களும் இதைச் சொல்லக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாக இருக்கிறது. அடிமட்டத்திலிருந்து பல திட்டங்களை மாற்றியாக வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு,

அதை மக்கள் மத்தியில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். நகரா
களிலிருந்து கிராமங்களுக்குப் போகின்ற திட்டங்களை மாற்றி
கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வருகிற திட்டங்களை உருவாக்
வேண்டுமென்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, நாங்கள் எந்
உரிமையோடு பதவியைப் பெற்றிருக்கிறோம்? இங்கே
மாண்புமிகு உறுப்பினர்கள், திட்டங்கள் தீட்டினாலும் அதை நிறை
வேற்ற முடியாமல் போகிறது, எனவே அதைக் கண்காணிக்
வேண்டுமென்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. நாங்கள் எந்
அடிப்படையில் மக்களுக்கு உத்தரவாதம் தந்து வந்திருக்
கிறோமோ, அதையே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்
சொல்லியிருக்கிறார்கள். மாற்றுக் கட்சி நண்பர்களானாலும், உறுப்
பினர்களானாலும், அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லும்
போது என் உள்ளம் விம்மியது, பெருமைப்பட்டது; என்
உள்ளத்தில் நம்பிக்கை உதயமாயிற்று என்று சொல்ல வேண்டிய
வனாக இருக்கிறேன். நாங்கள் எண்ணுகின்ற திட்டங்கள், நிறை
வேற்ற வேண்டுமென்று ஆசைப்படுகிற பொருளாதார அமைப்பு
முறைகள், கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு வரவேண்டு
மென்று நாங்கள் நினைத்திருக்கிற வழிமுறைகள், இவை
அனைத்தையும் நாங்கள் எப்படி மக்களுக்குச் சொல்லி அவர்
களுடைய வாக்குகளைப் பெற்றோமோ அதேபோல இங்கேயுள்ள
உறுப்பினர்களுக்கும் அவற்றைச் சொல்லி, அவர்களுடைய
ஆதரவை எப்படிப் பெறுவது என்று சிந்தித்துக் கொண்டிருந்த
போது, இங்குள்ள அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் எங்கள்
எண்ணத்திற்குச் சாதகமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே
நாங்கள் என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டுமென்று
விரும்பியிருக்கிறோமோ அவற்றை எளிதாக நிறைவேற்றுவோம்
என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலைமைகள்
எங்களுக்கு மிகப் பெரிய சாதனையென்று நான் சொல்ல
மாட்டேன், சாதகமாக அமைந்திருக்கிறதென்று சொல்லுவேன்.
இதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டால், உண்மை
யிலேயே, எங்களைவிட நல்ல வாய்ப்பை இழந்தவர்கள் நாட்டில்
இருக்க மாட்டார்களென்று கருதுகிறேன்.

அறிவுசால் பெருமக்கள் நல்ல திட்டங்களைக் கூறும்போது,
அவர்களுடைய அனுபவத்திற்கேற்ப சிலவற்றைச் சொல்லியிருக்
கிறார்கள். கல்வி அமைப்பைப்பற்றி இருந்தாலும் சரி, அது
மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அதிகாரமா





மாநிலத்திற்குத் தரப்பட்டுள்ள, ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குள்ளாக இருக்கின்றதா, பொதுவாக இருக்கின்றதா என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாகக் குறிப்பிடும் நேரத்தில், எங்களுக்குச் சாதகமாக, பல பிரச்சினைகளுக்கு ஆதரவு காட்டியிருக்கிறார்கள். கல்வி நிச்சயமாக மாநிலத்தின் அதிகாரத்திற்குள்தான் இருக்க வேண்டுமென்பதிலும் அது மாற்றப்படக் கூடாதென்பதிலும் நாங்கள் உங்களைப் போலவே தீவிரமாக இருக்கிறோமென்பதை இங்கே நான் உத்திரவாதத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, ஏழை எளியவர்களின் பிரச்சினை எப்போது முடிவடையப் போகிறது, வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினை எப்போது முடிவடையப் போகிறது என்ற கேள்விகளுக்கெல்லாம் இங்கே புள்ளி விவரத்தோடு நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் உட்கார்ந்து படித்துப் பார்த்தேன். எவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களை, எவ்வளவு நல்ல எண்ணத்தோடு, உரிமையோடு சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால், அவர்களெல்லாம் அண்ணாவின் கொள்கைக்கு ஆதரவு தரத் துணிந்துவிட்டார்கள் என்று தெரிந்துகொள்ள முடிகிறது.

இந்த நாட்டில், வெறும் குமாஸ்தா வேலைக்கு மட்டுமல்லாமல். உழைத்து வாழ்கின்ற தன்மைக்கு உரம் ஏற்றுகின்ற, ஏற்படுத்துகின்ற, உத்தரவாதம் தருகின்ற நிலைமையில் கல்வியமைப்பு இருக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. உழைப்பிற்கு மதிப்புக் கொடுக்கும், மரியாதை கொடுக்கும் நிலைமைகள் நாட்டு மக்கள் உள்ளத்தில் உறுதியாக, நிலையாக இருக்க வேண்டும் அந்த எண்ணம் வளர்க்கப்பட வேண்டுமென்றுதான் இந்த அமைச்சரவை விரும்புகிறது. இந்த நாட்டிலுள்ள மக்கள் உழைப்பது—உடல் உழைப்பாக இருந்தாலும் சரி, அறிவு உழைப்பாக இருந்தாலும் சரி—எப்படிப்பட்ட உழைப்பாக இருந்தாலும் அப்படிப்பட்டவர்களை நாட்டு மக்கள் மதிப்பார்கள்; இந்தச் சமூகம் மதிக்கும் என்ற நிலை ஏற்பட வேண்டும். எந்தத் தொழில் என்றில்லாமல், தொழிலை நேர்மையாகவும், நாணயமாகவும், ஒழுங்காகவும் செய்கின்ற எந்த மனிதனையும் இந்தச் சமூகம் நிச்சயமாகப் பாராட்டும், போற்றும், வாழ்த்தும் என்ற நிலைமைகளை இங்கே வளர்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோமென்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உழைக்கும் தன்மை மிகுந்த தொழிற் திறமையைப் படிக்கும் போதே தெரிந்துகொள்ளும் முறையில் கல்வி முறை அமைக்கப்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 14

பட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு ஆழ்ந்த ஆசை இருக்கிறது, அக்கறை இருக்கிறது. கல்வியைப்பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் புத்தகம் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் பதவியேற்ற மூன்றாம் நாள் என்று கருதுகிறேன்; எனக்கு இந்தப் பிரச்சினை தெரிய வந்தது. உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, தந்தை பெரியாரைப்பற்றிய குறிப்புக்களைப் புத்தகத்தில் சேர்க்க முடியாவிட்டால், அதை அனுபந்தமாகவாவது போட்டு, உடனடியாக மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அமைச்சரவை கட்டளை பிறப்பித்திருக்கிறதென்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவுக்கு மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. இதுமாதிரியுள்ள பிரச்சினைகள் ஒன்றிரண்டல்ல. நான் இங்கே அளவுக்கு அதிகமாகக் கூறுவதாக நினைக்கக் கூடாது. ஆயிரக் கணக்கில் இருக்குமென்று கருதுகிறேன். எதை எடுத்தாலும், எந்தக் கோப்பையைப் புரட்டினாலும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு அதிகாரியை மாற்றுவதானாலும் சரி, உயர் பதவிக்கு உயர்த்தினாலும் சரி, எந்த அளவில் ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாங்கள் கோப்புக்களைப் பார்க்கும்போது எங்களுக்குத் தெளிவாகப்படுகின்ற நிலைமைகளில், உண்மையிலே நாங்கள் ஏமாற்றம் அடைந்தோம். சில சமயங்களில் மிகவும் வேதனைக்கு ஆளாக வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்கேயெல்லாம் தவறுகள் இருக்கின்றன என்று மிகப் பெரியவர்கள் சொல்கிறார்கள். ஊழலை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள், லஞ்சம் வாங்கும் தன்மையைத் தீர்க்க முடியுமா, இதை நீக்கிவிட முடியுமா என்று அவர்களுடைய ஏக்கத்தை, அவர்கள் வேதனையை, அதை ஒழிப்பதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தை, தங்கள் கருத்துக்களின் மூலம் வெளிக்காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். இத்தனை நல்ல உள்ளங்கள் மேலவையில் மட்டும் இருக்கின்றன என்று கருதிவிட வேண்டியதில்லை. தமிழ்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களின் நலனுக்காகச் செயல்பட இந்த அரசு தயாராக இருக்கிறதென்பதையும், அதன் விளைவாகத்தான் எங்களுக்கு இந்தப் பொறுப்பு கிடைத்திருக்கிறதென்பதையும் உணர்ந்து, நாட்டு மக்கள் ஏற்கும் வகையில் ஒத்துழைப்புத் தர



1977 ஜூலை 14] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பலர் தயாராக இருக்கிறார்களென்பதை மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன். எப்படி அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது, ஊழலை எப்படித் தடுப்பது, நிர்வாகத்திலே அமைச்சர்களாக இருப்பவர்கள், அதிகாரிகளாக இருப்பவர்கள் தன்னிச்சையாகக் குறுக்கிடுவதை எப்படித் தடுப்பது என்பதைப் பற்றியெல்லாம் மேடைகளிலே நிறையப் பேசியிருந்தாலும், இங்கே அமைச்சரவையிலே உட்கார்ந்து, பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு உறுதியாகச் சொல்வேன், நிச்சயமாக இப்படிப் பட்ட ஊழல்களை 5 ஆண்டுக் காலத்திற்குள் அறுதியாகத் தடுத்து, இல்லாமல் செய்ய முடியுமென்ற நம்பிக்கை எனக்கு அதிகமாக இருக்கிறது. லஞ்ச ஊழல் நிர்வாகத்திலே தலை காட்டாமல் இருக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்குவோமானால், நீதி மன்றங்கள் வரை யாரும் தலையிடாது, சுதந்திரமாகப் பணியாற்றி, திருப்தியளிக்கும் நிலைமைகள் ஏற்பட முடியும் என்று உணர்கிறோம். இங்கே மேலும் எத்தனையோ கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் ஏழை பணக்காரர்கள் என்பதைப்பற்றிப்

(பிற்பகல் 6-30)

பேசியிருக்கிறார்கள். அதுபோல தொழிலாளர்கள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. தொழிலாளர்கள் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்துவிட முடியும்? இதையெல்லாம் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு நான் சொல்லவேண்டிய கருத்துக்கள் இங்கு சொல்கின்ற வாய்ப்பு கிடைக்கும்போது, விளக்கமாகத் தெளிவு படுத்தப்படும் என்ற நிலைமையை மட்டும் நான் இங்கே உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி நிலை அறிக்கையில் நல்ல முறையில் திட்டமிட்டிருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன். பல விஷயங்களைப் பற்றி நிதிநிலை அறிக்கையில் நாங்கள் தெளிவு படுத்த இருக்கிறோம். பொருளாதாரத் திட்டத்தில், பொருளாதார அமைப்பு முறையில் நாம் மிகப்பெரிய மாற்றத்தைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நக்ஸலைட்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று வெளியிலேயும் பேசுகிறார்கள், உள்ளேயும்—சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் சிலர் பேசுகின்றார்கள். சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று

சொல்கிறார்கள். வழக்குகள் போட்டிருக்கிறார்கள்; அவர்களை நிச்சயமாக விடுதலை செய்ய வேண்டுமென்கிறார்கள். வழக்குகளைப் பின்வலித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்ல வேண்டிய கட்டாயத்திலே யார் இருக்கிறார்கள் என்று மனதில் கை வைத்துப் பார்த்தால், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான். அதைக் கூற வேண்டிய அவசியத்தில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை வேடிக்கையாகக் கூறுவதாக எண்ணாமல், உண்மை எது என்பதை ஆராய்ந்து அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அமைப்பைத் தொடங்கி ஐந்தாண்டுக் காலத்தில் நாங்கள் பட்ட தொல்லைகள், நாங்கள் பலி கொடுத்த நல்ல உயிர்கள், இழந்த உடமைகள், கற்பைப் பறிகொடுத்த பெண்கள் அவலம், இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்தால், கணக்கில் அடங்காது. திண்டுக்கல் இடைத் தேர்தலின்போது தொடுக்கப்பட்ட வழக்குகள் ஐந்தாண்டுகளுக்குப் பின் தான் முடிவடைந்தன. கடந்த சில மாதங்களுக்கு முன் கோவையிலிருந்து நெல்லையிலிருந்து, திருச்சியிலிருந்து, கும்பகோணத்திலிருந்து இப்படிப் பல ஊர்களில் தேர்தல் வேலைகளுக்கு வந்த தனி நபர்கள் 70, 80 பேர்கள் மீது வழக்குப் போடப்பட்டது. வழக்குக்குச் செலவழிப்பது யார் என்றால் அரசு. தனிப்பட்ட நபர்களுக்கு ஏதும் பண நஷ்டம் கிடையாது. அவர்களின் சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்ய வேண்டிய நிலை இல்லை. வழக்கைப் போட்டுவிட வேண்டியது. அது நடக்கும். ஆனால் ஏழை மக்கள், உழைக்கின்ற மக்கள், தொழிலாளர்கள், ஒரு அரசியல் கட்சியில் இருந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, ஒரு அரசியல் கட்சிக் கொள்கையைத் தங்கள் கொள்கையாக ஏற்றுக்கொண்டு, அண்ணாவினுடைய கொள்கையைச் சொல்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக எத்தனை பேர்கள் சாகடிக்கப்பட்டார்கள். அதை எண்ணிப் பார்த்தால், பல காரியங்களை நிறைவேற்ற வேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். ஆட்சிக்கு வந்த பிறகு, எல்லோரையும் விட்டுவிடுங்கள் என்ற ஒரு சொல்லை எழுத்து வடிவாக்கி, கட்டளைகள் ஆக்கி அரசு அதிகாரிகள் செயலாக்கி, நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றால், அவசரப்பட்டு எங்கள் சுயநலத்திற்காக எங்கள் கட்சிக்காரர்களுக்கு உதவுவதற்காக எல்லோரையும் ஒட்டுமொத்தமாக விடுவித்து விட்டோம் என்ற குற்றச்சாட்டுக்கு



ஆளாகிவிடக் கூடாதென்ற காரணத்தால், அந்த நிலையை உண்டாக்க விரும்பவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நம்பிக்கையில் இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் பொதுத் தன்மையோடு பாதுகாப்புத் தந்து, அவர்கள் தங்கள் சொந்தக் கருத்தினை வெளியே சொல்வதற்கு, வன்முறையற்ற காரியங்களில் அவர்கள் ஈடுபடும் போது, அவர்களுக்கு முழு உரிமையை அளிக்க வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அந்த வாய்ப்பை நிச்சயமாகத் தருவோம் என்பதை உறுதி கூறிக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஆட்சி ஒரு தனிக் கட்சி ஆட்சியாகச் செயல்படாது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் கொள்கை, எங்கள் கட்சிக்காக உருவாக்கப்பட்டகொள்கை, எங்களுடைய கட்சியினுடைய தொண்டர்களுக்கு, குடும்பங்களுக்கு மட்டும் பயன்தர உருவாக்கப்பட்ட கொள்கை அல்ல. அண்ணாவின் கொள்கை மனித சமுதாயத்திற்காகத் தரப்பட்ட பொதுவான கொள்கை ஆகும். நாங்கள் அகில இந்திய அளவிலே ஒரு கட்சியைத் தொடங்கினோம். அதையும் மற்றவர்கள் மாநிலக் கட்சி என்று சொன்னார்கள். அண்ணா அவர்களுடைய கொள்கை உலகம் முழுவதும் உள்ள நல்லோர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நல்ல கொள்கை என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளராக இருந்தாலும், யாராக இருந்தாலும், எதிர்க் கட்சியினராக இருப்பினும், அவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்படுவதற்கு, நியாயமான உரிமைகள் நல்ல முறையிலே செயல்படுவதற்கு, நிச்சயமாக ஆதரவு தருவோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சில நண்பர்கள் கேட்டார்கள். உறுப்பினர்கள், "உங்கள் தொழில் கொள்கை என்ன?" என்று மறைமுகமாக, அவர்களுக்கே உரிய பாங்கோடு தங்கள் கேள்வியை வெளியிட்டார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்வேன். எங்களுடைய கொள்கை பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கை. இந்த நாட்டினுடைய பெரிய தொழிற்சாலைகள், அதுபோன்ற பெரிய அமைப்புகள் எது இருந்தாலும், அரசால் நடத்தப்படுவதாக இருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் இறுதியான கொள்கை. அதை நான் தெளிவுபடச் சொல்வேன். நாங்கள் இதைத்தான்

அடிப்படையாக வைத்துச் செயல்பட இருக்கின்றோம். அண்ணா அவர்கள் "ஒரு மனிதனுடைய உழைப்பு இந்த நாட்டிற்குப் பொது சொத்து, ஒருவனுடைய அறிவும் ஆற்றலும் இந்த நாட்டினுடைய பொதுச் சொத்து", என்று சொன்னார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். நல்ல அறிவு படைத்த, திறன் மிக்க, அத்தனை பேர்களும் தங்கள் அறிவையும், ஆற்றலையும், சக்தியையும் இந்தத் தமிழ் நாட்டின் நல்வாழ்வுக்காக, பொது மக்களுடைய நன்மைக்காகத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை, இந்த மன்றத்திலே தலைவர் மூலமாக முன்வைக்க விரும்புகிறேன்.

**திரு. கோ. சி. மணி:** விளக்கம்தான் கேட்கிறேன். சிறிய பெரிய அனைத்துத் தொழில்களையுமே, இப்போது புதிய அரசு தேசியமயமாக்க இருப்பதாக முதலமைச்சர் சொல்வதிலிருந்து தெரிந்து கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினருடைய சொல் திறமையைப் பாராட்டுகிறேன். அங்கத்தினர் அவர்கள் என் கவனத்தைத் திருப்ப முனைகிறார். நான் நிச்சயமாக அவர் எண்ணும் வழியில் செல்ல மாட்டேன். எனக்கு எங்கெங்கே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தெரியும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். பெரிய பெரிய தொழிற்சாலைகள் என்றுதான் குறிப்பிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுதான் எங்கள் இறுதியான கொள்கையாகும். இன்று இந்த நாட்டில் உள்ள பெரும் முதலாளிகளும் கோடிகணக்கான சொத்துக்களுக்குச் சொந்தக்காரர்களும் அந்த நிதியை அப்படியே வைத்து யாருக்கும் பயன்படாமல் போய் வீணாகிப் போகாமல் அது இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படும் முறையில், அந்தப் பயனைப் பெற்றுத் தரவேண்டும் என்ற முறையில், எந்த வகையிலாவது நாட்டில் சிறு தொழில்களை ஆயிரகணக்கில் ஆரம்பிக்க வேண்டியதவசியம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கிராமப்புறப் பகுதிகளில் சிறு தொழில்கள் அமைக்கப்பட வேண்டும். அரசோடு சேர்ந்து அமைக்கப்பட்டால், மகிழ்ச்சிகொள்வேன். தனியார் துறையிலே ஆரம்பித்து லாப நோக்கத்தைக் குறைத்துக் கொண்டு, நாட்டு மக்கள் நலனில் அக்கறை காட்டுவார்களேயானால் அவர்களையும் இந்த நாடு போற்றிப் பாராட்டி வரவேற்கும் என்பதை நான் நிச்சயமாக மக்களின் சார்பாக இந்த அவையில்



சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மறுபடியும் சொல்கிறேன்; யாராக இருந்தாலும், இந்த நாட்டில் அவர்கள் செய்கின்ற பணி, உழைப்பு, அறிவு, ஆற்றல், நிதி நிலைமை இந்த நாட்டினுடைய மக்கள் வாழ்வுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு குடும்பத்திற்காக, தங்களுக்காக மட்டும், தங்கள் இனத்திற்காக மட்டும் என்று சொந்தமாக்கக் கூடிய நிலைமை வருவதாக இருக்குமானால், அந்த நிலைமையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை மேலவையின் துணைத் தலைவர் மூலமாக இந்த அவையின் முன் வைக்க முற்படுகிறேன்.

(பிற்பகல் 6-40.)

அந்த வகையில்தான் நாங்கள் எங்கள் கொள்கையைச் சொல்லிக் காட்டுகிறோம். மொழிப் பிரச்சினையானாலும் சரி, இருமொழிக் கொள்கையைப்பற்றித் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். தமிழ்நாட்டுக்கு நிச்சயமாகத் தமிழ் மொழிதான் சொந்தம். தமிழ் மொழிதான் ஆட்சி மொழி. தமிழ் மொழிதான் வழக்கு மொழி, தமிழ் மொழிதான் இலக்கிய இலக்கண மொழி. நாங்கள் நிச்சயமாக அதைக் கட்டிக் காப்போம் என்பதையும் இந்தியத் துணைக் கண்டத்திற்குள்ளே மற்ற மாநிலங்களுடனும், அயல் நாடுகளுடனும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்படுமென்று நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். யாரோ ஒரு நண்பர் சொல்லியிருக்கிறார். சில இடங்களில் கூட அப்படிப் பேசினார்கள். பிரதம மந்திரி அவர்கள் உறுதிமொழி கொடுத்துவிட்ட பிறகு, இந்தப் பிரச்சினையை ஏன் இங்கே சொல்ல வேண்டுமென்று சந்தேகப்படுகிறார்கள். இது ஒரு உண்மையான பிரச்சினை. அதை மீண்டும் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டோ, வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த நாங்கள் மீண்டும் ஓட்டுக் கேட்பதற்காக இதைச் சொல்கிறோம் என்றோ யாரும் கற்பனை செய்துகொள்ள வேண்டாம். தமிழக மக்களின் ரத்தத்தோடு நேர்மையான நம்பிக்கையோடு தோய்ந்துவிட்ட கருத்து இது. அசைக்க முடியாத கருத்து. அதை மாற்ற யார் முயற்சித்தாலும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை எதிர்த்துப் போராடும் என்பதையும் இங்கே நான் கூறிக்கொள்வது எங்கள் கடமை என்று கருதுகிறோம். எத்தனை அரிய உயிர்களைப் பலிகொடுத்து

எத்தனை குடும்பங்கள் நாசமாக்கப்பட்டு, வாழ்வு சீரழிக்கப்பட்டு இந்தப் பணியை எத்தனை ஆண்டு காலமாகச் செய்து வந்தார்கள் என்பதை இந்த நாடு அறியும். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகிகள் அனைவருக்கும் உதவித்தொகை கொடுத்து வந்தது மாற்றப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பவும் கொண்டுவர முடியாதா என்றும், இந்த உரையில் ஏன் அதைச் சொல்லவில்லை என்றும் கேட்கிறார்கள். அது குறித்து நீதி மன்றத்தின் தீர்ப்பு—சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் வேறு வகையில் அதற்கு நிச்சயமாக வழி செய்யும் இந்த அரசு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இப்படி அனைத்து வகையிலும் கட்சி பேதமின்றி, மத மாச்சரியமின்றி ஏற்றத் தாழ்வுகளைப் பாராது, எதிர்க் கட்சி, ஆளும் கட்சி என்ற தப்பான குறுகிய வட்டத்திற்குள் எங்களை நுழைத்துக்கொள்ளாமல், நாங்கள் எங்கள் தொண்டினை அண்ணாவின் வழியில் கட்டுப்பாட்டு உணர்வுடன் செய்வோம் என்று உறுதி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், பள்ளிகளிலே செய்யப்பட்டுள்ள மாறுதல்களைக் குறித்துப் பேசினார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். நூறு வகுப்புகள் கல்லூரிக்கும் நூறு வகுப்புகள் உயர்நிலைப் பள்ளிகளுக்குமாகப் பிரித்திருக்கிறார்களே, இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். இவ்வளவு அக்கறையுள்ள மக்கள் இருக்கிறபொழுதுதான் இந்த நாட்டில் கடந்த பதினேழு மாத நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கு முன்பு நாங்கள் அனுபவித்த ஐந்தாண்டு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. இதை எண்ணிப் பார்க்க முடியவில்லை. அப்படியிருந்தும் கூட, இப்போது கேட்கிற உங்களுக்கு ஒன்றை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். உங்கள் விருப்பப்படி, நல்ல நுணுக்கத் திறமையோடு, ஆலோசனைகளோடு அவற்றைப் பரிசீலித்து முடிவெடுப்போம். உங்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிச்சயமாக அதில் இருக்கும் என்ற உறுதியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விளக்கம் முழுவதையும் நாங்கள் நிதிநிலை அறிக்கையில் வெளியிட இருப்பதால், இங்கே அதைக் குறிப்பிட விரும்பவில்லை. ஆளுநர் உரை என்பது மீண்டும் உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன், எந்த



நோக்கிலும் எங்களுடைய ஒட்டுமொத்த கருத்தைக் கோடிட்டுக் காட்டுகிற அறிக்கையே தவிர, விவரமான புள்ளிவிவரத்தின் மூலம் என்ன செய்யப் போகிறோம் என்ற அறிக்கை என்று இதை நினைத்துவிடக் கூடாது. இந்த மேலவையினுடைய பண்பாட்டை வெளியிட்டிருக்கிறார்கள். சிலபல யோசனைகள் தந்திருக்கிறார்கள். அவற்றைப் பேச்சளவிலே விட்டுவிடாது இந்த அரசு, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதோடு, ஒரு குழு அமைத்துப் பரிசீலித்து ஒவ்வொருவர் கருத்துக்கும் மதிப்பு வைத்துப் பரிசீலனை செய்வோம் என்று உறுதி கூறிக்கொள்கிறேன்.

நாங்கள் இங்கே அமைச்சர்களாக உட்கார்ந்துகொண்டிருப்பது உங்களைப் போன்ற அறிவு மிக்கவர்களின் அறிவாற்றலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றுதானே தவிர, ஏதோ அமைச்சர் பதவியிலிருந்து நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக மட்டுமல்ல. அமைச்சர்களுக்குச் சம்பளம் போதுமா, இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொள்ளக் கூடாதா என்று இருபொருளில் சொல்வது போல் பேசியதை அறிந்து சொல்கிறேன். நிறையப் பணம் இருந்தால், லஞ்சம் வாங்கமாட்டார்கள் என்று அவர்கள் ஆசைப்படுகிறார்களோ என்னவோ என்று நினைக்கிறேன். பற்றுக்குறை ஏற்படும்போது, கை நீளம் ஏற்படுகிறது என்று சொல்வார்களானால், பற்றுக்குறை எங்கெங்கு இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பதவிப் பொறுப்பில் உள்ள அரசு ஊழியர்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்துக் கேட்கிற நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் முன் பேசுகிறபோது சொன்னேன். "இப்போது பெற்றுவருகிற பணத்திற்குப் பிறகும் என்ன செய்வது என்ற நிலைமையில் இருக்கிறீர்கள். கிராமங்களில் பார்த்தபோது, எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றி கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தும், நிபுணர்கள் உழைத்தும், நாங்கள் போன இடங்களிலெல்லாம் குடி நீர் தேவை அதிகமாக இருப்பதைக் கண்டோம். ஒரு மனிதன் வாழ்வதற்குக் குடி நீர் சரியாகக் கிடைக்கவில்லை என்கிற பரிதாபச் செய்தியை விட மோசமான ஒரு நிலைமை நாட்டில் இருக்காது என்று கருதுகிறேன். அப்படிப்பட்டவர்களையும் நாங்கள் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அவர்களையும் மனதில்

சிந்தித்து நமக்குள்ள நிதி நிலைமையையும் சிந்திக்க வேண்டும்." வங்கிகளில் போடுகிற லட்ச ரூபாய்க்கு என்ன வட்டி கொடுக்கப் படுகிறதோ அதற்கு ஈடாகக் கூடக் கிடைக்கவில்லை. அந்த லட்ச ரூபாய் அவர்கள் வங்கியில் போடுவதற்குக் காரண மாயிருந்த ஏழை மக்கள் தங்களுக்கு வேட்டி இல்லை, துண்டு இல்லை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறேன். இங்கே அதை எடுத்துச் சொல்லும்போது, அதை நினைவுபடுத்திக்கொள்கிறோம். நிதி படைத்தவர்கள் இனாமாகத் தரவேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. அந்தப் பணத்தை முதலீடு செய்யுங்கள். இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படும்படி செய்யுங்கள். ஓரளவு நியாயமான அளவுக்கு லாபம் வைத்துக்கொள்ளுங்கள். வட்டி பெறும் அளவில் வைத்துக்கொண்டால் கூட வங்கியில் என்ன வட்டி வருகிறதோ அதைவிட லாபம் தொழிலில் முதலீடு செய்தால் வருமென்ற உத்தரவாதத்தை நான் சொல்ல விரும்புகிறேன். எல்லோருடைய எண்ணத்திலும் அது மேலோங்கி வரவேண்டுமென்ற ஆசையிலேதான் நாங்கள் பல திட்டங்களைச் சொல்கிறோம். அந்த அளவில் இந்த மேலவை அக்கறை காட்டி, எங்களுக்கு ஆதரவு காட்டி, எங்களை ஊக்குவித்து, நாங்கள் வழி பிசகாது எங்கள் பயணத்தை நடத்த, நல்ல உள்ளத்தோடு தருகிற யோசனைகளை ஏற்றுக்கொள்கிறோம். அவற்றை எப்படியெப்படி செயல்படுத்த முடியுமென்று நிச்சயமாகப் பரிசீலித்து, அதற்கான வற்றைச் செய்கிறோம் என்று கூறி, இந்த நன்றியுரைக்கு எதிராகத்திருத்தம் கொண்டுவந்திருப்பதைத் திரும்பப் பெற்று ஒருமனதாக இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு நான் வற்புறுத் தவில்லை என்றாலும், விளக்க உரையிலே சில உறுதிகளை அளிப் பார்கள் என்று நம்பியிருந்தேன். மூன்றாவது சம்பளக் கமிஷன் அமைப்பது என்பதையெல்லாம் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்வதாகக் கூறினார்கள்.





**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, என்னை அப்படிக் கட்டுப்படுத்துவது வழிமுறைக்கு ஒத்து வராது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** விரைவில் அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற இருப்பதால். . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மேலும் அதையே சொல்கிறார்கள். அப்படி ஒரு நம்பிக்கை அவர்களுக்கு இருப்ப தால், திரும்பப்பெற்றுக்கொள்வதாகச் சொல்கிறார் என்றே எடுத் துக்கொள்ள வேண்டுகிறேன்.

(பிற்பகல் 6-50)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் மதுரை முத்தண்ணன் அவர் களுக்கும் நண்பர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சர்ச்சையைப் பொருத்த குறிப்புகள் முழுவதும் குறிப்பேட்டிலிருந்து நீக்கப் பட்டால் நலம் பயக்கும் என்று கருதுகிறேன். இருவர் சர்ச்சையும் குறிப்பில் எங்குள்ளது என்பதை மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் கண்டு அவற்றை நீக்க வேண்டுகிறேன். இதைத் தொடர்ந்து பிரச்சினையாக்காமல் நாம் அனைவரும் நாட்டுக்கு என்ன செய்வோம் என்று வந்திருப்பதால், இதற்கும் ஒத்துழைப்பு கிடைக்குமென்று நம்புகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஏற்கெனவே அந்தப் பிரச் சினைகள் பத்திரிகையில் வந்துவிட்டதால், அதைப்பற்றி இப்போது என்ன செய்வது என்பதை அறிய விரும்புகிறேன். வெளிவந்து விட்டதை எப்படிக் குறிப்பிலிருந்து நீக்க முடியும்?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு நடந் ததைப்பற்றியது இது. அதைப் பெரிய பிரச்சினையாக்க வேண்டாமென்று கூறுகிறார்கள்.

**திரு. கோ. சி. மணி:** உறுப்பினர் அமைச்சர்களைப்பற்றி பேசியதும் நீக்கப்பட வேண்டும். அவை பத்திரிகையில் வந்தால் பிறகு . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.** நீக்கப்பட்ட பகுதி கள் பத்திரிகையில் வந்தால், அதை தனிப்பட்ட உரிமைப் பிரச் சினையாகக் கொண்டுவரலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** இரண்டு திருத்தங்களையும் வற்புறுத்தவில்லை. அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்குவது என்பது அவர்கள் குற்றஞ்சாட்டிப் பேசியதையும் நீக்கி, மறுப்பையும் நீக்கவேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இரண்டையும் சேர்த்துத்தான். பத்திரிகைகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் குற்றஞ்சாட்டியது, மறுத்துச் சொன்னது, இரண்டும் நீக்கப்படுகிறது.

திரு. சங்கரலிங்கத்தின் திருத்தங்கள், அவை அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

**திரு. கோ. சி. மணி:** என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

திருத்தம், அவை அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** என்னுடைய திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திருத்தம், அவை அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவையில் இல்லாததால் அவருடைய திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உரை நிகழ்த்தியதற்காக, தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, "ஏற்போரே அதிகம்" என்பதற்குப் பதிலாக "ஏகமனதாக" என்று கொண்டால் நலமாக இருக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** "மறுப்போரே இல்லை" என்று வைத்துக்கொள்ளலாம்.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவை இன்று இத்துடன் முடிந்த ஆய்வுக்குழு முடிவு செய்தபடி, ஜூலைத் திங்கள் 25 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-52)

D
V211,32'N77
N78.1382

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No 8-C, Pycrofts Road, Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street,

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.